

# ஜெய்சக்தியின்

# கல்லில் வடித்த கவிதை

# கல்லில் வடித்த கவிதை

## 1

'அக்கா.. இந்தப் புடவை உனக்கு ரொம்ப நல்லாயிருக்குக்கா..' என்றாள் சித்ரா. சுபாஷிணி அவளிடம் லேசாகப் புன்னகைத்தாள்.

'சுபா.. நம்ம அப்பா கூட பழைய பார்ட்னர்ஸ்.. உன்னை அந்தக் கல்யாணத்துல பார்த்தவுடனே வடிவுக்காவுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்காம்' நவநீதம்.

'அம்மா.. ப்ளீஸ்.. இப்ப எனக்கு எதுக்குக் கல்யாணம்? நான் மேல படிக்கணும் வேலைக்குப் போகணும்..' என்றாள் சுபாஷிணி.

'சுபா.. புரிஞ்சுக்கோ.. நான் ஒத்தையாளு. இப்பவே உனக்குப் பத்தொன்பது முடிஞ்சு இருபது ஆயாச்சு. இன்னும்

படிச்சு முடிச்ச அதுக்கப்புறம் மாப்பிள்ளை.... பாத்து.. எவ்வளவு ரிஸ்க் தெரியுமா? இப்படி நமக்குத் தெரிஞ்ச குடும்பமா.. நல்லவங்களா.. எந்த எதிர்பார்ப்பும்.. இல்லாம.. கிடைக்கறது கஷ்டம் தங்கம்மா.. புரிஞ்சுக்கடி..' என்றார் அம்மா கெஞ்சலாக.

அவள் முகம் வாடியது.

'அம்மா.. உனக்கு செலவில்லாம.. வரன் வந்தவுடனே.. என்னைத் தள்ளி விடப் பாக்கறே!' என்றாள்.

அம்மா சேரில் அமர்ந்திருந்த அவளை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டார்.

'இல்லடி.. பொண்ணே! இவ்வளவு நல்ல மனுஷங்க கிடைக்கறது.. கஷ்டம்..'

'என்ன.. நல்ல மனுஷங்க.. அந்த ஆள் சிரிக்கறதுக்கே.. காசு கேப்பார் போலருக்கு. சரியான தலைக்கனம் மாதிரித் தெரியுது...' என்றாள் சுபாஷிணி.

'சிலபேர் பாக்கறதுக்கு அப்படியிருப்பாங்கடி.. இந்த வயசுலயே தொழில்ல கெட்டிக்காரனாயிருக்காராமே.. இப்பத்தான் இருபத்தைஞ்சு.. நடக்குதாம்.. இரண்டு மூணு கம்பெனியை வச்சு நிர்வகிக்குதாம்.. போதும்டி.. நாம பட்ட கஷ்டம்.. உங்கப்பா சிரிச்சுகிட்டேதான் இருப்பாரு.. ஆனா, கடைசியில என்ன உருப்படியா செஞ்சாரு. ஆள் சிரிச்ச முகமா.. இருந்து.. கோட்டை விட்டு என்ன பண்ண! எந்தக் கெட்ட பழக்கமும் இல்லேங்கறாங்க.. என்ன கொஞ்சம் கண்டிப்பா இருப்பாரு.. போலிருக்கு..' என்றார் விளக்கம் சொல்லி அலுத்துப் போனது போல் 'எனக்கு நிறைய வேலையிருக்குடி' என்று நகர்ந்தார்.



சுபாஷிணிக்கு ஒன்று புரிந்தது. அம்மா இந்த சம்பந்தத்தை மலைபோல் நம்புகிறார். தான் மறுத்தால் மனமொடிந்து போய்விடுவார்.

தாங்கள் இருக்கிற வீடு கூட தங்கள் அப்பாவின் பங்குக்கு என்று இந்த வடிவு ஆன்ட்டி கொடுத்ததுதான் என்று அம்மா சொல்லக் கேட்டிருக்கிறாள்.

மேலே படிக்க வேண்டும். அதுவும் கெமிஸ்ட்ரி படிக்க வேண்டும். ஏதாவது நல்ல கம்பெனியில் வேலைக்குச் சேர வேண்டும் என்று எவ்வளவு கனவுகள் வைத்திருந்தாள். ஆனால் அம்மாவை நினைத்தாலும் பாவமாக இருந்தது.

வருகிற இந்த ஏழாயிரம் ரூபாய் வீட்டு வாடகையை வைத்துக் கொண்டு எப்படித் தன்னைப் படிக்க வைக்க முடியும். தம்பி வேறு டிகிரி படிக்கிறான். தங்கை பிளஸ் டூ படிக்கிறாள். ஏதோ இந்த மட்டுமாவது படிக்க முடிந்ததே என்று எண்ணிக்கொள்ள வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டாள்.

* * *

எல்லாச் செலவையும் அவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள். எல்லா ஏற்பாடுகளையும் அவர்களே பார்த்துக் கொள்கிறார்களாம். அதுதான் அம்மா தள்ளி விடத் துடிக்கிறாள். அம்மாவும் பாவம்தான் என்று எண்ணிக் கொண்டாள்.

ஒரு நேரம் இப்படி எண்ணினாலும் மறுநிமிடம் மனம் திருமணம் என்பதை ஏற்றுக் கொள்ள மறுத்தது. எப்படியாவது தடுக்கப் பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

'அம்மா!' என்று அடுப்படியில் போய் நின்றாள்.

'என்ன?' என்றாள் அம்மா பஜ்ஜியை வடித்து எடுத்தபடி

'அம்மா, அட்லீஸ்ட் இன்னொரு நாளைக்காவது வரச் சொல்லேன். இன்னைக்கு எனக்கு ரொம்பத் தலையை வலிக்கிற மாதிரி இருக்கு' என்றாள்.

அம்மா திரும்பிப் பார்த்தாள். தான் சொன்ன காரணம் ரொம்பவும் சிறுபிள்ளைத் தனமானது என்று அவளுக்கே புரிந்தது. மென்று விழுங்கிக் கொண்டு நின்றாள்.

'என்னடி சின்னப் பிள்ளையாட்டமா பேசிகிட்டிருக்கிறே. இப்படி அழிச்சாட்டியம் செஞ்சா.. எனக்கு பி.பி. எகிறிக் கை கால் வராம படுத்துக்கப் போறேன்' என்றாள் அம்மா ஆழ்ந்த வருத்தத்துடன்.

அதற்கு மேல் சுபாஷிணி ஒன்றும் பேசவில்லை. அறைக்கு வந்து விட்டாள்.

எளிமையாக அலங்கரித்துக் கொண்டாள். ஆனால் முகம் வாடித்தான் இருந்தது.

அம்மா சுத்தமாகக் கண்டு கொள்ளவில்லை.

* * *

**கா**ர் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

சித்ரா, ரகு எல்லாரும் பரபரப்பானார்கள்.

நவநீதம் பரபரப்பாக வரவேற்றார்.

முன்னறையில் அமரப் போனவர்களை உள் அறைக்கு அழைத்துப் போனார்.

மொத்தமே மூன்று அறைகள். முன்னாலே ஒரு அறை. தொடர்ந்து ஒரு அறை ஒரு அறையில் மரத்தால் ஆகிய ஏணி மாதிரி ஒன்றில் ஏறிப் போனால் மேலே ஒரு அறை. கீழே நடு அறையைத் தாண்டி சமையல் அறை. அதைத் தாண்டி புழக்கடை



தாங்கள் இதில் இருந்து கொண்டு வரிசையாக ஐந்து போர்ஷன்களை எல்லாமே ரயில் பெட்டி மாதிரி வீடுகள் தான். வாடகைக்கு வைத்திருந்தார்கள்.

வடிவு உற்சாகமாக இருந்தார். மாப்பிள்ளையின் அம்மா. உடன் வந்தது மாப்பிள்ளை ஜெயப்பிரகாஷ்.

முன்னறையிலிருந்து உள் அறைக்கு வந்ததும் அவன் அம்மாவின் முகம் பார்த்தபடி அமர்ந்தான். ஸ்டூல் சேர்கள் நான்கைந்து போட்டு வைத்திருந்தார்கள்.

'உறவுக்காரங்களையெல்லாம் கூட்டிட்டு வர்லே. முதல்லே நாம பேசி முடிச்சுட்டு மத்தவங்களுக்கு சொல்லிக்கலாம்னு விட்டுட்டேன்' என்றார் வடிவு.

'அதுவும் நல்லதுதான்' என்றார் நவநீதம்.

'நாம என்ன முன்னே பின்னே பழகாதவங்களா? அதனாலே நேரே நாமளே பேசிடுவோம்னுதான் நானே போன் செய்தேன்' என்றார் வடிவு.

'ரொம்பச் சந்தோஷங்க' என்றார் நவநீதம்.

உள்ளே தன்னருகில் அமர்ந்திருந்த சித்ராவிடம் 'ஜல் ஜல்' என்று ஜால்ரா அடிப்பது போல் சைகை செய்தாள் சுபாஷிணி. அவள் சிரித்தாள்.

'நீங்க அனுப்பிய ஜாதகம் பொருந்திப் போச்சன்னவுடனே... எனக்கு ரொம்ப சந்தோஷம். கல்யாணத்துல வேற இவனும் பாத்துட்டானா! அப்புறம் எதுக்கு வெட்டி ஃபார்மாலிட்டிஸ்னுதான்.. நானே இவனையே கூட்டிட்டு வந்துட்டேன்' என்றார் வடிவு.

'சரிங்க.. சரிங்க!' என்றார் நவநீதம்.

'நான் எதுக்கும்மா?' நீங்களே பேசி முடிச்சுட்டு வந்துடுங்கன்னுதான் இவன் சொன்னான். நாந்தான் நீயும் எதுக்கும் ஒரு நடை வாப்பா..ன்னு கூட்டிட்டு வந்தேன்' என்றார்.

பிறகு நினைவு வந்தவர் போல் 'அது சரி நாமளே பேசிகிட்டு இருந்தா.. எப்படி..?' பொண்ணை வரச் சொல்லுங்க..!' என்றார்.

சித்ரா துணைக்கு வர சுபாஷினி வெளியே வந்தாள். வணக்கம் சொன்னாள். அவன் பதிலுக்கு வணக்கம் சொல்லவில்லை. தலையை மட்டும் அசைத்தான்.

எதிரில் இருந்த ஸ்டீல் சேரில் அமர வைத்தார்கள்.

பொதுவாக ஓரிரு வார்த்தைகள் அந்தப் பெண்ணிடம் பேசிய வடிவு.

'ஏங்க.. நவநீதம்.. அவங்க ரெண்டு பேரும் வேண்ணா ஒரு ரெண்டு நிமிஷம் பேசிக்கட்டுமே!' என்று எழுந்து உள்ளறைக்குப் போகவும் மற்றவர்களும் தொடர்ந்தார்கள்.

அவன் அவளை நேரடியாகப் பார்த்தான். அந்தப் பார்வையின் தீட்சண்யம் கண்டு அவள் ஒடுங்கிப் போனாள். வசியம் செய்யப்பட்டவள் போல அவன் கண்களைப் பார்த்தவள் ஒரு நிமிடம் கழித்துத் தலையைக் குனிந்து கொண்டாள்.

உள்ளே ஏதோ செய்வது போல் இருந்தது. கைகள் நடுங்கின. அந்த நேரம் அவன் பேசினான்.

ஆண்மை நிறைந்த கம்பீரமான குரல். அனாவசியமாகக் குரலெழுப்பாமல், அதே சமயம் ரொம்ப மெல்லிசாகவும் இல்லாமல்,



'பெரியவர்களுக்கெல்லாம் பிடிச்சிருக்கு. எனக்கும்தான் உங்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லலாம்..' என்றான்.

அவள் கலவையான உணர்வுகளுடன் நிமிர்ந்து பார்த்தாள். வேட்டி சட்டையில் பார்ப்பதற்குப் பாந்தமாக இருந்தான் தான். ஏதேதோ சொல்ல வேண்டும் என்று நினைத்ததையெல்லாம் விட்டு விட்டு அமைதியாக அமர்ந்து விட்டாள்.

ஒரு நிமிடம் மௌனமாகக் கழிந்தது. அவனும் அழுத்தமாகவே அமர்ந்திருந்தான். பிறகு என்ன நினைத்தானோ.

'சரி.. நீங்க.. ரொம்ப அன் ஈஸியா ஃபீல் பண்றீங்க.. போலிருக்கு..' என்றவன் 'அம்மா..' என்று அழைத்தான்.. அம்மா உள்ளே வர.

'அம்மா.. அவங்க ரொம்ப அன் ஈஸியா ஃபீல் பண்றாங்க' என்று மெல்லிய குரலில் சொல்ல எல்லாரும் உள்ளே வந்தார்கள்.

அவன் ஏகுவிடம் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசினான். அவள் புரிந்து கொண்டவளாய் எழுந்து உள்ளே போய் விட்டாள்.

தன் மீதே அவளுக்குக் கோபம் வந்தது. சென்ற வாரத்தில் ஒரு கல்யாண வீட்டில் வைத்துத்தான் இவன் தன்னைப் பார்த்திருக்கிறான் என்பது புரிந்தது.

எப்போதும் கல்யாணங்களுக்குப் போகாதவள் ஒன்று விட்ட பெரியம்மா பெண்ணின் கல்யாணம் என்பதால் போனாள். கல்யாணப் பெண் கல்பனாவுக்கும், இவளுக்கும் பொதுவான தோழிகள் வந்திருந்தார்கள். மேடையைச் சுற்றிக் கலகலப்பாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

மாலை மாற்றும் போது பெண் தலையைக் குனிய,

'பாத்துக்குங்க.. சார்! இதுதான் கடைசியாப் பொண்ணு தலை குனியறது' என்று ஒருத்தி கமெண்ட் அடிக்க எல்லாரும் சிரித்தார்கள்.

தாலி கட்டி முடித்ததும் போட்டோ கிராஃபர் 'சார்.. கொஞ்சம் சிரிச்சா மாதிரி முகத்தை வச்சுக்குங்க..' என்று சொல்ல.

'ஆமா.. லாஸ்ட் சான்ஸ்.. சிரிச்சுக்குங்க..' என்றாள் அந்தப் பெண் ரம்யா.

'ஏய்.. சும்மாயிருடி.. இப்படி வாயடிக்காதே!' என்றாள் சுபாஷினி.

'ஹேய்! நான் ஒண்ணும் உன்னை மாதிரி இல்லை. ஊமைக் கோட்டான் மாதிரி நடிச்சுகிட்டு.. அப்புறம்.. வாயடிக்கிற ஆள்.. இல்லே! நான் எப்பவும் ஒரே.. மாதிரி..' என்றாள்.

'நீங்க எப்படிங்கறதெல்லாம் அப்புறம் பேசி முடிவு செஞ்சுக்குங்களேன். இப்பக் கொஞ்சம் வழியை விட்டாத் தேவலை..' என்றது ஒரு குரல்.

திரும்பிப் பார்த்தார்கள்.

ஜெயப்பிரகாஷ் நின்று கொண்டிருந்தான். அவன் கல்யாண மேடைக்கு வந்தவுடனே ஏகப்பட்ட வரவேற்பு.

ரம்யாவையும் சுபாஷினியையும் ஒதுக்கித் தள்ளி விட்டார்கள்.

'சார்.. சார்..!' என்று அவனை ஏகமாய்த் தாங்கினார்கள். அவனோடு நின்று போட்டோ எடுப்பதற்குப் பெண்ணின்



பெற்றோரும், மாப்பிள்ளையின் பெற்றோரும் போட்டி போட்டார்கள்.

ரம்யாவும், சுபாஷினியும் கல்யாண மேடையை விட்டு இறங்கி விட்டார்கள்.

'ஏய்.. சுபா.. பெரிய பணக்காரர் போலிருக்கு ஆளுங்காள் தாங்கறாங்க. நல்ல பர்ஸனாலிட்டி வேற.' என்றாள் ரம்யா.

'ஆமா, பணம்ன்னா.. எங்கயுமே மதிப்புத்தாண்டி..' என்றாள் சுபாஷினி.

அவன் மேடையை விட்டு இறங்கிய பின்பும்கூட அவர்கள் கல்யாண மேடைக்குப் போகவேயில்லை.

கல்பனா வருந்தி வருந்தி அழைத்ததற்குப் பின்புதான் சுபாஷினி மேடைக்குப் போனாள். அவளுடன் நின்று கொண்டு போட்டோவுக்கு மணமகள் போஸ் கொடுப்பதையெல்லாம் முதல் வரிசையில் அமர்ந்தபடி ஜெயப்பிரகாஷ் பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்றைக்கு அவள் அழகான ரோஜா வண்ணப் பட்டுப் புடவையில் இருந்தாள். மிகையான மேக்கப் இல்லாமல், வரிசைப் பற்கள் தெரிய அவள் சிரிப்பதை, பெண் வீட்டார் எதற்கெடுத்தாலும் அவளை உதவிக்கு அழைப்பதை சற்று நேரம் அவன் ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருப்பதை அவள் அறியவில்லை.

'சரி.. சாப்பிடப் போலாம்' என்று போனார்கள்.

அங்கேயும் திடீரென சலசலப்பு. திரும்பிப் பார்த்தார்கள். அதே ஜெயப்பிரகாஷ். அவனைச் சுற்றிலும் மறுபடியும் உபசரிப்போர் கூட்டம்.

ரம்யா சட்டென்று 'என்ன.. சார், எங்கே போனாலும்.. போட்டிக்கு வர்றீங்க..' என்று சிரித்தாள்.

'லேடீஸ்.. ஃபர்ஸ்ட்.. ப்ளீஸ்! நீங்க உட்காருங்க..' என்றவன் நேர் எதிர்ப் பந்தியில் போய் அமர்ந்தான்.

அதற்குப் பிறகு ரம்யாவும், சுபாஷிணியும் அவனை மறந்து போனார்கள்.

தங்களுக்குள் சிரித்துப் பேசியபடி சாப்பிடுவதை அவன் கண்டும், காணாதவன் போல் கவனித்துக் கொண்டிருந்தான்.

அவன் புறப்படுகிற நேரம் வடிவு அவனை நோக்கி வந்தவர்.

'பிரகாஷ்! நம்ம.. தங்கராசு அண்ணாவோட வைஃப் நவநீதம் வந்திருக்காங்கடா' என்றார்.

'ஓஹோ!' என்று அவன் நிற்க. அவர் நவநீதத்தை அறிமுகப்படுத்தினார். 'அவங்க டாட்டர் பாரு..!' என்று சுபாஷிணியை அறிமுகப்படுத்த.. அவளும் வணக்கம் சொன்னாள். அவனும் வணக்கம் சொன்னான்.

விடைபெற்றுக் கொண்டார்கள்.

'ஜெயப்பிரகாஷ் பாரு.. சுபா! எவ்வளவு பெரிய ஆளாயிட்டான்..' என்று நவநீதம் தன்னிடம் பேசிக் கொண்டிருக்கையிலேயே அவன் காரில் ஏறுவதற்கு முன்பே இயல்பாகப் பார்ப்பது போல் பார்த்து விட்டு ஏறினான்.

அன்றைக்கு அந்தப் பார்வையின் அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை. இன்றைக்குப் புரிந்தது.

தன்னுடைய கனவுகளைக் கலைப்பதற்காகவும் தனது சுதந்திரத்தைப் பறிப்பதற்காகவுமே அவன் வீசிய பார்வை அது என்று.



அவர்கள் எல்லாரும் போனதற்குப் பின்பும் வெகு நேரம் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தவளுக்கு உறக்கம் வரவில்லை.

அப்போதுதான் அந்த முடிவைச் செய்தாள்.

## 2

'அப்புறம்... சொல்லுங்கம்மா' என்று சித்ரா நவநீதத்திடம் அமர்ந்து கதை கேட்டுக் கொண்டிருந்தாள்.

நவநீதமும் ஆர்வமாகத் தொடர்ந்தார். 'உங்கப்பாவும், மாப்பிள்ளையோட அப்பாவும் முதல்ல கோயமுத்தூர்லதான் இருந்தாங்க. இங்கதான் பிஸினஸ் ஆரம்பிச்சாங்க. ஆனா, மாப்பிள்ளையோட அப்பா தணிகாசலம் சொந்தத்துலயும் ஒரு கம்பெனி ஆரம்பிச்சார். அதில் அப்பா கூட்டுச் சேர்ந்தாரோ என்னமோ தெரியல. ஒரு ஸ்டேஜ்ல சேலம் போறதை விட்டுட்டாரு. அதெல்லாம் தணிகாசலம் பாத்துக்குவாருன்னு சொல்லுவாரு. அப்புறம் என்னன்னு தெரியலை. கோயமுத்தூர் பிஸினஸையும் தணிகாசலமே எடுத்துக்கிட்டு இந்த வீட்டை எழுதிக் குடுத்துட்டாரு' என்றார்.

'ஓ! அப்ப அவங்க புண்ணியத்துலதான் நாம இப்பச் சோறு சாப்பிடறோம்' என்றாள் சித்ரா.

'ஆமா. நேரடியாச் சொன்னா அப்படித்தான் அர்த்தம்..' என்றார் அம்மா.

அப்பாவின் பலவீனங்களைப் பற்றி முழுமையாகச் சொல்ல அவள் மனம் இடம் கொடுக்கவில்லையென்பதால் ஒருசில விஷயங்களை மறைத்து விட்டார் என்பது அப்போது அவர்களுக்குப் புரியவில்லை.

'அப்புறம்.. சும்மா வீட்ல இருக்கமேன்னு நினைச்ச அப்பா.. கொஞ்சம் மனசு விட்டுட்டாரு. அப்புறம்தான் தெரியுமே.. ஒரே வருஷத்துல ஹார்ட் அட்டாக்கில..' என்று நிறுத்தினார்.

சற்று நேரம் கனத்த மௌனம் நிலவியது.

அப்பா போய்ப் பத்து ஆண்டுகளாகி விட்ட போதும் சோகம் அவர்களைத் தாக்கத்தான் செய்தது.

'ஏய்! இப்ப எதுக்கு அம்மா மூடைக் கெடுக்கறே!' என்று சித்ராவை அதட்டினான்.

'அதனாலென்னடா, அவளும் தெரிஞ்சுக்கட்டுமே!' என்றார் அம்மா.

ரகு.. அம்மாவின் அருகில் அமர்ந்தான். 'அம்மா... ஜெயப்பிரகாஷ் அங்கிள் பொண்ணுக் கேட்டு வந்தாரா? என்னடா யோசிக்கறீங்க? கப்புன்னு சான்ஸைப் பிடிச்சுக்க வேண்டாமா?ன்னு என் ஃபிரண்ட்ஸோட பேரண்ட்ஸ்ட எல்லாம் சொல்றாங்க..' என்றான் ரகு.

'உங்கக்காவுக்கு சொல்லுடா. அவளுக்குத்தான் விஷயம் புரியவே மாட்டேங்குது..' என்றார் அம்மா ஆதங்கத்தோடு.

'அம்மா.. கண் பார்வையிலேயே நிர்வாகம் செய்வாராம்.. பேசிக்கறாங்க' என்றான் ரகு பெருமையாக.

'ஆனா! பேசத்தான் மாட்டேங்கறாரு' என்றாள் சித்ரா.



'ஆமாடி.. உன்னையும், என்னையும் மாதிரியா.. அவரு பேசற ஒவ்வொரு வார்த்தைக்கும் விலையிருக்கும்டி..' என்றான் ரகு.

சுபாஷிணிக்கு எரிச்சலாக வந்தது.

'போதும்.. அளப்பு.. ஏதாவது வேற வேலையிருந்தாப் பாருங்க..' என்றாள்.

'ஏன்.. நாம மாமாவைப் பத்திப் பேசினா. அக்காவுக்கு ஏன் அண்ணா கோபம் வருது..' என்றாள் சித்ரா.

'அதெல்லாம்.. சும்மா.. நடிப்பு. நாம பேசறதையெல்லாம், கேக்காத மாதிரிக் கேட்டுக்கிட்டுத்தான் இருப்பா' என்றான் ரகு.

சுபாஷிணி முறுக்கிக் கொண்டு எழுந்து முன்னறைக்குப் போக ரகு சிரித்தான்.

நவநீதம் சிரித்துக் கொண்டே 'டேய்! இப்ப எதுக்கு அவளைச் சீண்டிக்கிட்டிருக்கே போய் வேலையைப் பாரு!' எனவும் எழுந்து போனார்கள்.

அம்மா சிரித்துக் கொண்டே எழுந்து சமையலறைக்குள் நுழைந்தார். அப்போது அந்த அப்பாவி அம்மாவுக்கு மகளின் மனப்போக்கும், அதனால் எழப்போகிற விபரீதங்களும் புரிந்திருக்கவில்லை.

✱ ✱ ✱

ரம்யா அன்றைக்கு வந்திருந்தவளிடம் சித்ரா விஷயத்தைச் சொன்னாள்.

'வாட்! ஜெயப்பிரகாஷ் உங்க ஃபேமிலி ஃபிரண்டா? சுபாவைப் பொண்ணுக் கேட்கறாங்களா? யோசிக்கறதுக்கு

என்ன இருக்கு? ஏய்.. மக்கு.. பைத்தியம் மாதிரி ஏதாவது செஞ்சுகிட்டிருக்காதே' என்று பலமாகக் கடிந்து கொண்டாள்.

'அவளையெல்லாம் யாரும்மா சம்மதம் கேட்கப் போறா! சம்மதம் சொல்லியாச்சு. ஏற்பாடெல்லாம் ஆரம்பிச்சாச்சு..' என்றார் அம்மா மகிழ்ச்சியாக.

'அப்படிப் போடுங்க!' என்றாள் ரம்யா.

'போடி! நான் மேலே படிக்கலாம்னு இருந்தேன்..' என்றாள் சுபாஷினி.

'சரி.. மேலே படிச்சு..?' என்றாள் ரம்யா.

'நல்ல வேலைக்குப் போவேன்' என்றாள் சுபாஷினி.

'அட! அறிவுக் களஞ்சியமே! நீ ஜெயப்பிரகாஷைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னா நீ நாலு பேருக்கு வேலை குடுக்கலாம். நானே உன்கிட்ட வந்து வேலைக்கு நிப்பேன்' என்றாள் ரம்யா.

சுபாஷினி ஒன்றும் பேசவில்லை. இந்த மாதிரிக் குறுக்கு வழிகளில் இல்லாமல் தன் திறமைக்கு வேலை கிடைக்க வேண்டும் என்ற தன் கொள்கையை இவர்களுக்குச் சொன்னாலும் புரியப் போவதில்லை என்று மௌனமாகி விட்டாள்.

ரம்யா தோழிகளுக்கெல்லாம் தகவல் கொடுக்க ஒரு கும்பலே வந்து விட்டார்கள்.

ஆளாளுக்குக் கேலியும் கிண்டலும் செய்ய சுபாஷினி சிரித்துக் கொண்டாள். ஆர்வமாகக் கலந்து கொள்ளவில்லை. அதற்காகத் தன் மனச்சஞ்சலத்தைக் காட்டிக் கொள்ளவும் இல்லை.

அம்மா அவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியாக டிபன் தயாரித்துக் கேசரியும், வெஜிடபிள் கிச்சடியும் என்று பரிமாறி



னார். எளிமையான அந்த உணவை அவர்கள் கேலியும், கிண்டலுமாக உண்டு விட்டுப் புறப்பட்டுப் போனார்கள்.

எல்லாரும் புறப்படுகிற நேரத்தில் ரம்யாவை மட்டும் 'இரு ரம்யா' என்று வேண்டிக் கொண்டாள்.

அவளும் இருந்தாள்.

ரம்யா புறப்படும்போது சுபாஷினி தயக்கத்தோடு,

'ரம்யா! இன்னைக்கு மட்டும் உன்னோட செல்போனைத் தரயா?' என்றாள்.

'ம்.. ம்.. தரேன்.. ஆனா எதுக்குன்னு சொல்லு?' என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

'அவர்.. அவர்கிட்டே பேசணும்!' என்றாள்.

'சரி.. அம்மிணி! சரி.. தரேன்! மிஸ்ட் கால் குடுத்துட்டு அவரைக் கூப்பிடச் சொல்லு. நீ பாட்டுக்கு மணிக்கணக்கிலே பேசினா.. பில்லு.. யார் கட்டறது?' என்றாள் ரம்யா.

'சரிடி!' என்று சின்சியராகச் சொல்கிற சுபாஷினியைப் பார்த்துச் சிரித்தாள்.

'சும்மா.. சொன்னேன்டி.. பேசு.. தாராளமாப் பேசு! எவ்வளவு நேரம் வேண்ணாலும் பேசு' என்றாள்.

சிரித்து விட்டுப் புறப்பட்டாள்.

இரவு எட்டு மணிவாக்கில் அழைத்தாள்.

'சார்! போர்ட் மீட்டிங்ல இருக்கார்' என்றாள் ரிசப்ஷனிஸ்ட்.

'எட்டு மணிக்கு போர்ட் மீட்டிங்கா!' ம்.. பெரிய பிஸினஸ் மேன் என்றால் அப்படித்தான்.. நேரம் காலம்.. பாக்காமல் உழைக்க.. வேண்டும்' என்று எண்ணிக் கொண்டாள்.

மீண்டும் ஒன்பது மணிக்கு அலுவலகத்திற்கு அழைத்தாள்.

இப்போது வேறு ஒரு ஆள் இருந்தான்.

'மேடம்.. இப்ப அந்தக் கம்பெனிக்குப் போயிட்டாரே! இப்பக் கணக்கு, வழக்குப் பார்க்க உட்கார்ந்திருப்பாரே.. டிஸ்டர்ப் பண்ணினா பிடிக்காதுங்களே.. நீங்க.. யாரு!' என்றான்.

'நான்.. நான்.. சுபாஷிணி.. சுபாஷிணின்னு சொன்னா அவருக்குத் தெரியும்..' என்றாள்.

'சரி மேடம்! பத்து.. பத்தரை மணி வாக்கிலதான் ரூமை விட்டு வெளியே வருவாரு. அப்பத்தான் சொல்ல முடியும் மெஸேஜ் குடுத்தர்றேன்.. மேடம்' என்றான்.

'சரிங்க!' என்றாள்.

போனிலே எப்படிப் பேசுவது என்று மனதிற்குள் ஒத்திகையெல்லாம் பார்த்துக் கொண்டு ஆரம்பித்திருந்தாள். ஆனால், அத்தனையும் புஸ்ஸென்றாகி விட்டது.

ஆளைப் பிடிப்பதற்கே இவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. எப்படிப் பட்டென்று போட்டு உடைப்பது என்று அவளுக்குக் கவலையாகிப் போனது.

இன்னொரு மனது சொன்னது.

'சரி.. முயற்சியை ஆரம்பித்தாகி விட்டது. முடிவு வரை பார்க்கலாம்.. அதற்கப்புறம் ஆண்டவன் விட்ட வழியாகட்டும்' என்று வழக்கம் போல் பத்து மணிக்குப் படுக்கைக்குப் போய் விட்டாள்கள்.

நாளைக்குப் பார்க்கலாம் என்று அவளும் படுத்துக் கொண்டாள்.



பத்தே முக்கால் மணிக்கு போன் அடிக்கவும் திடுக்கிட்டு விழித்தாள். அந்தப் பக்கம் ஜெயப்பிரகாஷின் அழுத்தமும் ஆழமுமான குரல் கேட்டு ஒரு நிமிடம் மலைத்துப் போனாள்.

* * *

'சுபா.. சுபாதானே?' என்றான்.

'ம்..!'

'கூப்பிட்டிருந்தே போல இருக்கே!' என்றான்.

'ஆமா..!' என்றாள். தயங்கினாள்.

'சொல்லு.. சுபா!' என்றான்.

'நான்.. நான் உங்ககிட்டே பேசணும்' என்றாள்.

'ஓ! எப்ப?'

'எப்ப உங்களுக்கு வசதிப்படுமோ.. அப்ப?'

'சரி.. நான் நாளைக்குக் கன்ஃபர்ம் பண்றேன். இதே நம்பருக்குக் கூப்பிடவா?'

'இல்லே' இது என் செல்போன் இல்லே! என் பிரண்டோடது.' என்றாள்.

'ஓ!' என்று ஒரு நிமிடம் யோசித்தவன் போல் மௌனம் சாதித்தான் பிறகு.

'ஓ..கே.. நான் நாளைக்கு ஈவ்னிங் அஞ்சு மணிக்குப் பாக்கறேன். வீட்டுக்கே வந்துடட்டுமா?' என்றான்.

'இல்லல்லே' வெளியே.. எங்காவது' என்று இழுத்து நிறுத்தினாள்.

'சரி.. நீ சென்ட்ரல் லைப்ரரிக்கு முன்னால் வந்து நில்லு. நான் பிக்கப் பண்ணிக்கறேன்' என்றான்.

'அப்புறம்.. அப்புறம்!' என்றாள்.

'ம்.. சொல்லு!'

'இதைப் பத்தி.. உங்க.. வீட்டுக்கோ.. எங்க வீட்டுக்கோ.. தெரிய வேண்டாம்..'

அவன் லேசாகச் சிரித்த மாதிரி இருந்தது; அவள் சட்டென்று.

'நீங்க.. நினைக்கிற மாதிரி இல்லே. இது ரொம்ப சீரியஸான விஷயம்.'

'நான் என்ன நினைச்சேன்னு.. நீ நினைச்சே!'

அவளுக்கு சொல்லத் தெரியவில்லை.

விழித்தாள்.

'சரி.. சரி.. நாளைக்குப் பேசலாம்..' என்றான்; ஆஃப் செய்தான்.

போனை வைத்த பின்தான் அவளுக்குள் சிந்தனை தோன்றியது.

என்ன விதமான உரையாடல் இது? என்று குறுகுறுப்பு தோன்றியது.

சற்று நேர யோசனைக்குப் பிறகு அவள் முகத்தில் ஒரு உறுதி மின்னியது.

அந்த நேரம் அம்மா வந்தவர் 'என்னம்மா? யாருகிட்டே இந்த நேரத்துல' என்றாள்.

அவள் அம்மாவிடம் மட்டும் எப்போதும் போல் மனம் நிறையப் புன்னகைத்தாள்.

'உன் வருங்கால மருமகன்தான் என்கிட்டே பேசணுமாம்..' என்றாள்.



மேற்கொண்டு பேச்சுக்கு இடம் கொடுக்காமல் எழுந்து உள்ளே போய்விட்டாள்.

அம்மா சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டு அந்தப்புறம் நகர்வதை உள்ளே நின்றபடி அவள் வெறுமையாகப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அடுத்த நாளுக்காகக் காத்திருந்தாள்.

## 3

கிண்ணத்தில் இருந்த ஸ்வீட்டை ஸ்பூனால் எடுத்து மெதுவாகப் போட்டாள் சுபாஷினி.

எதிரில் அமர்ந்திருந்தான் ஜெயப்பிரகாஷ். இயல்பாக நடந்து கொண்டான். முகத்திலிருந்து எதையுமே அறிந்து கொள்ள முடியாத பாவம். ஆனால் அதற்காக சிடுசிடு என்றும் முகத்தை வைத்துக் கொள்ளவில்லை. ஆனால், அசாதாரண அழுத்தம்.

ஹோட்டலின் உரிமையாளரே வந்து வசதிகள் செய்து கொடுத்தார்.

'என்ன.. சுபா? என்ன விஷயம்?' என்றான்.

'வந்து.. வந்து..' என்று நிறுத்தினாள்.

'ம்.. சொல்லு!' என்றான்.

மறுபடியும் 'வந்து.. இந்தக் கல்யாணம் இப்ப வேண்டாம்னு நினைக்கறேன்' என்றாள்.

அவன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் லேசாக முன் நெற்றியிலிருந்து தலை வரைக்கும் வலக்கையால் தடவிக் கொண்டான். முகத்திலிருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

'இந்தக் கல்யாணம் வேண்டாமா? இல்லே இப்ப வேண்டாமா?' என்றான்.

அவள் அவன் கோபப்படுவானோ, அதிர்ச்சியடைவானோ என்றெல்லாம் எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் கூர்மையாகக் கேட்ட கேள்வியை பார்த்து ஒரு நிமிடம் அதிசயித்துப் போனாள்.

தன்னையறியாமல் அவனை ஒரு நிமிடம் ஆழ்ந்து பார்த்தாள்.

'ம்.. சொல்லு!' என்றவுடனேதான் மீண்டும் நனவுக்கு வந்தாள்.

'எனக்குக் கல்யாணத்துல இப்ப இன்ட்ரஸ்ட் வர்லே..' என்றாள்.

'ஏன்?'

'நான்.. நான் படிக்கணும் மேலே படிக்கணும்..' என்றாள்.

'சரி.. படி.. கல்யாணம் முடிச்சுட்டு படி..'

அவள் மறுபடியும் ஆச்சரியமாய்ப் பார்த்தாள். 'கல்யாணம் முடிச்சுட்டுப் படிக்கிறதா.. அது எப்படி.. எல்லாரும் ஒத்துக்கணுமே' என்று எண்ணினாள்.

'என்ன கோர்ஸ்.. படிக்கணும்?' என்றான் அவன் அதே குறியாய்.



'எம்.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி' என்றாள்.

'சரி.. படி..' என்றான்.

அவள் அவனை மறுபடியும் நிமிர்ந்து பார்த்தாள்.

'மேரேஜ்.. முடிச்சுட்டு.. எப்படி? அப்புறம்.. குடும்பக் கடமைகள்.. அப்படி, இப்படின்னு..' என்று இழுத்தாள்.

'எந்த டிஸ்டர்பன்ஸும் இல்லாமப் பாத்துக்கலாம்' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

'சுபா! இந்த ஸ்டேஜ்ல மேரேஜை நிறுத்த முடியாது. இன்விடேஷன் வரைக்கும் போயாச்சு.'

'அதுக்குள்ளயா? மூணு நாள்தானே ஆச்சு..'

அவன் லேசாகப் புன்னகைத்தான்.

'இன்னும் உனக்கு ஜெயப்பிரகாஷ் யாருன்னு தெரியலே? டேட்.. மண்டபம் எல்லாம் ஃபிக்ஸ் செஞ்சாச்சு. இந்த ஸ்டேஜ்ல.. நிறுத்தினா.. அம்மா.. ரொம்ப வெக்ஸ் ஆயிடுவாங்க..' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

அவனுக்கு சட்டென்று அந்த சந்தேகம் வந்தது.

'சுபா.. என் முகம் பாத்துச் சொல்லு. மேல் படிப்புங்கறது மட்டும்தான் காரணமா? இல்லே.. வேற ஏதாவது.. ஃபிரண்ட்ஷிப்..!' என்று நிறுத்தினான்.

'ஐயய்யோ.. அப்படியெல்லாம்.. இல்லே!' என்று அவள் பதறவும்.

'ஓ.கே.. ஓ.கே! ரிலாக்ஸ்!' என்றான். சற்று நேரம் மௌனம் நிலவியது.

அவன் தொடர்ந்து.. 'உனக்கென்ன.. இப்ப.. மேல் படிப்பு.. படிக்கணும் அவ்வளவுதானே படி' என்றான் மறுபடியும்.

அவன் மறுபடியும் தலையை வலக்கையால் நீவிக் கொண்டான்.

'ஓ.கே.. படி! நோ பிராப்ளம்! உனக்கு எந்த விதமான டிஸ்டர்பன்ஸும் இருக்காது. படிக்கலாம்..' என்றான்.

எந்த விதமான என்று சொல்லும்போது கொஞ்சம் அழுத்தியே சொன்ன மாதிரி இருந்தது.

அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

அதற்குப் பிறகு மௌனமாகவே சாப்பிட்டார்கள். எப்படி என்று தெரியவில்லை. அவளுக்குப் பிடித்த ஐட்டங்களாகவே ஆர்டர் செய்தான்.

மேஜையின் மேல் தன் பக்கத்திலிருந்து வலக்கையால் ஒரு சிறிய பாக்கெட்டைத் தள்ளி விட்டான்.

'ஒரு சின்ன கிஃப்ட்' என்றான்.

அவள் எடுத்துப் பிரித்துப் பார்த்தாள். செல்போன்.

'ஜெயப்பிரகாஷோட ஃபியான்ஸி இரவல் வாங்கி செல்போன்ல பேசக்கூடாது இனி உனக்கு எது வேணும்னாலும் என்னைக் கேக்கணும்' என்றான்.

'அப்பா.. ஏகப்பட்ட லொள்ளு! எல்லாம் உத்தரவுதான்' என்று அவள் எண்ணிக் கொள்கையில் அவன் லேசாகப் புன்னகைத்தபடி.

'ஆமா.. கொஞ்சம் லொள்ளு ஜாஸ்திதான்' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போனாள். எப்படித் தன் மனதில் இருப்பதைப் படித்தான் என்று.



'உனக்குப் புரியலே.. சுபா.. உன் ஃபேஸ் ரொம்ப.. எக்ஸ்பிரஸ்ஸிவ்' என்றான் மறுபடியும்.

ஒரு சிரிப்போ, உணர்வுகளின் வெளிப்பாடோ, எதுவும் இல்லாமல் காஷுவலாக என்பார்களே அது மாதிரி அவன் தன்னிடம் பேசுவது ஆச்சரியமாக இருந்தது. பயந்து போனாள்.

'பயப்பட வேண்டியதில்லே. என்கிட்டே ஃப்ரீயா இருக்கலாம்' என்றான் மறுபடியும்.

சாப்பிட்டு முடிக்கிற நேரம்' ஷாப்பிங் எதுவும் போகலாமா?' என்றான்.

அவள் 'இல்லை வேண்டாம்!' என்றாள்.

அவன் தோளைக் குலுக்கிக் கொண்டான். 'உன்னிஷ்டம்' என்பது போல் வெளியே வந்தார்கள்.

'எப்படிப் போகப்போறே! டிராப் செய்யவா?' என்றான்.

'இல்லே! ஆட்டோலே போறேன்' என்றாள். அளவாகப் பேசி விடைபெற்றுக் கொண்டாள்.

* * *

பேசுவதற்கே இடம் கொடுக்காமல் முடிவுகளை அவனே செய்கிறான். எப்படி இவரோடு வாழ்க்கை.. நடத்தி... என்று பயமாக இருந்தது.

அவள் உள் மனது அடித்துச் சொன்னது உன் மேல் படிப்பு ஆசை அம்போதான். இப்போதைக்குக் கல்யாணம் நடந்தாச் சரின்னுதான் ஒத்துக்கறாரு. அப்புறம் மேல் படிப்பாவது ஒண்ணாவது. இப்பச் சொன்ன மாதிரியே அம்மா லைக் பண்ண மாட்டாங்க. சுபான்னா முடிஞ்சது..' என்று எண்ணிக் கொண்டாள்.

தன்னுடைய மேல்படிப்பு ஆசையை மூட்டை கட்டி வைத்து விட வேண்டியதுதான் என்று வேதனையுடன் எண்ணிக் கொண்டாள்.

இவ்வளவு கண்டிப்பும் கறாரும் இல்லாமல் போனாலும் தொழிலை நடத்துவது கஷ்டம்தான் போலிருக்கு.. என்றும் எண்ணிக் கொண்டாள்.

இப்போதுதான் பட்டத் தேர்வுகள் முடித்திருந்தாள். ரிசல்ட் கூட இன்னும் பத்து நாளில் வருகிறது என்று பேசிக் கொண்டார்கள்.

கல்லூரிக்கு விடுமுறை. ஜூலையில்தான் இனி கல்லூரி திறக்கிறது. அதற்குள் 'அம்மாவைச் சரிக்கட்டி அட்மிஷன் வாங்கி விடலாம் என்றிருந்தாள்.

எல்லாம் தலைகீழாகப் போய்விட்டது.

செல்போனை வீட்டுக்குக் கொண்டு வந்தவள் அம்மா விடம் மறைக்க முடியாமல் 'அம்மா.. அவரைப் பார்த்தேன்' என்றாள். அம்மாவுக்கு வாய் கொள்ளாச் சிரிப்பு.

'என்ன சொன்னாரு!' என்றார் ஆவலாக.

'மேல் படிப்பு படிக்கறதுன்னா படின்னாரு' என்றாள்.

அம்மாவின் கண்கள் சுருங்கின. 'நீ மேலே படிக்கணும்னு கேட்டயாக்கும்.'

'படிக்கணும்னு ஆசை இருக்குதுன்னு சொன்னேன். அதனாலென்ன.. படிங்கறாரு' என்றாள்.

'பாத்தியாடி! நான் சொன்னேன்.. இல்ல! ரொம்ப நல்லவர்ன்னு..' என்றாள்.

சுபாஷிணி ஒன்றும் பேசவில்லை.



மெதுவாகக் கையிலிருந்த கிஃப்ட் பேக்கை நீட்டினாள்.

'செல்போன்!' என்றாள்.

'அம்மா.. வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு,

'ஓ..!' என்று திரும்பக் கையில் கொடுத்து விட்டார்.

ரம்யா வந்தபோது சித்ராவும், அவளும் ஏகமாகக் கேலி செய்தார்கள்.

'பார்றி சித்ரா ஒரே நாள்ல செல்போன் குடுத்தாச்சு. நாளைக்கே கார் வந்து நிற்கும்.. பாரு!' என்றாள் ரம்யா.

'ஆனா, இதெல்லாம் எனக்கு சங்கடமா இருக்கு..' என்றாள் சுபாஷிணி.

'அடப்போடி, பொழப்புக் கெட்டவளே! பிழைக்கத் தெரி யாதவடி..' என்றாள் ரம்யா.

சுபாஷிணி மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

சித்ரா 'அக்கா.. மாமா வேறெதுவும் சொல்லலையா?' என்றாள்.

'ஷாப்பிங் போலாமான்னு கேட்டாரு' என்றாள் சுபாஷிணி.

'நீ வேண்டாம்னு சொல்லியிருப்பயே. சரியான பேக்குப் பண்டாரம்க்கா.. நீ' என்றாள் சித்ரா.

சுபாஷிணி பொய்க் கோபத்துடன் 'சரிடி.. நீயே வேண்ணா, அவரைக் கல்யாணம் செஞ்சுக்கோ..' என்றாள்.

'செய்யலாம்தான். நடக்காதே! என்ன செய்ய! ரொம்ப வயசு வித்தியாசமாய் போச்சு..' என்று அவள் தோரணை யாகச் சொல்ல எல்லாரும் சிரித்தார்கள்.

'ம் அவருக்கு உன்னைத்தானே பிடிச்சிருக்கு!' என்றாள் சித்ரா சோகமாக.

மறுபடியும் சிரித்தார்கள்.

சித்ராவே செல்போனில் அழைத்தாள். ஆனால், அந்தப்புறம் அவன் குரல் கேட்கவும் பயந்து போனாள்.

'நான்.. நான்.. சித்ரா.. சும்மா.. போன் வொர்க் பண்ணு தான்னு..' என்று நடுங்கி விட்டாள்.

'ஹேய்.. வாலு! போன் உங்கக்காவுக்குக் குடுத்திருக்கு.. புரியுதா?' என்றான்.

அவள் விதிர்விதிர்த்துப் போய் 'சரி.. மாமா.. அவங்க கிட்டயே குடுக்கறேன்..' என்றாள்.

'வேண்டாம்.. நான் இப்ப பிஸியாய் இருக்கேன். நானே அப்புறம் கூப்பிடறேன்' என்றான்.

ஆஃப் செய்து விட்டான்.

'ஐயோ! அக்கா.. மாமா.. இப்படி என்ன வெட்டு. ஒன்னு துண்டு ரெண்டாய்ப் பேசறார். குரலோட அழுத்தத்தைக் கேட்டாலே பயமாய் இருக்கு!' என்றாள்.

உடனே ரம்யா 'அதெல்லாம் இப்படி ஆளுங்கதான்.. உருகிக் கரைவாங்க.. தெரியுமா?' என்றாள்.

ரம்யா கேலி செய்த மாதிரியே அன்றிரவே கார் ஒன்று வந்து சேர்ந்தது டிரைவரும் சேர்ந்து வந்தார்.

பக்கத்தில் அவர்கள் பங்களாவில் டிரைவருக்கு அறை ஒதுக்கப்பட்டிருக்கிறதாம் வயதான டிரைவர்.

கொஞ்ச நேரத்தில் டாடா போன் கனெக்ஷன் கொடுத் தார்கள்.



அந்தப்புறம் இருந்து வடிவு பேசினார். 'நவநீ தன்னனி இனிமே ரெண்டு குடும்பமும் வேறன்னு நினைக்க வேண்டியதே யில்லை. இங்க எக்ஸ்டிராவா.. நின்னுகிட்டிருந்த காருதான் அப்புறம்.. எதும் தகவல் பரிமாறிக்கனும்னா.. போன் வேணுமில்லே.. அதான்' என்றார்.

சுபாஷிணி இதையெல்லாம் ஒரு வெளியாள் போல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரண்டு நாட்கள் கழித்து ஜெயப்பிரகாஷின் பி.ஏ. என்று ஒரு நடுத்தர வயதுக்காரர் வந்தார்.

நவநீதத்திடம் ஏற்பாடுகள் பற்றி விரிவாகப் பேசினார்.

'எங்க பங்குக்குன்னு..' என்று அவர் இழுக்க.

'அம்மா! அந்தக் காலத்திலிருந்து நம்ம தமிழ்ப் பண்பாடு பரிசம் போட்டுக் கல்யாணம் பண்றதுதானாம். அதனால நீங்க பொண்ணை மட்டும் சந்தோஷமாக் குடுத்தாப் போதுமாம். மற்றதெல்லாம்.. எங்க பொறுப்புன்னு சார் சொல்லச் சொன்னார்' என்றான்.

பிறகு சுபாஷிணியிடம் சில காகிதங்களைக் கொடுத்து.

'சார் கையெழுத்து வாங்கிட்டு வரச் சொன்னார்' என்றார்.

பார்த்தாள்.

வங்கிக் கணக்குத் துவங்குவதற்கான விண்ணப்பப் படிவம்.

கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாள். 'மேடம்! செக் புக்.. உங்களுக்கு வந்துரும்..' என்றதும் மேலும் ஒரு ஃபைலை நீட்டினார்.

வாங்கிப் பார்த்தாள்.

'எம்.எஸ்ஸி படிப்புக்கான விண்ணப்பப் படிவம்..'

அவள் முகம் மலர்ந்தது.

நிச்சயமாக அவள் இதை எதிர்பார்க்கவில்லை.

'ரிசல்ட் கொஞ்ச நாள்ல வருதாம். உடனே.. அப்ளிகேஷன் குடுத்தர்லாம்..' என்றார்.

அவள் வேகமாகத் தலையாட்டினாள்.

அன்றிரவு!

அவளே அழைத்தாள்.

'நெனச்சேன்.. கூப்பிடுவேன்னு.. சொல்லு!' என்றான்.

'தாங்க்ஸ்..' என்றாள்.

'எதுக்கு?' என்றான்.

'இல்லே! அப்ளிகேஷன் ஃபார்ம்.. அனுப்பியிருந்தீங்களே. நீங்க சொன்னப்ப நீங்க சீரியஸாச் சொல்றீங்கன்னு நான்.. நினைக்கலை' என்றாள்.

'மேடம்! ஜெயப்பிரகாஷ் சொன்னா சொன்னபடி நடப்பாருன்னு இண்டஸ்ட்ரி வட்டாரத்திலேயே எனக்கு ஒரு பேரு இருக்கு. அப்புறம்.. சொந்த வாழ்க்கைல அப்படி இருக்க மாட்டேனா?' என்றான்.

அவள் பதில் சொல்லத் தெரியாமல் திகைத்தாள்.

'ஓ..கே! அப்புறம்.. வேற ஏதாவது?' என்றான் மேட்டர் ஆஃப் ஃபேக்ட் குரலில்.

'ஒன்னும்.. ஒன்னும்.. இல்லை' என்றாள்.



'ஓ..கே.. குட்நைட்' என்றான்.

ஆஃப் செய்து விட்டான்.

'மேன் ஆஃப் ஆக்ஷன்' என்று எண்ணிக் கொண்டாள். உடனே இன்னொரு சந்தேகம் தோன்றியது.

'உன்னோட விருப்பத்தை எல்லாம் நான் நிறைவேத்தறேன். இல்லே நீயும் என்னோட விருப்பத்தையெல்லாம் நிறைவேத்தியாகணும்' என்று நின்றால் என்ன செய்வது.

என்ன செய்வது? மேல் படிப்பு ஆசையே நிறைவேறப் போகிறதே.. அதற்காக.. என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாமே. குடும்ப வாழ்க்கையும், படிப்புமாகக் கூடுதலாகச் சிரமப்பட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டாள்.

பெருமூச்சுடன் படுக்கையில் திரும்பிப் படுத்தாள். ஆனால் அப்போது மனதில் தோன்றியது.

ஜெயப்பிரகாஷ் ஆனால் நல்ல ஆளுமையுள்ள பர்ஸனாலிட்டிதான் என்று. கூடவே அவனுடைய நறுக்குத் தெறித்தாற் போன்ற பேச்சு கொஞ்சம் அவளைப் பயமுறுத்தியது. குழப்பத்தோடேயே உறங்கினாள்.

## 4

அந்தப் பெரிய ஜவுளிக்கடை முதலாளியே வாசல் வரை வந்து வரவேற்றார்.

'வாங்க.. வடிவும்மா.. சேலம் பக்கம் போனதிலேயிருந்து நீங்க எட்டிப் பார்க்கவேயில்லை.'

'இல்லையே! போன வருஷம் வந்தேனே?' என்றார் வடிவு.

'அதென்னம்மா! ஒரே ஒரு புடவை எடுத்தீங்க!' என்றார் முதலாளி.

'அதான்.. மகன் கல்யாணத்துக்கு இங்கயே வந்துட்டோம்' என்றார் வடிவு.

'ரொம்ப சந்தோஷங்கம்மா' என்று அவர் சிரிக்கையிலேயே மறுபடியும் ஒரு கார் சர்ரென்று வந்து நின்றது.

ஜெயப்பிரகாஷ் இறங்கினான்.

கைத்தறி வேட்டி, கஞ்சி மடமடப்பில் நிற்கும் கதர் சட்டை அல்லது கைத்தறி சட்டைதான் அதிகம் அணிகிறான். அவனது சிவந்த நிறத்துக்கு அந்த பளிச்சிடும் வெண்மை பாந்தமாக இருக்கிறது என்று எண்ணியபடி அம்மாவின் அருகில் அடக்கமாக நின்று கொண்டிருந்தாள் சுபாஷினி.

உடன் ரம்யா, சித்ரா, ரகு அவர்களின் நெருங்கிய உறவினர்களான தாய்மாமன் குடும்பம் அவர்கள் மட்டும்தான்.

நாளை உறவுக்காரர்கள் முன்னிலையில் ஜவுளி எடுப்பதாம். ஆளாளுக்கு ஒன்று சொல்வார்களாம். அதனால் இன்றைக்கே வந்து கொஞ்சம் பிடித்தவைகளை செலக்ட் செய்து விட்டால் அதிலிருந்து நாளைக்கு செலக்ட் செய்து கொள்ளலாம் என்றார்கள்.

நவநீதமும் தலையாட்டி விட்டார்.

அழகான கைத்தறிப் புடவையில் வயலட் நிற பார்டரில் சுபாஷினியும் எளிமையாக ஆனால் அழகாக இருந்தாள்.



அதீத நிறம் இல்லை என்றாலும் மாநிறத்துக்கும் சற்று மேலே. அழகான பெரிய கண்கள். செதுக்கினாற் போன்ற உருவம். வட்ட முகம். அளவான ஆனால் சற்றே கூரிய மூக்கு.

யாரையும் ஒரு முறை திரும்பிப் பார்க்க வைக்கும் தோற்றம்.

'வாங்க.. தம்பி.. வாங்க.. ரொம்ப நாளாச்சு வந்து..!' என்று மறுபடியும் ஒருமுறை வரவேற்புப் பத்திரம் வாசித்தார் முதலாளி.

அவன் புன்னகையுடன் வணக்கம் சொன்னான்.

'டேய்! ஜமக்காளத்தை எடுத்துப் போடு. போங்கம்மா.. எல்லாரும் போய் ஐட்டம்ஸ் பாருங்க' என்றவர் அவனிடம் மெதுவாக.

'அவங்க வந்திருக்காங்களா?' என்றார்.

'ம்..!' என்றவன் அவளை நோக்கி அருகில் வருமாறு தலையசைத்தான். போனாள்.

'இவங்கதான் சுபாஷினி!' என்றான் சுருக்கமாக.

அவள் தயக்கத்துடன் அவன் அருகில் நின்றபடி வணக்கம் சொன்னாள்.

'அடடா! அடடா! சொக்கநாதரும், மீனாட்சியும் மாதிரி, பாக்கறதுக்கே ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லாருக்கு. தீர்க்காயுசா இருக்கணும்!' என்றார் முதலாளி.

அவள் வெட்கத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்க்க அவன் பார்வை லேசான சிரிப்புடன் கூட அவள் முகத்தின் மீது படிந்து மீண்டது.

'போகலாமா?' என்பது போல் அவன் கையால் சைகை செய்ய முன்னாலே போனார்கள்.

அவள் முணுமுணுப்பாக 'ரொம்ப விலையிலே வேண்டாம்!' என்றாள்.

'நீ சொன்னா யாரும் கேக்க மாட்டாங்க. முகூர்த்தப் புடவை மட்டும் அவங்க இஷ்டத்துக்கு விலைக்குப் பாக்கட்டும் மற்றது உன் விருப்பப்படி செலக்ட் செய்' என்றான்.

அவள் தலையாட்டினாள்.

'சுபா! சேலத்துல நிறைய விசேஷங்களுக்குப் போக வேண்டியிருக்கும். கலர், டிசைன் செலக்ஷன் மட்டும் உன் பொறுப்பு. மற்றதெல்லாம் அம்மா பொறுப்பு..' என்றான்.

மறுபடியும் தலையாட்டிவிட்டு நகர்ந்தாள்.

அவளுடைய தங்கையும், தம்பியும் வந்திருந்தார்கள். சித்ரா.. அவனுடைய தங்கையிடம் போய்,

'ஹலோ! நான் சித்ரா.. ஃபர்ஸ்ட் இயர் படிக்கறேன்.. நீங்க..' என்றாள்.

'ஓ! நீதான் அந்த வாயாடி.. சித்ராவா.. நான் ரேகா.. செகண்ட் இயர் பி.காம்..' என்றாள் ரேகா.

'என் பேர் ஒண்ணும் வாயாடி.. இல்லே! சித்ரலேகா.. அழகான பேரு..' என்றாள் விறைப்பாக.

'ஓ.கே.. நீ இனி எனக்கு சித்து.. நான் உனக்கு ரேக்ஸ் சரியா? என்ன ஒரு ஆறுமாசம்தானே வித்தியாசம்.. வா.. போன்னே.. பேசு..' என்றாள்.

'தட்ஸ் குட்!' என்றாள் சித்ரலேகா மிதப்பாக. இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்து.



'ஐயோ! மாயாபஜார் ரங்காராவ் மாதிரி இருக்கு.' என்று அவள் காலை வாரினாள்.

சிரித்தார்கள்.

கணத்தில் அவர்கள் தோழிகளாகிக் கொள்வதை சுபாஷிணி ஒரு வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'டேய்.. ஹரிபிரசாத் இது சித்ரா..' என்று அறிமுகப் படுத்தினாள் ரேகா.

'ரகு.. சொன்னாப்ல' என்றான் அவன் பந்தாவாக.

இன்னொரு பக்கத்தில் ரகுநாதனும் ஹரிபிரசாத்தும் நேசக் கரம் நீட்டி விட்டார்கள் என்பது புரிந்தது.

ஜெயப்பிரகாஷின் நண்பராம் மகேஷ் என்று ஒருவர் வந்து இணைந்து கொண்டார்.

ஜெயப்பிரகாஷ் மகேஷிடம் மட்டும் மெல்லிய குரலில் ஏதோ பேசிக் கொண்டு நின்றிருந்தான்.

புடவைகளை எடுத்துப் போட ஆரம்பித்த சேல்ஸ் மேனிடம் போய் மகேஷ் ஏதோ மெல்லிய குரலில் சொல்லி விட்டு வந்தார்.

சுபாஷிணிக்குப் புரிந்தது.

எதையும் கண்டு கொள்ளாதவன் போல் நின்று கொண்டிருந் தாலும் ஜெயப்பிரகாஷின் கூர்மையான பார்வை எல்லா வற்றையும் கணக்கெடுத்துக் கொண்டிருந்தது என்று.

அவளால் இயல்பாய் இருக்க முடியவில்லை. படபடப் பாகவே இருந்தாள்.

செல்போன் ஒலிக்கவும் எடுத்தாள். ஜெயப்பிரகாஷின் மெல்லிய குரல் ஒலித்தது.

'ரிலாக்ஸ்டா இரு. எதுக்கு டென்ஷனாகறே?' என்றான்.

ஆஃப் செய்து விட்டான்.

அவள் படபடப்பு அடங்கக் கொஞ்ச நேரமாயிற்று.

ஜெயப்பிரகாஷுக்கு நேர் எதிராக அவன் நண்பன் கலகலப்பான ஆளாக இருந்தான்.

'ஏன்.. ரம்யா! இது நல்லாருக்கில்லே! இந்தக் கலர் பெட்டர் இல்லே!' என்று அவள் இரண்டு மூன்று முறை திருப்பித் திருப்பி எடுத்துப் பார்க்கிற புடவையையெல்லாம் மெதுவாக அந்த சேல்ஸ்மேன் தனியாக எடுத்து வைப்பதை அவள் அறிந்து கொள்ளவில்லை.

சித்ரா ஜெயப்பிரகாஷிடம் போய் 'மாமா! பேசாம நீங்க இன்னொரு விஷயம்கூட செய்யலாம்' என்றாள்.

'என்ன!' என்பது போல் பார்க்க.

'கைத்தறி வேஷ்டி விளம்பரத்துக்கு மாடலிங் செய்யலாம்!' என்று கலகலவெனச் சிரித்தாள்.

மகேஷ் சிரித்தான். ஆனால், அவன் சிரிக்கவில்லை மாறாக, லேசாக அவள் காதைப் பிடித்துத் திருகினான்.

ரேகா உடனே "அப்ப.. உங்கக்காவை கைத்தறிப் புடவை விளம்பரத்துக்கு மாடலாக்கிடுவமா.. ரெண்டு பேரும்.. ஜோடியா இருந்தா.. நல்லாருக்குமில்லே!' என்றாள்.

இரண்டு இளம்பெண்களும் சிரித்துக் கொண்டார்கள். பிறகு அவர்கள் பேச்சில் அவர்கள் உலகத்தில் ஆழ்ந்து போனார்கள்.

'சித்து.. அஜீத் பாத்தியா? எப்படி வெயிட்டைக் குறைச் சுட்டாரு!' என்றாள் ரேகா.

ஹரி தலையிலடித்துக் கொண்டான்.



'ஐயோ! அதைப்பத்தி உனக்கென்னக்கா? ப்ரொட்யூசர்ஸும், ஷாலினியும் கவலைப்பட வேண்டிய விஷயம்..' என்றான்.

'நாங்க எதை வேண்ணாலும் பேசுவோம்.. உனக்கென்னடா.. வந்தது..' என்றாள் ரேகா.

'ஆமா.. இதெல்லாம்தான்.. உலகமகா முக்கியமான விஷயங்களாக்கும்' என்றான் அவன்.

'ஏன்? நீ என்ன கோஃபி அன்னான், இவன் என்ன ஜார்ஜ் புஷ்ஷாக்கும் நீங்க என்ன வோர்ல்ட் பாலிடிக்ஸ் பேசறிங்களாக்கும்' என்றாள் சித்ரா.

'வேண்டாம்.. என்னை இழுக்காதே' என்றான் ரகு.

சுவாரசியமாக சண்டை போட்டு ஏகமாக ரகளை செய்து கொண்டிருந்தார்கள்.

'டேய்.. ரேகா!' என்று அவன் ஒரு குரல் கொடுத்தவுடனே 'கப் சிப்' என்றாவதை சுபாஷிணி குறுகுறுவென்று கவனித்தாள்.

'ஆமாடி! சும்மா.. பார்வையில, சைகையிலேயே மிரட்டிப் போடறாருடி.. உங்காளு' என்று மேலும் கலக்கினாள் ரம்யா.

புடவைத் தேர்வுகள் எல்லாம் முடிந்தவுடனே நகர்ந்து நகர்ந்து நிற்கையில் சுபாஷிணி ஜெயப்பிரகாஷின் அருகில் நிற்க வேண்டி வந்தது.

ஏதாவது பேச வேண்டுமேயென்று சுபாஷிணி ரம்யாவை அறிமுகம் செய்து வைத்தாள்.

'மேலே என்ன செய்யப் போறீங்க?' என்றான்.

'மேல் படிப்புக்கு அப்பாகிட்டே அப்ளிகேஷன் போட்டிருக்கேன். நிதி நிலைமை, பட்ஜெட் எல்லாம் பாத்து அப்ரூவ் ஆனா படிப்பு இல்லேன்னா வேலை' என்றாள் விளையாட்டாக.

அப்போது வடிவு ரம்யாவை அழைத்து 'உனக்கு இந்தப் புடவை பிடிக்குதா.. பார்!' என்றார்.

'எனக்கா! ஐயோ.. எனக்கெதுக்குங்க!' என்று அவள் திகைக்க,

'என்னம்மா.. நீயும் நம்ம பொண்ணு' என்று புடவை எடுத்துக் கொடுக்க ரம்யா உண்மையாகவே மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனாள்.

அவள் வடிவிடம் பேசிக் கொண்டிருக்கையில் அவன் மெல்லிய குரலில்.

'என்ன! முகூர்த்தப் புடவை பிடிச்சுதா?' என்றான்.

அவள் நிமிர்ந்து பார்க்காமல் தலையாட்டினாள்.

'நாளைக் காலையிலே பத்து மணிக்கு.. ரெடியா.. இரு..' என்றான்.

அவள் எதுவும் பேசாமல் தலையாட்டினாள்.

'எங்கேன்னு கேட்க மாட்டியா? ஒரு முக்கியஸ்தரைப் பாத்துட்டு வந்தர்லாம்..' என்றான்.

மறுபடியும் தலையாட்டுவதை எந்தவித பாவனையும் இன்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு ஹோட்டல் போனார்கள்.

ரகு, சித்ரா ஹரி, ரேகா, என்று இளைஞர் பட்டாளம் ஒரு வட்டமாக அமர ரம்யா, சுபாஷிணி, மகேஷ், ஜெயப்பிரகாஷ் இவர்களை ஒரு மேஜைக்குத் தள்ளினார்கள்.

ஜெயப்பிரகாஷுக்கும் சேர்த்து மகேஷ் கலகலப்பாகப் பேசினான். சற்று நேரத்தில் ரம்யாவும், சுபாவும் மகேஷிடம்



இயல்பாகப் பேசுவதையும், சிரிப்பதையும் அவன் மௌனமாகப் பார்த்துக் கொண்டு அமைதியாகச் சாப்பிட்டான்.

'ஏன் மகேஷ்.. சார்! மாப்பிள்ளை சார் பேசற ஒவ்வொரு வார்த்தைக்கும் ரொம்ப விலையிருக்கும் போலிருக்கே?' என்றாள் ரம்யா துடுக்காக.

'ஆமாம்.. மேடம்! நிஜம்தான்.. அவர் 'எஸ்'ன்னா அது ரொம்ப விலைமதிப்பில்லாததுதான் 'நோ'ன்னாலும் அது முடிவானதுதான்.'

அப்போது மட்டும் ஜெயப்பிரகாஷ் குறுக்கிட்டு,

'ரம்யா.. மேடம்! மகேஷ் மட்டும் யாருன்னு நினைச்சீங்க.. பெரிய அபார்ட்மெண்ட் ப்ரொமோட்டர்.. தெரியுங்களா?' என்றாள்.

அவர்கள் கம்பெனி பெயரைக் கேட்டதும் ரம்யா மலைத்துப் போனாள்.

ஹோட்டல் தொழிலில் புகழ்பெற்ற குடும்பத்தில் மகேஷ் பெண் எடுத்திருந்தானாம். 'அவங்க இப்ப பிரசவத்துக்குப் போயிருக்காங்க' என்றான் மகேஷ்.

அப்படிப்பட்டவர்கள் சுபாவின் ஃப்ரெண்ட் என்பதாலேயே தன்னை மதித்துப் பேசுகிறார்கள் என்பது ரம்யாவுக்குப் புரிந்தது.

மகேஷ் மேலும் சொன்னான். 'சுபா.. மேடம், நம்ம ஜெயப்பிரகாஷ் சொன்னா சொன்னதுதான் இண்டஸ்ட்ரி வட்டாரத்துல ஒரு பேர் இருக்கு தெரியுமா?' என்றான்.

அன்றைக்கு இதையே ஜெயப்பிரகாஷ் சொன்னது சுபாவிற்கு நினைவுக்கு வந்தது. மகேஷ் மேலும் தொடர்ந்து,

'ஆனா, பய ஒரு இடத்திலே கெஞ்சிகிட்டு நிக்கப் போறதை நினைச்சாத்தான் சிரிப்பா.. இருக்கு..' என்றவுடன் சுபாஷினி அவசரமாகக் குனிந்து கொண்டு மசால் தோசையை வாயில் போட்டாள்.

'போடா! உன்னோட அனுபவத்தையெல்லாம் லீக் பண்ணி கிட்டிருக்கிறே' என்று மட்டம் தட்டிவிட்டு அவன் கனகாரியமாக எழுந்து கைகழுவப் போனான்.

அப்போது மகேஷ் சொன்னான். 'ரொம்பக் கறாரா இருப்பான். அழுத்தமா இருப்பான். ஆனா, எதைச் செஞ்சாலும் கரெக்டாச் செய்வான். நீங்க ரொம்ப லக்கி மேடம்..' என்று.

அவள் நெகிழ்ச்சியுடன் தலையாட்டிக் கொண்டாள்.

இப்படிப்பட்ட ஒருவருடன் தன் வாழ்க்கை எப்படித்தான் இருக்கப் போகிறது என்று அவளால் அனுமானிக்கவே முடியவில்லை.

## 5

'மௌனமாகவே காரோட்டுகிறாரே அவரே பேசட்டும்' என்று எண்ணிக் கொண்டாள் சுபாஷினி.

அவனும் பேசவில்லை.

ஒருகட்டத்திற்கு மேல் அவளால் பொறுக்க முடியவில்லை.

'எங்கே.. போறோம்?' என்றாள்.

'சஸ்பென்ஸ்' என்று புன்னகைத்தான்.



மேற்கொண்டு பேச்சை வளர்த்தப் பயந்தவளாய் அமர்ந்து விட்டாள். ஆனால், கார் போய் நின்ற இடம் பார்த்து ஆச்சரியமாகி விட்டாள்.

அவள் பட்டப் படிப்பு படித்த கல்லூரி. அவள் மேற்படிப்புக்காக சேர விரும்பிய கல்லூரி.

முதல்வரைப் பார்ப்பதற்காக ஒரு இரண்டு நிமிடம் காத்திருந்தார்கள்.

அழைப்பு வந்ததும் உள்ளே போனார்கள்.

'வணக்கம்.. மேடம்!' என்று கைகூப்பியபடி அவன் உள்ளே போக அங்கே கிடைத்த வரவேற்பைப் பார்த்து சுபாஷிணி சற்று மலைத்துப் போனாள்.

'அடடே! ஜெயப்பிரகாஷ்! வாங்க தம்பி.. வாங்க!' என்று வரவேற்றார் முதல்வர்.

'உட்காருங்க' என்றார்.

அமர்ந்தான். சுபாஷிணி அமரவில்லை. மரியாதை காட்டும் வண்ணம் நின்றாள்.

'கேள்விப்பட்டேன். சுபாஷிணியை மேரேஜ் பண்றீங்களாம். எங்க காலேஜ் பொண்ணு ரொம்ப கெட்டிக்காரி' என்றார்.

அவன் புன்னகைத்தான். 'ஆமா! தொடர்ந்து உங்க காலேஜ் ஸ்டூடண்டாவே இன்னும் ரெண்டு வருஷத்துக்கு இருக்கணுமாம்' என்றான் லேசான சிரிப்புடன்.

அவர் கேள்விக்குறியாய்ப் பார்க்க.

'மேற்கொண்டு எம்.எஸ்ஸி படிக்கணுமாம்' என்றான்.

'ஓ!... அப்படியா, படிக்கறதுக்கு அனுமதிக்கிறீங்களா?'

'அவங்க விருப்பத்தையும் மதிக்கணுமில்லே. படிச்சுட்டு வரட்டும்' என்றான்.

'நல்ல வேலை செஞ்சீங்க. தம்பி பொதுவா கல்யாணம்னு ஆனால் பொண்ணுங்க தங்களோட தனிப்பட்ட சிறப்புகளை விட்டுக் குடுத்தர்றாங்க. குடும்ப வாழ்க்கையில ஒரு ஆணும், பொண்ணுமா இணைஞ்சு வாழற அதே சமயம் அவங்க ளோட தனித்திறமையும் வளர்த்துக்கத்தான் வேணும். நான் உங்களை ரொம்பப் பாராட்டறேன்' என்றார்.

'மேடம்! பாராட்டுக்கு நன்றி. வெறும் பாராட்டோட விட்றாம ஒரு ஸீட் குடுக்கணும்' என்றான்.

'ஐயோ! தம்பி! உங்களுக்கு விஷயம் தெரியாதா? சுபா எங்க மெரிட்டோரியஸ் ஸ்டூடண்ட். யுனிவர்சிட்டி ரேங்க் வாங்குவான்னு எதிர்பார்த்துகிட்டிருக்கோம். அப்ளிகேஷன் போட்டா.. முதல் ஸீட் அலாட்மெண்ட் அவளுக்குத்தான்..' என்றார் முதல்வர்.

இப்போது மலைத்துப் போவது அவன் முறையாகிப் போனது. ஆனாலும், உடனே சுதாரித்துக் கொண்டு,

'ரொம்ப சந்தோஷம்.. மேடம்! சிட்டியில முதல் முதலா எங்க மேரேஜ் தகவலை உங்ககிட்டத்தான் சொல்லணும்னு நினைச்சேன்' என்று விடை பெற்றுக் கொண்டான்.

சுபாஷிணியும் 'வரேன்.. மேடம்!' என்று விடைபெற்றுக் கொண்டாள்.

தனது வலக்கையால் அவ்வப்போது லேசாக இடது பாக்கெட்டைத் தட்டிக் கொள்வது அவன் மேனரிசமாக இருந்ததைக் கவனித்திருந்தாள்.

முதல்வரின் அலுவலகத்தில் இருந்து வெளியே வரும் போதும், காரில் ஏறும் வரை அங்கே எல்லாரும் நின்று அவ



னிடம் பேசினார்கள். அந்தக் கல்லூரி அலுவலகத்தின் சிடு மூஞ்சி மேனேஜர் கூட ஓடி வந்து பேசினார். இதையெல் லாம் சுபாஷிணி ஒருவித வியப்புடன் பார்த்துக் கொண்டாள்.

காரில் போகும்போது,

'ம்.. ரெகமண்ட் பண்ணி ஒரு சீட் வாங்கிக் குடுத்துக் கொஞ்சம் பெருமை தேடிக்கலாம்னு பார்த்தேன். அதுவும் புஸ்னு போச்சு..' என்றான்.

அவன் ஏதோ அங்கலாய்ப்பது போல் பெருமைப்பட்டுக் கொள்கிறான் என்று புரிந்தது.

'ஆனா, எனக்கு ஒரு விஷயம் புரிஞ்சுது!' என்றாள் சுபாஷிணி மெல்லிய குரலில்.

'என்ன?' என்றான் திரும்பிப் பார்க்காமல்.

'ரெகமண்ட் செய்ய வந்தவர் எவ்வளவு பெரிய ஆள்ன்னு புரிஞ்சுது..' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. கொஞ்ச நேரம் மௌன மாக ஓட்டியவன் சட்டென்று அந்தப் பார்க்குக்குள் காரைத் திருப்பினான். திரும்பி அமர்ந்து அவளை நேராகப் பார்த்தான்.

'சுபா! இனிமே உன் குடும்பம் வேற என் குடும்பம் வேற இல்ல. எங்க குடும்பத்துக்கு என்னென்ன உண்டோ அதில எல்லாத்திலயும் உங்க குடும்பத்துக்கும் சரி பங்கு உண்டு.. புரியுதா?' என்றான்.

அவள் திகைத்துப் போய் அவன் முகம் பார்த்தாள்.

'இது மயக்கத்துல சொல்றது இல்லை. உண்மை. அதே போல தனிப்பட்ட முறையில என்னுடையதுன்னு இருக்கிற

எல்லாத்திலயும் உனக்கு சரி பங்கு.. உண்டு. புரியுதா? என்கிட்டே எதையும் கேட்கறதுக்கும், நான் எதிர்பார்க்கிற ஒரு விஷயம் உனக்குப் பிடிக்கலேன்னா மறுக்கறதுக்கும் உனக்கு உரிமை உண்டு புரியுதா?' என்றான்.

அவள் நெகிழ்ச்சியுடன் தலையாட்டினாள்.

அதற்குப் பிறகு அவன் பாட சம்பந்தமாகப் பேச ஆரம்பித்தான்.

அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. அவனும் எம்.எஸ்ஸி கெமிஸ்ட்ரிதான் படித்திருக்கிறான் என்று. அதற்குப் பிறகு கரஸ்பான்டென்ஸில் எம்.பி.ஏ. படித்தானாம்.

'ஏதாவது சாப்பிடலாமா?' என்றான்.

'இல்லே! இந்த நேரத்துல' என்று அவள் மறுக்க வழியில் ஒரு நல்ல ஐஸ்கிரீம் பார்லரில் ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்தான்.

வீட்டில் இறக்கி விட்டு விட்டுப் போய் விட்டான்.

* * *

திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. ஆனால், எதிலும் அவசியமற்ற வீணடிப்புக்கள் இருக்கவில்லை.

சின்னச் சின்ன விஷயங்களில் அவன் தீர்க்கமான சிந்தனை அவளை ஆச்சரியப்படுத்தியது.

'இலையில் பரிமாறிவிட்டு பந்திக்கு அழைக்காதீங்க' என்றான். வடிவு கேள்விக் குறியாய்ப் பார்க்க.

'அம்மா.. சில பேர் சில ஐட்டங்களை லைக் பண்ண மாட்டாங்க. கேட்டுப் பரிமாறட்டும். எவ்வளவு வேணுமோ அவ்வளவு பரிமாறட்டும்..' என்றான்.



மணவறை கூட இயற்கையான பூக்களாக இருக்க வேண்டும் என்றான்.

முதல் நாள் இரவில் கிளாரினெட் கச்சேரி என்றான். ஆனால் எது பற்றி முடிவு செய்யும்போதும் 'சுபாவுக்கு ஓ.கே.. வா?'ன்னு கேட்டுக்குங்க..' என்றான்.

சுபாஷிணியோ கருத்துச் சொல்லும் நிலையிலேயே இல்லை. தேனில் விழுந்த எறும்பைப் போல் திகைத்துப் போய் ஒரு மலைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பொறாமைக் குணம் மிக்க ஒரு உறவுக்காரப் பெண்மணி,

'இவ்வளவு ஆடம்பரம் எதுக்கு? ஓவரா ஆடின எத்தனையோ பேரைப் பாத்தாச்சு. இது எங்க போய் முடியுமோ' என்று அவள் காதுபடச் சொன்னதைக் கேட்டு அவளுக்கே கொஞ்சம் பயமாகிப் போனது.

ரம்யாதான் 'அந்தம்மா.. கிடக்குது. சில பேரு இப்படித் தான் அடுத்தவங்க வளர்ச்சியை, வாழ்க்கையைப் பார்த்துப் பொறாமைப் படறதே வேலை. அவங்க எண்ணமே.. அவங்களுக்குப் பகையாகி வேணுங்கற தண்டனையைக் குடுத்துரும்' என்று ஆறுதல் படுத்தினாள்.

'பாருடி, ரொம்பக் காம்ப்ளெக்ஸ் வளர்த்துக்காதே! நீயும் ரொம்பப் பர்ஸனாலிட்டியுள்ள ஆளு. ஜெயப்பிரகாஷ் சாருக்குப் பக்கத்திலே நிக்க உனக்கும் எல்லாத் தகுதியும் உண்டு. அவங்க பணத்துல கெட்டின்னா நீ குணத்துல கெட்டி. படிப்புல, அறிவுல, அழகில கெட்டி புரியுதா? ரொம்பப் பேஸ்து அடிச்ச மாதிரி நிக்காதே' என்று செல்லமாய் மிரட்டினாள்.

அதற்குப் பிறகுதான் சுபாஷிணி கொஞ்சம் இயல்பானாள்.

இரண்டு நாட்கள்.

வெகு வேகமாக எல்லா நிகழ்வுகளும் நடந்தன. திருமணத்தின் போதும், அதற்குப் பிறகும் நடந்த நிகழ்வுகளின் போதும் அவன் நெருங்கி நின்றானே எந்தச் சீண்டலிலும், குறும்புகளிலும், ஈடுபடவில்லை. மற்றவர்கள் விளையாட்டுப் பேசும் போது லேசாகச் சிரித்தான்.

மகேஷ்தான் கலாட்டா செய்து கொண்டிருந்தான்.

இருபத்தொன்பது வயது ஆகாம கல்யாணம் இல்லேன்னு சொல்லிகிட்டிருந்தாண்டா.. இப்பப் பாரு. இருபத்தைஞ்சு வயசலயே கழுத்துல மாலையை மாட்டிக்கிட்டு நிக்கறாண்டா..' என்றான் நண்பர்களிடம்.

'மாட்டிகிட்டது.. நான்தாண்டா.. நான்தாண்டா அதைப் பத்தி கவலைப்படணும்' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'டேய்! மாலையை மாட்டிகிட்டது வேணும்னா நீயாய் இருக்கலாம். ஆனா, பாவம்.. சிஸ்டர்.. உங்ககிட்டே மாட்டிகிட்டாங்களே.. அதை நினைச்சாத்தான்.. பாவமா இருக்கு' என்றான் மகேஷ் விடாப்பிடியாய்.

'பாரு.. யாருகிட்டே.. மாட்டிகிட்டாங்கன்னு போகப் போகத்தான் தெரியும்.' என்றான் ஜெயப்பிரகாஷ்.

இந்த எல்லாப் பேச்சுக்கும் அவள் நிலத்தைப் பார்த்தபடியே புன்னகைத்துக் கொள்வதைக் கண்டு அவன் பார்வை அவள்மேல் படிந்து மீண்டது.

அவளுக்கு ஒரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் நண்பர்கள் நடுவில் மட்டும் அப்படிப் பேசினானே தவிர மற்றபடி தங்கள் தனிமையில் இதுவரையிலும் அவளைச் சீண்டுகிற மாதிரியோ, தொல்லைப் படுத்துகிற மாதிரியோ அவன் எதுவும் பேசவில்லை என்பதுதான் அது.



மேலும் ஆச்சரியங்கள், அவள் வாழ்க்கையையே புரட்டிப் போடக் கூடிய விஷயங்கள் அவளுக்காகக் காத்திருக்கின்றன என்பது அப்போது புரியவில்லை.

* * *

திருமணம் தீர்மானமான நாளில் இருந்தே அவளுக்குள் குழப்பம் இருந்தது.

தன்னைச் சுற்றிலும் கல்லூரித் தோழிகள் 'தில் கய் தட் கய்' என்று பையன்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும் அவள் ஒரு புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருப்பாளே தவிர கண்டு கொள்ள மாட்டாள்.

படிப்பில் மிகவும் ஆர்வம்.

படிப்பைத் தவிர வேறு எதிலும் நாட்டமில்லை பொது அறிவு பற்றிய புத்தகங்கள் படிப்பாள்.

நன்றாகப் படித்து ஏதாவது வேலைக்குப் போக வேண்டும். குடும்பத்துக்கு உதவ வேண்டும் கை தூக்க வேண்டும் என்ற கனவுகள்தான் இருந்ததே ஒழிய திருமணம் தன் வாழ்க்கையில் இவ்வளவு அவசரமாக நுழையும் என்று அவள் நினைக்கவில்லை.

'ஏண்டி, ரம்யா, நம்ம காலேஜ்லயே.. காதல்.. கல்யாணம், திரில்லு எத்தனை பொண்ணுங்க ஆசைப்படறாங்க. அவர்களையெல்லாம்.. விட்டுட்டு எனக்கெதுக்குடி இப்போ கல்யாணம்?' என்று ரம்யாவிடம் மட்டும் தன் உள்ளக் கருத்தைப் பகிர்ந்து கொண்டாள்.

'இங்க.. பாரு லைஃப்ல யார் யாருக்கு எது நடக்குமோ... அதுதான் நடக்கும். படிச்சு முடிச்சுட்டு... வேலைக்குத்தான் போவே. ஜெயப்பிரகாஷைக் கல்யாணம் செஞ்சே.. முதலாளியாவே ஆயிடுவே' என்றாள் ரம்யா.

'போடி! அதுல என்னோட திறமை என்ன இருக்கு. அவரு.. திறமையா எஸ்டாப்ளிஷ் செஞ்சு வச்சிருக்கிற அமைப்புல போயி நான் என்னத்தை அதிகாரம் பண்றது' என்றாள்.

'ரொம்ப அலட்டிக்காதே அம்மிணி. இப்படி ஒரு வாய்ப்புக் கிடைக்குதேன்னு சந்தோஷப்படு..' என்றாள் ரம்யா.

'என்ன இருந்தாலும்.. நாமளே ஒண்ணை உருவாக்கி யிருந்தா..' என்று அவள் மேலே தொடரு முன்னே ரம்யா குறுக்கிட்டாள்.

'அடப் போடி! போக்கத்தவளே! உனக்கும் எனக்கும் இருக்கிற வசதிக்கு.. நாம ஒண்ணு என்ன அரை காலரைக் கால், வீசம்னுகூட எதையும் உருவாக்க முடியாது. வேணும்னா நீ ஒரு பொட்டிக்கடை வச்சு வெத்தலை பாக்கு விக்கலாம். நான் பக்கத்துலயே ஒரு பூக்கடை போடலாம்' என்றாள் ரம்யா.

சுபாஷிணி ஒன்றும் பேசவில்லை. ரம்யா மேலும் தொடர்ந்து 'ஏய், ரொம்பக் கவலைப்படாதே! நான் எங்கப்பாகிட்டே சொல்லி உங்களவரைப் பத்தி விசாரிக்கச் சொன்னேன். சேலம் போய் விசாரிச்சுட்டு வந்தாரு. மாப்பிள்ளை தொழில்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்டாம். ஆனா, எந்த மோசமான விஷயங் கள்லயும் ஈடுபாடு கிடையாதாம். ரொம்ப ஸெல்ஃப் டிசிப்ளின்டாம்' என்றாள்.

சுபாஷிணி கொஞ்சம் நெகிழ்ந்து விட்டாள்.

'ஆமாடி.. உங்க வீட்லயும் ஆம்பளைங்க பெரியவங்க யாருமில்லையே அதனாலதான்.. அப்பா.. ரொம்ப இன்வால்வ் ஆகி எல்லாம் செஞ்சாரு. அப்புறம் இன்னொண்ணு யோசி. இந்தக் கல்யாணத்துல உங்க அம்மா ரொம்ப ஆர்வமா



இருக்காங்க.. நீ ஏதாவது மாட்டேன்னா.. அவ்வளவுதான் அவங்க படுக்கையில படுத்தாலும் படுத்துடுவாங்க..' என்றாள் ரம்யா.

அந்த வார்த்தைக்குப் பிறகுதான் சுபாஷிணி பணிந்து கொடுத்தாள். ஆனாலும் உள்ளூர,

'இவர்களுக்கெல்லாம்.. என்ன? தள்ளி விட்டுட்டு இங்க உட்கார்ந்துக்குவாங்க.. மேரேஜ் லைஃப்பையும் சமாளித்து படிப்பையும் படிக்கப் போறது நான்தானே' என்ற குழப்பமும் இருந்தது.

அவள் மனத்துக்குள் சஞ்சலத்தை ஏற்படுத்திக் கொண்டே யிருந்த அந்தத் திருமண வாழ்க்கையை சந்திக்க வேண்டிய அந்த நாளும் வந்தது.

## 6

ஜெயப்பிரகாஷின் உறவினர்களில் பல குடும்பத்தினர் அவன் மீது கண் வைத்திருந்தார்கள் போலும்.

'என்னடா. இது சேலத்தில் கிடைக்காத பொண்ணா என்ன?' என்னமோ கோயமுத்தூர்ல போய்ப் பொண்ணைப் புடிச்சுட்டு வந்திருக்கானே நம்ம ஜெயப்பிரகாஷுன்னு பாத்தேன். என்னமோ புள்ளை கண்ணுக்கு நல்லா.. இருக்கா.. அதான்' என்றார் ஒரு பெண்மணி.

'பழைய பழக்கமாம் பார்ட்னர்ஸாமில்லே' என்றார் இன்னொருவர்.

இந்த உரையாடல்களை எல்லாம் சுபாஷிணி கண்டு கொள்ளவேயில்லை. அவள் மனமெல்லாம் வேறு கவலையில் ஆழ்ந்திருந்தது.

ஜெயப்பிரகாஷ் பேச்சே ரொம்ப சுருக்கமாக இருக்கிறது. மறுப்பும் சரி, ஒப்புதலும் சரி சுருக்கமான வார்த்தைகளில் தான் வருகிறது. தன்னுடைய வாழ்க்கை எப்படித்தான் இருக்கப் போகிறதோ? இப்படி இவர்கள் எல்லாம் பேசிக் கொள்கிற மாதிரி நம்மிடத்தில் என்ன இருக்கிறதென்று அங்கே வந்து பெண் எடுத்தார் என்று அவளுக்கும் யோசனையாக இருந்தது.

அதற்கேற்ப அன்று தனியறையில் அவனுடன் நேரம் கழிக்க வேண்டுமென்கிற சூழ்நிலையும் வந்து விட்டது. அவள் தயக்கத்துடனும், யோசனையுடனும் அறைக்குச் சென்றாள்.

அந்த விசாலமான பங்களாவின் மாடிப் பகுதியில் அவனுடைய அறையாம் சொன்னார்கள்.

தயக்கத்துடன் அவள் உள்ளே நுழைந்த பின்தான் பார்த்தாள். அது ஒரு அறையல்ல. மேலேயே ஒரு சிறிய பங்களா இருந்தது. நுழைந்த உடனே அரை வட்ட வடிவில் ஒரு ஹால். அதன் ஒரு பக்கத்திலும் ஒரு அலுவலக அறை. நடுப்பக்கத்திலும் அதைத் தொடர்ந்து இரண்டு மூன்று அறைகள்.

ஹால் சோபாவில் அமர்ந்திருந்தான். ஏதோ ஃபைலில் ஆழ்ந்திருந்தான்.

அவள் உள்ளே நுழைவதைப் பார்த்தவுடன் நிமிர்ந்து பார்த்தான்.



'வா.. சுபா!' என்றான். எதிர் சோபாவில் இடம் காட்டினான்.

அவள் அமர்ந்தாள்.

மெதுவாக, ரிலாக்ஸ்டாக ஒரு புன்னகையை மலர விட்டான். பிறகு ஃபைலை மூடி வைத்து விட்டு சாய்ந்து உட்கார்ந்தான்.

அவள் தரையையும் அவனையும் மாறி மாறிப் பார்த்த படி அமர்ந்திருந்தாள்.

'உனக்கு ஒரு குட் நியூஸ்.. சொல்லட்டா!' என்றான்.

அவள் கேள்விக் குறியாய்ப் பார்க்க.

'உனக்கு யுனிவர்சிட்டி ரேங்க் கிடைச்சிருக்கு. யு ஸ்டாண்ட் ஃபர்ஸ்ட்' என்றான்.

'கன்கிராஜுலேஷன்ஸ்' என்றான்.

அவள் மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனாள்.

'நிஜமா? நிஜம்மாவா?' என்று பேச வாயெழாமல் குழறினாள்.

'எஸ்.. பர்ஸ்ட்.. ஃபர்ஸ்ட் ராங்க்' என்றான்.

அவள் மேலும் மகிழ்ந்தாள்.

'ஸ்கூல் லெவல்லயே.. டிஸ்டிரிக்ட் ஃபர்ஸ்ட்டாமே நீ?' என்றான்.

'ஆமா.. டென்த்.. ஸ்டாண்டர்ட்ல.. ஆனா, அந்த லீவில தான்.. அப்பா..' என்று தயங்கி நிறுத்தினாள்.

'ஓ!' என்றான் உள்ளடங்கிய குரலில். பிறகு அவனே தொடர்ந்து 'சுபா! வாழ்க்கை சில நேரங்களில் கதைகளை விட சுவாரசியமானது. சில நேரங்களில் ரொம்பவும் கனமானது கூட' என்றான்.

அவள் ஒத்துக் கொள்வது போல் தலையாட்டினாள்.

'அது மட்டுமில்ல.. சுபா.. வாழ்க்கையில நாம எதிர்பாராத அளவுக்கு வில்லத்தனமானவர்களும் இருக்காங்க. இல்லே?' என்றான் வறண்ட குரலில்.

அவன் ஏன் இப்படிப் பேசுகிறான் என்பது அவளுக்குப் புரியவில்லை. ஆனாலும் தலையாட்டினாள்.

'ஹேய்! நீ தலையை இப்படி அசைக்கும் போது அந்தத் தொங்கட்டான் அசையறது ரொம்ப அழகா இருக்கு?' என்றான்.

திடீரென்று இப்படித் தாவுவான் என்று எதிர்பார்க்கவில்லை. திகைத்து விட்டாள்.

அவள் சட்டென்று சிரித்து விட்டாள்.

'அப்புறம்.. உனக்கு ஆர்கானிக் கெமிஸ்ட்ரி பிடிக்குமா? இனார்கானிக் கெமிஸ்ட்ரி.. பிடிக்குமா!' என்றான்.

அவள் சுவாரசியமாகப் பேச ஆரம்பித்தாள். சற்று நேரம் பேச விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு,

'அப்பக் கல்யாணம் பத்தியே இதுவரை உனக்கு யோசனை.. இருக்கலை.. இல்லை?' என்றான்.

அவள் 'இல்லை'யென்று தலையாட்டினாள்.

'சரி.. இப்பவும்.. அப்படியே இரு. கல்யாணம் ஆயிடுச்சு இனிமேல் நீ மிஸஸ்.ஜெயப்பிரகாஷ் அவ்வளவுதான். இப்ப உன் மனசு பூராவும் படிப்பிலே இருக்கு. உன்னை நான் டிஸ்டர்ப் பண்றதை விரும்பலை.. போ.. போய் ரெஸ்ட் எடு. நோ டைவர்ஷன்ஸ்' என்றான்.

அவள் நம்ப முடியாதவள் போல் பார்த்தாள்.



'ரொம்பத் தியாகம் பண்றேன்னு நினைச்சுக்காதே. நானும் ஒரு பெரிய யூனிட் ஒண்ணு ப்ரமோட் பண்ற மூட்ல இருக்கேன். நான் அதைப் பாக்கறேன்..' என்றான்.

அவள் மௌனத்தில் கல்லாய் சமைந்து அமர்ந்திருந்தாள்.

'வா.. வா ரூம்.. பாக்கலாம்..' என்று அழைத்துப் போனான்.

'இது.. உன் ரூம்.. பக்கத்துலயே என் ரூம்.. உனக்கு அந்தப் பக்கம் ஸ்டடி ரூம்.. பிடிச்சிருக்கா?..' என்றான்.

அவள் தலையாட்டினாள்.

'சரி.. தூங்கு.. குட்நைட்..' என்று நகர்ந்து விட்டான்.

அப்போது அவளுக்கு ஒரு விஷயம் தெரியவில்லை. அன்றைக்குத்தான் அவள் அவனிடம் இவ்வளவு விலாவாரியாகப் பேசியிருக்கிறாள் என்றும், இனி வரப் போகிற பல நாட்களுக்கு அளவான பேச்சுத்தான் என்றும் அவளுக்குப் புரியவில்லை.

* * *

பத்து நாட்களும் வேகமாக ஓடிவிட்டது.

அதிகாலையில் ஐந்து மணிக்கே எழுகிற வழக்கம் அவளுக்கு. அந்த வழக்கப்படி எழுந்து அவள் குளித்து தனது அறைக்குள்ளேயே யோகா செய்து முடித்து ஆறரை மணிக்கு வெளியே வரும்போது அப்போதுதான் விழித்து அவன் சோஃபாவில் அமர்ந்து செய்தித்தாள் வாசித்துக் கொண்டிருப்பான்.

அவள் கீழிறங்கிப் போய் ஃபில்டர் காபி தயாரித்துக் கொண்டு வந்து கொடுப்பாள்.

இரவு சற்று நேரம் வரை விழித்துக் கொண்டு இருப்பது அவன் வழக்கமாக இருந்தது.

முதலிரண்டு நாட்கள் அவளும் விழித்துக் கொண்டு அமர்ந்திருப்பதைப் பார்த்து

'நோ.. ஃபார்மாலிட்டீஸ். நீ தூங்கப் போகலாம்' என்று சொல்லி விட்டான்.

அவளுக்குத் தனிமை வேண்டும் என்பதை உணர்ந்து அவளும் அறைக்குப் போய் ஏதாவது வேலைகள் செய்து கொண்டிருப்பாள். அறைகளை அழகு படுத்தினாள். எல்லா வற்றையும் மாற்றியமைத்தாள். அவன் தலையிடவில்லை.

'குட்.. நல்லாருக்கே!' என்பதுதான் அவனிடம் இருந்து வந்த கமெண்ட்.'

உறவினர்கள் வீடுகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அவளும், ரேகாவும் விருந்து நேரத்துக்குச் சற்று முன்ன தாகப் போவார்கள். சரியாகப் பகலுணவு நேரத்துக்கு அவன் வருவான். விருந்து முடிந்ததும் அரைமணி நேரம் அளவளாவி விட்டுக் கிளம்பி விடுவான்.

சில நாட்களில் காலை எட்டு மணிக்கே கிளம்புவான். வேலையைப் பொறுத்து, நேரம் அமையும். யாரையாவது பார்க்க வேண்டி இருந்தால் இன்னும் நேரத்திலும் கூட கிளம்பி விடுவான்.

அவன் இல்லாத நேரங்களில் அவள் கீழே அத்தை யுடனும் குடும்பத்துடனும் செலவழித்தாள். அவளுடைய நீளத் தலைமுடியை வாரிப் பின்னிக் கூட விட்டார் வடிவு.

ஒன்றிரண்டு முறை மாலை நேரங்களில் தொழிலதிபர்கள் அளித்த விருந்துக்கும் போய் வந்தார்கள்.



கல்லூரியில் மாணவியர்கள் அமைப்பில் பொறுப்பில் இருந்ததால் அது மாதிரி அமைப்புக்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவளுக்குத் தெரிந்திருந்தது என்பதால் எல்லாம் இயல்பாகவே போய்க் கொண்டிருந்தது.

இன்னும் இரண்டு நாட்களில் கல்லூரிக்குப் போக வேண்டும் என்றிருந்த போது நவநீதம் போன் செய்தார்.

'டீ! சுபா, மாப்பிள்ளை நம்மளைப் பக்கத்து பங்களாவுக்குக் குடி போகச் சொல்றாருடி' என்று.

'நீ என்ன சொன்னே?' என்றாள்.

'நான் என்னத்தைடி சொல்றது? அத்தை ஜெயப்பிரகாஷ் மிஸஸ்.. தங்கறதுக்குன்னு ஒரு நல்ல இடமாக் கிடைக் கலையான்னு, தொழில் வட்டாரத்துல பேச்சு வருமாம். அதுக்காகவாவது அங்கே குடி போங்க.. கோ.. ஆபரேட் பண்ணுங்க.. கிறாருடி' என்றார்.

அவள் யோசித்தாள். 'நீ எப்படி முடிவு செஞ்சாலும் சரி!' என்று வைத்து விட்டாள்.

அவன் என்ன கருத்தைச் சொன்னாலும் எடுபடப் போவதில்லை என்று அவளுக்குத் தெரியும்.

அன்றிரவு!

'சுபா!' என்று அழைத்தான். அவ்வளவு சீக்கிரம் அழைப்ப தில்லை என்பதால் அவள் கையிலிருந்த புத்தகத்தை வைத்து விட்டு ஓடி வந்தாள்.

'இந்தா!' என்று ஒரு பெட்டியை நீட்டினான். திறந்து பார்த் தாள்.

கல் நகை செட்.

'எதுக்கு?' என்பது போல் அவள் பார்க்க. 'யுனிவர்சிட்டி ஃபர்ஸ்ட் வந்தியே அதுக்கு என் பரிசு!' என்றான்.

அவள் மறுக்க முடியாமல் ஒத்துக் கொண்டாள். 'இந்தா' என்று மறுபடியும் ஒரு கவரை நீட்டினான் திறந்து பார்த்தாள்.

ஐம்பதாயிரம் ரூபாய்க்கு செக்! 'நான் எனக்குப் பிடிச்சதை வாங்கிட்டு வந்தேன். இது உனக்குப் பிடிச்சதை வாங்கிக்கிறதுக்கு' என்றான்.

அவள் பேச வாயெழாமல் பார்த்தாள். 'நீ தனியாத் தங்கற மாதிரி கோயமுத்தூர்ல ஒரு பங்களா ஏற்பாடு செய்யலாமான்னு நினைச்சேன். ஆனா, நீ உங்க அம்மா வீட்லயே தங்கினா உனக்குச் செய்யற மாதிரி காரணத்தை வச்சுட்டு.. அவர்களுக்கு ஹெல்ப் செய்யலாம். இரண்டு பேர் படிக்க நாங்க இல்லே! அம்மாவுக்கு ரொம்ப சிரமம் இல்லாமல் பாத்துக்கலாம்' என்றெல்லாம் விளக்கம் சொல்வான் என எதிர்பார்த்தாள். மாறாக 'உங்க ஃபேமிலியை பங்களாவில் குடிபோகச் சொல்லியிருக்கேன்' என்று மட்டும் சொன்னான். அவள் மறுப்பேதும் சொல்லவில்லை. ஆனால் இப்படியெல்லாம் உதவிகள் வாங்கிக் கொண்டால் நாளை உறவில் விரிசல்கள் வராமல் இருக்க வேண்டுமே என்ற கவலையும் இருந்தது.

அவள் பெரிதும் மகிழ்ச்சியைக் காட்டாமல் இருப்பதை அவன் கண்கள் சுருங்கப் பார்த்துக் கொண்டான்.

அதிகப் பணப்புழக்கம் அவளை அச்சுறுத்தியது. அவன் அதைப் புரிந்து கொண்ட போதும் அலட்டிக் கொள்ளவில்லை.

எல்லாக் கவலையும் கல்லூரி திறக்கிற வரையிலும்தான். அதற்குப் பிறகு கல்வியின் மீதான ஆர்வம் அவளை உள்ளே இழுத்துக் கொண்டது.

❖ ❖ ❖



'என்னடீ அதிசயம்.. இது..? அம்சமான வீட்டுக்காரர். பணக்காரர் முதலாளி இப்படி ஆளைக் கல்யாணம் செஞ்சுகிட்டுக் காலேஜுக்குப் படிக்கறதுக்கு வந்திருக்கிறே?' என்று தோழிகள் வியப்பாய்ப் பார்த்தார்கள்.

ரம்யாதான் உதவிக்கு வந்தாள். 'அது தெரியாதாடி.. உங்களுக்கு? இவளோட மிஸ்டர் ரன் பண்றது பூராவும் கெமிக்கல் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்தான் தெரியும்? அம்மிணி எம்.எஸ்ஸி கெமிஸ்ட்ரி படிச்சுட்டுப் போனா நிர்வாகத்துக்கு உதவியா இருக்குமில்லே. அதுக்குத்தான்..' என்றாள். 'ஓ! நிஜமாவே அப்படியிருக்குமோ' என்று தோன்றியது.

ரம்யாவிடம் பகிர்ந்து கொண்டாள். 'நான் சும்மா.. அவங்க வாயை அடைக்கிறதுக்கு அப்படிச் சொன்னேன்டி..' என்றாள் அவள். பிறகு இன்னொன்றும் சொன்னாள்.

'ஆனா.. உன்னவர் நல்லவர்தான்.. போலிருக்கு. நான் மேலே படிக்கறதுக்கு நிதி நிலைமை, பட்ஜெட் எல்லாம் பாக்கணும்னு சொல்லிகிட்டிருந்தேன்.. இல்லே.. அதை மனசுல வச்சுகிட்டு.. எங்கப்பாவோட ஸ்டேஷனரி ஸ்டோருக்கு இரண்டு மூணு காலேஜ்கள்லிருந்து ஆர்டர் வாங்கிக் குடுத்துட்டாரு. இனி.. எங்கள் பிராப்ளம் எல்லாமே ஓரளவு சால்வ் ஆயிரும் தெரியுமா?' என்றாள்.

சுபாஷிணி 'அப்படியா?' என்று ரம்யாவிடம் மகிழ்ச்சியடைவது போல் காட்டிக் கொண்டாலும் உள்ளூர வருத்தம் அடைந்தாள்.

கோபம் கூட வந்தது. அந்தக் கோபத்தையெல்லாம் அவனிடம் அடுத்த தடவை காட்டி விட வேண்டும் என்று நினைத்தாள்.

எல்லாம் அவனை நேரில் பார்க்கும் வரைதான்.

7

'என்ன, உன் வைஃப்க்கு ஊர்ப்பக்கம் வர்ற ஐடியாவே இல்லையான்னு அம்மா கேக்கறாங்க.. நவராத்திரி வேற வருது' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'வர்றேன்.. இந்த சனிக்கிழமை காலையில புறப்பட்டு வர்றேன்' என்றாள்.

'கார்ல வந்துரு..' என்றான்.

வைத்து விட்டான்.

போகும்போது பலவும் எண்ணிக் கொண்டு போனாள்.

ரம்யா வீட்டுக்கு இவ்வளவு ஹெல்ப் செஞ்சிருக்கீங்க. ஒரு வார்த்தை சொல்லவே இல்லை என்று உரிமையாகச் சண்டை போட வேண்டும். சரிசமமாகப் பேச வேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டு போனாள். ஆனால், பாதி தூரம் போனவுடனே மனது மாறிப் போனதென்றால் அவள் கார் அவிநாசி தாண்டுகிற நேரம் எதிரே அவன் வேறொரு காரில் வந்து இந்தக் காருக்கு மாறிக் கொண்டதும், டிரைவரை அந்தக் காரை எடுத்துக் கொண்டு போகச் சொன்னதும் எண்ணம் முழுக்க மாறிப் போனது.

அவன் கேட்கிற கேள்விகளுக்கு மட்டும் பதில் சொன்னாள்.

'அவன் சற்றே இளைத்திருந்த மாதிரித் தோன்றியது. அதை மட்டும் ஒரு வழியாகச் சொல்லிவிட்டாள்.



'இளைச்சிருக்கீங்க..' என்றாள்.

அவன் திரும்பி லேசாக அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

'புது யூனிட்டுக்காகக் கொஞ்சம் அலைச்சல்' என்றான்.

'ஓ!' என்றாள் அதற்கு மேல் ஒன்றும் பேசத் தெரியாதவளாக.

'நாலைஞ்சு நாள் லீவு இருக்கே!' என்றான்.

'ம்..' என்றாள்.

'அப்புறம்.. சிலபஸ் என்ன? என்ன போர்ஷன்ஸ் முடிச்சிருக்காங்க..' என்று அவள் பாட சம்பந்தமாகப் பேச ஆரம்பித்து விட்டான்.

அவளும் உற்சாகமாய்க் கலந்து பேச ஆரம்பித்தாள்.

* * *

சரஸ்வதி பூஜை என்று அந்த நாட்களில் வீடு முழுக்க சுத்தம் செய்வதில் அவள் பெரிதும் ஆர்வம் காட்டினாள்.

அடுத்து வருகிற தேர்வுக்கான புத்தகங்கள் அனைத்தையும் அவன் அவளுக்காக வாங்கிக் குவித்து விட்டான்.

ஒரு நேரம் நினைத்தால் சுபாஷிணிக்கு சிரிப்பு வந்தது. என்ன விதமான கல்யாணம் இது. எப்போதும் கணவன், மனைவி பாடம், சிலபஸ் என்று பேசிக் கொண்டு.

ஒரு வேளை இரண்டு வருடம் டிஸ்டர்ப் செய்ய மாட்டேன்' என்று சொன்னதற்காக இப்படி இருக்கிறாரோ.. என்று தோன்றியது.

உடனே அவளுக்கும் ஒரு வீம்பு தோன்றியது. 'அப்ப.. நாம மட்டும் ஏன் மேலே விழுந்து பழக வேண்டும், நாமும் அப்படியே இருப்போம்' என்று எண்ணிக் கொண்டாள்.

விஜயதசமிக்கு மறுநாள்!

சேலத்திற்கு அருகில் அவர்களுக்குக் கொஞ்சம் நிலம் இருந்தது. அங்கே ஒரு மாட்டுப் பண்ணையும் இருந்தது.

அவர்களுடைய தொழிற்சாலைகளில் இயங்கும் காண்டீன்களுக்கு மட்டும் பால் சப்ளை செய்வார்கள். வீட்டுக்கும் பால், நெய், வெண்ணெய் என்று வந்து விடும்.

'மாட்டுப் பண்ணைதானே? ஒரே சாணமும் நாற்றமாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டு போன சுபாஷிணி அங்கே அவர்கள் பராமரிக்கிற விதம் பார்த்து மலைத்துப் போனாள்.

படு சுத்தமாக இருந்தது. மாடுகள் நன்றாக செழுமையாகவும் இருந்தன. சாணத்தைச் சேகரித்து கோபர் காஸ் பிளாண்ட் போட்டிருந்தார்கள். அதிலிருந்து கிடைக்கற சாண எரிவாயுவைப் பயன்படுத்திப் பணியாட்களுக்குத் தேவையான உணவு தயாரித்தார்கள்.

மாட்டுப் பண்ணைக்கும், விவசாயி தொழிலாளர்களுக்குமாக அளவான, அழகான வீடுகள் கொண்ட சிறிய காலனியே அங்கு இருந்தது. அங்கேயும் பண்ணை மேலாளர் ஒருவர் இருந்தார். படித்தவராகத் தெரிந்தார்.

சமையற்காரன் ஓடி வந்து 'ஐயா, சின்னம்மாவைக் கூட்டிட்டு வர்றீங்கன்னு கேள்விப்பட்டு பால்கோவா செஞ்சனுங்க' என்று அழகான டிஸ்போஸபிள் கப்புகளில் கொண்டு வந்து கொடுத்தார்.

'அப்ப எங்களுக்காகச் செய்யலையா?' என்று ரேகா கோபம் கொண்டாற்போல் கேட்டாள்.

'உங்களுக்கும்தாம்மா. வீட்டு இளவரசியாச்சுங்களே.. நீங்க!' என்றார் மாரியப்பன் சாமர்த்தியமாக.



'பொழச்சுக்குவீங்க..!' என்று சிரித்தாள் ரேகா.

புத்தம் புதிதான பாலில் செய்யப்பட்டிருந்த அந்தப் பால்கோவா தேவாமிர்தமாய் இருந்தது.

அப்போது மேலாளர் கிருஷ்ணசாமி வந்து நின்றார்.

'சார்!' என்றார் தயக்கத்துடன்.

'ம்..!' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'சார்! நம்ம முருகப்பன்.. இன்னைக்குக் காலையிலே டிரக்ல பால் கொண்டு போகும்போது.. வழியில மரத்தில கொண்டு போய் இடிச்சு.. பாலைப் பூராவும் கொட்டிட்டான். அப்புறம்.. வெளியில வாங்கித்தான் டிஸ்டிரிப்யூட் செஞ்சிருக்கு..' என்றார்.

'முருகப்பன் தனியாய்ப் போனானா?' என்றான்.

'இல்ல சார். பெரியவர் பழனிசாமியும்தான் கூடப் போனாரு.'

'அவரை வரச் சொல்லுங்க.' என்றான். வந்தார் அவரிடம்.

'முருகப்பன் சுயநினைவோடதானே இருந்தான்? ஏதாவது தண்ணி கிண்ணி போட்டுகிட்டிருந்தானா?' என்று கேட்டான்.

'அதெல்லாம் ஒண்ணும் போடலீங்க.. ஐயா, ஆனா, இன்னைக்கெல்லாம் ஒரே விளையாட்டுத் தனமா வண்டியை ரோட்டில தாறுமாறா ஓட்டிகிட்டிருந்தானுங்க.. நான் அப்பவும் சொன்னேன். கேக்கலை. திடீர்னு எதிரில ஒரு லாரி வந்துடுச்சு.. வண்டியைக் காப்பாத்தறதுக்காக ஒரு மரத்துகிட்டே மோதாத குறையா நிறுத்தினானுங்க.. அங்க ஒரு குழியில சைடு டயர் இறங்கி.. வண்டி சாஞ்சிருச்சுங்க..' என்றார் பெரியவர்.

அம்மா, சுபாஷிணி, ஹரிபிரசாத், ரேகா எல்லாரும் ஒரு வித அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அப்ப.. எதிர்பாராம.. நடக்கலை? இதை அவாய்ட் பண்ணியிருக்கலாம் அப்படித்தானே?" என்றான்.

பெரியவர் தலைகுனிந்து நின்றார்.

'சரி.. நீங்க போங்க..' என்றான்.

போய் விட்டார்.

மேலாளரிடம் 'அந்தப் பாலோட விலை எவ்வளவு?" என்று கேட்டான்.

'அந்த ஒரு லோடு மட்டும் 2500 பெறுமானம் இருக்கும். 'வெளியில வாங்கினது ஒரு ரெண்டாயிரத்தைந்நூறு' என்றார் கிருஷ்ணசாமி.

'சரி.. அப்படியே அவனோட இந்த மாசச் சம்பளத்துல பிடிச்சிடுங்க..' என்றான் இறுகிய குரலில்.

கிருஷ்ணசாமி 'சரிங்க!' என்று போய்விட்டார். ஆனால், ஐந்தே நிமிடத்தில் முருகப்பன் ஓடி வந்தான்.

'ஐயா, மன்னிச்சிடுங்க.. ஐயா.. என்னோட மொத்த மாச சம்பளத்தையும் பிடிச்சிகிட்டா.. நான்.. என்னங்கய்யா.. செய்வேன்?' என்று புலம்பினான்.

இன்றைக்குத்தான் ஜெயப்பிரகாஷின் கோப முகம் பார்த்தாள் சுபாஷிணி.

'முருகப்பன்..! நான் பாலுக்கு விலையை உன்கிட்ட வாங்கலை. உன்னோட பொறுப்பில்லாத் தனத்துக்கு.. தண்டனை குடுத்துருக்கேன். இலட்சக் கணக்கில் விலை போட்டு வாங்கி வண்டியை உன் பொறுப்பில விட்டுருக்கு



ரோட்டுல விளையாட்டுக் காட்டறதுக்கு.. என்னோட மினி டோர் வண்டிதான் கிடைச்சுதா.. உனக்கு?' என்றான்.

முருகப்பன் தலையைக் குனிந்து கொண்டான்.

'உன்னை வேலையை விட்டு நிறுத்தலையேன்னு சந்தோஷப்படு. பி.எஃப். மெடிக்கல் இன்சூரன்சுன்னு எல்லா பெனிஃபிட்டும் உங்களுக்குக் குடுக்கறேன்.. இல்லே! அதுக்கு நீங்க குடுக்கற பதில் மரியாதை! போ போய் வேலையைப் பாரு..' என்றான்.

சத்தமில்லை, குரலை உயர்த்தவில்லை. ஆனால், கத்தி போல் பாய்ந்தது வார்த்தைகள்.

முருகப்பன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போனான்.

சுபாஷிணிக்குப் பாவமாக இருந்தது. ஆனால் மாமியார் பேசாமல் நிற்பதில் இருந்தே கணவன் இந்த மூடில் இருக்கும் போது தலையிடுவது உசிதமல்ல என்று புரிந்து கொண்டாள்.

அதற்குப் பிறகு எதுவுமே நடக்காதது போல் மற்றவர் களிடம் பேச ஆரம்பித்தான் ஜெயப்பிரகாஷ்.

'அம்மா.. தோப்புக்குப் போலாம்மா..!' என்றாள் ரேகா.

போனார்கள்.

பண்ணையாட்கள் இளநீர் போட்டுக் கொடுக்க ஹரியும், ஜெயப்பிரகாஷும் இளநீரை நேரடியாகப் பருகுவதை அவள் ஒருவித வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'டேய்.. உங்கண்ணிக்கு ஸ்ட்ரா கொண்டு வந்து குடுக்கச் சொல்லு!" என்று அவன் கிண்டல் போல் சொல்ல அவள் முகம் சிவந்தது.

இளநீர் வெகு சுவையாக இருந்தது. கொஞ்ச நேரம் ஜமக்காளம் விரித்து அமர்ந்திருந்தார்கள்.

ஜெயப்பிரகாஷ் தலைக்கு அணையாகக் கைகளைக் கொடுத்து சற்று நேரம் ரிலாக்ஸ்டாகப் படுத்துக் கொண்டான். அப்போது அம்மா

'டேய்.. தம்பி! உன் வைஃப்பைக் கூட்டிகிட்டுப் போய்.. தோப்பைச் சுத்திக் காட்டலாம்.. இல்லே!' என்றார்.

அவன் பதில் பேசாமல் எழுந்தான் 'வா!' என்றான்.

அம்மா தன் கண்ணசைவால் இளைய மகளையும், மகளையும் தன்னருகில் இருத்திக் கொண்டு அவர்களுக்குத் தனிமை கொடுத்தார்.

பதினோரு மணி வெயிலில் கூட அந்த இடம் குளுமையாக இருந்தது.

நடந்தார்கள். சுற்றிலும் பார்த்து விட்டு 'ஐயோ! ரொம்ப அழகா.. இருக்கு!' என்றாள் சுபாஷிணி.

அவன் புன்னகைத்தான்.

'அந்தக் கிணற்றுக்கு அந்தப் புறம் ஒரு கார்டன் இருக்கு!' என்று அழைத்துப் போனான்.

விதவிதமான பூக்கள். அவர்கள் பங்களாவுக்கு முன்புள்ள இடத்தில் பூச்செடிகள் இருந்தன என்றாலும் அவையெல்லாம் குரோட்டன்ஸ் வகைகள்.

முல்லை, மல்லிகை, ஜாதிப்பூ, ரோஜா என்று பலவித வகைகளைப் பார்த்து அவள் பூரித்துப் போனாள்.

'இது மாதிரி.. நம்ப வீட்லயும் வைக்கலாமே!' என்றாள் ஆர்வமாக.



'வையேன்!' என்றான்.

'சரி.. நான் வந்ததுக்கப்புறம்.. நானே பாத்துக்கறேன்..' என்றாள்.

'இங்கே.. ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டலாம்னு.. இருக்கேன்..' என்றான்.

அவள் மகிழ்ச்சியானாள். 'நல்ல ஐடியா..' என்றாள்.

குதூகலமான மனத்துடன் சற்று தூரம் நடந்திருப்பார்கள் அவள் மெதுவாக..

'ஏங்க.. அந்த ஆளுக்கு அப்படியொரு தண்டனை குடுத்திருக்கணுமா?' என்றாள்.

'குடுக்கலேன்னா.. அவனவன்.. அவனவன் பொறுப்பிலே இருக்கிற விஷயங்களை விளையாட்டா ஹேண்டில் பண்ண ஆரம்பிச்சுடுவான்' என்றான்.

அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'சில விஷயங்கள்ல ஸ்ட்ரிக்டா இருந்தாத்தான் தொழில் நடத்த முடியும்' என்றான்.

'வேற விதத்துல அவங்களுக்கு ஹெல்ப் செய்ய முடியாதா?' என்றாள்.

'அப்படி உனக்கு செய்யணும்னு இருந்தால்.. உன் பாக்கெட் மணியிலிருந்து.. குடு..' என்றான்.

அவன் கிண்டல் செய்கிறானா, நிஜமாகச் சொல்கிறானா.. என்று தெரியாமல் அவள் மௌனமானாள்.

தோப்பை விட்டு வெளியே வந்திருப்பார்கள்.

ஒரு பெண் கைக்குழந்தையுடன் நின்றிருந்தாள். சட்டென்று குழந்தையை இறக்கிவிட்டு சுபாஷிணியின் இரண்டு முழங்கால்களையும் சேர்த்துப் பிடித்தபடி மண்டியிட்டாள்.

'அம்மா.. ஒரு மாச சம்பளமும் இல்லேன்னா நான் என்ற ரெண்டு குழந்தைகளுக்கும் சோத்துக்கு என்ன செய்வேன்?' என்று அழுதாள்.

ஜெயப்பிரகாஷ் உணர்ச்சியற்ற முகத்துடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். ஒரு நிமிடம் சுபாஷிணி திரும்பி அவனைப் பார்த்தாள்.

அவன் நிற்கிற விதம் பார்த்தே அவளுக்கும் புரிந்தது. அவன் உதவிக்கு வரமாட்டான் என்று. ஆனால், சற்று முன் அவன் சொன்ன வார்த்தைகள் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

'உன் பணத்தில் இருந்து குடேன்' என்றானே.. அது. அது கிண்டலோ நிஜமோ அதையே பிடித்துக் கொண்டு இந்தப் பொண்ணுக்கு உதவி செய்து விடலாம்' என்று எண்ணிக் கொண்டாள்.

அன்றைக்குக் கொடுத்த ஐம்பதாயிரம் அப்படியே இருந்தது. அதில்லாமல் வங்கிக் கணக்கில் மாதம் ஒரு தொகை தன் செலவுக்கு என்று அவன் போடுவது தெரியும். அவள் மிகக் கொஞ்சமே பணம் எடுப்பாள். தன் செலவுகளில் சிக்கனமாய் இருப்பாள். அதனால் இந்தத் தொகையைக் கொடுப்பது என்பது சிரமம் இல்லை. ஆனால், இந்தச் சூழ்நிலையை எப்படிக் கையாள்வது என்று ஒரு நிமிடம் புரியவில்லை. ஒரே நிமிடம்தான் தயங்கினாள். பிறகு,

'எந்திருங்கம்மா..' என்றாள். தொடர்ந்து,

'இத பாருங்கம்மா.. ஒரு பெரிய பொறுப்பை முதலாளி குடுத்திருக்காருன்னு புரிஞ்சுக்காம விளையாட்டுத்தனமா.. உங்க ஊட்டுக்காரர் இருந்திருக்கலாமா?' என்றாள்.



'அது தப்புத்தானுங்க.. ஆனா, ஒரேயடியா பணம் பிடிச்சா.. நாங்க ஏளை பாளங்க எங்க போவோம்!'

'ஏழைங்கன்னுதானேம்மா.. வேலை குடுத்திருக்காங்க நினைச்சுப் பாருங்க.. வீணாப் போன சரக்குக்குப் பின்னாடி எத்தனை உழைப்பு? திரும்பத் தேவையான இடங்களுக்குப் பாலைக் கொண்டு போய்க் குடுக்க மேனேஜர் எவ்வளவு ஏற்பாடுகள் செய்ய வேண்டியதிருக்கும்..?' என்றாள்.

'தப்புதாங்கம்மா!' என்றாள் அந்தப் பெண் மறுபடியும்.

'பாரும்மா! முதலாளி சொன்னா சொன்னதுதான் சம்பளத் திலே பிடிக்கத்தான் செய்வாங்க.. அதை மாத்த முடியாது' என்றாள் உறுதியாக.

அந்தப் பெண் பாவமாகப் பார்த்தாள்.

'வேணும்ன்னா.. நான் ஒன்னு செய்யறேன். என்னோட சொந்தப் பணத்துல நான் ஐயாயிரம் தர்றேன். அதை மாசம் இருநூத்தைம்பது ரூபாயா இருபது மாசத்திலே நீ அடைச்சுரணும்' என்றாள்.

அந்தப் பெண்ணின் முகம் மலர்ந்தது.

'ரொம்ப நன்றிங்கம்மா..' என்று கைகூப்பி விட்டுப் போனாள். ஆனால், அந்தப் பெண் போனதற்குப் பிறகு சுபாஷிணிக்குப் பயம் பிடித்துக் கொண்டது. அவனைத் திரும்பியும் பார்க்காமல்,

'நான் அத்தைகிட்டப் போறேன்' என்று ஓடிப் போய் விட்டாள்.

வீட்டுக்கு வந்தபின்னும் அவனருகில் நிற்பதையே தவிர்த்தாள்.

பகலுணவு முடிந்து ரேகாவும், ஹரிபிரசாத்தும் அவர வர்கள் நண்பர்கள் வீட்டுக்குப் போகிறேன் என்று போனார்கள்.

அவன் அம்மாவின் அறைக்குப் போனான். அவள் மெதுவாக நழுவப் பார்த்தாள். அதற்குள்,

'ஹேய்! சுபா.. இங்க வா!' என்று அவன் குரல் அழைத்தது.

பயந்தபடியே மாமியாரின் அறைக்குப் போனாள்.

'உட்கார்!' என்றான்.

'உட்கார்ந்தாள்.

'அம்மா நான் போட்ட ஆர்டரை உன் மருமக மாத்த லாமா?' என்றான் அவன் சீரியஸான குரலில்.

அவள் லேசான பயத்துடன் 'இல்லைங்க.. அத்தை நான் மாத்தலை கடளாத்தான் குடுத்திருக்கேன். அந்தப் பெண் பாவம்.. ரொம்பப் பாவமா இருந்துச்சு' என்று தடுமாற..

அத்தை புன்னகைத்தாள். 'சுபா.. என்கிட்டேயும் வந்து சொன்னா!' என்றார்.

சுபாஷினி எதிர்பார்க்காத வண்ணம் ஜெயப்பிரகாஷ் சட்டென்று சிரித்து விட்டான்.

'அம்மா.. உன்னை மாதிரியே உன் மருமக..!' என்று குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பதை அவள் ஒரு வித வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

தங்களுக்குத் திருமணமான ஆறு மாதங்களில் முதல் முறையாக இப்படிச் சிரிக்கிறான் என்பதைப் பார்த்து 'பர வாயில்லையே.. பாறாங்கல்லுக்குச் சிரிக்கவும் தெரிகிறதே!' என்று எண்ணிக் கொண்டே அவள் சிரிக்க மறந்து நின்றிருந்தாள்.



8

'ம்க்கும்.. என்று தொண்டையைச் செருமிக் கொண்டு ஆரம்பித்தான் ஹரிபிரசாத்.

சித்ராவும், ரேகாவும் சிரித்தார்கள். ரகு அவர்களைப் பார்த்து முறைத்தான்.

'நீ ஏண்டா முறைக்கறே?' என்றாள் சித்ரா.

'இதெல்லாம் செய்யறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? சிரிக்கறீங்க? பந்தா ரொம்பப் பெரிய பந்தாவா இருக்கே?' அதான் சிரிக்கறோம்' என்றாள் ரேகா.

'நீ.. பெரிய.. இவ.. கொஞ்சம் டிரை பண்ணிப் பாரு வருதா.. பாக்கலாம்..' என்றான் ரகு சித்ராவிடம்.

'சரிடா.. சரி.. சண்டையை நிறுத்துங்க..' என்றார் வடிவு. பிறகுதான் அமைதியானார்கள்.

ஹாலில் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டிருந்த சோபாக் களில் குடும்பமே கூடியிருந்தது.

தங்கள் வீட்டில் சரஸ்வதி பூஜை முடித்த கையோடு நேற்றே பிற்பகல் நவநீதம் தன் குடும்பத்துடன் புறப்பட்டு வந்து விட்டார். வடிவு அப்படி வருந்தி அழைத்திருந்தார்.

இப்போது பிற்பகலில் ஓய்வாக எல்லாரும் விளை யாட்டுப் பேச்சுக்கள் பேசி அமர்ந்திருந்தார்கள்.

ஹரிபிரசாத் மிமிக்ரி செய்வதில் நடிப்பதில் மிகவும் திறமைசாலி. எல்லாரும் மகிழ்ச்சியாகக் கூடியிருக்கிற

சமயத்தில் அவனை நடிக்க விட்டுப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருப்பார்கள்.

இப்போதும் அப்படிக் கூடியிருந்தார்கள். புதிதாக அதில் சுபாஷினியின் குடும்பமும் கூடியதில் வடிவுக்கு மிகவும் மகிழ்ச்சி.

'டேய்.. டேய்.. காமராஜர், பெரியார் அண்ணா, கலைஞர் எல்லார் மாதிரியும் பேசவியே அது மாதிரி செய்டா..' என்றாள் ரேகா.

பேசிக் காட்டினான்.

ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதே சமயம் வெளியிலிருந்து உள்ளே வந்த ஜெயப்பிரகாஷ் அம்மா வுக்கு ஜாடை காட்டி விட்டு தம்பிக்கு நேர் பின்னால் உள்ளறையில் அவன் கண்ணில் படாத வண்ணம் ஒதுங்கி அமர்ந்திருந்தான்.

சித்ரா வேண்டுமென்றே 'இத பாரு, ஹரி.. பெரிய பெரிய தலைவர்கள் மாதிரியெல்லாம் பேசறது நல்லாத்தான் இருக்கு. ஆனா, நம்ம வீட்ல இருக்கறவங்க மாதிரி பேசிக் காட்டேன்' என்றாள்.

'அது கொஞ்சம்.. கஷ்டம்டி, வேண்ணா, நடந்து காட்ட றேன்..' என்று நடந்து காட்டினான்.

சுபாஷினி அசைந்து நடப்பது போல் நடந்து காட்டவும் அனைவரும் சிரித்தார்கள்.

'டேய்.. அண்ணன் மாதிரி..!' என்று ரேகா கேட்கவும் அதே போல் நடந்து காட்டினான்.

மறுபடியும் அலை அலையாய் சிரிப்பு 'சிவாஜி நடை மாதிரிடி' என்று அவனும் சிரித்தான்.



'டேய்.. அண்ணன் மாதிரி பேசிக் காட்டேண்டா..' என்றாள் ரேகா.

'ம்.. அது வேண்ணா செய்யலாம்..' என்று பேசினான்.

'இப்பப் பாரு. மேனேஜர் கிட்டே பேசும்போது..' என்று அவன் பேசுகிற அதே ஸ்டைலில் பேசினான்.

மேனேஜரிடம் பேசும்போது ரொம்பவும் விரிவாக இல்லாமல், ரொம்பவும் சுருக்கமாக இல்லாமல் பேசுவான். அதே போல் பேசினான்.

இது வேலைக்காரங்ககிட்டே பேசும்போது.. என்று பேசிக் காட்டினான். வெகு சுருக்கமாக ஆணையிடுவது போன்ற பேச்சு.

அம்மாகிட்டே பேசறப்போ.. என்று சற்றே மென்மையான குரலில் பேசிக் காட்டினான். பிறகு குறும்பாகச் சிரித்துக் கொண்டே 'அண்ணிகிட்டே பேசும்போது பாத்ததில்லே. ஆனா, கற்பனையில இப்படி இருக்குமோன்னு வேணா பேசறேன்' என்று சொல்லிவிட்டு.

'சுபா.. சாப்பிட்டுட்டியா? என்ன கண்டுக்கவே மாட்டேங் கறே?' என்று குழைந்த குரலில் ஆரம்பிக்கவும் ஒரு கை அவன் தோள் மேல் படிந்தது.

திரும்பிப் பார்த்தான்.

விழிகள் தெறித்து விழுகிறாற்போல் ஒரு கணம் பார்த் தவன் 'அண்ணன் ஐயோ! அண்ணன்' என்று விடுவித்துக் கொண்டு ஓடிவிட்டான்.

சபை திடீரென்று கலைந்தது.

சுபாஷினி மட்டும் நின்றாள். மாட்டிக் கொண்டாற் போல விழித்தாள்.

'சரி.. சரி.. நீ எதுக்கு இந்த முழி முழிக்கறே! கொஞ்சம் காபி போட்டுக் குடு..' என்றான் அடிக்குரலில்.

அவள் வேகமாகப் போய் காபி போட்டுக் கொண்டு வந்தாள்.

அதற்குள் மாடிக்குப் போய் விட்டிருந்தான். அவள் காபியை எடுத்துக் கொண்டு மாடிக்குப் போனாள்.

அவன் கம்ப்யூட்டரில் அமர்ந்து ஏதோ ஃபைலைப் பார்த்தபடியே காபியைக் குடித்தான்.

'காபியெல்லாம் அமைதியா உட்கார்ந்து ரசிச்சுக் குடிக்கணும்' என்று முணுமுணுத்தாள் சுபா.

அவன் திரும்பிப் பார்த்தான். எதுவும் சொல்லவில்லை. ஆனால் கம்ப்யூட்டரை ஆஃப் செய்து விட்டு வந்து அமர்ந்தான்.

'ஏங்க.. இன்னைக்கு ஈவ்னிங் இருப்பீங்களா? வெளியே போயிடுவீங்களா?' என்றாள்.

'இருப்பேன்.. ஏன்?' என்றான்.

'இல்லே.. சோயா.. பீன்ஸ்ல சுண்டல் செய்யலாம்னு பாக்கறேன்' என்றாள்.

'ம்..!' என்றான்.

அவன் காபி குடித்து முடித்தவுடன் நீட்டிய டம்ளரை வாங்கி டீபாயின் மேல் வைத்து விட்டுப் பின்னலை முன்னே எடுத்துப் போட்டுக் கொண்டு தயங்கியபடி நின்றாள்.

'என்ன?' என்பது போல் பார்த்தான்.

'இல்லே! சின்னப் பசங்கன்னா கொஞ்சம் குறும்பு இருக்கத்தான் செய்யும். ஹரியைத் திட்டிராதீங்க..' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. மீண்டும் எழுந்து போய் கம்ப்யூட்டரில் அமர்ந்து கொண்டான். அவள் மறுபடியும் அவன் அருகில் நின்றாள்.

'இல்லே!' என்று மறுபடியும் இழுத்தாள்,



'என்னத்தை இல்லே! இங்க பார் எனக்கும் எங்கெங்கே.. எப்படியெப்படி நடக்கணும்னு தெரியும்..' என்றான் கடுப்பாக.

அவள் மேலே பேச வழியில்லாமல் நகர்ந்து விட்டாள்.

'பி.கே.. பி.கே.' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டாள்.

* * *

'பிரகாஷ்.. உன் பொண்டாட்டி தொல்லை தாங்கலப்பா..' என்றார் வடிவு. அதில் புகார்த் தொனியை விட பெருமை தான் அதிகம் இருந்தது.

வெறும் இட்லி, தோசைன்னு ஆகாதாம் வெறைட்டி இருக்கணுமாம். சத்தும் இருக்கணுமாம் அப்படீன்னு தினம் ஒரு சுண்டல், ஜூஸ் வெஜிடபிள் சாலட்னு வெவ்வேற தானிய வகைகள்ளே உணவு கீரைன்னு ஒரு மாசத்துக்கு மெனுவே போட்டாச்சு. நான் சொல்றபடி கேட்டீங்கன்னாத்தான் சுகர், பி.பி.யெல்லாம் வராமப் பாத்துக்கலாங்கறா' என்றார்.

'நல்லதுதானே!' என்றான் ஜெயப்பிரகாஷ். சுபாஷிணிக்கு ஒரே மகிழ்ச்சி.

'பாத்தீங்களா?' என்று அழகு காட்டினாள். வடிவு சிரித்தார்.

அவள் உள்ளே போய் டிபனை எடுத்து வந்தாள்.

'அடை..!' என்றாள் சுபாஷிணி. அவன் இரண்டு பக்கமும் முழுக்கை சட்டையை மடித்துக் கொண்டு சண்டைக்குத் தயாராக அமர்வது போல் அமரவும் வடிவு சிரித்தார்.

சுபாஷிணி முறைத்தாள்.

'ஐயய்யோ.. முறைக்காதம்மா.. பயமாயிருக்கு' என்று மேலும் அவன் சொல்ல ஒருவித ஆச்சரியத்துடன் பரிமாறினாள்.

அடைக்குத் தக்காளிக் குழம்பு, சட்னி என்று இரண்டு வகைகளாக செய்திருந்தாள். அவன் சாப்பிட்டுக் கொண்டே

'சுபா.. நீ எப்ப ஊருக்குப் போறே?' என்றான்.

'நாளன்னைக்கு..' என்றாள் சுபா வியப்புடன்.

'எப்படி இப்படி நல்லா.. டேஸ்டா செய்யறதுன்னு நம்ம சமையற்காரம்மாவுக்குக் கொஞ்சம் சொல்லிக் குடுத்துட்டுப் போ..' என்றான்.

சுபாஷிணி அப்படியே குளிர்ந்து போனாள். முதன் முதலாகத் தன் கணவனிடம் இருந்து கிடைத்திருக்கிற பாராட்டு வெட்கத்துடன் அத்தையைப் பார்த்தாள்.

'அதெல்லாம்.. சொல்லிக் குடுத்துகிட்டுத்தான் இருக்கா.' என்றார் வடிவு. பிறகு அவரே 'உன் வைஃப் சொல்றா எண்ணெயும், நெய்யும் கொட்டி டேஸ்டா செய்யறதுக்குப் பேரு நல்ல சமையல் இல்லையாம். அளவா எண்ணெய் யூஸ் செஞ்சு, டேஸ்டா செய்யணுமாம். பாண்டக் கிழவிடா.. உன் பொண்டாட்டி' என்று சிரித்தார்.

'அம்மா.. என்ன.. நீ என் வைஃப்பைக் கிழவிங்கறே. ரொம்ப அழகான பொண்ணும்மா.. நல்ல பொண்ணு..' என்றான் செல்லமாகக் கோபித்தவன் போல் மீண்டும் பனி மழையில் நனைத்தாற் போல் உணர்வுதான் சுபாஷிணிக்கு. முகம் சிவந்து போனவளாய்,

'இன்னும் ஒரு அடை வச்சக்குங்க..' என்று வைத்தாள். மறுபடியும் தக்காளிக் குழம்பை ஊற்ற அவன் தன் இடக் கையால் அவளது வலது கை மணிக்கட்டைப் பிடித்தான்.

'போதும்.. சுபா..' என்றான்.

சுபாஷிணி கொஞ்சம் படபடத்துப் போனாள்.

சாப்பிட்டு விட்டுக் கிளம்பியவன் 'சரி.. நீ அம்மாகிட்டே கொஞ்ச நேரம் பேசிகிட்டிருந்துகிட்டு.. வா..' என்று மெதுவான குரலில் சொல்லிவிட்டுப் போனான்.



அன்றைக்குத்தான் அத்தை மனம் விட்டு சில விஷயங் களைப் பேசினார்.

'சுபா! ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா இருக்கான்னு நினைக்காதே. அது அவன் போட்டுக்கற முகமூடி. அதுவும் நான் ரொம்ப ரிக்வெஸ்ட் பண்ணிக் கேட்டுகிட்டதுக்காக..' என்றார்.

சுபாஷிணி ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டாள்.

'தொழிலாளிங்ககிட்டே.. ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா இருப் பான்..' என்றார்.

சுபாஷிணி மெதுவான குரலில் 'இருக்கலாம்.. அத்தே.. கொஞ்சம் கருணையும் காட்டலாம்' என்றாள்.

அவன் முருகப்பனை நடத்திய விதம் பற்றிச் சொல் கிறான் என்று புரிந்தது. அத்தை மெதுவாகப் புன்னகைத்தார்.

'சுபா..' நீ பணம் குடுத்ததுலே அவனுக்குக் கோபம் இல்லே. சந்தோஷம்தான். அவனோட தொழிலாளர்கள் தப்புப் பண்றப்போ.. தண்டனை அவன் குடுப்பான். ஆனா, என்கிட்டே வந்து முறையிடும்போது.. நான் ஹெல்ப் பண்ணுவேன்.. அதைத் தடுக்க மாட்டான். அதிலயும் நீ செய்த விதம் பத்தி அவனுக்கு ரொம்ப சந்தோஷம். 'அவரு உத்தரவு போட்டது போட்டதுதான். அதை மாத்த முடியாது. ஆனா, உனக்குக் கடனாத் தரே'ன்னு சொன்னயாம். என்னோட மரியாதையையும் காப்பாத்திட்டா.. ஆனா, அவ ஹெல்ப்பும் செஞ்சுட்டா.. அப்படின்னு ஒரே புகழ்ச்சிதான்' என்றார்.

சுபாஷிணிக்கு மலைப்பு, திகைப்பு எல்லாம் தோன்றியது

'வீட்லயும் அப்படித்தான். உங்க மாமனார் போன வுடனே.. நாந்தான்.. நீ கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டா இரு தம் அப்பதான் ஒரு விதமான பயத்தோட ஒழுக்க

வளர்வாங்கன்னு சொன்னேன். அதான் இப்படி ஒரு ஸ்ட்ரிக்டனஸ்' என்றார்.

அதையெல்லாம் கேட்டு விட்டு மேலே வந்த சுபாஷிணி ஒரு விதமான கலவையான உணர்வோடு கூட வந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். அத்தை இன்னொன்றும் சொன்னார்.

'இந்த நாடகம் தம்பியோட பி.ஏ.வுக்கு நல்லாத் தெரியும். அவரு உண்மையா உதவி தேவைப்படக் கூடியவர்களா இருந்தா, இங்கே முதலாளி சொன்னா சொன்னதுதான். வேணும்னா பெரியம்மா கிட்ட போய் கேளுங்கன்னு அனுப்பி வைப்பாரு..' என்று சிரித்தாள்.

எப்போதும் மேலே தங்கள் பகுதிக்குப் போனால் தனது அறைக்குள் நுழைந்து கொள்கிற சுபாஷிணி அன்று சற்று நேரம் ஹால் சோபாவில் அமர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து அவனும் எழுந்து வந்து எதிர் சோபாவில் அமர்ந்தான்.

'சாரி!' சுபா அம்மா உங்கம்மாகிட்டே கொஞ்சம் கவலையாப் பேசறதைக் கேட்டேன். நாம இயல்பா.. இருக்கறது இல்லைன்னு நினைக்கறாங்க.. போலே.. அதான் கொஞ்சம் தொட்டு.. கிட்டு.. பேச வேண்டியிருந்தது' என்று இழுத்தான்.

அவன் மனத்தில் நிறைந்திருந்த உற்சாகமெல்லாம் கணத்தில் வடிந்து போனது. அவன் முகத்தைப் பாராமல் தலையை மட்டும் ஆட்டிக் கொண்டாள்.

'சுபா.. படிப்பு எப்படிப் போயிட்டிருக்கு..?' என்றான்.

இரண்டாவது செமஸ்டரின் நடுவில் இருந்தாள். முதல் செமஸ்டரில் நல்ல மதிப்பெண்கள் எடுத்திருந்தாள்.



'சுபா..!' என்றான்.

'ம்..!'

'நான் தான் படிக்கும்போது கடைசி செமஸ்டரில் யுனிவர்சிட்டி ராங்க் எட்டிடுவேன்னு எல்லாரும் ஒரு எதிர் பார்ப்போட இருந்தோம். ஆனா, அப்ப அப்பாவுக்கு உடம்பு சரியில்லாம ஆயிடுச்சு. ஆனா, அம்மா நீ மேலே படிச்சே தீரணும்னாங்க.. ஃபர்ஸ்ட் இயர் கடைசியில் அப்பா போயாச்சு. செகண்ட் இயர்ல அம்மாவை பேருக்கு நிர்வாகத்துல உட்கார வச்சுட்டு நானே பாக்க வேண்டியதாப் போச்சு. நினைச்ச மாதிரி ராங்க் எடுக்க முடியலை. டிஸ்டிங்ஷன் தான். காலேஜ்ல ஃபர்ஸ்ட்தான். ஆனா, ராங்க் பிடிக்க முடியல..' என்றான்.

அவள் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டாள்.

'அதனால.. நீ ராங்க்.. ஹோல்டர்ன்னவுடனே.. எனக்கு ரொம்ப சந்தோஷம். எம்.எஸ்ஸியிலயும்.. நீ அதே மாதிரி.. வரணும். அதுதான் உன்னோட முழு எய்ம்மா இருக்கணும்' என்றான்.

அவள் உற்சாகமாகத் தலையாட்டினாள்.

'உனக்கும்.. வயசிருக்கு.. எனக்கும் வயசிருக்கு? காலம். எங்கயும் போயிடப் போறதில்லே' என்றான்.

அவள் இப்போது தரையைப் பார்த்துக் கொண்( தலையாட்டினாள்.

தான் சற்றே மனம் நெகிழ்ந்ததைப் புரிந்து கொண் விட்டான் எனப் புரிந்தது. மறைமுகமாக இரண்டு விஷய களைத் தெளிவாக்கி விட்டான் எனவும் புரிந்தது.

எந்த விதமான மன நெகிழ்ச்சிக்கும் இப்போதைக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது ஒன்று.. இரண்டாவது நான் அம்மாவைத் திருப்திப் படுத்துவதற்காகத்தான் அப்படி நடந்து கொண்டேன் என்பது.

சுபாஷிணி லேசாக ஒரு பெருமூச்சு விட்டாள். அவன் மேலும் தொடர்ந்தான்.

'ஆனா, நீ தம்பி, தங்கைகிட்டே ஃப்ரீயா இருக்கலாம்.' என்றான்.

அவள் உடனே 'ஆமா, யாராவது ஒருத்தர்கிட்டே ஆத்மார்த்தமான நட்பு இருந்தாத்தான்.. டீன் ஏஜ்ல சொல்ல வேண்டியதையெல்லாம்.. நம்ம கிட்டே சொல்வாங்க. இல்லேன்னா.. வேற எங்கயாவது நட்பைத் தேடிக்குவாங்க..' என்றாள்.

அவன் ஒத்துக் கொள்பவன் போல் தலையாட்டிக் கொண்டான். பிறகு இருவருக்கும் பொதுவான ஆர்வம் உள்ள விஷயமான பாடங்களைப் பற்றிப் பேசினார்கள்.

அவன் உள்ளே எழுந்து போய்த் தன்னுடைய ஷெல்ஃபிலிருந்து தான் படிக்கும் காலத்தில் படிப்பதை எளிமையாக்கிக் கொள்வதற்காகப் போட்டு வைத்திருந்த குறிப்புக்களைக் கொடுத்தான்.

எப்படி ஈக்வேஷன்களை எளிமையாக நினைவில் வைத்துக் கொள்வது என்று சில டிப்ஸ்கள் கூடக் கொடுத்தான்.

தன் கணவன் மிகவும் புத்திசாலியான ஆள்தான் என்று அவளுக்கு அன்றைக்குப் புரிந்தது.

பேச்சுக்கு நடுவே அவள் களுக்கென்று சிரித்தாள். அவன் கேள்விக் குறியாய்ப் பார்க்க.



'இல்லே! ஹரி இன்னைக்கு நல்லா மிமிக்ரி செஞ்சான்.. இல்லே' என்றாள்.

அவன் லேசாகப் புன்னகைத்தான்.

'ஆமா.. ஸ்கூல்லயும் கொஞ்சம் குறும்புதான். ஆனா, மரியாதைக் குறைவா நடந்துக்கறதில்லேங்கறாங்க..' என்றான்.

அவள் உள்ளூரப் பாராட்டிக் கொண்டாள். எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கிறான் என்று புரிந்தது. தொடர்ந்து.

'ஆனா, ரகு ஸ்கூல்ல ரொம்ப டிஸிப்ளினோட இருக்கறதா.. அவங்க ஹெச்.எம். சொல்றாங்க.'

'ஓ!' என்றாள் ஆச்சரியமாய்.

'ஒன்ஸ் இன் டு மன்த்ஸ் போய்ப் பார்க்கறேன்' என்றான்.

அவள் மேலும் திகைத்தாள்.

'கொஞ்சம் ஸ்ட்ரீம் லைன் பண்ணினா ரெண்டு பேருமே.. நல்லா வருவானுங்க..' என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு அவள் மெதுவான குரலில் கேட்டாள்.

'இன்னைக்கு டி.வி. நியூஸ் பாத்தீங்களா?' என்றாள்.

'ம்..!'

'அதுல.. இடியுடன் கூடிய மழை பெய்யும்னு சொன்னாங்களா.. என்ன?' என்றாள். கண்களில் குறும்பு கூத்தாடியது.

அவன் ஆழப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவளே தொடர்ந்தாள். 'இல்லே! பேசறதுக்கே யோசிப்பீங்க. இன்னைக்கு இவ்வளவு பேசிட்டீங்க..' என்றாள்.

அவன் செல்லமாக அவள் காதைப் பிடித்துத் திருகி விட்டு,

'ஹேய்! உன் கண்ணு மட்டும்தான் பேசும்னு நினைச்சேன். வாய் கூடப் பேசுவியா என்ன!' என்று சிரித்து விட்டுப் போனான்.

அவள் காதைத் தடவியபடியே ஒருவிதமான உணர்வுடன் நின்றாள்.

ஜெயப்பிரகாஷுக்கு அன்றைக்குத் தெரியவில்லை, 'தம்பி தங்கைகளிடம் பழகலாம் என்று தான் சொன்னதை வைத்துக் கொண்டு வீட்டை இரண்டு படும்படி தன் மனைவி கலகலப்பாக்கி விடுவாள் என்று.

## 9

ரம்யா சிந்தனையுடன் சுபாஷிணியைப் பார்த்தாள்.

'நீ நினைக்கிற அளவுக்கு அவர் மோசமில்லேன்னு நான் நினைக்கிறேன்' என்றாள்.

'நான் மட்டும் மோசம்னா சொன்னேன். கல்லு மனசுன்னு சொன்னேன்' என்றாள் சுபாஷிணி.

அப்போதுதான் ரம்யாவுக்கு அது தோன்றியது.

என்றாள்.

சுபாஷிணி களுக்கென்று சிரித்தாள்.

'பி.கே.. ன்னா.. பி.கேன்னா..' என்று இழுத்தாள்.

...!!!

'பி.கே.ன்னா பிரகாஷ்' என்றாள்.

'இந்தக் கதையை இங்கு விடாதே அம்மிணி ஒழுங்கா.. விஷயத்தைச் சொல்லு..' என்றாள்.

'நீ யார் கிட்டயும் சொல்லிரக் கூடாது?' என்றாள்.

'சரி.. சொல்லலே.. பிராமிஸாச் சொல்லமாட்டேன்..' என்றாள்.

'பி.கேன்னா.. பாறாங்கல்லு' என்றாள்.

'அடிப்பாவி!' என்று நிஜமாகவே முறைத்தாள் ரம்யா. 'ஏண்டி.. உன்னோட தகுதிக்கு இப்படியொரு கோடீஸ்வர மாப்பிள்ளை கிடைப்பாராடி? அதுவும் லைஃப்பை என்ஜாய் பண்ண வேண்டிய வயசுல மேல் படிப்புப் படிங்கறாரு. உன்னை டிஸ்டர்ப் பண்ணாம நடந்துக்கறாரு. ஏண்டி இப்படிப் பேசறே?!' என்றாள்.

'ரம்யா.. நீ சொல்றதெல்லாம் நிஜம்தான். ஆனா, நான் ஒரு கதை சொல்றேன் கேளு' என்றாள்.

'ம்.. அதுதான் நல்லாக் கதை விடுவாயே? பேச்சுப் போட்டியில பரிசு வாங்கற ஆளாச்சே!' என்றாள் ரம்யா.

'ஔவையார் கேள்விப்பட்டிருக்கியா.. ஔவையார்..' என்றாள் சுபாஷிணி.

'அந்தம்மா.. ஒரு தடவை காட்டு வழியில நடந்து போனாங்களாம் ரொம்பப் பசியில தவிச்சப்ப ஒரு குடிசை தெரிஞ்சதாம். அந்தக் குடிசையில் இருந்த கணவனும், மனைவியும் ரொம்ப ஏழைங்களாம். இத்தனைக்கும் அந்த ஆளுக்கு அவங்க ஔவையார்ன்னு கூடத் தெரியாதாம். ஆனா, அன்பா வரவேற்று உபசரிச்சாங்களாம். புளிக்கப் போன மோரு, காஞ்சு போன கேழ்வரகுச் சோறு, வீட்டில இருந்த கத்தரிக்காயை வதக்கி ஒருவிதமா சாப்பாடு. ஆனா, அன்பா பரிமாறினாங்களாம். அந்த அம்மா சந்தோஷப்பட்டுப் போய் ஒரு பாட்டே பாடினாங்களாம்.

*வரகரிசிச் சோறும், வழுதுணங்காய் வாட்டும்*
*மொர மொரெனவே புளித்த மோரும் – திரமுடனே*
*புல்வேளூர்ப் பூதன் புரிந்து விருந்திட்டான்*
*எல்லா வுலகும் பெறும்*

அப்படீன்னு.' என்று நிறுத்தினாள்.

'சரி.. இப்ப எதுக்கு இதைச் சொல்றே?'

'இல்லடீ.. எனக்கு ஒரு குறையும் இல்லாமே எல்லாம் நடக்குது. ஆனா, ரெண்டு வார்த்தை.. ரெண்டு வார்த்தை இனிமையாப் பேசலாமில்லே' என்றாள் சுபாஷிணி.

'ஏய், சுபா, சில பேர் இனிமையாப் பேச மாட்டாங்க. ஆனா, எல்லா அன்பையும் செயல்ல காட்டுவாங்க. சில பேர் வாயில சர்க்கரையாப் பேசுவாங்க. ஆனா, செய்கையில ஒன்றும் இருக்காது. உன் கணவர் முதல் ரகம்ன்னு புரிஞ் ...க்கோ' என்றாள் ரம்யா கடுமையாக.

சுபாஷிணி சற்று நேரம் மௌனம் காத்தாள். பிறகு ...ந்தனையுடன் சொன்னாள்.

'நீ சொல்றதும் ஒரு விதத்துல கரெக்ட்தான்.'

'ஒரு விதத்துல இல்ல.. எல்லா விதத்திலயும் கரெக்ட்.. புரிஞ்சுக்கடி.. யோசி..' என்றாள் ரம்யா..

சுபாஷிணி யோசிக்க ஆரம்பித்தாள்.

* * *

'ஹலோ!' என்ற ஜெயப்பிரகாஷின் குரல் கேட்கவும், சுபாஷிணி உற்சாகமானாள்.

இரவு நேரம்!

அந்தச் சிறிய பங்களாவில் தன்னுடைய அறையில் இருந்தான். ஏதோ ரெக்கார்ட் வொர்க் செய்து கொண்டிருந்தான். ரம்யாவின் பேச்சுக்குப் பிறகு அவள் சிந்தனையில் லேசான மாற்றம் ஏற்பட்டிருந்தது.

'சொல்லுங்கத்தான்!' என்றாள்.

முதல் முறையாக அவள் அப்படி அழைப்பதைக் கேட்டு அவன் ஒரு நிமிடம் மௌனமானான். பிறகு மெதுவான குரலில்,

'சுபா!' என்றான்.

'சொல்லுங்கத்தான்!' என்றாள் மறுபடியும் அதே உற்சாகக் குரலில்.

'இல்லே! உங்க காலேஜ்ல பெரிய விழா ஒண்ணு நடக்கப் போகுதாம்.. நீ சொல்லவே இல்லை' என்றான்.

'ஆமாங்கத்தான் சில்வர் ஜூப்ளி கொண்டாடப் போறாங்க. நாலைஞ்சு நாளைக்கு ஃபங்ஷன் இருக்கு' என்றாள்.

'இல்லே! பிரின்சிபல் மேடம் என்னைக் கூப்பிட்டாங்க.' என்றான்.

* * *

உட்கார்ச் சொல்வாங்க.. உனக்கொண்ணும் அப்ஜக்‌ஷன் இல்லையே?' என்றான்.

'எனக்கா? எனக்கெதுக்குங்கத்தான்.. அப்ஜக்‌ஷன் பெருமைதான் படுவேன்..' என்றாள்.

'அப்ப சரி' என்று சமாதானமானான். 'அப்புறம்..!' என்றான்.

'சொல்லுங்கத்தான்..' என்றாள்.

'இல்லே! உங்க காலேஜுக்கு ஏதாவது செய்யணுங்கறாங்க.. அதான் ஒரு நாலைஞ்சு லட்சத்துல ஏதாவது செய்யற மாதிரி இருக்கேன்..' என்றான்.

உண்மையாகவே அவள் மலைத்துப் போனாள்.

'அவ்வளவு பெரிய தொகையா?' என்றாள்.

'அது.. நம்ம ப்ராஃபிட்ல ஒரு பங்கு இது மாதிரி நல்ல விஷயங்களுக்கு ஒதுக்கியிருக்கோம் இல்ல! அதுல செய்யலாம். நீ எனக்கொரு உதவி செய்யணுமே!' என்றான்.

என்ன உதவியென்று விரிவாகச் சொன்னான்.

'கண்டிப்பா செய்யறேங்கத்தான்..' என்றாள். மேலும் சற்று நேரம் பேசிவிட்டு அவன் குறும்புச் சிரிப்புடன் போனை வைத்தான் என்றால் அவள் அந்தப்புறம் ஒருவிதத் திகைப்புடன் வைத்தாள். 'என்ன இப்படி? வார்த்தைக்கு.. வார்த்தை அத்தான் போடுகிறாள்!' என்று எண்ணிக் கொண்டான்.

அன்றைக்கு வெகு நேரம் அவனுக்கு உறக்கம் வரவில்லை.

* * *

மாலை ...ல் அவன் கார் நின்று கொண்டிருந்தது.

வழக்கமாக அவளுக்கென்று வருகிற மாருதி அன்றைக்கு நிற்கவில்லை. டிரைவரை அனுப்பிவிட்டான் போலும்.

அவள் காரை நோக்கிப் போனவுடன் சடாரென்று கதவைத் திறந்தான்.

'உட்கார்.. சுபா!' என்றான்.

'காலேஜுக்கு உள்ளே வந்தா நேரமாயிரும். அதான் வர்லே' என்றான்.

'ஓ!' என்றாள்.

ஒரு நல்ல ஹோட்டலுக்கு அழைத்துப் போனான். வழக்கம் போல் அவளுக்குப் பிடித்த வகைகளாக ஆர்டர் செய்தான். இன்றைக்கு அவள் கேட்டே விட்டாள்.

'அது எப்படி? எனக்குப் பிடிச்ச ஐட்டம்லாம் கரெக்டாத் தெரிஞ்சு வச்சிருக்கீங்க!' என்றாள்.

'நீ எப்படி ஹரிகிட்டயும், ரேகாகிட்டயும் எல்லாத்தையும் விசாரிச்சு வச்சிருக்கிறியோ.. அது மாதிரி நானும் ரகுகிட்டயும், சித்துகிட்டயும் எல்லாத்தையும் விசாரிச்சு வச்சிருக்கேன்' என்றான்.

'ஓ!' என்று அமைதியாகி விட்டாள்.

'அப்புறம்.. நான் சொன்ன விஷயம் விசாரிச்சியா? இன்னும் கொஞ்சம் டைம் வேணுமா?' என்றான்.

'இல்லல்லே.. எனக்கே ஒரு அளவுக்கு ஐடியா இருந்துச்சு. இருந்தாலும் பிரின்சிபல்கிட்டே புரொஃபசர்ங்ககிட்டே

[illegible] என்றாள்.

'குட்!' என்றான்.

இரண்டு பேரும் சற்று நேரம் விவாதித்தார்கள்.

'ஒன்னு செய்யட்டுமா? இப்ப இருக்கற லைப்ரரி ஹாலை எக்ஸ்டெண்ட் பண்ணிக் குடுத்தர்றேன். அப்புறம் ஒரு எண்டோமெண்ட் கிரியேட் பண்ணி ஒவ்வொரு வருஷமும் தேவையான புத்தகங்கள் வாங்கிக்கற மாதிரி ஏற்பாடு செஞ்சர்லாம்' என்றான்.

அவள் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.

'ஐயோ.. சூப்பர் ஐடியா..' என்றாள் சுபாஷிணி.

'தேங்க்ஸ்.. ஃபார் தி காம்ப்ளிமெண்ட்' என்றான் ஜெயப்பிரகாஷ்.

சற்று நேரம் அமைதியாக உண்டார்கள். அவளுக்குப் பிடித்த ரவா தோசை வந்தது. அவனுக்குப் பிடித்த காலிஃப்ளவர் ரோஸ்ட்.

'ஒன்னு செய்வமா. ரெண்டாப் பிரிச்சுகிட்டா.. ரெண்டு பேருமா சாப்பிட்ட மாதிரி இருக்குமில்லே..' என்றாள் சுபாஷிணி.

ஒரு நிமிடம் ஆச்சரியமாகப் பார்த்து விட்டு தன் தட்டை அவள் பக்கம் நகர்த்தினான். அவள் இரண்டு ஐட்டங்களையும் சரிபாதியாகப் பிரிப்பதை ஆழப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு தன் தட்டைத் தன் பக்கம் நகர்த்திக் கொண்டான்.

'அப்புறம்.. என்ன? நேத்து என்னமோ வார்த்தைக்கு வார்த்தை அத்தான்னு கூப்பிட்டயே! என்ன விசேஷம்?' என்றான்.

அவள் திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள். ஒரு நிமிடம்தான் பிறகு குறும்பாகச் சிரித்துக் கொண்டு,

'ஆமா, ரெண்டு பேருக்கும் மறந்து போயிரக் கூடாதில்லே. அதான் ஞாபகப் படுத்தினேன்' என்றாள்.

'மூனாவது செமஸ்டர் எக்ஸாம்ஸ் இன்னும் ரெண்டு மாசத்துல வரப்போகுது அம்மிணி அது ஞாபகம் இருக்கட்டும்' என்றான்.

அவள் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தாள். அவன் சட்டென்று சிரித்தான்.

'என்ன திட்டறே!' என்றான்.

'ம்.. சட்டாம்பிள்ளைன்னு திட்டினேன்' என்றாள். அவன் கோபித்துக் கொண்டு

விடுவானோ என்று நினைத்ததற்கு மாறாக அவன் தோளைக் குலுக்கினான்.

'ஐ டோண்ட் கேர்..' என்றான்.

'உங்களுக்கென்ன நல்ல மார்க் எடுக்கணும். அவ்வளவு தானே.. வாங்கிக் காட்டறேன்..' என்றாள்.

'முடிஞ்சா யுனிவர்சிட்டி.. ராங்க்' என்றான்.

'அது தெரியலே.. நான் என்னோட மேக்ஸிமம் லெவல் டிரை பண்றேன்' என்றாள்.

அவன் சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தான் 'அதுக்காக ஓவர் ஸ்ட்ரெயின் செய்யாதே!'

'உங்களோட அந்த யூனிட் என்ன ஆச்சு?' என்று கேட்டாள்.

அவன் அதை விவரித்தான்.

கணவன் தன்னிடம் சற்று விரிவாகப் பேசியிருக்கிறான் என்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தாள்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்த பின் வெளியில் கிளம்பினார்கள்.

'வீட்டுக்கு வரலாமில்லே!'

'வேண்டாம். இதுக்கு மேலே வந்தா நைட் தங்க வேண்டி வரும். வா உன்னை டிராப் பண்ணிட்டுப் போறேன்' என்றான். போனார்கள்.

'எனக்குக் கோபம்தான்' என்றாள்.

'வேண்டாங்க.. அம்மிணி. கோபிச்சுக்காதீங்க. அடுத்த தடவை வர்றபோது ரெண்டு நாளாவது இருக்கேன் சரியா' என்றான்.

'ஃபங்ஷனுக்கு வருவீங்கதானே?' என்றாள் ஆர்வமாக.

'ம்.'

'அப்ப.. நான் உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ் வச்சிருக்கேன்..' என்றாள்.

'நானும் உனக்கு ஒரு சர்ப்ரைஸ் வச்சிருக்கேன்' என்றான்.

என்னவாக இருக்கும் என்ற யோசனையிலேயே இருவரும் பிரிந்தார்கள்.

ஜெயப்பிரகாஷ் அன்று வெகு நேரம் உறங்கவில்லை. மனைவியின் குறும்புச் சிரிப்பு இன்னமும் உலகத்தையே புரிந்து கொள்ளாத ஒரு கள்ளமில்லாத தன்மை என்று எண்ணம் உள்ளே உள்ளே இழுத்தது.

'வேண்டாம்.. அவள் படிப்பு முடியட்டும். இப்போது உடனடியாகச் செய்யக் கூடாது' என்று எண்ணிக் கொண்டான். அப்போது அவன் உள்மனது கேட்டது.

'படிப்பு என்பது மட்டும்தான் காரணமா? வேறு ஏதும் இல்லையா?' என்று.

'ஆமாம். இன்னொரு அக்கினிப் பரீட்சை இருக்கிறது. அதற்குப் பிறகு தங்கள் உறவு தலைகீழாக மாறிப் போய் விடக்கூடிய அபாயமும் இருக்கிறது' என்பது அவனுக்குப் புரிந்தது. ஆனால், அதை நினைக்கவும் அவன் மனதுக்குத் துணிவு இருக்கவில்லை.

பெரிய தொழில் சாம்ராஜ்யத்தையே கட்டியாள்கிற அந்த இளைஞனுக்கு மனதில் பீதியும், அச்சமும் அலையலை யாய்க் கிளம்பியது என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். ஆனால் அதுதான் உண்மை.

## 10

இருவரும் மாற்றி மாற்றி 'சஸ்பென்ஸ்' என்று சொல்லிக் கொண்ட அந்த விழாவுக்கான அழைப்பிதழ் வந்த போது ஜெயப்பிரகாஷ் பக்கத்து சஸ்பென்ஸ் உடைந்து போனது.

நான்காம் நாள் நிறைவு விழாவில் அவன்தான் முக்கிய விருந்தினர் என்று போட்டிருந்தது.

'அடிப்பாவி! எனக்கே சொல்லலையே!' என்று ரம்யா போர்க்கொடி பிடித்தபோது மெல்லிய புன்னகையுடன் சுபாஷிணி சொன்னாள்.

'எனக்கே அவரு சொல்லலை. உனக்கு ஒரு சஸ்பென்ஸ் இருக்கு. இருக்குன்னு மட்டும் சொல்லிகிட்டிருந்தாரு' என்றாள்.

'ஓஹோ! இப்படியெல்லாம் வேற விளையாடுவாரா?' என்று ரம்யா கேட்க.

'நீ வேற.. அதையும் ரொம்ப சீரியஸாத்தான் சொன்னாரு' என்றாள் சுபாஷிணி சோகம் போல.

இருவரும் சிரித்தார்கள். சுபாஷிணி மேலும் 'நானும் ஒரு சஸ்பென்ஸ்ன்னு சொல்லியிருக்கேன்' என்றாள்.

'என்னடி.. அது!' என்றாள் ரம்யா.

'சஸ்பென்ஸ்' என்று சுபாஷிணி சிரிக்க.

'கொன்னே போடுவேன். ஒழுங்காச் சொல்லிரு' என்று மிரட்டினாள் ரம்யா.

சுபாஷிணி சிரித்தபடி சொன்னாள்.

'ஓஹோ.. இந்த விஷயமா?' என்று அவளும் சிரித்துக் கொண்டாள்.

* * *

**கா**ரில் தனியாக வந்திறங்கினான் ஜெயப்பிரகாஷ்.

சற்றுக் கழித்து அவளது குடும்பமும், அவனது குடும்பமும் இரண்டு கார்களில் வந்து சற்று தள்ளி ஒரு வரிசையில் அமர்ந்து கொண்டார்கள்.

விழா இறை வணக்கத்துடன் துவங்குகிறது என்று அறிவித்தவுடனேயே, இறைவணக்கம் பாட வந்தவர்களில் ருத்தியாக வந்து நின்றாள் சுபாஷிணி.

வழக்கமான தமிழ் வாழ்த்துக்குப் பிறகு இனிமையான ு பாரதியார் பாடலும் பாடி விட்டுப் போனார்கள்.

ஜெயப்பிரகாஷ் வழக்கம்போல் எளிமையான உடையில் வந்திருந்தான். ஆனால் என்னவோ அவன் தோற்றத்தில் எப்போதையும் விட ஒரு கம்பீரம் இருந்தது.

அந்தப் பெண்கள் கல்லூரியில் பெண்கள் எல்லாம் 'ஏய், தெரியுமா? சுபாஷிணியோட ஹஸ்பெண்டாம். ரிச் அண்ட் ஹேண்ட்சம் இல்லே!' என்று விதவிதமாக சலசலத்துக் கொண்டார்கள்.

வடிவு தலையைத் திருப்பித் திருப்பி சுபாஷிணியைத் தேட 'அவ ஸ்டேஜ்க்குப் பின்னால அரேன்ஜ்மெண்ட்ல இருப்பா' என்றான் நவநீதம்.

'ஓ!' என்றார் வடிவு.

'நல்லாப் படிக்கறது மட்டுமில்லே. எல்லா விஷயங்களையும் கெட்டிக்காரி' என்றார் நவநீதம் பெருமையாக.

வரவேற்புரை தலைமையுரை எல்லாம் நிகழ்த்தப்பட்டது.

தலைமையுரையில் கல்லூரிப் பிரின்சிபல் திருமணத்துக்குப் பின்னும் தனது மனைவியின் படிப்பை ஊக்குவிக்கிற ஜெயப்பிரகாஷின் மனப்பான்மையை பெரிதும் பாராட்டினார். சேலத்தின் இளந்தொழிலதிபர், ஒழுக்க சீலர் என்றெல்லாம் மேலும் பாராட்டினார்.

ஜெயப்பிரகாஷ் எந்த விதமான பிரதிபலிப்பும் காட்டாமல் அமைதியாக அமர்ந்து இருந்தான். பிறகு அவனைப் பேச அழைத்தார்கள்.

'பெண்கள் கல்லூரியில் எதற்காக என்னைப் போன்ற இளைஞரை அழைத்தார்கள் என்று யோசித்தேன். ஒரு வேளை இங்கே என் மனைவி படிப்பதால் தைரியமாக அழைக்கலாம் என்று அழைத்தார்கள் போலும்' என்று ஆரம்பித்த ஜெயப்பிரகாஷ் தொடர்ந்து நகைச்சுவையாகவே பேசினான்

பதினைந்து நிமிடம் பேசுக்குப் பிறகு 'மனைவியைப் படிக்க அனுமதிக்கிறேன் என்று புகழ்ந்தார்கள். எல்லாம் ஒரு சுயநலம்தான். இன்னும் ஒரு இரண்டு ஆண்டுகளுக்காவது சுதந்திரமாக இருக்கலாமே என்ற நோக்கம்தான்' என்று ஒரு இடைவெளி கொடுத்து நிறுத்தவும் எல்லாரும் சிரித்தார்கள். ஆனால் அவன் தொடர்ந்தான்.

'.. என்று நினைத்தால் அது மிகவும் தவறு. முதல் காரணம் என் மனைவி அற்புதமான பெண். அவரோடு வாழ்க்கை நடத்துவது என்பது பெருமைக்குரிய விஷயம்தான். உங்கள் முதல்வர் அவர்கள் நான் அவர்களைப் படிக்க அனுமதித் திருக்கிறேன் என்கிறார்கள். யார் யாருக்கு அனுமதி கொடுப்பது? சமுதாய அமைப்பில் ஆணும், பெண்ணும் சரி சமம் என்று நினைக்கிறவன் நான். அவர்கள் மேல்படிப்பு படிக்க எல்லாத் தகுதியும் வாய்ந்தவர்கள். யுனிவர்சிட்டி ராங்க் வாங்கியிருக்கிறார்கள். மேலே படிக்க விரும்பி னார்கள். படிக்கிறார்கள் அவ்வளவுதான்' என்றான்.

கைதட்டல் அடங்குவதற்கு சற்று நேரம் ஆகியது.

'நன்றாக யோசியுங்கள். பல பெண்களுக்குப் படிப்பு திருமணத்துக்கான ஒரு தகுதியாக இருக்கிறது. திருமணம் என்று ஒன்று ஆகிவிட்டால் அதோடு வாழ்க்கையின் எல்லை வந்து விட்டாற் போல் தங்கள் திறமையெல்லாம் மறந்து விடுகிறார்கள். கல்லூரிப் படிப்புக்கும் அரசாங்கம் ஒரு பங்கு செலவு செய்கிறது. சமுதாயம் பொறுப்பெடுத்துக் கொள்கிறது. அப்படியிருக்கையில் அத்தனை படிப்பும் திரு மணத்திற்குப் பிறகு வீணடிக்கப்படுமானால் மனித வளம் எவ்வளவு வீணாகப் போகிறது என்று யோசியுங்கள். நகைகளைத் தேர்ந்தெடுப்பதில், உடைகளைத் தேர்ந்தெடுப் பதில் நீங்கள் காட்டுகிற கவனத்தை விட அட்லீஸ்ட் அந்த அளவுக்காவது கவனத்தை உங்கள் வாழ்க்கைப் பாதையைத் தேர்ந்தெடுப்பதில் செலவிடுங்கள். ஆணும், பெண்ணுமாக இணைந்து அவரவர் திறமைகளை வளர்த்துக், வாழ்கிற வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

என் மனைவியை ஒரு அறிவார்ந்த பெண்ணாக உருவாக் கிய இந்தக் கல்லூரிக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்கு நன்றி செலுத்தும் விதமாக, இந்தக் கல்லூரி நூலகத்தை விரிவாக்கித் தர இங்கே உறுதியளிக்கிறேன். அது மட்டுமல்லாமல் என்னுடைய தந்தை மற்றும் எனது மனைவி யின் தந்தை ஆகியவர்கள் பெயரில் ஒரு வைப்பு நிதி உரு வாக்கி ஆண்டுதோறும் கணிசமான அளவில் புத்தகங்கள் வாங்கிக் கொள்ளவும் வசதிகள் செய்து தரவும் மொத்தமாக ஐந்து லட்சம் ஒதுக்கீடு செய்ய இப்போது இந்த மேடையில் எனது வாக்குறுதியை வைத்து நிறைவு செய்கிறேன்.'

என்று பேசி அமர்ந்தவுடன் வெடித்த கைதட்டல் அடங்க நேரமானது. அலட்டிக் கொள்ளாமல் அமர்ந்து ஜெயப்பிரகாஷ் யதேச்சையாக வலது புறம் திரும்பிப் பார்க்க அங்கே மேடையில் வலது ஓரத்தில் சுபாஷிணி மலைத்துப் போய் நின்றிருந்தாள். அவளுக்கு மட்டும் தெரியும்படியாக லேசாகக் கண்ணைச் சிமிட்டி விட்டுத் திரும்பிக் கொண்டான்.

ஒரு நிமிடம் அவளும் படபடத்துப் போனாள்.

கலை நிகழ்ச்சிக்காக மேடையை விட்டு இறங்கினார்கள். அந்தக் கல்லூரி முதல்வர் நல்ல இனிமையான, பொருள் உள்ள பாடல்களுக்கு நடனமாட மட்டுமே அனுமதி வழங்கு வார். அதனால் தமிழ்நாட்டின் கோலாட்டம், குஜராத்தின் படுகர் நடனம், குறத்தி டான்ஸ் இடையிலே நவீனமாகவும் ஒன்றிரண்டு பாடல்கள் என்று கலவையாக நிகழ்ச்சியை அமைப்பார்கள்.

ஒன்றாயதாக வந்த அந்தக் குறத்தி நடனத்தில் ஆரம்ப இருவரில் குறத்தியாக சுபாஷிணியும் குறவனாக ரம்யாவும் வந்து குற்றாலக் குறவஞ்சியிலிருந்து ஒரு பாடலுக்கு மிகவும் வேகமான ஒரு ஆட்டம் ஆடிவிட்டுப் போனார்கள்.

'ஓ! இதைத்தான், சல்பெல்ஸ்' என்றாளா என்று சிரித்துக் கொண்டே ரசிக்க ஆரம்பித்தவன் இருட்டில் தன்னைக் கவனிப்பவர் யாருமில்லையென்ற துணிவில் முழுமையாக மனைவியின் தோற்றத்தை, அவள் ஆடுகிற நளினத்தை, உணர்ச்சிகளின் வெளிப்பாட்டை கண்கள் பேசுகிற அழகை யெல்லாம் உள்வாங்கிக் கொண்டான்.

அந்த நடனம் மட்டுமல்லாமல் கடைசி ஐட்டமாக 'நீல வண்ணக் கண்ணனே உனது எண்ணமெல்லாம் நானறிவேன்..' என்ற பாடலுக்கும் அவள் பாவத்துடன் ஆடிய நடனம் பார்த்து மலைத்துப் போனான். 'கண்ணா, என் கையைத் தொடாதே!' என்ற வரிகளுக்கு முகத்தை ஒரு வெட்டு வெட்டி, முகத்திலிட்ட முக்காட்டை லேசாக விலக்கி கண்ணனை முறைப்பது போல் அவள் காட்டிய பாவத்தில் அவன் முழுதாகத் தன்னைப் பறி கொடுத்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

விழா முடிந்து சிற்றுண்டி முடிந்து அவர்கள் எல்லாரும் கிளம்பி நேரமாகிவிட்டது என்று நவநீதம் வெகுவாக வற்புறுத்தினார்.

'அத்தை, எனக்கு ஒரு முக்கியமான.. வொர்க் இருக்கு. இவர்கள் எல்லாரும் இருந்துட்டு வரட்டும். நான் கிளம்ப றேன்' என்று கிளம்பினான்.

அவன் கண்ணசைவைப் புரிந்து கொண்டு அவளும் உடன் நடந்தாள்.

'ஹேய்! உன் பர்ஃபாமன்ஸ் ரொம்ப அருமையா இருந் துச்சு' என்று பாராட்டினான்.

'தாங்க்ஸ்' என்றாள்.



'இதுதான்.. அந்த சல்பெல்ஸாக்கும்' என்றாள்.

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். 'ம்?' என்றாள்.

'மொமென்ட்.. ஸர்ப்ரைஸ்' என்றான்.

'அதான்.. அந்த மயக்கத்துல இருக்கேன். அதனாலதான் இன்னைக்கு வர்லே. வந்தா சரி வராது.. ஏ அண்டர் ஸ்டாண்ட்!' என்று குறும்பாகச் சிரித்து விட்டுக் காரில் ஏறினான்.

தலையசைத்து விட்டுக் காரை எடுத்தான். முதன் முறையாகத் தன்னிடம் குறும்பாகப் பேசிவிட்டுச் செல்கிற கணவனைச் சிவந்த முகத்துடன் வழியனுப்பி விட்டுத் தன் குடும்பத்தாரோடு அவள் சேர்ந்து கொள்வதை பல கண்கள் ஒருவிதப் பொறாமையோடு பார்ப்பதை சுபாஷிணி அறிய வில்லை. அதிலே அந்தப் பெண்ணும் இருந்தாள்.

* * *

ஒரு வாரம் வரையிலும் கூட அதன் பாதிப்பு இருந்தது.

'ஹேய், குறத்தியாவும் ஆடறே, பரதநாட்டியமும் ஆடறே. பாட்டு வேற பாடறே என்னடி ஆள் நீ உங்க ஆள் மயங்கிப் போய் மருடிக்கு ஆடாத குறைதான்..' என்று ஒருத்தி கேலி செய்தாள்.

இன்னொருத்தி 'ஹேய்! ஜெயப்பிரகாஷ் என்னடி சொன்னார்?' என்று துளைத்தெடுத்தாள்.

'அதெல்லாம் உன்கிட்டே சொல்லுவேனா.. போடி' என்று சிரித்துச் சமாளித்தாள். இதையெல்லாம் கண்டும் காணா மலும் கவனித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

மெதுவாக சுபாஷிணியிடம் வந்து 'ஹேய், நீ ஜெயப் பிரகாஷோட மிஸஸ்ன்னு எனக்குத் தெரியவே தெரியாதே?' என்றாள்.

'தெரியுமாவா? நானும் ஜெயப்பிரகாஷும் கோயமுத்தூர்ல ஒண்ணா வளர்ந்தவங்க. நியாயப்படி எனக்கு முறை மாப்பிள்ளை' என்றாள்.

'ஓ! நீங்க எங்க மேரேஜுக்கு வர்லையோ!' என்றாள் யதார்த்தமாக.

'ஆமா! எங்க பேரண்ட்ஸுக்கு வருத்தம். என்னைப் பெண் எடுக்கறதா வடிவு அத்தை சொல்லிக்கிட்டிருந்தாங்க. அப்புறம் மாறிட்டாங்க..' என்றாள்.

'ஓ!' என்றாள் சுபாஷிணி 'இவ்வளவு யதார்த்தமாகக் கூட யாராவது பேசுவாங்களா, என்ன?' என்றிருந்தது அவளுக்கு.

அவளே தொடர்ந்து 'ஜெய்க்குக் கூட அதிலே கொஞ்சம் வருத்தம். அம்மாவின் வற்புறுத்தலுக்காகத்தான் ஒத்துக்கிட்டாரு' என்றாள்.

* * *

சுபாஷிணி ஒரு கணம் திகைத்துப் போனாள். பிறகு சமாளித்துக் கொண்டாள்.

'தெரியலே. அதைப் பத்தியெல்லாம் அவர் என்கிட்டே பேசினதில்லே' என்றாள். ஆனால் அன்றைக்குத் தன் மனமும், முகமும் வாடிவிட்டது அவளுக்கே புரிந்தது.

ஒருவேளை, ஒருவேளை இதனால்தான் படிப்பு என்ற காரணத்தைச் சொல்லிக் கொண்டு கொஞ்சம் ஒதுங்கி இருக்கிறானோ என்று கூடத் தோன்றியது.

இனிமேல் அவனிடம் தானாய்க் குறும்பு பேசுவதோ, நெருங்குவதோ கூடாது. அவரே முடிவு செய்து தெளிவாகட்டும் என்று வைராக்கியம் செய்து கொண்டாள். ஆனால், அன்றைக்கு அவன் மேடையில் பேசியது நினைவுக்கு வந்தது. உடனே மேடையில் அத்தனை நகைச்சுவை

பேசுகிறவன் [illegible] இருக்க மாட்டேன் என்கிறான் என்ற எண்ணமும் தோன்றியது.

அந்தப் பெண்.. ம்.. பெயர் என்ன சொன்னாள்? ம்.. மஞ்சுளாவைப் பற்றி இன்றைக்குக் கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அன்றிரவு!

ஜெயப்பிரகாஷ் பேசியபோது 'யாரோ உங்களுக்கு முறைப் பெண்ணாமே? மஞ்சுளாவா.. என்கிட்டே பேசினாங்க!' என்றாள்.

'அறுத்துத் தள்ளியிருப்பாளே. தகர டப்பா!' என்றான். கலகலவென்று சிரித்தான்.

சுபாஷிணிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. 'இப்போது மட்டும் எப்படி இப்படி சிரிப்பு வருகிறது?' என்று.

'கல்யாணப் பேச்சு இருந்ததாமே?' என்றாள் ஒரு மாதிரிக் குரலில்.

அந்தப்புறம் ஒரு நிமிடம் ஜெயப்பிரகாஷின் நெற்றி சுருங்கியது. சில வினாடிகள் யோசித்தான். பிறகு அவனும் ஒரு மாதிரியான குரலில்,

'ஆமா, உன்னைப் பாக்கற வரைக்கும்.. அப்படியொரு ஐடியா.. அம்மாவுக்கு இருந்தது..' என்றான்.

'ஓ..' என்றாள். பிறகு வேண்டுமென்றே

'அவர்களை வேணா நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வரவா!' என்றாள் சுபாஷிணி.

'ஓ.. சமாதான முயற்சியா? செய்.. செய்..' என்றான் வேறு பேச்சுக்குத் தாவினான்.

மஞ்சுவைக் கருவியாக்கி தன் மனைவியின் மனத்தை உரசிப் பார்க்க வேண்டுமென்று அவன் நினைத்தான். அதே எண்ணத்தில் அவளும் இருந்தாள். ஆனால், இருவரையுமே தூக்கி விழுங்கி விடுகிற திறமை மஞ்சுவுக்கு இருந்ததை அவர்கள் இருவருமே அறியவில்லை.

## 11

அந்த வாரம் சேலம் வந்திருந்தாள் சுபாஷிணி.

சனிக்கிழமை பிற்பகலில் மஞ்சுளா வருவதாகச் செய்தி அனுப்பியிருந்தாள்.

'மாலையில் வேண்டுமானால் சற்று நேரத்தில் வருவதாகச் சொல்லி அலுவலகம் போனான் ஜெயப்பிரகாஷ்.

மெதுவாக மாமியாரின் அறைக்குள் எட்டிப் பார்த்தாள் சுபாஷிணி.

'என்னம்மா? உள்ளே வா!' என்றார் வடிவு.

'மஞ்சு வர்றாங்களாம். ஆனா, இங்க ஒரு பரபரப்பும் இல்லே.' என்றாள் மெதுவான குரலில்.

'என்ன பரபரப்புப் பண்ணனும். ஸ்வீட் இருக்கு. காரம் வகையறாவும் இருக்கு. பரிமாற வேண்டியதுதான். வந்ததுக்கப்புறம் ஏதாவது 'டிபன் செஞ்சாப் போகுது' என்றார்.

அவள் மெதுவாக அத்தையின் அருகில் அமர்ந்தாள்.

'ஏங்கத்தை மஞ்சுளாவைத்தான் இவருக்குக் கல்யாணம் பண்றதா முடிவாகி இருந்ததாமே?' என்றாள்.



அத்தை சற்றே வியப்படைந்தாற்போல் காணப்பட்டார்.

'யார் சொன்னா?' என்றார்.

'மஞ்சுளாதான் சொன்னாங்க!' என்றாள். பிறகு ஏதோ நினைத்தவள் போல் தொடர்ந்து 'இவரும் அந்த மாதிரி ஏதோ சொன்னார்' என்றாள்.

'ஓஹோ!' என்று சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்த அவர் 'எப்படியும் கொஞ்ச நேரத்துல அவ வருவாதானே!' எல்லாம் தெரிஞ்சுருது' என்றார்.

மஞ்சுளா வந்தாள். வந்தவள் ரொம்ப உரிமைக்காரி போல் எல்லா அறைகளிலும் புகுந்து வெளியே வந்தாள்.

மாலையில் ஜெயப்பிரகாஷும் வந்தான். சிற்றுண்டி அருந்தினார்கள். பிறகு ஹாலில் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வழக்கம் போல் எல்லாரையும் பேச விட்டு ஜெயப்பிரகாஷ் மௌனம் சாதித்தான் என்றாலும் மனைவியிடம் நெருங்கி அமர்ந்து கொண்டான்.

அவன் வருவதற்குச் சற்று நேரம் முன்பாக சுபாஷிணி ரேகாவிடம் கூட விசாரித்து விட்டாள்.

'ஏன்.. ரேகா.. உங்கண்ணனுக்கு இந்த மஞ்சுளாவைக் கல்யாணம் செய்யறதா இருந்ததா?' என்று.

அவளும் ஆச்சரியமாக 'யார் சொன்னா?' என்றாளே தவிர மேற்கொண்டு விவரம் சொல்லவில்லை.

மஞ்சுளா வேறு ஏகமாகக் கலக்கினாள்.

'நானும் ஜெய் அத்தானும் கல்லாறு போயிருந்தமே? அப்ப!' என்று ஏதோ ஆரம்பிக்க ரேகா இடையிலே புகுந்து,

'ஆமா.. நாங்கள்ளாம் கூட வந்திருந்தமே?' என்றாள்.

'ஜெய் அத்தானுக்கு சமோசா ரொம்பப் பிடிக்குமே!' என்று ஏதோ சொல்ல ரேகா மறுபடியும்,

'இல்லையே! அவருக்குக் கட்லெட் தானே பிடிக்கும்..' என்றாள் ரேகா.

ஒரு வழியாக அன்றிரவு அவள் புறப்பட்டாள். புறப்படு வதற்கு முன்பாக.

'ஜெய்.. அத்தான்.. உங்க வைஃப் ரொம்பத்தான் உங்க மேலே பிரியமாய் இருக்காங்க!' என்று சிரித்தாள்.

ஜெயப்பிரகாஷும் சிரித்தான்.

'சும்மாவாவது உங்களுக்கும் எனக்கும் கல்யாணம் பேச்சு இருந்ததுன்னு சொன்னேன்.. பாருங்க.. அப்ப இருந்து அம்மிணி மூட் அவுட்..' என்று மறுபடியும் சிரித்தாள்.

சுபாஷிணி திகைத்துப் போனாள்.

மஞ்சுளா மறுபடியும் சிரித்து 'ஹலோ' மேடம்! உங்க மேரேஜுக்கு முன்னாடியே எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆயாச்சு. மாப்பிளை ஃபாரின்ல இருக்கார். மேல்படிப்பிற் காக போயிருக்கிறார். வந்தவுடன் கல்யாணம்' என்றாள்.

எல்லாரும் சிரித்தார்கள்.

சுபாஷிணியின் முகம் சிவந்தது.

சட்டென்று ஜெயப்பிரகாஷ் அவளருகில் நெருங்கி அமர்ந்து அவள் தோள் மேல் கையைப் போட்டுக் கொண்டு,

'ஏய்! எல்லாரும் சேர்ந்துகிட்டு அவளைக் கலாட்டா.. செய்யறீங்களா!' என்று ஒரு மிரட்டு மிரட்டவும்தான் வேறு விஷயங்களுக்குத் தாவினார்கள்.

கலகலச் சிரிப்புடன் விடைபெற்றாள் மஞ்சுளா.

ஜெயப்பிரகாஷும், அவளும் அன்று மாடிக்குப் போன வுடனே சுபாஷிணி குறுகுறுப் பார்வையுடன்,



'பின்னே, அவங்க அம்மா அப்பாவுக்கு வருத்தம். அதான் நாங்க கல்யாணத்துக்கு வர்லேன்னு சொன்னாங்களே!' என்றாள்.

'ஹேய்! சுபா.. அதெல்லாம்.. ரீல்! போட்டோ ஆல்பத் திலே இருக்காங்க. மஞ்சுதான்.. அந்த சமயம் ஊருக்குப் போயிருந்தா. போதுமா?' என்றான்.

'எதுக்கு இப்படியெல்லாம். டீஸ் செய்றாங்க' என்றாள்.

'நாந்தான் சும்மா.. சொன்னேன். இப்ப சுபா படிப்புலதான் நாட்டமா இருக்கா..ன்னு' அதுக்காக உன்னை உசுப்பி விடறாளாம்' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

முதல் முறையாக அவள் கணவன் அவளிடம் நெருங்கி நின்றான். அவன் கைகள் அவள் இடுப்பை வளைக்க.. அருகில் இழுத்தான்.

'பொறாமை.. ம்.. பொறாமை..?' என்று அடிக் குரலில் சிரிக்க, அவள் விக்கித்து நின்றாள்.

மெல்ல அவள் முகம் நோக்கிக் குனிந்து தன் தாபத்தை வெளிப்படுத்தியவன் 'கொஞ்ச நாள்.. கொஞ்ச நாள்.. பொறு உன் படிப்பு மட்டும் முடியட்டும் அப்புறம்.. என் மனசு பூரா வும் நீ மட்டும்தான்னு இருக்கறேன்னு விதவிதமாக் காட்ட றேன்' என்றான் குழைந்த குரலில்.

அவள் வெட்கத்துடன் விடுவித்துக் கொண்டு தன் அறைக்குச் செல்ல அவனும் ஒருவிதச் சிரிப்புடன் தன் அறைக்குச் சென்றான்.

* * *

மூன்றாவது செமஸ்டரின் கடைசித் தேர்வை எழுதி முடித்துவிட்டு வெளியே வந்தாள் சுபாஷிணி.

உற்சாகமாக இருந்தாள்.

'அப்பாடா! எழுத வேண்டிய தேர்வுகள் எல்லாம் முடிந்து விட்டது. இனி அடுத்த செமஸ்டரில் ப்ராஜக்ட்தான்' என்று எண்ணிக் கொண்டாள்.

நன்றாகவே எழுதியிருந்தாள். போதாதற்குத் தனது பேராசிரியர்களிடம் போய் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவாக்கிக் கொண்டாள் தான் சரியாகவே விடைகளை எழுதியிருப்பதை உணர்ந்து கொண்டாள்.

மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள்.

ஜெயப்பிரகாஷுக்கு போன் செய்தாள். அவனும் மகிழ்ச்சி யடைந்தான்.

'குட்.. வெரிகுட்!' என்று பாராட்டிக் கொண்டான். பிறகு ஒரு வாரம் ஃப்ரீயா ரெஸ்ட் எடு.. நான் வந்து கூட்டிட்டு வரேன்' என்றான்.

அவளும் சரியென்றாள். அந்த ஒரு வாரமும் வேகமாக ஓடியது.

* * *

இரவு நேரம்.

எல்லாரும் அமைதியாய் அமர்ந்திருந்தார்கள். ஆனால் சாப்பாட்டு வேலை பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தது.

ரேகா அம்மாவின் முகத்தையும் அண்ணனின் முகத்தை யும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு கிச்சடியை அளைந்து கொண்டிருந்தாள்.



'அண்ணா! ப்ளீஸ்!' என்றாள் கெஞ்சலாக.

'நீ முதல்ல சாப்பிடு!' அப்புறம்.. பேசலாம்..' என்றான் கெடுபிடியான குரலில்.

ரேகாவின் முகம் வாடி விட்டது. எல்லாரும் சாப்பிட்டு முடித்த பின் மேலே போகாமல் கீழ் ஹாலில் சோஃபாவில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

'ரேகா குடியரசு தின விழா மார்ச்சிங்கில் பங்கெடுத்துக் கொள்வதற்காக என்.சி.சி.யில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாள்.. ஒரு மாதம் டெல்லிக்குப் பயிற்சிக்குப் போக வேண்டி யிருந்தது. அதெல்லாம் வேண்டாம் என்று ஒரேயடியாக மறுத்தான் ஜெயப்பிரகாஷ்.

ரேகா அம்மாவிடம் போய்க் கெஞ்சினாள். 'அம்மா.. எங்க காலேஜ்ல நாலு வருஷத்துக்கு முன்னால ஒருத்தர் செலக்ட் ஆனாங்க.. அதுக்கப்புறம்.. எனக்குத்தான்.. சான்ஸ் கிடைச்சிருக்கு. ரொம்பப் பெருமையான விஷயம்' என்றாள்.

'அதெல்லாம்.. சரிடி. ஆனா, ஒரு மாசம்ங்கிறே. தனியா எப்படிடீ அனுப்பறது?' என்றார் அம்மா.

'அம்மா.. இன்ட்ரக்டர்ஸ் வருவாங்க.. எல்லா இடத்துலயும் எஸ்கார்ட்ஸ் வருவாங்க..' என்று மேலும் கெஞ்சினாள்.

சுபாஷிணி தலையிடாமல் பார்த்தபடி இருந்தாள். வடிவு தன் அறையிலிருந்து வந்து,

'ரொம்பக் கெஞ்சறாளேப்பா!' என்றார்.

'யோசிக்கலாம்..' என்றான்.

'அண்ணா! நாளைக்கு சாயங்காலத்துக்குள்ள நான் 'எஸ் சொல்லணும்' என்றாள்.

'நான்தான் சொன்னேனே யோசிக்கலாம்னு' என்று எழுந்து போய்விட்டான்.

அவள் அம்மாவையும், அண்ணியையும் பரிதாபமாகப் பார்த்தாள்.

அம்மா சுபாஷிணியிடம் 'நீ என்ன சொல்றே சுபா?' என்றார்.

அவள் மெதுவான குரலில்,

'அத்தே! இதெல்லாம்.. ரொம்ப ரேர் சான்ஸஸ். மொத்த இந்தியாவிலயும் படிக்கிற லட்சக் கணக்கான பேர்ல இருந்து சில பேருக்குத்தான் இந்த மாதிரி சான்ஸ் கிடைக்கும்' என்றாள்.

உடனே ரேகா அவளைக் கட்டிக் கொண்டாள்.

'தேங்க்ஸ்.. அண்ணி நீயாவது புரிஞ்சுக்கறியே?' என்றாள்.

உடனே சுபாஷிணி 'அதெல்லாம்.. அவருக்குத் தெரியாமயா இருக்கும்? வயசுப் பொண்ணை எப்படி அவ்வளவு தூரம் தனியா அனுப்பறதுன்னு யோசிக்கறாரா இருக்கும்' என்றாள் விட்டுக் கொடுக்காமல்.

'அப்ப நீதான் கொஞ்சம் சொல்லேன்ம்மா' என்றாள் வடிவு.

'ஐயோ.. நீங்க சொல்லியே கேட்கலை. நான் சொல்லிக் கேட்பாரா?' என்றாள்.

'இப்ப நீ என்கிட்ட சொன்னியே. அதையே அவன் கிட்டயும் சொல்லு. யோசிப்பான்.' என்றார் வடிவு.

'சரிங்கத்தை' என்று தயக்கத்துடன் மேலே போனாள்.

எப்போதும் இந்த நேரத்துக்குக் கம்ப்யூட்டரின் முன் அமர்ந்து இருப்பவன் இன்றைக்குக் கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு இருந்தான்.

அவள் மெதுவாக எட்டிப் பார்த்தாள்.

'வா!' என்றான். எழுந்து தலையணையை மடியில் அணையாக வைத்துக் கொண்டு சப்பணமிட்டு அமர்ந்தான்.



'என்ன.. சுபா? ரெகமண்டேஷனா' என்றான். இறுக்கமான குரலில்.

அவள் திகைத்து நின்றாள். ஒரு நிமிடம்தான். பிறகு, 'அன்னைக்கு என்னமோ எங்க காலேஜ்ல மட்டும் பெண்களும் திறமையை வளர்த்துக்கணும்னெல்லாம் பேசினீங்க? இன்னைக்கு நம்ம வீட்லயே ஒரு பொண்ணோட திறமையை ரெகக்னைஸ் செய்ய மாட்டேங்கறீங்க' என்றாள் கோபமாய்.

அவன் ஒரு நிமிடம் வெறித்துப் பார்த்தான். ஜெயப்பிரகாஷ் பேச வாயெடுப்பதற்குள் அவளே தொடர்ந்தாள்.

'தமிழ் நாட்டில் மட்டும் எத்தனையோ லட்சம் பேர் படிக்கறாங்க. அதுல நம்ம வீட்டுப் பொண்ணுக்கு.. ஒரு வாய்ப்புக் கிடைச்சிருக்கு அதை.. நீங்களே தடுத்தா எப்படி?' என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டான். ஒன்றும் பேசவில்லை. அதையே சாதகமாக எடுத்துக் கொண்டு,

'வேற வேற ஸ்டேட்ஸ்ல இருந்து வர்றவங்களோட பழகலாம். இரண்டு மூணு நாள் டிரெயின் பிரயாணம். நிறைய ஊர்களைப் பார்க்கலாம் வெளியுலகப் பழக்கம். எல்லாம் ஒரு அனுபவம்தானே?' என்றாள்.

'நீ.. என்.சி.சி.யில் இருந்திருக்கியா?' என்றான்.

'ம்.. நானும் வேற ஸ்டேட்டஸுக்குக் கேம்ப்.. போயிருக்கேன்' என்றாள்.

லேசாக அவன் கண்களில் சிரிப்புத் தோன்றினாற் போல் இருந்தது.

'ம்.. ரொம்ப ஸ்ட்ராங்கா ரெகமண்ட் பண்றே!' அம்மா வேற ஒரு பக்கம் ரெண்டு பெரிய இடங்களும் சேர்ந்ததற்கு அப்புறம்.. நான்.. என்ன செய்ய?' என்றான்.

சுபாஷினியின் முகம் மலர்ந்தது. அவன் சம்மதித்து விட்டான் என்பது புரிய.



'அம்மா.. ஏங்கிப் போயிடுவாங்க. ஒரு மனுஷனுக்கு..

ந்தப் பிரச்சினையும் இல்லாம பத்தரமாய்
ம்னு சொல்லு..' என்றான்.

ஓடினாள்.

பான குரல்கள் ஒலிப்பதைக் கேட்டுக்
கையுடன் சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

ராத விதமாக ரேகா தடதடவென்று ஏறி

ளா! தேங்க்ஸ்!' என்று அண்ணனைக் கட்டிக்
அறைக் கதவுக்கருகில் நின்ற அண்ணியின்
வைத்து விட்டு இறங்கி ஓடினாள்.

ணன் சரின்னுட்டாங்க' என்று உரத்த
ழிக்கு போன் செய்வது கேட்டு இரு
வர் பார்த்துக் கொண்டார்கள்.

ரு' என்று கட்டிலில் அமரச் சொன்னான்.

மையை அங்கீகரிக்கறது இல்லே பிரச்
இருக்கே இந்த ஹரியும்.. அடிக்கடி
ன். இவளும்.. இல்லேன்னா.. வீடே
ராதா..?' என்றான்.

க அவனைப் பார்த்துக் கொண்டு

...தொடர்ந்து பார்த்தபடி இருந்தாள்.

'அது மட்டுமில்லே' சேர்ந்தாப்லே.. நாலு நாள் கூட வெளியூர்ல ரேகா இருந்ததில்லே.. ஹோம் சிக்காயிடுவா' என்றான்.

அவள் தொடர்ந்து விழிப்பதைப் பார்த்து 'அது சரி.. நீ எதுக்கு இந்த முழி முழிக்கறே!' எனவும் அவள் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். பிறகு மெதுவான குரலில்

'ஆமா! எனக்கே பத்து நாளுக்கு ஒரு தடவையாவது இங்க வர முடியலேன்னா கஷ்டமாப் போயிருது..' என்றாள்.

இப்போது ஆச்சரியமாகப் பார்ப்பது அவன் முறையானது. ஜெயப்பிரகாஷின் பார்வை மாறியதையும், முகம் மென்மையாவதையும் அவள் கவனிக்கவில்லை. மேலும் தொடர்ந்தாள்.

'இந்த செமஸ்டர்ல வெறும் ப்ராஜக்ட்தான். அதனால அட்டென்டன்ஸ் அவசியமில்லே.. நான் இங்கயே.. கூட இருந்து ப்ராஜக்ட்... செய்யலாம்..' என்றாள்.

அந்தக் கணத்தில் தன் மனைவியின் மனம் முழுமையாகத் தன்னை நோக்கிச் சாய்ந்திருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். இருவரும் உணர்ச்சி நிரம்பிய ஒரு கனமான மௌனத்தில் சற்று நேரம் ஆழ்ந்தார்கள்.

அவளைத் தன்னருகில் இழுத்துக் கொள்ள வேண்டுமென்று பரிதவித்த தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டான்.

'இல்லை! இன்னும் காலம் கனியவில்லை. முக்கியமான
அந்தச் சோதனை இருக்கிறது. அதற்குப் பிறகும் முடி

'ம்.. ஆனா, எ
போய்ட்டு வரனு

அவள் இறங்கி

கீழே கலகல
கொண்டே புன்ன

யாரும் எதிர்பா
மாடிக்கு வந்தான்.

'தேங்க்ஸ் அண்ண
கொண்டாள். பிறகு
கன்னத்தில் முத்தம்

'டீ.. கமலி! அன்
குரலில் யாரோ தே
வரும் ஒருவரை ஒரு

'வா.. இப்படி உட்கா
அமர்ந்தான்.

'இங்க பார் திறமை
சினை.. நீயும் அங்கே.
வெளியே போயிர்றா
வெறிச்சோடிப் போயி

அவள் ஆச்சரியமா
அமர்ந்திருந்தாள்.

அவன் கையில்தான் என்பது புரிந்தது. அவளது கருத்தைப் புரிந்து கொள்ளாதவன் போல்,

'அப்ப.. ஒன்னு செய்யேன்.. பேசாம.. நம்ம தொழில் தொடர்பான ப்ராஜக்ட் எடுத்தீன்னா.. ஹெல்ப்புக்கு அலைய வேண்டாமே!' என்றான்.

அவள் சம்மதிப்பது போல் தலையாட்டினாள். ஆனால் சற்று நேரம் பேச்சிற்குப் பிறகு அவள் எழுந்து தன்னறைக்குப் போவதற்கு முன்பு.

'எல்லாச் சமயத்திலயும் முகமூடி போட்டுக்க வேண்டிய அவசியமில்லீங்கத்தான்..' என்றாள்.

நிற்காமல் தன் அறைக்குள் போய் விட்டாள்.

அவன் தொடர்ந்து வரக்கூடும் என்ற நப்பாசை கூட இருந்தது. அவன் வரவில்லை.

வழக்கம் போல 'பிகே.. பி.கே.. என்று திட்டிக் கொண்டாள். ஆனால் அவள் எதிர்பார்த்ததற்கு மாறாகச் சொல்ல வொண்ணாத வேதனையுடன் அந்த இரவைத் தூக்கமின்றி ஜெயப்பிரகாஷ் கழித்ததை அவள் புரிந்து கொள்ளவில்லை.

12

'மிஸ். ரேகா, ஃப்ரம் தமிழ்நாட், லீடிங் தி கேர்ள்ஸ் விங்' என்று அந்தக் கம்பீரமான குரல் ஆங்கிலத்திலும், இந்தி ஜிலும் மாற்றி மாற்றி அறிவிக்கிற அதே நேரத்தில் ரேகா ம்பீரமாக மார்ச்சிங் செய்ததோடு அந்தக் குழுவையே வழி டத்திக் கொண்டிருந்தாள்.



வடிவு கண்களில் நீர் கசியப் பெருமையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். சுபாஷிணியின் அருகில் நெருங்கி அமர்ந்திருந்த ஜெயப்பிரகாஷ் அவள் தோளில் மேல் இடக்கையைப் போட்ட வண்ணம் அமர்ந்திருந்தவன் தன் இடக்கையால் அவள் தோளை அழுத்திப் பிடித்தான்.

அவள் சற்றே அதிர்ச்சியுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள். ஆனால், அவனோ தன் கவனம் முழுவதையும் தங்கையின் அற்புதமான அந்த நடைப் பயிற்சியைப் பார்ப்பதிலே பதிந்திருந்ததைப் பார்த்தவுடன், அந்தச் செய்கை அவனது உணர்வின் வெளிப்பாடு என்பதைப் புரிந்து கொண்டாள்.

அதே நேரம் அவனும் திரும்பி அவளைப் பார்த்து வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்.

'சுபா!' நான்தான் லீட் பண்றேன்னு இவ சொல்லவேயில்லை.. பாத்தியா!' என்று தன்னையறியாமல் முணுமுணுத்தான்.

'உங்க தங்கையாச்சே! அதான் சஸ்பென்ஸ் வச்சுட்டா..' என்றாள் சுபா.

'நல்லாப் பண்றா.. இல்லே!' என்னும் போதே விறைப்பான சல்யூட் ஒன்றை குடியரசுத் தலைவருக்கு வைத்தபடி நகர்வதை மகிழ்ச்சியுடன் பார்த்தது அந்தக் குடும்பம்.

முதல் நாள் மாலையே டெல்லி வந்து சேர்ந்து விட்டார்கள். தன்னுடைய குடும்பத்தையும், சுபாவின் குடும்பத்தையும் அவன் விமானத்தில் அழைத்து வந்திருந்தான்.

'இவ்வளவு செலவா?' என்று சுபாஷிணி தயங்கியபோது,

'நீதானே.. சொன்னே? லட்சக் கணக்கான பெண்கள் இந்தியாவில படிக்கறாங்க.. அதுல சில பேருக்குத்தான்.. இந்த வாய்ப்பு கிடைக்குதுன்னு.. அப்புறம் செலவைப் பார்க்கலாமா?' என்றான்.

'ஓ..!' என்றாள் உள்ளடங்கிய குரலில்.

'இதுக்கில்லாத பணம் எதுக்காம்?' என்றாள். அவனும் ஒத்துக் கொண்டாள். ஆனால், இப்போது தன் கவசத்தைக் களைந்தவன் போல் பெருமையையும், மகிழ்ச்சியையும் முகத்தில் காட்டியதோடு இன்னும் அவளிடம் நெருங்கி அமர்ந்தான்.

சுபாஷிணி அந்த ஸ்பரிசத்திலும், அவன் மகிழ்ச்சியைப் பார்த்தும் சற்றே நெகிழ்ந்து விட்டாள்.

முதல் நாளிரவே ரேகாவைப் போய் முகாமில் பார்த்தார்கள்.

'அண்ணா!' என்று ஆசையுடன் வந்த தங்கையை லேசாகத் தோளில் சாய்த்துக் கொண்டான் ஜெயப்பிரகாஷ்.

அந்த நேரம் அவன் முகத்தில் தோன்றிய மென்மை சுபாஷிணிக்கு வியப்பைத் தோற்றுவித்தது. கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாள்.

'என்னம்மா.. இளைச்சுட்டே!' என்றான்.

'ஐயோ! அண்ணா, டிரில் வாங்கிட்டாங்க. தெரியுமா! ஆனா, இந்த அனுபவமும் நல்லா இருக்கு தெரியுமா!' என்று கண்கள் படபடக்க அவள் பேசுவதை எல்லாரும் ரசித்துக் கேட்டார்கள்.

'எப்படியோ செலவில்லாம டெல்லியை சுத்திப் பாத்திடுவே' என்று சித்ரா கேலி செய்தபோது சிரித்தாள்.

அதெல்லாம் நினைவு வர சுபாஷிணியும் கணவனிடம் நெருங்கி அமர்ந்தாள். கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் நடந்த அந்த நிகழ்வுக்குப் பின் மகிழ்ச்சியும், பெருமையுமாய் வெளியே வந்தார்கள்.

ஜெயப்பிரகாஷ் டெல்லியில் இருந்த தமிழக அமைச்சர் ஒருவரின் விருந்தினராகத் தன் செல்வாக்கைக் காட்டிய விதம் பார்த்து சுபாஷிணி கொஞ்சம் அரண்டுதான் போனாள்.



அன்று பிற்பகல் தங்கையைப் பார்த்தபோது மனந்திறந்து பாராட்டினான்.

'அண்ணா! சஸ்பென்ஸா வக்கணும்தான் நான் சொல்லலே' என்றாள்.

'என்னம்மா! நீ கொஞ்சம் முன்னாடி தெரிஞ்சிருந்தா.. ஊர்ல டி.வி.யில ரெகார்ட் பண்ணச் சொல்லியிருப்பேனே?' என்றான் ஆதங்கத்துடன்.

'அதெல்லாம்.. நான் ஃபிரெண்ட்ஸ்கிட்டே சொல்லி.. ஏற்பாடு செஞ்சுட்டேன்' என்றாள்.

அன்றைக்கு சிறப்பு அனுமதி வாங்கி அவர்களையெல்லாம் ஒரு இடத்துக்கு அழைத்துப் போனான்.

அந்த இடத்தை அந்தப் பௌர்ணமி இரவில் பார்த்து மலைத்துப் போனாள் சுபாஷிணி.

* * *

### பௌர்ணமி நிலவு!

பால்போல் பொழிந்து கொண்டிருந்தது! வெண்மையான அந்தத் தாஜ்மஹால் கொள்ளையழகுடன் நின்றிருந்தது.

மொத்தக் குடும்பமும் அதனை மகிழ்ச்சியுடன் பார்த்து வியந்து கொண்டிருந்தது.

இங்கிதம் அறிந்து பெரியவர்கள் இருவரும் அவர்கள் இருவருக்கும் தனிமை கொடுத்து விலகிப் போக, ரேகா, சித்ரா ரகு, ஹரி அவர்கள் சளசளவென்று பேசிக் கொண்டு நகர்ந்தார்கள்.

சுபாஷிணி மலைத்துப் போய் நின்றிருந்தாள். ஜெயப்பிரகாஷும் கூட மௌனத்தில் ஆழ்ந்திருந்தான்.

பத்து நிமிடங்கள்தான் கழிந்திருக்கும். ஆனால் அந்தப் பத்து நிமிடமும் ஏதோ பத்து யுகம் மாதிரி இருந்தது.

'சுபா!' என்றான் கிறங்கிய குரலில்.

'ம்..!' என்றாள். அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அந்தக் கணம் அவர்கள் பார்வைகள் ஒன்றையொன்று கவ்வி நிற்க, திகைத்து நின்றார்கள்.

பேசும் கண்கள் என்று அவன் அடிக்கடி நினைத்துக் கொள்வதைப் போல் அவள் கண்கள் எதையெதையோ பேசியது அவனுக்குப் புரிந்தது.

மெல்லிய ஆனால் குழந்தை குரலில் 'சுபா! எவ்வளவு அழகு இல்லே! தஞ்சாவூர் கோபுரத்தை இந்த மாதிரி நிலா வெளிச்சத்துப் பின்னணியில் பார்த்தா எவ்வளவு அழகு தெரியுமா? பாத்திருக்கியா?' என்றான்.

அவள் இல்லை என்று தலையாட்டினாள்.

'நம்ம தமிழ் நாட்டுக் கோயில்கள்ள நூல் புடிச்ச மாதிரிக் கட்டின தூண்களோட நீள நீள பிரகாரங்கள். கவனிச்சிருக்கியா' என்றான்.

அவள் மறுபடியும் இல்லையென்று தலையாட்டினாள்.

'போகணும்.. அந்த இடங்களுக்கெல்லாம் மறுபடியும் உன்னோட போகணும்' என்றான்.

அவள் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'ஹேய்! அங்க.. பார்! அந்தத் தாஜ் மஹாலைப் பாரு! தரையைப் பார்த்துகிட்டு நிக்கறதுக்கா கூட்டிட்டு வந்தேன்' என்று நெருங்கி நிற்க.. அவள் மேலும் தலை குனிந்து கொண்டாள்.



சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவன் மீண்டும் கவசம் மாட்டிக் கொண்டான்.

மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். மீண்டும் ரேகாவை மூகாமில் கொண்டு போய் விட்டபோது அவன் கேட்டான்.

'ஏன்.. ரேகா! நான் வேண்ணா உன்னை எங்களோட கூட்டிட்டுப் போறதுக்கு ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கட்டுமா' என்றான்.

அவள் நின்று அண்ணனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'அண்ணா! வேண்டாம்! அப்படி நான் மட்டும் வந்தா.. நல்லாயிருக்காதில்லே! மற்ற பொண்ணுங்களுக்கு ஏக்க மாயிடும் இல்லே!' என்றாள்.

'அப்ப.. சரிம்மா!' என்றான். தங்கை போனவுடன் அம்மாவிடம் 'பரவாயில்லைம்மா வெளியுலக அனுபவம் கொஞ்சம் ஹெல்ப் ஃபுல்லாத்தான் இருக்கு போலிருக்கு' என்று சிரித்தான்.

* * *

**வி**மானம் பறந்து கொண்டிருந்தது.

ஜெயப்பிரகாஷும், சுபாஷிணியும் மட்டும் விமானத்தில் வந்தார்கள்.

'எதுக்குப்பா, வெட்டிச் செலவு? நாங்க இருந்து காசி யெல்லாம் பாத்துட்டு வர்றோம்' என்றார் வடிவு.

சரியென்று சம்மதித்த ஜெயப்பிரகாஷ் ஒரு டிராவல் ஏஜென்சியின் பொறுப்பில் அவர்களை விட்டு விட்டு மனைவியை மட்டும் அழைத்துக் கொண்டு வந்தான்.

'சுபா! மறக்க முடியாத ரெண்டு அனுபவங்கள் இல்லே நம்ம ரேகா வீட் பண்ண இந்த பரேடைப் பார்த்தது அப்புறம்.. தாஜ்மஹாலைப் பார்த்தது' என்றான்.

அவள் அவன் முகம் பார்த்துப் புன்னகைத்தாள். நெருங்கி அமர்ந்தபடி தன் தொழிலைப் பற்றியெல்லாம் விரிவாகச் சொல்லிக் கொண்டு வந்தான்.

அவளும் தான் தேர்ந்தெடுக்க விரும்பும் ப்ராஜக்ட் பற்றி அவனிடம் ஆலோசனை கேட்டாள்.

* * *

அன்றிரவு!

'ஹேய்.. சுபா! ஹோட்டலுக்கு சாப்பிடப் போயிரலாமா?' என்றான்.

'வேண்டாம்.. நம்மதானே! ஹெல்புக்கும் ஆளிருக்கே. இந்த டிபன் செய்யறது என்ன கஷ்டம்' என்று அவள் சமைத்தாள்.

அன்றைக்கொரு நாள் செய்வது போலவே அவன் சட்டையின் இரு கைகளையும் மடக்கி விட்டுக் கொண்டு கோதாவில் இறங்குவது போல் சைகை செய்து கொண்டு சாப்பிட அமரவும் அவள் சிரித்தாள்.

'என்சமையல் ரொம்ப ஒண்ணும் மோசமிருக்காது..' என்றாள்.

'அதுதான்.. டாக்கிள் பண்றதுக்கு ரெடியாகறேன்..' என்றான். சிரித்தான்.

அபூர்வமான அந்த சிரிப்பை அவள் வியந்து பார்ப்பதைக் கண்டவன் லேசாகக் கண் சிமிட்டவும். அவள் முகம் சிவந்து போனது.

தலையைக் குனிந்து கொண்டாள்.



அவள் வெட்கம் பார்த்து அவன் பேச்சைப் பொதுவான விஷயங்களுக்கு மாற்றினான்.

'ரேகா பாவம் இல்லைங்கத்தான். நம்ம ஊர் சாப்பாட்டுக்கு ஏங்கிப் போயிட்டா' என்றாள் சுபாஷிணி.

'ஆமா, சுபா, முதல்லயே சொல்லியிருக்கலாம். ஒரு நாலு நாள் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கா. அப்புறம்தான்.. சொன்னா! நான் நம்ம ஃப்ரண்ட் வீட்லயிருந்து அப்பப்ப நம்ம ஊரு வகையறா கொண்டு போய்க் குடுக்கற மாதிரி ஏற்பாடு செஞ்சேன்...' என்றான்.

'பிறகு மெதுவாக சிரித்துக் கொண்டான்.

'ஏன்.. எனக்கு சொல்லக் கூடாதா?' என்றாள்.

'இல்லே! என்ன இருந்தாலும் அண்ணி சமையல் மாதிரி வராதுண்ணா, அப்படிங்கறா!' என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

'வீட்ல.. எல்லாத்தையும் வளைச்சுப் போட்டுட்டே!' என்றான்.

திருமணமாகி ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலான பிறகு இப்படி உரிமையோடு கணவன் பேசுகிற முதல் அனுபவம் அவளுக்குப் புதுமையாக இருந்தது.

எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் ஒருவிதத் தவிப்புடன் நின்றாள்.

'ஹேய்! நீயும் உட்காரு! சாப்பிடு..' என்றான்.

அமர்ந்தாள். அவனே அவளுக்கு எடுத்துப் பரிமாறவும் ஒருவிதமான கலக்கமும், வெட்கமுமான மனநிலையோடு மௌனமாக உண்டாள்.

இருவரும் மேலே போனதற்குப் பின் அவரவர் அறைக்குப் போனார்கள்.

சற்று நேரம் கழித்து அவள் அறையில் விளக்கெரிவது கண்டு எட்டிப் பார்த்தான்.

இப்படித்தான் முன்பொரு நாள்!

அவள் அறையில் விளக்கெரிவதைப் பார்த்து எட்டிப் பார்த்தவன் அவள் ரெக்கார்டில் படங்கள் வரைய வேண்டுமென்று அமர்ந்திருப்பதைப் பார்த்துத் தானும் கூட அமர்ந்து படங்கள் வரைந்து கொடுத்தான்.

அது மாதிரி இன்றைக்கு ஏதாவது தேவையிருக்குமோவென்று எட்டிப் பார்த்தான். ஆனால், அவள் சிந்தனையுடன் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருக்கக் கண்டான்.

'என்ன.. சுபா!' என்று அருகில் போனான்.

அவள் மெதுவாகத் திரும்பி அவன் முகம் பார்த்தாள். அந்தக் கண்களின் ஆழ்ந்த பார்வையில் அவன் ஒரு கணம் திகைத்துப் போய் நின்று விட்டான்.

'சுபா!' என்றான் குரலே எழும்பாத ஒரு குரலில்.

ஜெயப்பிரகாஷ் சற்றும் எதிர்பாராத விதமாக அவள் முகம் சிவக்க அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அவன் கிறங்கிப் போனவனாக நிற்கையிலேயே அவன் கைகள் அவள் தோள்களை வளைத்தன.

அதற்கு மேல் அவன் தன்னை மறந்தவனாய் முகம் நோக்கிக் குனிந்தான். தன் அன்பை விதவிதமாய் வெளிப்படுத்தியவன் சற்றே எல்லை மீறுகிற நேரத்தில் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான்.

மெதுவாக அவளை வழி நடத்தியவன் ஹாலில் சோஃபாவில் அமர்ந்தான்.

அவளுக்கு எதிர் சோஃபாவைக் காட்டினான்.



அவள் புரியாத பாவனையுடன் அமர்ந்தாள். முகத்தில் நாணமும், எதிர்பார்ப்பும் போட்டிப்போட அமர்ந்திருக்கும் மனைவியைப் பார்த்தவுடன் அவன் மனம் உடைந்தான்.

'சுபா!' என்றான் கலக்கம் நிறைந்த குரலில்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

'சுபா! ஒரு பெரிய அநியாயம் நடந்து போச்சு. அதைப் பத்தி உன்கிட்டே பேசணும். சுபா.. அதுக்கப்புறம் நீ எடுக்கிற எந்த முடிவுக்கும் நான் கட்டுப்படறேன்.. சுபா..' என்றான்.

அந்தப் பீடிகையே அவளை பீதிக்குள்ளாக்கியது. அவன் மெதுவான குரலில் பேசப்பேச அவள் முகத்தில் கோபம், வருத்தம், ஏமாற்றம் என்ற உணர்வுகளை வெளிப்படுத்தியவளாய் வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தாள்.

அவளது முகபாவங்கள் ஒவ்வொன்றும் அவனை வாள் கொண்டு தாக்கினாற் போல் இருந்தாலும் அவன் உறுதியாய்த் தொடர்ந்தான்.

தங்கள் வாழ்க்கையைப் புரட்டி போடக் கூடிய சக்தி அந்த உண்மைக்கு உண்டென்று தெரிந்த போதும் அவன் தொடர்ந்து பேசினான்.

## 13

அன்றைக்கு...

அன்றைக்கென்றால் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் புகழ் பெற்றிருந்த அந்தக் கல்லூரியில் அவர்கள் இருவரும் பி.காம். படித்துக் கொண்டிருந்தார்கள்.

இருவரில் ஒருவர் தணிகாசலம். மற்றவர் தங்கராசு. நண்பர்கள் தணிகாசலத்தை டி.சி. என்றும் தங்கராசுவை டி.ஆர். என்றும் சுருக்கமாக அழைத்தார்கள்.

அவர்கள் படித்த பாடங்களில் டி.சி. என்றால் மொத்தச் செலவு என்றும் டி.ஆர். என்றால் மொத்த வரவு என்றும் குறிப்பிடப்படும். அதைக் குறிக்கிற வகையிலே வேடிக்கையாக அழைக்க ஆரம்பித்தார்கள்.

பேராசிரியர்களும் கூட அதை ரசித்துக் கொண்டார்கள்.

விளையாட்டுப் போல் 'ஏம்ப்பா.. டி.சி.. டி.சியில்லாமல் டி.ஆர். இருக்க முடியாதில்லே. படிப்பு முடிஞ்சவுடனே நாம ஏதாவது பிஸினஸ் ஆரம்பிப்பமா?' என்றார் தணிகாசலம்.

'நீ முடியிருக்கிற ஆளு. கொண்டை எப்படி வேண்ணாலும் முடிவே. நான் மொட்டைத் தலையன். அதுக்கெல்லாம் ஆசைப்படலாமா? எங்கயோ ஐநூறு ஆயிரத்துல ஒரு வேலை கிடைச்சாப் போதுங்கற ஆளு' என்றான் தங்கராசு.

'ஏன்..? உழைப்புக் கூட்டுன்னு இருக்கில்லே. நான் முதல் போடறேன்.. நீ உழைப்பைப் பாரு. நான் நம்பிக்கையா உன்னை விட்டுட்டு மார்க்கெட்டிங் பண்றேன்' என்றான் தணிகாசலம்.

'யோசிக்கலாம்' என்ற தங்கராசு குபீரென்று சிரித்தான்.

'என்ன சிரிப்பு?' என்று தணிகாசலம் கேட்க,

'இல்லே! நிசம்மாவே முடியிருந்து நீ கொண்டை போட்டுகிட்டா.. எப்படியிருக்கும்னு சும்மா.. ஒரு கற்பனை பண்ணிகிட்டேன்' என்றான் தங்கராசு.

'எப்படியிருக்குமா? பாகப்பிரிவினை சிவாஜி மாதிரி இருக்கும்' என்றான் தணிகாசலம்.



'ஆமா.. நீ அழகான ஆளு. உன்ற லட்சணத்துக்கு எப்படியிருந்தாலும் நல்லாத்தான் இருக்கும்' என்று தங்கராசு மீண்டும் சொல்ல இருவரும் சிரித்தார்கள்.

'டேய்! டி.ஆர்.. நீயி.. நம்ம வீட்டுக்கு வர்றப்ப.. ஞாபகப்படுத்து.. அப்பாவோட போட்டோ பழசு ஒண்ணு இருக்கு அதைப் பார்த்தா.. அப்படியே அச்சு.. அசலா என்னை மாதிரியே இருக்கும்' என்று சொல்ல தங்கராசு இடைமறித்து,

'என்னடா.. மாத்திச் சொல்றே! நீயி அவரு மாதிரி.. இருக்கேன்னு சொல்லு!' என்றான்.

மறுபடியும் சிரித்தார்கள்.

தணிகாசலம் தொடர்ந்து 'சரி.. எப்படின்னாலும்.. வச்சுக்கோ.. இல்லை.. எனக்குக் கொண்டை போட்டுப் பாக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டயே.. அதுக்குச் சொன்னேன்..' என்றான்.

மறுபடியும் புன்னகைத்துக் கொண்டார்கள்.

காலம் ஓடியது!

ஆனால் அவர்கள் மாறவில்லை.

* * *

'நிஜமாச் சொல்றியா?' என்று தங்கராசு திரும்பத் திரும்பக் கேட்டார்.

'அட... ஆமப்பா! நிஜமாத்தான்.. நாம ஆரம்பிக்கப் போற கம்பெனியில நீயும் கூட்டுக்காரன். முப்பது பைசாக் கூட்டு. சரியா?' என்றார் தணிகாசலம்.

'டி அண்ட் டி டிஸ்டில்லரீஸ்' என்று ஆரம்பித்தார்கள். மது வகையறாக்கள் தயாரிக்கும் தொழில்.

'இந்த ஃபீல்டா? வேற ஏதாவது யோசிக்கக் கூடாதா?' என்று தங்கராசு தயங்கினார்.

'அடப் போப்பா! நாய் வித்த காசு குரைக்குமாக்கும். நமக்கு சத்தியமங்கலத்துக்குப் பக்கத்தில நஞ்சை பூமி நிறைய இருக்கு. கரும்பு விளையற பூமி. கத்தியும் சொந்தக் காரங்க பூமிதான். மொலஸைஸ் நிறையக் கிடக்கும். திராட்சைத் தோட்டத்துக்காரங்க வேற லிங்க் ஆயிருக்கு.. தயாரிப்பையும், மார்க்கெட்டிங்கையும் என்றகுட்ட.. விடு.. ஆபீஸ் நிர்வாகம்.. பாத்துக்க..' என்றார் தனிகாசலம்.

தங்கராசவும் ஒத்துக் கொண்டார். தொழிலும்.. வெகு வேகமாக வளர்ந்தது.

தங்கராசு ஆபீஸ் நிர்வாகத்தை அருமையாகக் கவனித்துக் கொண்டார். தொழில் ஒரு நிலைக்கு வரும் வரை இருவரும் கடுமையாக உழைத்தார்கள்.

தனிகாசலத்துக்கும், தங்கராசுவுக்கும் அடிப்படையில் ஒரு பெரிய வித்தியாசம் இருந்தது.

தனிகாசலம் தன் பங்குக்கு வந்த லாபத்தை வேறு துறை களில் முதலீடு செய்ய ஆரம்பித்தார். தங்கராசு அப்படிப் பட்ட ஆசையெல்லாம் இல்லாதவராக இருந்தார்.

* * *

**த**னிகாசலத்துக்குத் திருமணம் முடிவாகியது. வடிவு பெரிய இடத்துப் பெண்!

பூவோடு நார் சேர்ந்தாற்போல தனிகாசலத்தின் திறமைக்கு ஏற்ப அவரும் நிர்வாகப் பணிகளில் உதவிகரமாக இருந்தார்.

பெரிய இடத்துப் பெண் என்ற போதும் தங்கராசுவுக்கும், கணவருக்கும் இடையே இருக்கிற நட்பை மதித்தார். அடிப்படையில் நல்ல பண்புள்ளவராக இருந்தார்.

'அண்ணா! அந்தக் காலத்துல இவரு காலேஜுல.. எப்படி?' என்று ஆசையாக விசாரித்துக் கொள்வார்.



தங்கள் கல்லூரியிலே உடன் படித்த ஒரு பருமனான பெண்ணின் பின்னாலே போக நேர்ந்தபோது,

'ஆஹா! மெல்ல.. நட! மெல்ல நட! பூமி.. என்னாகும்!' என்று பாட்டுப்பாடி டிபார்ட்மெண்டில் மாட்டிக் கொண்ட கதையை அவர் சொல்லி வைக்க.. அன்றைக்கு தனிகா சலத்தை அவர்கள் இரண்டு பேருமாகச் செய்த கலாட்டாவில் அவர் நொந்தே போனார்.

'டேய்! உன்னை யார்றா! அவகிட்டே போய் இதையெல் லாம் சொல்லச் சொன்னா!' என்று அவர் கோபிக்க..

'சும்மா.. சின்னதாத்தானேடா.. சொன்னேன். பெரிய விஷய மெல்லாம்.. ஒண்ணும் சொல்லலயே' என்று அவர் பதிலளித்தார்.

'ஓ.. பெரிய விஷயமெல்லாம் வேற இருக்கோ?' என்று வடிவு கவலையாக.

'டேய்! டேய்! கலகம் பண்ணாதே!' என்று அவர் கெஞ்ச.

'ம்.. அப்படிக் கெஞ்சு! வா வழிக்கு. பின்னே.. என்னை மிரட்டினா நடக்குமா!' என்று சொன்னவர்,

'அண்ணி! நாங்க ரெண்டு பேருமே..-காலேஜ்ல டீசன்டான பசங்க. பெரிய தப்பெல்லாம்.. ஒண்ணும் செய்ததில்லே!' என்று சமாதானம் செய்து வைத்தார் தங்கராசு.

வசதிகள் வந்த பிறகு அடிக்கடி இருவரும் சேர்ந்து லேசாக மது அருந்துவது வழக்கமாகிப் போனது.

* * *

**'எ**ன்னங்க!' என்று வந்தார் வடிவு.

'என்ன வடிவு?' என்றார் தனிகாசலம்.

'எங்கப்பா உங்க டி..ஆருக்கு ஏத்த மாதிரி ஒரு பொண்ணு சொல்றாரு? பாப்போமா?' என்றார்.

'பார்ப்போமே?' என்றார் தனிகாசலம் உற்சாகமாக.

தந்தை, தாய் இல்லாத தங்கராசுவுக்கு வடிவு தானே முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்து கல்யாணமும் செய்து வைத்தார்.

அதற்குப் பிறகு அவரவர் குடும்பக் கடமைகள்.. தொழில் என்று அவர்களுக்கு நேரம் சரியாக இருந்தது.

நவநீதம்.. மிகவும் பணிவான மனைவியாக இருந்தார்.

தங்கராசுவுக்கு முதலில் ஒரு ஆண் குழந்தை பிறந்து இறந்து போனது. ஆனால் அடுத்துப் பிறந்த சுபாஷினி நன்றாகவே வளர்ந்தாள். அதற்குப் பிறகு இரண்டு குழந்தைகள்.

பத்தாண்டுகளில் இருவருக்கும் மாற்றங்கள் நேர்ந்தன.

தனிகாசலம் பல்வேறு தொழில்களில் செய்த முதலீடுகளில் சில வெற்றியாகின.. சில தோல்வியடைந்தன. எனினும் வாழ்க்கைத் தரம் உயர்ந்து கொண்டே போனது.

தங்கராசுவின் வருமானம் குடும்ப வாழ்க்கைக்குப் போதுமானதாக இருந்தது.

குழந்தைகளை செல்வந்தர் வீட்டுக் குழந்தைகள் போல நன்றாக வளர்த்தார். சொத்துக்கள் சேர்ப்பதைப் பற்றிக் கவலைகள் இருக்கவில்லை. மது அருந்தும் பழக்கம் மட்டும் அவரை உடும்பாகப் பிடித்துக் கொண்டது.

* * *

'ஏம்மா! அவன்.. எங்கே? முக்கியமான ஒரு வேலை குடுத்திருந்தனே?' என்று தனிகாசலம் கேட்கும் பொழுது அந்தச் சிறிய பங்களாவில் தன்னறையில் மது அருந்திக் கொண்டிருந்தார் தங்கராசு.

'வெளியே போயிருக்காருங்க.. ஐயா.. வந்தவுடன் பேசச் சொல்றேன்..' என்று சமாளித்தாள் நவநீதம்.



போனை வைத்து விட்டு 'என்னங்க! முதலாளி கூப்பிடறாரு! இப்படிச் செய்யறீங்களே' என்றாள் மனைவி சலிப்புடன்.

'டி.சி. தாண்டி கூப்பிட்டான்.. அவன் சொன்ன வேலையை முடிச்சாச்சுன்னு சொல்லீரு..' என்று குழறிவிட்டுப் படுக்கையில் குப்புறச் சாய்கிற கணவனை அவள் கவலையுடன் பார்த்தாள்.

மேலும் ஏழெட்டு ஆண்டுகள் ஓடின.

தங்கராசு வேலை நேரத்தில் சரியான வேலைகள் செய்தாலும்.. நாமும் ஒரு பங்குதாரர்தானே என்கிற எண்ணத்தில் தனிகாசலத்தைக் கேட்காமல் நன்கொடைகளை வாரிக் கொடுப்பார். அப்படி ஒரு பத்தாயிரத்துக்கு செக் போட்டுக் கொடுத்து விட்டார்.

அன்றைக்கு!

தனிகாசலம் வீட்டில் எரிமலையாக வெடித்து விட்டார்.

'பாரு வடிவு! பத்தாயிரத்துக்கு செக் போட்டுக் குடுத்துட்டான். அப்பன் வீட்டு சொத்து மாதிரி..' என்று பொரிந்தார்.

'போகட்டுங்க.. நல்ல காரியத்துக்குத்தானே.. குடுத்தாரு.. புண்ணியந்தானே!' என்றார் வடிவு.

'இவனுக்கு வேலை குடுத்ததே.. புண்ணியத்துக்காக..! இப்ப இவன் என் காசில புண்ணியம் தேடறானாக்கும்' என்றார். அவர் மீண்டும் கடுப்பாக.

'ஏங்க.. அப்படிச் சொல்றீங்க' தங்கராசு அண்ணனும் ஆரம்ப காலத்துல கடுமையாக கஷ்டப்படப் போயித்தானே கம்பெனி வளர்ந்துது.. அதுல வந்த லாபத்துலதானே.. நீங்களும் மத்தத் தொழிலை ஆரம்பிச்சீங்க..' என்றார் வடிவு.

'ஆமா.. இல்லேங்கலே.. நான்.. நான் கேக்கறேன்.. அவனுக்கும் லாபத்துல பங்கு குடுத்துச்சுல்ல.. அதை அவன்

உருப்படி.. செஞ்சானா? இப்பவும்.. வாடகை வீட்ல குடியிருக்கான்.. வாய்ப்பத்தான் குடுக்கலாம்.. அவன்தானே பயன்படுத்திக்கணும்?' என்றார்.

கணவனின் வாதத்தில் இருந்த உண்மை அவரை வாயடைக்கச் செய்தது.

'ஏங்க.. நாமளே.. அவருக்கு ஒரு வீடு வாங்கிக் குடுத்தாலாமா!' என்றார் வடிவு.

'சும்மாயிரு! வடிவு.. அந்த வீட்டையும் ஒன்னு அடமானம் வைப்பான்.. இல்லே.. வித்துப் போடுவான்.. நேரம் பாத்து நாமளே ஏதாவது செய்யலாம்' என்றார் தனிகாசலம்.

'அதுவும் சரிதான்..' என்று ஏற்றுக் கொண்டார் வடிவு.

'நேரம் பாத்துச் செய்யலாம்..' என்று சொல்லிக் கொண்டிருக்கிற கணவனிடம் பணம், சேரச் சேர அவரது மனப்பான்மையில் ஏற்படுகிற மாற்றங்களை ஒரு கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்த வடிவு ஒரு காரியம் செய்தார்.

தனக்கு நம்பிக்கையானவரும் குடும்பம் சற்றே பெரிதாக உடைய தனது உறவினரைக் கொண்டு வந்து கணவருக்குப் பி.ஏ..வாக அமர்த்தினார்.

நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிடவில்லை யென்றாலும் என்ன நடக்கிறதென்று அடிக்கடி அவர் காதுக்கு வருகிற மாதிரிப் பார்த்துக் கொண்டார்.

சமீப காலமாக அவர் காதில் விழுந்த விஷயங்கள் அவரைக் கவலைக்குள்ளாக்கியது என்றால் எல்லாவற்றையும் தூக்கி அடிக்கிற மாதிரி ஒரு விஷயம் நடக்கப் போகிறது என்பது அப்போது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.



## 14

'வடிவு! நாம சேலத்துக்கு ஷிப்ட் ஆயிடலாம்னு முடிவு செஞ்சுட்டேன்' என்றார் தணிகாசலம் ஒரு நாள்.

'நீங்க எப்படிச் செஞ்சாலும் சரி..' என்றார் வடிவு.

அப்போது ஜெயப்பிரகாஷ் ஏற்காட்டில் ஒரு கான்வென்ட்டில் ஹாஸ்டலில் இருந்து பள்ளிப் படிப்பை முடித்திருந்தான். கல்லூரிக்குள் நுழைந்திருந்தான்.

இரண்டு மூன்று ஆண்டுகள் ஓடியது. இந்தக் காலகட்டத்தில் தணிகாசலத்துக்கும், தங்கராசுவுக்கும் உறவு நிலைகளில் மாற்றம் ஏற்பட்டிருந்ததை தங்கராசு மிக மெதுவாகப் புரிந்து கொண்டார். என்றாலும் புரிந்து கொண்டதற்குப் பிறகு ஒதுங்கி விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

தன்னை முன்போல் பார்ட்னர் என்று தணிகாசலம் சொல்லிக் கொள்வதில்லையென்று புரிந்து கொண்டார். ஒரு நாள் தன் மனைவியிடம் சொன்னார்.

'தப்புப் பண்ணிட்டேன்.. நவநீதம்! ஃபிரண்ட் கூட கூட்டுப் போட்டிருக்கக் கூடாது..' என்று.

நவநீதம் எரிகிற நெருப்பில் எண்ணெய் விட்டாற்போல் வேறொன்று சொன்னார்.

'அது மட்டும்.. இல்லீங்க.. இந்தப் பாழாப்போன குடிப்பழக்கம் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய எல்லாத்தையும் கெடுத்துப் போடுச்சு' என்று.

தங்கராசு வருத்தத்துடன் ஒத்துக் கொண்டார்.

'ஆனா.. என்ன செய்ய? இனிமே என்னால மீள முடியும்னு தோணலியே.. இனி நான் போய்ப் புதுசா.. எந்தத் தொழிலைத் தொடங்கி என்ன பண்ணுவேன்?' என்றார் புலம்பலாக.

'எனக்கு நம்பிக்கையிருக்குங்க.. வடிவுக்கா ரொம்ப நல்லவங்க அவங்க.. நம்மளைக் கைவிட மாட்டாங்க' என்றாள்.

'ஆமா!' என்றார் பெருமூச்சுடன். ஆனால், முன்போல் தான் வடிவைப் போய்ப் பார்ப்பதைக் கூட தணிகாசலம் விரும்பவில்லையென்பதை அப்போதைக்குத் தன் மனைவியிடம் கூடச் சொல்லவில்லை.

* * *

**வடிவு** ராமநாதன் சொன்னது முழுமையும் கேட்டு விட்டு யோசனையில் ஆழ்ந்தார்.

'எப்பலருந்தே இப்படி நடக்குது?' என்றார்.

'ரெண்டு மூணு வருஷமாவே.. நடக்குது' என்றார்.

'நீங்க ஏன்.. என்கிட்டே சொல்லலை?' என்றார்.

'மேடம்!' எல்லாக் கம்பெனிகளிலும்.. டாக்ஸிலிருந்து தப்பிக்கறதுக்காக செலவுக் கணக்குக் காட்டறது சகஜந்தான். ஆனா.. டி அண்ட் டி டிஸ்டில்லரீஸ்ல மட்டும் இது கொஞ்சம் அதிகமாயிருக்கேன்னு நான் நெனச்சதுண்டு. ஆனா, ரெண்டு நாளைக்கு முன்னாடி ஐயா கெஸ்ட் ஹவுஸ்ல வச்சு.. பூஸ்ல உளறினதுப்புறம்தான் எனக்கு விஷயம் புரிஞ்சுது..' என்றார்.

'என்ன சொன்னாரு!'

'யோவ்.. ராமநாதா! டி அண்ட் டியில மட்டும் எப்பவும் லாபம் கம்மியாத் தெரியற மாதிரியே நீ பாத்துக்கணும். ஏன்.. தெரியுதா? அந்தத் தண்டச் சோத்துத் தடிராமன் டி.ஆர்..



இருக்கானே.. அவனுக்குக் கொட்டியழணும்.. வருஷத்துக்கு ஒரு ரெண்டரை லட்சம்.. சம்பளம் மாதிரிக் குடுக்கறதே. வேஸ்ட்.. இப்பல்லாம்.. பதினைந்தாயிரம் குடுத்தா.. புதுசா.. மேனேஜ்மெண்ட் படிச்ச பசங்க அருமையாப் பண்றானுங்க. இவன் எதுக்கு?' என்று சொன்னாருங்க' என்றார்.

டி.ஆர். சம்பந்தமா எந்த விதமான விஷயம் நடந்தாலும் தனக்கு சொல்ல வேண்டுமென்று வடிவு சொல்லி வைத்திருந்தார்.

'சரி.. போங்க! இதே மாதிரி.. எது நடந்தாலும்.. எனக்கு சொல்லுங்க..' என்றார்.

'சரிங்கம்மா! ஆனா.. இன்னொண்ணும் சொல்றேனுங்கம்மா.. தொழில்ல ஐயா எப்படிச் சொல்றாரோ.. அப்படியேதாம்மா நான் செஞ்சாகணும்..' என்றார் வருத்தம் தோய்ந்த குரலில்.

'ஆமா..! நீங்க லாயலாத்தான் இருக்கணும். அதுதான்.. நியாயம்.. ஆனா, எனக்கு ஒரு ஹெல்ப்.. செய்ங்க. நியாயமாக் குடுத்தா.. நாம டி.ஆர். அண்ணாவுக்கு எவ்வளவு ஒவ்வொரு வருஷமும் குடுக்க வேண்டியிருக்கும்னு மட்டும் எனக்கு அப்பப்ப சொல்லிருங்க..' என்றார்.

அடுத்த இரண்டாண்டுகளுக்கு அந்த அளவுக்கு சமமான தொகையை தன்னுடைய சொத்துக்களில் இருந்து வரும் வருவாயில் ஒதுக்கி வைத்த வடிவு நகரின் மையப் பகுதியில் ஒரு இடம் வாங்கிப் போட்டு அதில் நாலைந்து ஒட்டு வீடுகள் வாடகை வருகிற மாதிரிக் கட்டி வைத்தார்.

அதற்குப் பக்கத்திலேயே.. ஒரு சிறிய பங்களாவும் வாங்கிப் போட்டார். ஆனால், இது பற்றி எதுவும் கணவனுக்கு சொல்லவில்லை.

எல்லாவற்றையும் மீறி ஒரு விஷயம் அடுத்த இரண்டாண்டு களுக்குள்ளாக நடந்து முடிந்தது.

* * *

'நவநீதா! டி.சி. முன்ன மாதிரி இல்ல. தெரியுமா?' என்று அடிக்கடி சொல்ல ஆரம்பித்தார் தங்கராசு.

''நவநீதா.. பணக்காரங்கன்னா.. அப்படித்தான் முன்ன பின்ன இருப்பாங்க.. நாமதான் நம்ம இடம் தெரிஞ்சு நடந்துக்கணும்'' என்று சமாதானம் சொல்வார்.

உள்ளூர தங்கராசுவின் மனதில் கவலை மண்டியது. 'எதுவும்' சேர்த்து வைக்கவில்லை. இரண்டு பெண் குழந்தை கள் இருக்கிறார்கள். என்ன செய்யப் போகிறோம்!' என்ற கவலையும் சேர்ந்தது.

உடல் நலம் கெட ஆரம்பித்தது. ஒரு முறை லேசாக அட்டாக் வந்தது. ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

கம்பெனி சார்பாக செலவு செய்ய வேண்டி வந்தது. செலவான தொகை பார்த்து தணிகாசலம் கடுப்பானார்.

'ஏய்யா! இவனுக்கெல்லாம் லட்சக் கணக்கில் செலவு செய்யத்தான் கம்பெனி நடத்தறமா?' என்று கத்தினார்.

'மெடிக்கிளெய்ம்ல திரும்பி வந்துடுங்கய்யா' என்று ஆசுவாசப்படுத்தினார் ராமநாதன்.

இரண்டு மாதத்தில் உடல் நலம் தேறியது. மீண்டும் அலுவலகம் செல்ல ஆரம்பித்தார். ஒரே ஒரு முறை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்துவிட்டுச் சென்ற தணிகாசலம் 'யோவ்! பி.ஏ. இவனுக்கு உடம்பு சரியில்லைன்னு வடிவு கிட்ட யெல்லாம் சொல்லிகிட்டிருக்காதே! அவ வேற போயி ரொம்பத் தாங்க ஆரம்பிச்சுடுவா..' என்று மிரட்டி வைத்து விட்டார்.



வடிவுக்கு அந்த விஷயம் தெரிவிக்கப் படவேயில்லை.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள்,

அதிசயமாகத் தணிகாசலத்திடம் இருந்து போன் வந்தது.

'டேய்! டி.ஆர்! கார் அனுப்பறேன் உன்னைப் பாக்கணும் போல இருக்கு' என்றார்.

தங்கராசு குளிர்ந்து போனார்.

உடனே மகிழ்ச்சியாக மனைவியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

பழைய நாட்களைப் போல இருவரும் மது அருந்தினார்கள்.

'ரொம்ப வேண்டாம்னு சொல்லியிருக்காங்க..' என்று தங்கராசு தயங்க..

'என்னடா! தைரியமாக.. பழைய மாதிரி டி.சி.ன்னு கூப்பிடு..' என்று சிரித்தார்.

கல்லூரி கலாட்டாக்களையெல்லாம் பேசினார்கள். குழந்தைகளைப் பற்றிய தகவல்களைப் பரிமாறினார்கள்.

தங்கராசு உண்மையாகவே மகிழ்ச்சியின் உச்சத்துக்குப் போனார்.

'டேய்! டி.ஆர். இப்ப உனக்கும் உடம்புக்கு முடியறதில்லே... இனிமே நானே நிர்வாகமும் பாத்துக்கறேன்.. உனக்கும் ஏதாவது வழி செய்வோம்.. நீயும் ரெஸ்ட் எடு' என்றார்.

தங்கராசு மேலும் மகிழ்ந்தார்.

'சரி.. நீ எப்படிச் சொல்றயோ! அப்படி!' என்றார்.

'அதனால.. எல்லா நிர்வாகத்தையும்.. என் பேருக்கு.. மாத்தி பேப்பர்ஸ் பிரிப்பேர் பண்ணியிருக்கேன்.. கையெழுத்துப் போட்டுக் குடு..' என்றார்.

தங்கராசு அப்பாவியாய்ச் சிரித்தார். 'டேய் டி.சி. நீயாத் தான் பார்ட்னர்ஷிப்.. குடுத்தே.. நீயே நிர்வாகம் பாத்துக் கறேன்கறே.. நீ எது சொன்னாலும் எனக்கு நல்லதாத்தான் இருக்கும்.. இதுவரைக்கும் நீ கையெழுத்து போடச் சொன்ன இடத்துல.. போட்டிருக்கேன்.. இப்பவும் போடறேன்..' என்று நீட்டிய பேப்பர்களில் எல்லாம் கையெழுத்துப் போட்டார்.

'பாருய்யா! பி.ஏ.! சுய நினைவோட விருப்பத்தோட தான்.. போடறானான்னு எதுக்கும் கேட்டுக்கோ!' என்றார் தனிகாசலம்.

நடப்பது என்னவென்று தெரிந்தும், ராமநாதனால் எதுவும் செய்ய முடியவில்லை.

அன்றிரவே தங்கராசுவை வீட்டில் கொண்டு போய் விடு மாறு காரில் அனுப்பி வைத்தார். பிறகு ராமநாதனிடம் திரும்பி,

'யோவ்! வடிவுகிட்டே எதானும் போட்டுக் குடுத்தே! வேலைக்கு வேட்டு வச்சிடுவேன்' என்று மிரட்டவும் ராமநாதன் பயந்து போனார்.

* * *

மறுநாள் காலை!

நன்றாகச் சுயநினைவு வந்தபின்தான் தங்கராசுவுக்கு விஷயமே புரிந்தது! அதுவும் எட்டு மணி வாக்கில் ராமநாதன் போன் செய்து,

'ஐயா! நீங்க இனிமே ஆபீஸ்க்கு வரத் தேவையில்லே! ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு சொல்லச் சொன்னாங்க..' என்று சொன்னபோதுதான் முழுமையாகப் புரிந்தது.

அன்று பிற்பகல் ராமநாதன் வந்து 'ஐயா! இந்த மாசச் சம்பளம், போனஸ் எல்லாமாச் சேந்து.. ஒரு ஐம்பதாயிரம்' என்று ஒரு செக்கைக் கொடுத்து விட்டுப் போனார்.



பிறகுதான் மனைவியிடம் சொன்னார். அப்போது கூடத் தன் நண்பனை விட்டுக் கொடுக்க முடியாமல்

'நவநீதா உன்னால இனிமே அலைய முடியாதுடா! பார்ட்னர்ஷிப்பை மாத்தி விட்டுருன்னான் டி.சி. நான் அவனுக்கே எழுதிக் குடுத்துட்டே வந்துட்டேன்' என்றார்.

'நல்ல காரியம் செஞ்சீங்க.. போங்க அவங்க பாத்து.. நம் மனுக்கு ஏதாவது வழி செய்வாங்க பாருங்க' என்றார் நவநீதம்.

தங்கராசுவுக்கும் ஓரத்தில் அப்படி ஒரு நப்பாசை இருந்தது.

அன்று பிற்பகல் சேலத்துக்கு போன் செய்தார். ராமநாதனிடம்,

'ஏன்.. பி.ஏ. சார்! காம்பன்சேஷன் மாதிரி ஏதாவது குடுப் பானான்னு கேட்டுச் சொல்றீங்களா?' என்று தயங்கியபடி கேட்டார்.

'கேட்டுச் சொல்றேன்.. சார்!' என்றார் ராமநாதன்.

இரண்டு மூன்று நாட்கள் இழுத்தடிப்புக்குப் பிறகு ராமநாதன் சொன்னார்.

'சார்! உங்களுக்கு ஆன ஆஸ்பத்திரி செலவு, நீங்க குடுத்த நன்கொடைகளையெல்லாம் உங்க கணக்கிலே கழிச்சுட்ட துக்கப்புறம் பார்த்தா ஒரு லட்ச ரூபாய்தான் தேறுமாம் சார்! அது வேண்ணாக் குடுப்பாரு போலிருக்கு!'' என்று.

தங்கராசு அதிர்ச்சியடைந்தார்.

அன்றைக்கெல்லாம்.. நடைபிணம் போல் நடமாடிக் கொண்டிருந்தார்.

இரண்டு நாட்கள் கழித்து ஒரு லட்ச ரூபாய்க்கு ஒரு டி.டி.யும், அவர் இனிமேல் தனக்கும், கம்பெனிக்கும் சம்பந்தம் இல்லை என்று எழுதிக் கொடுத்த கடிதத்தின் நகலும் வந்து சேர்ந்தது.

உணவு செல்லவில்லை!

உறக்கம் பிடிக்கவில்லை!

இவ்வளவு நாள் உயிருக்குயிராய் பழகிய நண்பனை மனைவியின் முன் விட்டுக் கொடுக்க முடியவில்லை.

அன்றிரவு!

ஹார்ட் அட்டாக் வந்தது.

மாசிவ் ஹார்ட் அட்டாக்.

'நவநீதா! எப்படியோ குழந்தைகளைக் காப்பாத்து.. இந்த ஒன்றரை லட்சத்தையும் மூணு பேருக்கும் பிரிச்சு பாங்கில போட்டுடு.. ஆமா பாங்க்ல போட்டுட்டா சோத்துக்கு என்ன செய்வே! ஆண்டவா! ஒரு வீடு கூட வாங்காம விட்டுட்டேனே!' என்று புலம்பியவர் நெஞ்சைப் பிடித்தபடி சாய்ந்தார்.

'அவனே.. குடுத்தான்.. அவனே.. எடுத்துகிட்டான்.. நவநீதா!' என்கின்ற வார்த்தைகள்தான் அவரது கடைசி வார்த்தைகளாக அமைந்தன.

செய்தி கேட்டதும் வடிவு இடிந்து போனார். பதறிக் கொண்டு புறப்பட்டார்.

தணிகாசலத்துக்கும் கொஞ்சம் உறுத்தலாகி விட்டதோ என்னவோ. தன் மனைவியிடம்,

'வடிவு! என்னால ரொம்ப நேரம் அங்க இருக்க முடியாது.. நல்ல விதமாகவே அவனைப் பாத்துப் பழகிட்டேன். இப்ப இப்படிப் பாக்கறது கஷ்டமா இருக்கும்.. நீ இருந்து காரியத்தை நடத்திக் குடு. செலவைப் பத்திக் கவலைப் படாதே..' என்றார்.

வந்து சற்று நேரம் இருந்து விட்டுக் கிளம்பி விட்டார்.

வடிவு முழுமையாக இருந்து காரியம் முழுவதையும் மேற்பார்வை பார்த்தார்.

வரிசையாக இளம் குழந்தைகளை வைத்துக் கொண்டு சொந்த வீடு கூட இல்லாமல் இருக்கிற நிலை இப்போதுதான் அவருக்குப் புரிந்தது.



இடையில் உறவு விட்டுப் போனதற்குப் பிறகு அவர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டது எவ்வளவு மடத்தனம் என்று வருந்தினார்.

உறவுக்காரர்கள் போனதற்குப் பிறகு 'ஐயோ! வடிவு அண்ணி! எப்பவும் பணத்தைப் பெருசா நினைக்கலையே! தத்துவம் தானே பேசுவாரு யாரு வந்து எதைக் கேட்டாலும் கையிலிருக்கிறதை அள்ளிக் குடுத்துடுவாரே.. சாகறப்பக் கூட.. 'நவநீதா அவனே குடுத்தான்.. அவனே எடுத்துகிட்டான்னு' தத்துவம் இல்லே பேசறாரு' என்று வடிவைக் கட்டிக் கொண்டு அழுதார்.

வடிவும் சேர்ந்து கண்ணீர் விட்டார்.

'நவநீதா! நீங்க இப்படியே அழுதீங்கன்னா உடம்புக்காகாது.. கொஞ்சமாவது ரெஸ்ட்.. எடுங்க!' என்று ஆறுதல் சொல்லிவிட்டுத் தங்கள் கெஸ்ட் ஹவுஸில் இரவு தங்கினார்.

மனதுக்குள் ஏதோ நெருடிக் கொண்டே இருந்தது.

'அவனே குடுத்தான்.. அவனே எடுத்துகிட்டான்..' என்ற சொற்களின் பொருள் சட்டென்று தனக்குப் புரிந்து விட்டாற் போல் பொறி தட்டியது.

கவலையில் ஆழ்ந்து விட்டார்.

## 15

'அம்மா! மூணு பொண்ணுங்க எனக்கு அடுத்தடுத்து வரிசையாகக் கல்யாணத்துக்கு நிக்குதுங்க.. இந்த ஐம்பத்தஞ்சு வயசுக்கு மேலே நான் புதுசா எங்கே போய் வேலை

தேடுவேன்.. இந்த நிலைமையிலே நடக்கற அநியாயத்தை நான் எப்படித் தடுக்க முடியும்?' என்றார் ராமநாதன் தழுதழுத்த குரலில்.

வெகு கோபமாக இருந்த வடிவு சற்றே தணிந்தார்.

'இருந்தாலும்.. இப்படி ஒன்னு நடந்தவுடனே.. எனக்குத் தெரிவிச்சிருந்தா.. அண்ணன் சாகாமயாவது தடுத்திருக்க லாமே!' என்றார்.

'அம்மா! நீங்களே அன்றைக்குச் சொன்னீங்க.. நீங்க முதலாளிக்கு லாயலா நடந்துக்கனும்னு.. அதைத்தான் செஞ்சேன்.. அது மட்டுமல்ல.. அடுத்த ரெண்டு நாளும் எங்கே நான் ஏதாவது உங்ககிட்டே வந்து சொல்லிடுவே னோன்னு ஐயா கண்காணிச்சுகிட்டே இருந்தாரு.. மிரட்டியும் போட்டாரு! இப்படி ஆளுக்கே மோசம் வரும்னு நான் நெனக்கலீங்களே' என்றார்.

வடிவு நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

'இனி.. என்ன பேசி என்ன ஆகுது..! போன உயிர் வரவா போகுது?' என்றார் வருத்தத்துடன்.

'சரி.. நவநீதாகிட்டே என்ன பணம் இருக்குன்னு தெரிஞ்சு ஏதாவது வழி செய்யப் பாக்கறேன்.. நீங்க போங்க..' என்று அனுப்பி வைத்தார்.

யோசனையில் ஆழ்ந்தார்.

* * *

பதினாறு நாட்கள் முடிகிற வரை அவ்வப்போது போய் வந்தார்.

பிறந்த வீட்டு மனிதர்களை வைத்துக் கொண்டு கணவருக்குத் தெரியாமல் சில ஏற்பாடுகளைச் செய்தார்.



இந்த மாதிரி நேரம் என்பதால் தணிகாசலமும் அவர் போய் வருவதை பெரிதாகத் தடுக்கவில்லை.

பதினாறுநாள் முடிந்த பின் ஒரு நாள் போய் நவநீதத்தைப் பார்த்துத் தான் வாங்கியிருந்த அந்த வீட்டுக்கு அழைத்துப் போனார். நவநீதத்தின் பெயருக்கு மாற்றி எழுதிய பத்திரத்தைக் கையில் கொடுத்தார்.

'நவநீதா.. நல்ல.. ஏரியாவிலே இருக்கற வீடு.. அஞ்சு போர்ஷன் இருக்கு.. ஒன்னுல நீ குடியிருந்துக்கோ.. நாலு போர்ஷனை வாடகைக்கு விடு. பழைய காலத்து மாதிரி ஒரு ரூம் மட்டும் மாடி மாதிரியிருக்கு.. வர்ற வாடகையை வச்சு வாழ்க்கை நடத்து..' என்றார்.

'அக்கா! கடைசியா ஒரு ஒன்றரை லட்சம் மிஞ்சியிருக்கு..' என்றார் நவநீதா.

'மூணு குழந்தைங்க பேர்லயும் போடு' என்றார்.

'சரிங்கக்கா.. நான் இவர்கிட்டே சொல்லிகிட்டேயிருந் தேன். வடிவுக்கா.. நம்மளயும் கைவிட மாட்டாங்கன்னு..' என்றார் நன்றியுடன்.

'அதெல்லாம்.. சரிதான். ஆனா, ஒரு விஷயம் நீ எனக்கு சத்தியம் செய்து குடுக்கனும்..' என்றார்.

'சொல்லுங்கக்கா..' என்றார் நவநீதம். 'நான்தான்.. வீடு வாங்கிக் குடுத்துருக்கேன்னு எங்க வீட்டுக்காரருக்குத் தெரியக் கூடாது..' என்றார் வடிவு.

நவநீதத்துக்குப் புரியவில்லை. 'அதுவும் சரிதாங்க்கா.. ஆபீஸ்ல வேலை செய்யற எல்லாரும்.. வாங்கிக் குடுக்கன்னு ஆரம்பிச்சா.. முதலாளி எங்கே.. போவாரு!' என்று சமாதானம் சொல்லிக் கொள்கிற அந்த அப்பாவியை வடிவு பரிதாபமாகப் பார்த்தார்.

அன்றிரவு!

* * *

தன் கணவனிடம்.

'நிஜ வாழ்க்கையில கதையில வர்றதை விட நல்லவர் களும் இருக்காங்க.. வில்லத்தனமானவர்களும் இருக் காங்க.. இல்லே!' என்றார் வடிவு.

'ஏன்.. அப்படிச் சொல்றே!' என்றார்.

'இல்லே! டி.ஆர். அண்ணன் ரொம்ப நல்லவங்க.. இல்லே!' என்றார்.

'நல்லவனா.. இருந்தா மட்டும் போதுமா? ஏமாளியா இருக்கக் கூடாதில்லே' என்றார் தணிகாசலம்.

'ஏமாளியாக் கூட இருக்கலாங்க.. துரோகியாத்தான் இருக்கக் கூடாதுங்க' என்றார் வடிவு. ஒரு மாதிரிக் குரலில்.

தணிகாசலம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.

'என்ன.. திடீர்னு இப்படிப் பேசறே! செத்துப் போனவனைப் பத்திப் பேசி என்னத்துக்கு ஆகுது?' என்றார்.

'ஆமா.. இனிமே.. அவரைப் பத்திப் பேசி என்ன ஆகப் போகுது' என்றார் வடிவு கசப்பான புன்னகையுடன். அவர் உள்ளத்தின் ஓரத்தில கணவர் இனிமேலாவது அந்தக் குடும்பத்துக்கு ஏதாவது செய்யக் கூடுமென்னும் நப்பாசை இருந்தது.

தன் கணவர் அதற்கு முயற்சிக்கவே இல்லை என்பது அவருக்குள் ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியது.

அவர் குடும்பத்துக்கு தன் கணவன் செய்த துரோகம் தன் குடும்பத்தை பாதிக்காமல் இருக்க வேண்டுமே என்று வேண்டாத தெய்வங்களையெல்லாம்.. வேண்டினார். ஆனால் தெய்வ சக்தி நின்று நிதானமாகத்தான் தண் டனையைத் தரும் என்பதைப் புரிந்து கொண்டார்.

* * *



ஒரு வருடம் கூட முடியவில்லை.

எங்கேயோ காரில் போய் விட்டு வருகையில் இளநீர் குடிப்பதற்காக இறங்கி நின்று கொண்டிருந்தார் தணிகாசலம்.

அதே நேரம்,

பைக்கில் வந்த ஒருவன் பைக்கை நிறுத்த லேசாக அவர் முதுகில் இடித்தாற்போல் இருந்தது.

அவனும் 'சாரி' சொன்னான்.

அவரும் சரியென்று நகர்ந்தார். இரண்டு மணி நேரத் துக்குள்ளாக முதுகுத் தண்டில் வலி அதிகமாகியது.

சேலத்தின் பெரிய ஆஸ்பத்திரியில் அட்மிட் செய் தார்கள். முதுகுத் தண்டில் அடி என்றார்கள்.

ஆறு மாதங்கள் படுக்கையில் இருக்க நேர்ந்தது.

அதுவரையில் இருந்த மனோதைரியம் குலைந்து போனது.

ஆறு மாதம் கழித்து அலுவலகம் வர ஆரம்பித்தார். ஆனால் பழைய மாதிரி அலட்டிக் கொள்ளாமல் ஆளுமை யோடு விஷயங்களைக் கையாள்கிற திறமை குறைந்து போனது.

உள்ளுக்குள் ஏதோ உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது. டென்ஷன் ஏறியது. செக் அப்புக்குப் போனார்.

சுகர் என்றார்கள், பி.பி. என்றார்கள்.

வடிவும் அவரது உடல் நலனைப் பாதுகாக்க வேண்டிப் பார்த்துப் பார்த்து எல்லாம் செய்தார். என்றாலும் உடல்நிலை பாதிக்கப்பட்டது.

* * *

'டேய்! பாத்து.. பாத்துடா.. பாத்து இறங்கு..' என்று குரல் கொடுத்தான் தங்கராசு.

'இர்றா.. ராசு.. சத்தம் போடாதே!' என்று பக்கத்துக் காம்பவுண்டில் பொத்தென்று குதித்தான் தனிகாசலம்..

தொப்பென்று நிஜமாகவே கட்டிலில் இருந்து விழுந்த தனிகாசலம் திடுக்கிட்டு விழித்தார்.

கனவு..! எப்போதோ.. அவர்கள் கல்லூரி நாட்களில் அவர்கள் கல்லூரிக்கு அருகில் மதில் சுவரில் ஏறிக் குதித்து மாங்காய் பறித்த அனுபவம் இப்படிப் படம் போல் மனதில் விரிகிறதே.

உள்ளே தங்கராசுவின் நினைவு ஊன்றியிருக்கிறதோ? மனம் பலகீனமடைந்திருந்த அந்த இரவில் தங்கராசுவின் சாவு அவரைத் தாக்கியது.

எழுந்து படுக்கையில் படுத்தார். முகமெல்லாம் வேர்த்துப் போனது.

'வடிவு!' என்று அழைக்க முயற்சித்தார். குரலே எழ வில்லை. எழுந்திருக்க முயற்சித்தும் முடியவில்லை.

இரவெல்லாம் அவதிப்பட்டவர் அதிகாலை நேரம் மயங்கி விட்டார்.

அவரது கைபட்டு ஏதோ விழுந்த சத்தம் கேட்டு வடிவு அதிர்ந்து போய் எழுந்து பார்க்கையில் அவரது மயக்கம் பார்த்தார். உடனடியாக மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றார்கள்.

'ஸ்ட்ரோக்' என்றார்கள்.

''ஸ்ட்ரோக்' ஏற்பட்டு உடனடியாகக் கொண்டு வந்திருந் தால் சரி செய்திருக்கலாம். இப்போது மெதுவாகத்தான் குணமாகும்' என்றார்கள்.

* * *



வடிவு ஜெயப்பிரகாஷைத் துணைக்கு வைத்துக் கொண்டு அலுவலகத்தை கவனித்துக் கொண்டார்.

ராமநாதனை அழைத்து 'பாத்தீங்களா' 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே விளையும்ன்னு பெரியவங்க சொன்னது இப்பப் புரிஞ்சுதா?' அதனால துரோகத்துக்கு இடம் குடுக்காம, தம்பிக்குத் தொழில் பழக்கி விடுங்க..' என்றார்.

என்ன அக்கறையாகக் கவனித்த போதும் அடுத்த ஆறு மாதங்களில் தனிகாசலத்துக்கு உடல் நலிந்தே போனது.

முடிவும் தவிர்க்க முடியாததாக ஆகிப் போனது.

அம்மாவின் விசுவரூபத்தை அப்போதுதான் பார்த்தான் ஜெயப்பிரகாஷ்.

'அம்மா! நான் படிப்பை நிறுத்திர்றேன்' என்றான்.

'வேண்டாம்.. இன்னும் ஒரே வருஷம் போஸ்ட் கிராஜு வேஷன் முடிஞ்சுடும்.. அப்புறம் நீ வா.. அது வரைக்கும் நா.. தாக்குப் பிடிக்கறேன்..' என்றார்.

குடும்ப வக்கீலின் ஆலோசனையுடன் மானேஜரின் உதவியுடன் ஓரளவு திறமையாகவே நிர்வாகம் செய்தார். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் பிடிவாதமாக நின்றார்.

'கோயமுத்தூர் கம்பெனியை மூடிரலாம்' என்றார்.

ஜெயப்பிரகாஷுக்கும் அது சரியென்றே பட்டது. விற் றார்கள். வந்த தொகையில் முப்பது சதவீதத்தை டி.ஆர். குடும்பத்துக்கு ஒதுக்க வேண்டும் என்றார்.

ஜெயப்பிரகாஷ் விளக்கம் கேட்டபோதுதான் எல்லா வற்றையும் சொன்னார்.

ஜெயப்பிரகாஷ் அதிர்ந்து போனான்.

'சரிங்கம்மா! முழுத் தொகையும் வேண்ணாலும் குடுத் தர்லாம்..' என்றான்.

'அப்படியெல்லாம்.. வேண்டாம்.. அவர்களுக்குச் சேர வேண்டியதை மட்டும் குடுத்துரு..' என்றார்.

பிறகும் சற்று யோசித்தார்.

'வேண்டாம்.. இப்பக் குடுத்தா அப்பாவைக் காட்டிக் குடுத்த மாதிரி ஆயிடும்.. அவசியப் படும்போது குடுத்தர் லாம்..' என்றார்.

அதிலிருந்து கிடைத்த பணத்தை வைத்து ஜெயப்பிரகாஷ் ஒரு ஏஜென்சி ஆரம்பித்தான். பள்ளிகளுக்கும், கல்லூரி களுக்கும் லாபரட்டரிகளுக்குத் தேவையான ஆசிட், மற்றும் இரசாயனப் பவுடர்களின் விநியோகம் செய்வது என்பது தான் பிறகு மெதுவாக மற்ற இயந்திரங்களின் ஏஜென்சிக்குத் தாவினான்.

நான்கு லட்சம் ஐந்து லட்சம் என்று விற்கக் கூடிய இயந்திரங்கள், ஸ்பெக்ட்ரோ மீட்டர்கள் விநியோகம் போன்ற பெரிய லெவலுக்கு வந்து நின்றான்.

அம்மா மகிழ்ச்சியடைந்தார்.

* * *

ஒரு நாள்!

தம்பி தங்கைகளுக்கு இணையாக விளையாடிக் கொண் டிருந்தான்.

அப்போது அம்மா அழைத்தார்.

'தம்பி.. இப்ப நான் சொல்றதை மனசுல வச்சுக்க.. நீதான் குடும்பத் தலைவன்.. நீயே அப்பாவா இருந்தா என்ன உரிமை வேண்ணா எடுத்துக்கலாம்.. ஆனா, விளையாடற



அளவுக்கு இறங்கினா பயம் போயிடும் கொஞ்சம் ஸ்ட்ரிக்டா இரு..' என்றார்.

அன்றைக்கு முகமூடியை மாட்டியவன்தான், இன்னொரு முறை அம்மா சொன்னார். 'தம்பி! உன் பேர்ல.. மட்டுமில்ல.. உன் வாழ்க்கையிலயும் ஜெயம் இருக்கணும். நாணயமா இருக்கணும். ஜெயப்பிரகாஷ் சொன்னா.. சொன்ன வார்த்தையைக் காப்பாத்துவான்னு இருக்கணும். அது மட்டுமில்ல டி.ஆர். அண்ணன் மாதிரி ஏமாந்துரவும் கூடாது. உனக்கு வர வேண்டிய காசில கரெக்டா இரு.. அதே சமயம்.. நீ குடுக்க வேண்டியதையும் கரெக்டாக் குடு' என்றார்.

அவன் அம்மா சொன்னதையெல்லாம் புரிந்து கொண்டான்.

வேலையாட்களிடம், தொழிலில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று எளிதில் கற்றுக் கொண்டான்.

அவர்களது எக்ஸ்போர்ட் யூனிட்டும் வளர்ந்தது. ஜெயப் பிரகாஷின் யூனிட்டுகளில் பொருள் வாங்கினால் தரமாக இருக்கும் என்ற நம்பிக்கை சேலத்தில் உறுதியாக ஏற்பட்டது.

இருபத்தைந்து வயதிலேயே சேலத்தின் முக்கியப் பிரமுகராக மாறினான்.

கோவையில் அவனது நண்பன் மகேஷும் நன்கு வளர்ச்சியடைந்தான். அவனிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான். 'தங்கைக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டுத்தான் கல்யாணம். இருபத்தொன்பது வயசில் செய்து கொள்ளலாம்னு இருக்கேன்' என்பான்.

அப்போதுதான்..!

அந்தக் கல்யாணத்தில் சுபாஷிணியைப் பார்த்தான்.

எப்போதும் பெண்களைத் திரும்பிப் பாராத அவன் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து விட்டாள்.

தங்கராக அண்ணனின் மகள் என்று அம்மா அறிமுகப் படுத்தினதும் அதிர்ச்சி ஒரு பக்கம்.. மகிழ்ச்சி ஒரு பக்கம்.. யோசனையில் ஆழ்ந்தான்.

## 16

**கோ**வையில் வசித்தபோது அம்மாவுக்கு மிகவும் பழக்கமானவர்களாம். அம்மா வருந்தி வருந்தி அழைத்த தனால் முதல் நாள் இரவே அந்தத் திருமணத்துக்கு அவன் போயிருந்தான்.

நிறைய வேலைகளை விட்டு விட்டு அவன் வந்திருந்த தால் ஒருவித எரிச்சலில் இருந்தான். ஆனால், மகேஷ் வரவும் எரிச்சல் எல்லாம் மாறிப் போனது.

'என்னடா.. கல்யாணம் ஆனவுடனே எங்களையெல்லாம் மறந்தாச்சா?' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'இல்லடா.. உனக்குத்தான் தெரியுமே! குண்டு வெடிப் புக்கு அப்புறம் முடங்கிக் கிடந்த ரியல் எஸ்டேட் எல்லாம் இப்பத்தான் சூடு பிடிச்சிருக்கு. மறுபடியும் அபார்ட் மென்ட்ஸ் எல்லாம் போக ஆரம்பிச்சாச்சுடா.. வேலை நிறைய..' என்றான்.

'குட்.. குட்!' எப்படியோ நல்லா இருந்தாச் சரிடா!' என்றான்.

'பாத்தே.. ஐஞ்சாறு மாசமாச்சேடா!' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'ஆமடா.. இப்பக் கூட நான் இந்தக் கல்யாணத்துக்கு வர்றதாயில்லை. அம்மாதான் போன் பண்ணிச் சொன் னாங்க.. நீ வந்திருக்கேன்னு.. அதான் வந்தேன்..' என்றான்.



இரண்டு பேரும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உறவினர்களின் உபசரிப்புக்களில் இருந்து தப்பித்துக் கொண்டு ஒருபுறமாகச் சேர்களில் அமர்ந்தபடி ஓய்வாக உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போதுதான் பெண்கள் குழு ஒன்று கடந்து போனது.

'ம்.. பட்டாம் பூச்சிகளையெல்லாம் ஜாலியாக ரசிச்ச காலமெல்லாம் போச்சு..' என்று மகேஷ் போலியாகப் பெருமூச்சு விடவும் ஜெயப்பிரகாஷ் சிரித்தான்.

'மேடம் கிட்டே.. சொல்லிடவா?' என்றான்.

'மேடம்தான் அம்மா வீட்டுக்குப் போயாச்சுடா.. ஃபாமிலி வேலை இருக்காங்க..' என்றான் மகேஷ் லேசாகச் சிவந்த முகத்துடன்.

'அட்றா.. சக்கை!' என்று சிரித்தான் ஜெயப்பிரகாஷ்.

'நீயெப்ப.. சிக்கிக்கப் போறதா உத்தேசம்?' என்றான் மகேஷ்.

'இப்போதைக்கு இல்லைடா!' என்றான் அவன்.

பேசிக் கொண்டே கண்களைச் சுழல விட்ட போதுதான் அவன் பார்வை சுபாஷிணியின் மேல் படிந்தது.

ஆடம்பரமில்லாத அலங்காரம். ஆனால் முகத்திலே ஒரு அறிவுக்களை, சிரிப்பில் ஒரு வசீகரம். நிற்கிற விதத்தில் ஒரு கம்பீரம். அவன் மனம் அவள் தோற்றத்தில் லயித்தது.

பார்வை அவளை விட்டு நகர மறுத்தது.

மகேஷ் கண்டு கொண்டான். அதைக் கண்ட ஜெயப்பிர காஷ் லேசாக முகம் சிவக்க,

'அது யார்.. அந்தப் பொண்ணு?' ரொம்ப ஸ்மார் இல்லே!' என்றான்.

'அடடே! அது சுபா.. இல்லே.. சுபாவும் ரம்யாவும் நம் வைஃப்புக்கு ஜூனியர்ஸ்ப்பா..' பயங்கர மூளைப்ப

அந்தப் பொண்ணு ரொம்ப பிரில்லியண்ட்ன்னு நம்ம சுலோசனா சொல்வாப்லே!' என்றான்.

'ஓ..!' என்றான் ஜெயப்பிரகாஷ்.

மகேஷ் குறும்பாகச் சிரித்தபடி 'என்னடா.. பாத்தர்லாமா?' என்றான்.

'அடப்போடா.. சும்மா ஒரு பொண்ணு நல்லாருக்குன்னு சொன்னா.. உடனே கல்யாணம் பேசிர்றதா?' என்றான்.

அப்போதைக்கு அவனும் கூட அப்படித்தான் நினைத்தான்.

ஆனால்.. இரவில்!

முதன் முதலாகத் தானும் ஒரு இளைஞன் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியபோது சற்றே திகைத்துப் போனான்.

இதுவரையிலும் அப்பாவுக்கு உடல் நலம் இல்லாமற் போன நிலையில் தொழிலில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சியைச் சரிக்கட்டுவதே அவனுக்குச் சரியாக இருந்தது.

அன்றைக்கு மகேஷிடம் கூட சொன்னான் பெரிய மல்டி நேஷனல் கம்பெனிகளோடு தொடர்பு வைத்துக் கொள்கிற அளவுக்கு முன்னேற வேண்டும் என்று.

'டேய்.. இப்ப.. எதிலெதில டீலிங் செய்யறே?' என்றான் மகேஷ்.

'டேய்.. நான் ஆரம்பிக்கும்போது பொட்டென்ஷியோ மீட்டர், டிஜிட்டல் பொட்டென்ஷியோ.. மீட்டர்.. கண்டக்டிவிடி மீட்டர் இப்படி டிஸ்ட்ரிப்யூஷன்தான் ஆரம்பிச்சேன். ஆனா.. இப்ப.. ஸ்டெக்ட்ரோ மீட்டர், அதிலயும் ஐ.ஆர். யு.வின்னு போயாச்சு. லட்சத்திலிருந்து கோடிக்குப் போயாச்சுடா இன்வெண்ட்மெண்ட்ஸ்' என்றான்.

'குட்... குட்.. வெரிகுட்' என்றான் மகேஷ்.



'என்னத்தைடா.. வெரிகுட் போடறே. ஹலெட் பக்கார்ட்ன்னு ஒரு யு.எஸ். பேஸ்ட் கம்பெனி இருக்கு தெரியுமா? ஷிமாட்சுன்னு ஜப்பான் கம்பெனி அந்த லெவலுக்குப் போகணும்டா..' என்றான்.

'அதெல்லாம்.. போலாம்.. போலாம்.. அதுக்கு முதல்ல.. ஒரு பொண்ணைப் பார்த்து.. ஏன் இந்தப் பொண்ணையே வேணும்னாலும் சொல்லு. பண்ணிகிட்டு முதல்ல ஹனிமூனுக்குப் போய்ட்டு வா..' என்றான் மகேஷ்.

'அட.. ஏம்ப்பா.. நீ.. வேற?' என்றான் எரிச்சலுற்றவன் போல்.

'இல்லடா.. நான்.. சொல்றதைக் கேளு.. இதுதான் ரைட் டைம்.. உனக்குக் கல்யாணமாகி உன் வேலையை முடிச்சேன்னா.. அப்புறம் சிஸ்டர். மேரேஜ் பாக்கலாமில்லே..' என்றான்.

ஜெயப்பிரகாஷ் லாவகமாக வேறு பேச்சுக்குத் தாவினான்.

அதை இப்போது நினைத்துக் கொண்டான். இந்தப் பெண் தன்னைத் தொல்லை செய்கிறாள் என்பது புரிந்தது.

இன்றைக்கு மாலை அவளைப் பார்த்ததிலிருந்து தொழில் பற்றிய சிந்தனையோ, வேறு எந்த நினைவோ வரவில்லை. மாறாக அந்தப் பெண்ணின் முகமே மனத்துக்குள் வந்து போய்க் கொண்டிருக்கிறதே.. ஏன்? என்று எண்ணிக் கொண்டான்.

உறங்குவதற்கு வெகு நேரமாயிற்று..

* * *

மறுநாள் காலை!

விசிலடித்தபடி புறப்பட்டுக் கொண்டிருக்கிற மகனை வடிவு கூட ஆச்சரியமாகப் பார்த்தார்.

லேசான புன்னகை. முகத்திலே ஒரு மலர்ச்சி. 'வரமாட்டேன்' என்று மறுத்த கல்யாணத்திற்குக் காலையில் வருகிறேன் என்றபோதே அம்மாவுக்கு மகிழ்ச்சி.

இப்போது மகனுக்குள் ஏற்படுகிற மாற்றங்களை அந்தத் தாயால் சட்டென்று அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

எனவே அவரே பேச்சை ஆரம்பித்தார்.

'ஏம்ப்பா.. கோயமுத்தூர்லயே உனக்குப் பொண்ணு பாத்தர்லாமா?' என்றார்.

எப்போதும் கல்யாணப் பேச்செடுத்தால் 'ஆமா.. இப்ப அதுதான் ரொம்ப முக்கியமாக்கும்' என்று எரிச்சலாகிறவன் இன்று அப்படியெல்லாம் எரிச்சல் படாமல் லேசாகப் புன்னகைத்தான்.

'ஏம்மா.. இருபத்தைஞ்சு வயசு ரொம்ப இயர்லியரா தோணலையாம்மா!' என்றான்.

'இல்லப்பா.. நம்ம வீட்டைப் பொறுத்தவரை அதுதான்.. கரெக்டான வயசு.. உன் கல்யாணம் முடிஞ்சு.. நீ செட்டிலானா அப்புறம்.. ரேகாவுக்குப் பாக்கலாமே..?' என்றார்.

அம்மா.. புன்னகைத்தார். மகன் மறுக்கவில்லையென்பதைக் கண்டு கொண்டார்.

கல்யாண வீட்டுக்குப் போனவுடன் ஜெயப்பிரகாஷுக்கு இன்னொரு ஆச்சரியம் காத்திருந்தது.

மகேஷும் வந்திருந்தான்.

'என்னடா.. ஆச்சரியம்.. காலையில வரமாட்டேன்னு சொன்னே?' என்று ஜெயப்பிரகாஷ் சொல்ல.

'அது ஒண்ணுமில்லைடா..! நேத்து ஆரம்பிச்ச நல்ல காரியத்தை இன்னைக்கு முடிச்சர்லாமேன்னுதான்..' என்றான்.

'எது?..' என்று ஜெயப்பிரகாஷ் புரியாமல் பார்க்க..

'அதான்டா.. மேட்ச் மேக்கிங்..' எனவும் ஜெயப்பிரகாஷ் முகம் சிவந்தது.



'அடப்போடா! நா என்னவோன்னு நினைச்சேன்..!' என்றான்.

சற்று நேரம் உறவினர்களோடு அளவளாவிக் கொண்டிருந்தான். மகேஷ் வேகமாக வந்தான்.

'டேய்.. ஜெய்!' என்றான்.

'என்னடா!' என்றான்.

'வா.. வா.. நான் உனக்கு ஒரு அருமையான இடம் பாத்து வச்சிருக்கேன்' என்று இழுத்துப் போனான்.

இவர்கள் முதல் வரிசைக்குப் போகவும் அங்கிருந்தவர்களே பரபரப்புடன் வரவேற்றார்கள்.

அமர்த்தலாக அமர்ந்தார்கள்.

அப்போதுதான் மகேஷ் கிசுகிசுத்தான்.

'டேய்! கல்யாணப் பொண்ணு கல்பனாவுக்கு இந்தப் பொண்ணு ஒண்ணுவிட்ட சிஸ்டராம். பாரு.. தோழியா நிக்குது..' என்று வெடிச் சிரிப்புச் சிரித்தான்.

ஜெயப்பிரகாஷ் அமர்த்தலாகக் கேட்டுக் கொண்டான்.

'ஐயா.. நேத்து சரியாத் தூங்கலை போலிருக்கு..' என்று கலாட்டா செய்ய ஜெயப்பிரகாஷ் திணறிப் போனான்.

எப்படி இவன் கண்டு பிடித்தான் என்று யோசிக்கையிலேயே அவன்.

'எல்லாம்.. அனுபவம்தான்.. சுலோவைப் பொண்ணு பாத்துட்டு வந்த அன்னைக்கு.. நானும் இதே நிலைமையிலதான் இருந்தேன்' என்றான்.

அமர்த்தலாக அமர்ந்தபடி முழுமையாக ஆழ்ந்து சுபாஷிணியின் நடை உடை பாவனைகளையெல்லாம் கவனித்தவனின் மனம் அவனுக்குச் சொன்னது.

'உனக்கென்று வாய்க்கப் போகிறவள் இவள்தான்..' என்று.

மஞ்சுவைக் கருவியாக்கி தன் மனைவியின் மனத்தை உரசிப் பார்க்க வேண்டுமென்று அவன் நினைத்தான். அதே எண்ணத்தில் அவளும் இருந்தாள். ஆனால், இருவரையுமே தூக்கி விழுங்கி விடுகிற திறமை மஞ்சுவுக்கு இருந்ததை அவர்கள் இருவருமே அறியவில்லை.

## 11

அந்த வாரம் சேலம் வந்திருந்தாள் சுபாஷிணி.

சனிக்கிழமை பிற்பகலில் மஞ்சுளா வருவதாகச் செய்தி அனுப்பியிருந்தாள்.

'மாலையில் வேண்டுமானால் சற்று நேரத்தில் வருவதாகச் சொல்லி அலுவலகம் போனான் ஜெயப்பிரகாஷ்.

மெதுவாக மாமியாரின் அறைக்குள் எட்டிப் பார்த்தாள் சுபாஷிணி.

'என்னம்மா? உள்ளே வா!' என்றார் வடிவு.

'மஞ்சு வர்றாங்களாம். ஆனா, இங்க ஒரு பரபரப்பும் இல்லே.' என்றாள் மெதுவான குரலில்.

'என்ன பரபரப்புப் பண்ணனும். ஸ்வீட் இருக்கு. காரம் வகையறாவும் இருக்கு. பரிமாற வேண்டியதுதான். வந்ததுக் கப்புறம் ஏதாவது டிபன் செஞ்சாப் போகுது' என்றார்.

அவள் மெதுவாக அத்தையின் அருகில் அமர்ந்தாள்.

'ஏங்கத்தை மஞ்சுளாவைத்தான் இவருக்குக் கல்யாணம் பண்றதா முடிவாகி இருந்ததாமே?' என்றாள்.



அத்தை சற்றே வியப்படைந்தாற்போல் காணப்பட்டார்.

'யார் சொன்னா?' என்றார்.

'மஞ்சுளாதான் சொன்னாங்க!' என்றாள். பிறகு ஏதோ நினைத்தவள் போல் தொடர்ந்து 'இவரும் அந்த மாதிரி ஏதோ சொன்னார்' என்றாள்.

'ஓஹோ!' என்று சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்த அவர் 'எப்படியும் கொஞ்ச நேரத்துல அவ வருவாதானே!' எல்லாம் தெரிஞ்சுருது' என்றார்.

மஞ்சுளா வந்தாள். வந்தவள் ரொம்ப உரிமைக்காரி போல் எல்லா அறைகளிலும் புகுந்து வெளியே வந்தாள்.

மாலையில் ஜெயப்பிரகாஷும் வந்தான். சிற்றுண்டி அருந்தினார்கள். பிறகு ஹாலில் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வழக்கம் போல் எல்லாரையும் பேச விட்டு ஜெயப்பிரகாஷ் மௌனம் சாதித்தான் என்றாலும் மனைவியிடம் நெருங்கி அமர்ந்து கொண்டான்.

அவன் வருவதற்குச் சற்று நேரம் முன்பாக சுபாஷிணி ரேகாவிடம் கூட விசாரித்து விட்டாள்.

'ஏன்.. ரேகா.. உங்கண்ணனுக்கு இந்த மஞ்சுளாவைக் கல்யாணம் செய்யறதா இருந்ததா?' என்று.

அவளும் ஆச்சரியமாக 'யார் சொன்னா?' என்றாளே தவிர மேற்கொண்டு விவரம் சொல்லவில்லை.

மஞ்சுளா வேறு ஏகமாகக் கலக்கினாள்.

'நானும் ஜெய் அத்தானும் கல்லாறு போயிருந்தமே?' அப்ப!' என்று ஏதோ ஆரம்பிக்க ரேகா இடையிலே புகுந்து,

'ஆமா.. நாங்கள்ளாம் கூட வந்திருந்தமே?' என்றாள்.

'ஜெய் அத்தானுக்கு சமோசா ரொம்பப் பிடிக்குமே!' என்று ஏதோ சொல்ல ரேகா மறுபடியும்,

'இல்லையே! அவருக்குக் கட்லெட் தானே பிடிக்கும்..' என்றாள் ரேகா.

ஒரு வழியாக அன்றிரவு அவள் புறப்பட்டாள். புறப்படு வதற்கு முன்பாக,

'ஜெய்.. அத்தான்.. உங்க வைஃப் ரொம்பத்தான் உங்க மேலே பிரியமாய் இருக்காங்க!' என்று சிரித்தாள்.

ஜெயப்பிரகாஷும் சிரித்தான்.

'சும்மாவாவது உங்களுக்கும் எனக்கும் கல்யாணம் பேச்சு இருந்ததுன்னு சொன்னேன்.. பாருங்க.. அப்ப இருந்து அம்மிணி மூட் அவுட்..' என்று மறுபடியும் சிரித்தாள்.

சுபாஷிணி திகைத்துப் போனாள்.

மஞ்சுளா மறுபடியும் சிரித்து 'ஹலோ' மேடம்! உங்க மேரேஜுக்கு முன்னாடியே எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆயாச்சு. மாப்பிளை ஃபாரின்ல இருக்கார். மேல்படிப்பிற் காக போயிருக்கிறார். வந்தவுடன் கல்யாணம்' என்றாள்.

எல்லாரும் சிரித்தார்கள்.

சுபாஷிணியின் முகம் சிவந்தது.

சட்டென்று ஜெயப்பிரகாஷ் அவளருகில் நெருங்கி அமர்ந்து அவள் தோள் மேல் கையைப் போட்டுக் கொண்டு,

'ஏய்! எல்லாரும் சேர்ந்துகிட்டு அவளைக் கலாட்டா.. செய்யறீங்களா!' என்று ஒரு மிரட்டு மிரட்டவும்தான் வேறு விஷயங்களுக்குத் தாவினார்கள்.

கலகலச் சிரிப்புடன் விடைபெற்றாள் மஞ்சுளா.

ஜெயப்பிரகாஷும், அவளும் அன்று மாடிக்குப் போன வுடனே சுபாஷிணி குறுகுறுப் பார்வையுடன்,



'பின்னே, அவங்க அம்மா அப்பாவுக்கு வருத்தம். அதான் நாங்க கல்யாணத்துக்கு வர்லேன்னு சொன்னாங்களே!' என்றாள்.

'ஹேய்! சுபா.. அதெல்லாம்.. ரீல்! போட்டோ ஆல்பத் திலே இருக்காங்க. மஞ்சுதான்.. அந்த சமயம் ஊருக்குப் போயிருந்தா. போதுமா?' என்றான்.

'எதுக்கு இப்படியெல்லாம். டீஸ் செய்றாங்க' என்றாள்.

'நாந்தான் சும்மா.. சொன்னேன். இப்ப சுபா படிப்புலதான் நாட்டமா இருக்கா..ன்னு' அதுக்காக உன்னை உசுப்பி விடறாளாம்' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

முதல் முறையாக அவள் கணவன் அவளிடம் நெருங்கி நின்றான். அவன் கைகள் அவள் இடுப்பை வளைக்க.. அருகில் இழுத்தான்.

'பொறாமை.. ம்.. பொறாமை..?' என்று அடிக் குரலில் சிரிக்க, அவள் விக்கித்து நின்றாள்.

மெல்ல அவள் முகம் நோக்கிக் குனிந்து தன் தாபத்தை வெளிப்படுத்தியவன் 'கொஞ்ச நாள்.. கொஞ்ச நாள்.. பொறு உன் படிப்பு மட்டும் முடியட்டும் அப்புறம்.. என் மனசு பூரா வும் நீ மட்டும்தான்னு இருக்கறேன்னு விதவிதமாக் காட்ட றேன்' என்றான் குழைந்த குரலில்.

அவள் வெட்கத்துடன் விடுவித்துக் கொண்டு தன் அறைக்குச் செல்ல அவனும் ஒருவிதச் சிரிப்புடன் தன் அறைக்குச் சென்றான்.

* * *

மூன்றாவது செமஸ்டரின் கடைசித் தேர்வை எழுதி முடித்துவிட்டு வெளியே வந்தாள் சுபாஷிணி.

உற்சாகமாக இருந்தாள்.

'அப்பாடா! எழுத வேண்டிய தேர்வுகள் எல்லாம் முடிந்து விட்டது. இனி அடுத்த செமஸ்டரில் ப்ராஜக்ட்தான்' என்று எண்ணிக் கொண்டாள்.

நன்றாகவே எழுதியிருந்தாள். போதாதற்குத் தனது பேராசிரியர்களிடம் போய் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவாக்கிக் கொண்டாள் தான் சரியாகவே விடைகளை எழுதியிருப்பதை உணர்ந்து கொண்டாள்.

மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள்.

ஜெயப்பிரகாஷுக்கு போன் செய்தாள். அவனும் மகிழ்ச்சியடைந்தான்.

'குட்.. வெரிகுட்!' என்று பாராட்டிக் கொண்டான். பிறகு ஒரு வாரம் ஃப்ரீயா ரெஸ்ட் எடு.. நான் வந்து கூட்டிட்டு வரேன்' என்றான்.

அவளும் சரியென்றாள். அந்த ஒரு வாரமும் வேகமாக ஓடியது.

* * *

இரவு நேரம்.

எல்லாரும் அமைதியாய் அமர்ந்திருந்தார்கள். ஆனால் சாப்பாட்டு வேலை பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தது.

ரேகா அம்மாவின் முகத்தையும் அண்ணனின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு கிச்சடியை அளைந்து கொண்டிருந்தாள்.



'அண்ணா! ப்ளீஸ்!' என்றாள் கெஞ்சலாக.

'நீ முதல்ல சாப்பிடு!' அப்புறம்.. பேசலாம்..' என்றான் கெடுபிடியான குரலில்.

ரேகாவின் முகம் வாடி விட்டது. எல்லாரும் சாப்பிட்டு முடித்த பின் மேலே போகாமல் கீழ் ஹாலில் சோஃபாவில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

'ரேகா குடியரசு தின விழா மார்ச்சிங்கில் பங்கெடுத்துக் கொள்வதற்காக என்.சி.சி.யில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாள்.. ஒரு மாதம் டெல்லிக்குப் பயிற்சிக்குப் போக வேண்டியிருந்தது. அதெல்லாம் வேண்டாம் என்று ஒரேயடியாக மறுத்தான் ஜெயப்பிரகாஷ்.

ரேகா அம்மாவிடம் போய்க் கெஞ்சினாள். 'அம்மா.. எங்க காலேஜ்ல நாலு வருஷத்துக்கு முன்னால ஒருத்தர் செலக்ட் ஆனாங்க.. அதுக்கப்புறம்.. எனக்குத்தான்.. சான்ஸ் கிடைச்சிருக்கு. ரொம்பப் பெருமையான விஷயம்' என்றாள்.

'அதெல்லாம்.. சரிடி. ஆனா, ஒரு மாசம்ங்கிறே. தனியா எப்படிடீ அனுப்பறது?' என்றார் அம்மா.

'அம்மா.. இன்ட்ரக்டர்ஸ் வருவாங்க.. எல்லா இடத்துலயும் எஸ்கார்ட்ஸ் வருவாங்க..' என்று மேலும் கெஞ்சினாள்.

சுபாஷிணி தலையிடாமல் பார்த்தபடி இருந்தாள். வடிவு தன் அறையிலிருந்து வந்து,

'ரொம்பக் கெஞ்சறாளேப்பா!' என்றார்.

'யோசிக்கலாம்..' என்றான்.

'அண்ணா! நாளைக்கு சாயங்காலத்துக்குள்ள நான் 'எஸ் சொல்லணும்' என்றாள்.

'நான்தான் சொன்னேனே யோசிக்கலாம்னு' என்று எழுந்து போய்விட்டான்.

அவள் அம்மாவையும், அண்ணியையும் பரிதாபமாகப் பார்த்தாள்.

அம்மா சுபாஷிணியிடம் 'நீ என்ன சொல்றே சுபா?' என்றார்.

அவள் மெதுவான குரலில்,

'அத்தே! இதெல்லாம்.. ரொம்ப ரேர் சான்ஸஸ். மொத்த இந்தியாவிலயும் படிக்கிற லட்சக் கணக்கான பேர்ல இருந்து சில பேருக்குத்தான் இந்த மாதிரி சான்ஸ் கிடைக்கும்' என்றாள்.

உடனே ரேகா அவளைக் கட்டிக் கொண்டாள்.

'தேங்க்ஸ்.. அண்ணி நீயாவது புரிஞ்சுக்கறியே?' என்றாள்.

உடனே சுபாஷிணி 'அதெல்லாம்.. அவருக்குத் தெரியாமயா இருக்கும்? வயசுப் பொண்ணை எப்படி அவ்வளவு தூரம் தனியா அனுப்பறதுன்னு யோசிக்கறாரா இருக்கும்' என்றாள் விட்டுக் கொடுக்காமல்.

'அப்ப நீதான் கொஞ்சம் சொல்லேன்ம்மா' என்றாள் வடிவு.

'ஐயோ.. நீங்க சொல்லியே கேட்கலை. நான் சொல்லிக் கேட்பாரா?' என்றாள்.

'இப்ப நீ என்கிட்ட சொன்னியே. அதையே அவன் கிட்டயும் சொல்லு. யோசிப்பான்.' என்றார் வடிவு.

'சரிங்கத்தை' என்று தயக்கத்துடன் மேலே போனாள்.

எப்போதும் இந்த நேரத்துக்குக் கம்ப்யூட்டரின் முன் அமர்ந்து இருப்பவன் இன்றைக்குக் கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு இருந்தான்.

அவள் மெதுவாக எட்டிப் பார்த்தாள்.

'வா!' என்றான். எழுந்து தலையணையை மடியில் அணையாக வைத்துக் கொண்டு சப்பணமிட்டு அமர்ந்தான்.



'என்ன.. சுபா? ரெகமண்டேஷனா' என்றான், இறுக்கமான குரலில்.

அவள் திகைத்து நின்றாள். ஒரு நிமிடம்தான். பிறகு, 'அன்னைக்கு என்னமோ எங்க காலேஜ்ல மட்டும் பொண்களும் திறமையை வளர்த்துக்கணும்னெல்லாம் பேசினீங்க? இன்னைக்கு நம்ம வீட்லயே ஒரு பொண்ணோட திறமையை ரெகக்னைஸ் செய்ய மாட்டேங்கறீங்க' என்றாள் கோபமாய்.

அவன் ஒரு நிமிடம் வெறித்துப் பார்த்தான். ஜெயப்பிரகாஷ் பேச வாயெடுப்பதற்குள் அவளே தொடர்ந்தாள்.

'தமிழ் நாட்டில் மட்டும் எத்தனையோ லட்சம் பேர் படிக்கறாங்க. அதுல நம்ம வீட்டுப் பொண்ணுக்கு.. ஒரு வாய்ப்புக் கிடைச்சிருக்கு அதை.. நீங்களே தடுத்தா எப்படி?' என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டான். ஒன்றும் பேசவில்லை. அதையே சாதகமாக எடுத்துக் கொண்டு,

'வேற வேற ஸ்டேட்ஸ்ல இருந்து வர்றவங்களோட பழகலாம். இரண்டு மூணு நாள் டிரெயின் பிரயாணம். நிறைய ஊர்களைப் பார்க்கலாம் வெளியுலகப் பழக்கம். எல்லாம் ஒரு அனுபவம்தானே?' என்றாள்.

'நீ.. என்.சி.சி.யில் இருந்திருக்கியா?' என்றான்.

'ம்.. நானும் வேற ஸ்டேட்டஸுக்குக் கேம்ப்.. போயிருக்கேன்' என்றாள்.

லேசாக அவன் கண்களில் சிரிப்புத் தோன்றினாற் போல் இருந்தது.

'ம்.. ரொம்ப ஸ்ட்ராங்கா ரெகமண்ட் பண்றே!' அம்மா வேற ஒரு பக்கம் ரெண்டு பெரிய இடங்களும் சேர்ந்ததற்கு அப்புறம்.. நான்.. என்ன செய்ய?' என்றான்.

சுபாஷிணியின் முகம் மலர்ந்தது. அவன் சம்மதித்து விட்டான் என்பது புரிய.



'அம்மா.. ஏங்கிப் போயிடுவாங்க. ஒரு மனுஷனுக்கு..

ந்தப் பிரச்சினையும் இல்லாம பத்தரமாய்
ம்னு சொல்லு..' என்றான்.
ஓடினாள்.
பான குரல்கள் ஒலிப்பதைக் கேட்டுக்
கையுடன் சற்று நேரம் அமர்ந்திருந்தான்.
ராத விதமாக ரேகா தடதடவென்று ஏறி
ணா! தேங்க்ஸ்!' என்று அண்ணனைக் கட்டிக்
அறைக் கதவுக்கருகில் நின்ற அண்ணியின்
வைத்து விட்டு இறங்கி ஓடினாள்.
ணன் சரின்னுட்டாங்க' என்று உரத்த
ழிக்கு போன் செய்வது கேட்டு இரு
வர் பார்த்துக் கொண்டார்கள்.
ரு' என்று கட்டிலில் அமரச் சொன்னான்.
மயை அங்கீகரிக்கறது இல்லே பிரச்
. இருக்கே இந்த ஹரியும்.. அடிக்கடி
ன். இவளும்.. இல்லேன்னா.. வீடே
ராதா..?' என்றான்.
க அவனைப் பார்த்துக் கொண்டு

...தொடர்ந்து பார்த்தபடி இருந்தாள்.

'அது மட்டுமில்லே' சேர்ந்தாப்லே.. நாலு நாள் கூட வெளி யூர்ல ரேகா இருந்ததில்லே.. ஹோம் சிக்காயிடுவா' என்றான்.

அவள் தொடர்ந்து விழிப்பதைப் பார்த்து 'அது சரி.. நீ எதுக்கு இந்த முழி முழிக்கறே!' எனவும் அவள் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். பிறகு மெதுவான குரலில்

'ஆமா! எனக்கே பத்து நாளுக்கு ஒரு தடவையாவது இங்க வர முடியலேன்னா கஷ்டமாப் போயிருது..' என்றாள்.

இப்போது ஆச்சரியமாகப் பார்ப்பது அவன் முறை யானது. ஜெயப்பிரகாஷின் பார்வை மாறியதையும், முகம் மென்மையாவதையும் அவள் கவனிக்கவில்லை. மேலும் தொடர்ந்தாள்.

'இந்த செமஸ்டர்ல வெறும் ப்ராஜக்ட்தான். அதனால அட்டென்டன்ஸ் அவசியமில்லே.. நான் இங்கயே.. கூட இருந்து ப்ராஜக்ட்.. செய்யலாம்..' என்றாள்.

அந்தக் கணத்தில் தன் மனைவியின் மனம் முழுமை யாகத் தன்னை நோக்கிச் சாய்ந்திருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். இருவரும் உணர்ச்சி நிரம்பிய ஒரு கனமான மௌனத்தில் சற்று நேரம் ஆழ்ந்தார்கள்.

அவளைத் தன்னருகில் இழுத்துக் கொள்ள வேண்டு மென்று பரிதவித்த தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டான்.

'இல்லை! இன்னும் காலம் கனியவில்லை. முக்கியமான அந்தச் சோதனை இருக்கிறது. அதற்குப் பிறகும் முடி...

'ம்.. ஆனா, எ
போய்ட்டு வரனு
அவள் இறங்கி
கீழே கலகல
கொண்டே புன்ன
யாரும் எதிர்பா
மாடிக்கு வந்தாள்.
'தேங்க்ஸ் அண்ண
கொண்டாள். பிறகு
கன்னத்தில் முத்தம்
'ஃ.. கமலி! அன்
குரலில் யாரோ தோ
வரும் ஒருவரை ஒரு
'வா.. இப்படி உட்கா
அமர்ந்தாள்.
'இங்க பார் திறமை
சினை.. நீயும் அங்கே
வெளியே போயிற்றா
வெறிச்சோடிப் போயி
அவள் ஆச்சரியமா
அமர்ந்திருந்தாள்.

அவள் கையில்தான் என்பது புரிந்தது. அவளது கருத்தைப் புரிந்து கொள்ளாதவன் போல்,

'அப்பா.. ஒண்ணு செய்யேன்.. பேசாம.. நம்ம தொழில் தொடர்பான ப்ராஜக்ட் எடுத்தீன்னா.. ஹெல்ப்புக்கு அலைய வேண்டாமே!' என்றான்.

அவள் சம்மதிப்பது போல் தலையாட்டினாள். ஆனால் சற்று நேரம் பேச்சிற்குப் பிறகு அவள் எழுந்து தன்னறைக்குப் போவதற்கு முன்பு.

'எல்லாச் சமயத்திலயும் முகமூடி போட்டுக்க வேண்டிய அவசியமில்லீங்கத்தான்..' என்றாள்.

நிற்காமல் தன் அறைக்குள் போய் விட்டாள்.

அவன் தொடர்ந்து வரக்கூடும் என்ற நப்பாசை கூட இருந்தது. அவன் வரவில்லை.

வழக்கம் போல 'பிகே.. பி.கே.. என்று திட்டிக் கொண்டாள். ஆனால் அவள் எதிர்பார்த்ததற்கு மாறாகச் சொல்ல வொண்ணாத வேதனையுடன் அந்த இரவைத் தூக்கமின்றி ஜெயப்பிரகாஷ் கழித்ததை அவள் புரிந்து கொள்ளவில்லை.

## 12

'மிஸ். ரேகா, ஃப்ரம் தமிழ்நாட், லீடிங் தி கேர்ள்ஸ் விங்' ன்று அந்தக் கம்பீரமான குரல் ஆங்கிலத்திலும், இந்தி லும் மாற்றி மாற்றி அறிவிக்கிற அதே நேரத்தில் ரேகா ம்பீரமாக மார்ச்சிங் செய்ததோடு அந்தக் குழுவையே வழி டத்திக் கொண்டிருந்தாள்.



வடிவு கண்களில் நீர் கசியப் பெருமையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். சுபாஷிணியின் அருகில் நெருங்கி அமர்ந்திருந்த ஜெயப்பிரகாஷ் அவள் தோளில் மேல் இடக்கையைப் போட்ட வண்ணம் அமர்ந்திருந்தவன் தன் இடக்கையால் அவள் தோளை அழுத்திப் பிடித்தான்.

அவள் சற்றே அதிர்ச்சியுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள். ஆனால், அவனோ தன் கவனம் முழுவதையும் தங்கையின் அற்புதமான அந்த நடைப் பயிற்சியைப் பார்ப்பதிலே பதிந்திருந்ததைப் பார்த்தவுடன், அந்தச் செய்கை அவனது உணர்வின் வெளிப்பாடு என்பதைப் புரிந்து கொண்டாள்.

அதே நேரம் அவனும் திரும்பி அவளைப் பார்த்து வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்.

'சுபா!' நான்தான் லீட் பண்றேன்னு இவ சொல்லவேயில்லை.. பாத்தியா!' என்று தன்னையறியாமல் முணுமுணுத்தான்.

'உங்க தங்கையாச்சே! அதான் சஸ்பென்ஸ் வச்சுட்டா..' என்றாள் சுபா.

'நல்லாப் பண்றா.. இல்லே!' என்னும் போதே விறைப்பான சல்யூட் ஒன்றை குடியரசுத் தலைவருக்கு வைத்தபடி நகர்வதை மகிழ்ச்சியுடன் பார்த்தது அந்தக் குடும்பம்.

முதல் நாள் மாலையே டெல்லி வந்து சேர்ந்து விட்டார்கள். தன்னுடைய குடும்பத்தையும், சுபாவின் குடும்பத்தையும் அவன் விமானத்தில் அழைத்து வந்திருந்தான்.

'இவ்வளவு செலவா?' என்று சுபாஷிணி தயங்கியபோது,

'நீதானே.. சொன்னே? லட்சக் கணக்கான பெண்கள் இந்தியாவில படிக்கறாங்க.. அதுல சில பேருக்குத்தான்.. இந்த வாய்ப்பு கிடைக்குதுன்னு.. அப்புறம் செலவைப் பார்க்கலாமா?' என்றான்.

'ஓ..!' என்றாள் உள்ளடங்கிய குரலில்.

'இதுக்கில்லாத பணம் எதுக்காம்?' என்றாள். அவனும் ஒத்துக் கொண்டான். ஆனால், இப்போது தன் கவசத்தைக் களைந்தவன் போல் பெருமையையும், மகிழ்ச்சியையும் முகத்தில் காட்டியதோடு இன்னும் அவளிடம் நெருங்கி அமர்ந்தான்.

சுபாஷிணி அந்த ஸ்பரிசத்திலும், அவன் மகிழ்ச்சியைப் பார்த்தும் சற்றே நெகிழ்ந்து விட்டாள்.

முதல் நாளிரவே ரேகாவைப் போய் முகாமில் பார்த்தார்கள்.

'அண்ணா!' என்று ஆசையுடன் வந்த தங்கையை லேசாகத் தோளில் சாய்த்துக் கொண்டான் ஜெயப்பிரகாஷ்.

அந்த நேரம் அவன் முகத்தில் தோன்றிய மென்மை சுபாஷிணிக்கு வியப்பைத் தோற்றுவித்தது. கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாள்.

'என்னம்மா.. இளைச்சுட்டே!' என்றான்.

'ஐயோ! அண்ணா, டிரில் வாங்கிட்டாங்க. தெரியுமா! ஆனா, இந்த அனுபவமும் நல்லா இருக்கு தெரியுமா!' என்று கண்கள் படபடக்க அவள் பேசுவதை எல்லாரும் ரசித்துக் கேட்டார்கள்.

'எப்படியோ செலவில்லாம டெல்லியை சுத்திப் பாத்திடுவே' என்று சித்ரா கேலி செய்தபோது சிரித்தாள்.

அதெல்லாம் நினைவு வர சுபாஷிணியும் கணவனிடம் நெருங்கி அமர்ந்தாள். கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் நடந்த அந்த நிகழ்வுக்குப் பின் மகிழ்ச்சியும், பெருமையுமாய் வெளியே வந்தார்கள்.

ஜெயப்பிரகாஷ் டெல்லியில் இருந்த தமிழக அமைச்சர் ஒருவரின் விருந்தினராகத் தன் செல்வாக்கைக் காட்டிய விதம் பார்த்து சுபாஷிணி கொஞ்சம் அரண்டுதான் போனாள்.



அன்று பிற்பகல் தங்கையைப் பார்த்தபோது மனந்திறந்து பாராட்டினான்.

'அண்ணா! சஸ்பென்ஸா வக்கணும்தான் நான் சொல்லலே' என்றாள்.

'என்னம்மா! நீ கொஞ்சம் முன்னாடி தெரிஞ்சிருந்தா.. ஊர்ல டி.வி.யில ரெகார்ட் பண்ணச் சொல்லியிருப்பேனே?' என்றான் ஆதங்கத்துடன்.

'அதெல்லாம்.. நான் ஃப்ரெண்ட்ஸ்கிட்டே சொல்லி.. ஏற்பாடு செஞ்சுட்டேன்' என்றாள்.

அன்றைக்கு சிறப்பு அனுமதி வாங்கி அவர்களையெல்லாம் ஒரு இடத்துக்கு அழைத்துப் போனான்.

அந்த இடத்தை அந்தப் பௌர்ணமி இரவில் பார்த்து மலைத்துப் போனாள் சுபாஷிணி.

* * *

## பௌர்ணமி நிலவு!

பால்போல் பொழிந்து கொண்டிருந்தது! வெண்மையான அந்தத் தாஜ்மஹால் கொள்ளையழகுடன் நின்றிருந்தது.

மொத்தக் குடும்பமும் அதனை மகிழ்ச்சியுடன் பார்த்து வியந்து கொண்டிருந்தது.

இங்கிதம் அறிந்து பெரியவர்கள் இருவரும் அவர்கள் இருவருக்கும் தனிமை கொடுத்து விலகிப் போக, ரேகா, சித்ரா ரகு, ஹரி அவர்கள் சளசளவென்று பேசிக் கொண்டு நகர்ந்தார்கள்.

சுபாஷிணி மலைத்துப் போய் நின்றிருந்தாள். ஜெயப்பிரகாஷும் கூட மௌனத்தில் ஆழ்ந்திருந்தான்.

பத்து நிமிடங்கள்தான் கழிந்திருக்கும். ஆனால் அந்தப் பத்து நிமிடமும் ஏதோ பத்து யுகம் மாதிரி இருந்தது.

'சுபா!' என்றான் கிறங்கிய குரலில்.

'ம்..!' என்றாள். அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அந்தக் கணம் அவர்கள் பார்வைகள் ஒன்றையொன்று கவ்வி நிற்க, திகைத்து நின்றார்கள்.

பேசும் கண்கள் என்று அவன் அடிக்கடி நினைத்துக் கொள்வதைப் போல் அவள் கண்கள் எதையெதையோ பேசியது அவனுக்குப் புரிந்தது.

மெல்லிய ஆனால் குழந்தை குரலில் 'சுபா! எவ்வளவு அழகு இல்லே! தஞ்சாவூர் கோபுரத்தை இந்த மாதிரி நிலா வெளிச்சத்துப் பின்னணியில் பார்த்தா எவ்வளவு அழகு தெரியுமா? பாத்திருக்கியா?' என்றான்.

அவள் இல்லை என்று தலையாட்டினாள்.

'நம்ம தமிழ் நாட்டுக் கோயில்கள்ள நூல் புடிச்ச மாதிரிக் கட்டின தூண்களோட நீள நீள பிரகாரங்கள். கவனிச்சிருக்கியா' என்றான்.

அவள் மறுபடியும் இல்லையென்று தலையாட்டினாள்.

'போகணும்.. அந்த இடங்களுக்கெல்லாம் மறுபடியும் உன்னோட போகணும்' என்றான்.

அவள் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'ஹேய்! அங்க.. பார்! அந்தத் தாஜ் மஹாலைப் பாரு! தரையைப் பார்த்துகிட்டு நிக்கறதுக்கா கூட்டிட்டு வந்தேன்' என்று நெருங்கி நிற்க.. அவள் மேலும் தலை குனிந்து கொண்டாள்.



சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவன் மீண்டும் கவசம் மாட்டிக் கொண்டான்.

மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். மீண்டும் ரேகாவை முகாமில் கொண்டு போய் விட்டபோது அவன் கேட்டான்.

'ஏன்.. ரேகா! நான் வேண்ணா உன்னை எங்களோட கூட்டிட்டுப் போறதுக்கு ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கட்டுமா' என்றான்.

அவள் நின்று அண்ணனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'அண்ணா! வேண்டாம்! அப்படி நான் மட்டும் வந்தா.. நல்லாயிருக்காதில்லே! மற்ற பொண்ணுங்களுக்கு ஏக்க மாயிடும் இல்லே!' என்றாள்.

'அப்ப.. சரிம்மா!' என்றான். தங்கை போனவுடன் அம்மாவிடம் 'பரவாயில்லைம்மா வெளியுலக அனுபவம் கொஞ்சம் ஹெல்ப் ஃபுல்லாத்தான் இருக்கு போலிருக்கு' என்று சிரித்தான்.

* * *

**வி**மானம் பறந்து கொண்டிருந்தது.

ஜெயப்பிரகாஷும், சுபாஷிணியும் மட்டும் விமானத்தில் வந்தார்கள்.

'எதுக்குப்பா, வெட்டிச் செலவு? நாங்க இருந்து காசி யெல்லாம் பாத்துட்டு வர்றோம்' என்றார் வடிவு.

சரியென்று சம்மதித்த ஜெயப்பிரகாஷ் ஒரு டிராவல் ஏஜென்சியின் பொறுப்பில் அவர்களை விட்டு விட்டு மனைவியை மட்டும் அழைத்துக் கொண்டு வந்தான்.

'சுபா! மறக்க முடியாத ரெண்டு அனுபவங்கள் இல்லே நம்ம ரேகா வீட் பண்ண இந்த பரேடைப் பார்த்தது அப்புறம்.. தாஜ்மஹாலைப் பார்த்தது' என்றான்.

அவள் அவன் முகம் பார்த்துப் புன்னகைத்தாள். நெருங்கி அமர்ந்தபடி தன் தொழிலைப் பற்றியெல்லாம் விரிவாகச் சொல்லிக் கொண்டு வந்தான்.

அவளும் தான் தேர்ந்தெடுக்க விரும்பும் ப்ராஜக்ட் பற்றி அவனிடம் ஆலோசனை கேட்டாள்.

* * *

அன்றிரவு!

'ஹேய்.. சுபா! ஹோட்டலுக்கு சாப்பிடப் போயிரலாமா?' என்றான்.

'வேண்டாம்.. நம்மதானே! ஹெல்புக்கும் ஆளிருக்கே. இந்த டிபன் செய்யறது என்ன கஷ்டம்' என்று அவள் சமைத்தாள்.

அன்றைக்கொரு நாள் செய்வது போலவே அவன் சட்டையின் இரு கைகளையும் மடக்கி விட்டுக் கொண்டு கோதாவில் இறங்குவது போல் சைகை செய்து கொண்டு சாப்பிட அமரவும் அவள் சிரித்தாள்.

'என்சமையல் ரொம்ப ஒண்ணும் மோசமிருக்காது..' என்றாள்.

'அதுதான்.. டாக்கின் பண்றதுக்கு ரெடியாகறேன்..' என்றான். சிரித்தான்.

அபூர்வமான அந்த சிரிப்பை அவள் வியந்து பார்ப்பதைக் கண்டவன் லேசாகக் கண் சிமிட்டவும். அவள் முகம் சிவந்து போனது.

தலையைக் குனிந்து கொண்டாள்.



அவள் வெட்கம் பார்த்து அவன் பேச்சைப் பொதுவான விஷயங்களுக்கு மாற்றினான்.

'ரேகா பாவம் இல்லைங்கத்தான். நம்ம ஊர் சாப் பாட்டுக்கு ஏங்கிப் போயிட்டா' என்றாள் சுபாஷிணி.

'ஆமா, சுபா, முதல்லயே சொல்லியிருக்கலாம். ஒரு நாலு நாள் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கா. அப்புறம்தான்.. சொன்னா! நான் நம்ம ஃப்ரண்ட் வீட்லயிருந்து அப்பப்ப நம்ம ஊரு வகையறா கொண்டு போய்க் குடுக்கற மாதிரி ஏற்பாடு செஞ்சேன்...' என்றான்.

'பிறகு மெதுவாக சிரித்துக் கொண்டான்.

'ஏன்.. எனக்கு சொல்லக் கூடாதா?' என்றாள்.

'இல்லே! என்ன இருந்தாலும் அண்ணி சமையல் மாதிரி வராதுண்ணா, அப்படிங்கறா!' என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

'வீட்ல.. எல்லாத்தையும் வளைச்சுப் போட்டுட்டே!' என்றான்.

திருமணமாகி ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலான பிறகு இப்படி உரிமையோடு கணவன் பேசுகிற முதல் அனுபவம் அவளுக்குப் புதுமையாக இருந்தது.

எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் ஒருவிதத் தவிப் புடன் நின்றாள்.

'ஹேய்! நீயும் உட்காரு! சாப்பிடு..' என்றான்.

அமர்ந்தாள். அவனே அவளுக்கு எடுத்துப் பரிமாறவும் ஒருவிதமான கலக்கமும், வெட்கமுமான மனநிலையோடு மௌனமாக உண்டாள்.

இருவரும் மேலே போனதற்குப் பின் அவரவர் அறைக்குப் போனார்கள்.

சற்று நேரம் கழித்து அவள் அறையில் விளக்கெரிவது கண்டு எட்டிப் பார்த்தான்.

இப்படித்தான் முன்பொரு நாள்!

அவள் அறையில் விளக்கெரிவதைப் பார்த்து எட்டிப் பார்த்தவன் அவள் ரெக்கார்டில் படங்கள் வரைய வேண்டுமென்று அமர்ந்திருப்பதைப் பார்த்துத் தானும் கூட அமர்ந்து படங்கள் வரைந்து கொடுத்தான்.

அது மாதிரி இன்றைக்கு ஏதாவது தேவையிருக்குமோ வென்று எட்டிப் பார்த்தான். ஆனால், அவள் சிந்தனையுடன் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருக்கக் கண்டான்.

'என்ன.. சுபா!' என்று அருகில் போனான்.

அவள் மெதுவாகத் திரும்பி அவன் முகம் பார்த்தாள். அந்தக் கண்களின் ஆழ்ந்த பார்வையில் அவன் ஒரு கணம் திகைத்துப் போய் நின்று விட்டான்.

'சுபா!' என்றான் குரலே எழும்பாத ஒரு குரலில்.

ஜெயப்பிரகாஷ் சற்றும் எதிர்பாராத விதமாக அவள் முகம் சிவக்க அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அவன் கிறங்கிப் போனவனாக நிற்கையிலேயே அவன் கைகள் அவள் தோள்களை வளைத்தன.

அதற்கு மேல் அவன் தன்னை மறந்தவனாய் முகம் நோக்கிக் குனிந்தான். தன் அன்பை விதவிதமாய் வெளிப்படுத்தியவன் சற்றே எல்லை மீறுகிற நேரத்தில் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான்.

மெதுவாக அவளை வழி நடத்தியவன் ஹாலில் சோஃபாவில் அமர்ந்தான்.

அவளுக்கு எதிர் சோஃபாவைக் காட்டினான்.



அவள் புரியாத பாவனையுடன் அமர்ந்தாள். முகத்தில் நாணமும், எதிர்பார்ப்பும் போட்டிப்போட அமர்ந்திருக்கும் மனைவியைப் பார்த்தவுடன் அவன் மனம் உடைந்தான்.

'சுபா!' என்றான் கலக்கம் நிறைந்த குரலில்.

அவள் திமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

'சுபா! ஒரு பெரிய அநியாயம் நடந்து போச்சு. அதைப் பத்தி உன்கிட்டே பேசணும். சுபா.. அதுக்கப்புறம் நீ எடுக்கிற எந்த முடிவுக்கும் நான் கட்டுப்படறேன்.. சுபா..' என்றான்.

அந்தப் பீடிகையே அவளை பீதிக்குள்ளாக்கியது. அவன் மெதுவான குரலில் பேசப்பேச அவள் முகத்தில் கோபம், வருத்தம், ஏமாற்றம் என்ற உணர்வுகளை வெளிப்படுத்தியவளாய் வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தாள்.

அவளது முகபாவங்கள் ஒவ்வொன்றும் அவனை வாள் கொண்டு தாக்கினாற் போல் இருந்தாலும் அவன் உறுதியாய்த் தொடர்ந்தான்.

தங்கள் வாழ்க்கையைப் புரட்டி போடக் கூடிய சக்தி அந்த உண்மைக்கு உண்டென்று தெரிந்த போதும் அவன் தொடர்ந்து பேசினான்.

## 13

அன்றைக்கு...

அன்றைக்கென்றால் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் புகழ் பெற்றிருந்த அந்தக் கல்லூரியில் அவர்கள் இருவரும் பி.காம். படித்துக் கொண்டிருந்தார்கள்.

இருவரில் ஒருவர் தணிகாசலம். மற்றவர் தங்கராசு. நண்பர்கள் தணிகாசலத்தை டி.சி. என்றும் தங்கராசுவை டி.ஆர். என்றும் சுருக்கமாக அழைத்தார்கள்.

அவர்கள் படித்த பாடங்களில் டி.சி. என்றால் மொத்தச் செலவு என்றும் டி.ஆர். என்றால் மொத்த வரவு என்றும் குறிப்பிடப்படும். அதைக் குறிக்கிற வகையிலே வேடிக்கையாக அழைக்க ஆரம்பித்தார்கள்.

பேராசிரியர்களும் கூட அதை ரசித்துக் கொண்டார்கள்.

விளையாட்டுப் போல் 'ஏம்பா.. டி.சி.. டி.சியில்லாமல் டி.ஆர். இருக்க முடியாதில்லே. படிப்பு முடிஞ்சவுடனே நாம ஏதாவது பிஸினஸ் ஆரம்பிப்பமா?' என்றார் தணிகாசலம்.

'நீ முடியிருக்கிற ஆளு. கொண்டை எப்படி வேண்ணாலும் முடிவே. நான் மொட்டைத் தலையன். அதுக்கெல்லாம் ஆசைப்படலாமா? எங்கயோ ஐநூறு ஆயிரத்துல ஒரு வேலை கிடைச்சாப் போதுங்கற ஆளு' என்றான் தங்கராசு.

'ஏன்..? உழைப்புக் கூட்டுன்னு இருக்கில்லே. நான் முதல் போடறேன்.. நீ உழைப்பைப் பாரு. நான் நம்பிக்கையா உன்னை விட்டுட்டு மார்க்கெட்டிங் பண்றேன்' என்றான் தணிகாசலம்.

'யோசிக்கலாம்' என்ற தங்கராசு குபீரென்று சிரித்தான்.

'என்ன சிரிப்பு?' என்று தணிகாசலம் கேட்க,

'இல்லே! நிசம்மாவே முடியிருந்து நீ கொண்டை போட்டுகிட்டா.. எப்படியிருக்கும்னு சும்மா.. ஒரு கற்பனை பண்ணிகிட்டேன்' என்றான் தங்கராசு.

'எப்படியிருக்குமா? பாகப்பிரிவினை சிவாஜி மாதிரி இருக்கும்' என்றான் தணிகாசலம்.



'ஆமா.. நீ அழகான ஆளு. உன்ற லட்சணத்துக்கு எப்படியிருந்தாலும் நல்லாத்தான் இருக்கும்' என்று தங்கராசு மீண்டும் சொல்ல இருவரும் சிரித்தார்கள்.

'டேய்! டி.ஆர்.. நீயி.. நம்ம வீட்டுக்கு வர்றப்ப.. ஞாபகப்படுத்து.. அப்பாவோட போட்டோ பழசு ஒண்ணு இருக்கு அதைப் பார்த்தா.. அப்படியே அச்சு.. அசலா என்னை மாதிரியே இருக்கும்' என்று சொல்ல தங்கராசு இடைமறித்து,

'என்னடா.. மாத்திச் சொல்றே! நீயி அவரு மாதிரி.. இருக்கேன்னு சொல்லு!' என்றான்.

மறுபடியும் சிரித்தார்கள்.

தணிகாசலம் தொடர்ந்து 'சரி.. எப்படின்னாலும்.. வச்சுக்கோ.. இல்லை.. எனக்குக் கொண்டை போட்டுப் பாக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டயே.. அதுக்குச் சொன்னேன்..' என்றான்.

மறுபடியும் புன்னகைத்துக் கொண்டார்கள்.

காலம் ஓடியது!

ஆனால் அவர்கள் மாறவில்லை.

* * *

'நிஜமாச் சொல்றியா?' என்று தங்கராசு திரும்பத் திரும்பக் கேட்டார்.

'அட... ஆமப்பா! நிஜமாத்தான்.. நாம ஆரம்பிக்கப் போற கம்பெனியில நீயும் கூட்டுக்காரன். முப்பது பைசாக் கூட்டு. சரியா?' என்றார் தணிகாசலம்.

'டி அண்ட் டி டிஸ்டில்லரீஸ்' என்று ஆரம்பித்தார்கள். மது வகையறாக்கள் தயாரிக்கும் தொழில்.

'இந்த ஃபீல்டா? வேற ஏதாவது யோசிக்கக் கூடாதா?' என்று தங்கராசு தயங்கினார்.

'அடப் போப்பா! நாய் வித்த காசு குரைக்குமாக்கும். நமக்கு சத்தியமங்கலத்துக்குப் பக்கத்தில நஞ்சை பூமி நிறைய இருக்கு. கரும்பு விளையற பூமி. சுத்தியும் சொந்தக்காரங்க பூமிதான். மொலஸைஸ் நிறையக் கிடக்கும். திராட்சைத் தோட்டத்துக்காரங்க வேற லிங்க் ஆயிருக்கு.. தயாரிப்பையும், மார்க்கெட்டிங்கையும் என்றகுட்ட.. விடு.. ஆபீஸ் நிர்வாகம்.. பாத்துக்க..' என்றார் தணிகாசலம்.

தங்கராசுவும் ஒத்துக் கொண்டார். தொழிலும்.. வெகு வேகமாக வளர்ந்தது.

தங்கராசு ஆபீஸ் நிர்வாகத்தை அருமையாகக் கவனித்துக் கொண்டார். தொழில் ஒரு நிலைக்கு வரும் வரை இருவரும் கடுமையாக உழைத்தார்கள்.

தணிகாசலத்துக்கும், தங்கராசுவுக்கும் அடிப்படையில் ஒரு பெரிய வித்தியாசம் இருந்தது.

தணிகாசலம் தன் பங்குக்கு வந்த லாபத்தை வேறு துறைகளில் முதலீடு செய்ய ஆரம்பித்தார். தங்கராசு அப்படிப் பட்ட ஆசையெல்லாம் இல்லாதவராக இருந்தார்.

* * *

தணிகாசலத்துக்குத் திருமணம் முடிவாகியது. வடிவு பெரிய இடத்துப் பெண்!

பூவோடு நார் சேர்ந்தாற்போல தணிகாசலத்தின் திறமைக்கு ஏற்ப அவரும் நிர்வாகப் பணிகளில் உதவிகரமாக இருந்தார்.

பெரிய இடத்துப் பெண் என்ற போதும் தங்கராசுவுக்கும், கணவருக்கும் இடையே இருக்கிற நட்பை மதித்தார். அடிப்படையில் நல்ல பண்புள்ளவராக இருந்தார்.

'அண்ணா! அந்தக் காலத்துல இவரு காலேஜுல.. எப்படி?' என்று ஆசையாக விசாரித்துக் கொள்வார்.



தங்கள் கல்லூரியிலே உடன் படித்த ஒரு பருமனான பெண்ணின் பின்னாலே போக நேர்ந்தபோது.

'ஆஹா! மெல்ல.. நட! மெல்ல நட! பூமி.. என்னாகும்!' என்று பாட்டுப்பாடி டிபார்ட்மெண்டில் மாட்டிக் கொண்ட கதையை அவர் சொல்லி வைக்க.. அன்றைக்கு தணிகாசலத்தை அவர்கள் இரண்டு பேருமாகச் செய்த கலாட்டாவில் அவர் நொந்தே போனார்.

'டேய்! உன்னை யார்றா! அவகிட்டே போய் இதையெல்லாம் சொல்லச் சொன்னா!' என்று அவர் கோபிக்க..

'சும்மா.. சின்னதாத்தானேடா.. சொன்னேன். பெரிய விஷயமெல்லாம்.. ஒண்ணும் சொல்லலயே' என்று அவர் பதிலளித்தார்.

'ஓ.. பெரிய விஷயமெல்லாம் வேற இருக்கோ?' என்று வடிவு கவலையாக.

'டேய்! டேய்! கலகம் பண்ணாதே!' என்று அவர் கெஞ்ச.

'ம்.. அப்படிக் கெஞ்சு! வா வழிக்கு. பின்னே.. என்னை மிரட்டினா நடக்குமா!' என்று சொன்னவர்,

'அண்ணி! நாங்க ரெண்டு பேருமே..-காலேஜ்ல டீசன்டான பசங்க. பெரிய தப்பெல்லாம்.. ஒண்ணும் செய்ததில்லே!' என்று சமாதானம் செய்து வைத்தார் தங்கராசு.

வசதிகள் வந்த பிறகு அடிக்கடி இருவரும் சேர்ந்து லேசாக மது அருந்துவது வழக்கமாகிப் போனது.

* * *

'என்னங்க!' என்று வந்தார் வடிவு.

'என்ன வடிவு?' என்றார் தணிகாசலம்.

'எங்கப்பா உங்க டி..ஆருக்கு ஏத்த மாதிரி ஒரு பொண்ணு சொல்றாரு? பாப்போமா?' என்றார்.

'பார்ப்போமே?' என்றார் தனிகாசலம் உற்சாகமாக.

தந்தை, தாய் இல்லாத தங்கராசுவுக்கு வடிவு தானே முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்து கல்யாணமும் செய்து வைத்தார்.

அதற்குப் பிறகு அவரவர் குடும்பக் கடமைகள்.. தொழில் என்று அவர்களுக்கு நேரம் சரியாக இருந்தது.

நவநீதம்.. மிகவும் பணிவான மனைவியாக இருந்தார்.

தங்கராசுவுக்கு முதலில் ஒரு ஆண் குழந்தை பிறந்து இறந்து போனது. ஆனால் அடுத்துப் பிறந்த சுபாஷினி நன்றாகவே வளர்ந்தாள். அதற்குப் பிறகு இரண்டு குழந்தைகள்.

பத்தாண்டுகளில் இருவருக்கும் மாற்றங்கள் நேர்ந்தன.

தனிகாசலம் பல்வேறு தொழில்களில் செய்த முதலீடுகளில் சில வெற்றியாகின.. சில தோல்வியடைந்தன. எனினும் வாழ்க்கைத் தரம் உயர்ந்து கொண்டே போனது.

தங்கராசுவின் வருமானம் குடும்ப வாழ்க்கைக்குப் போதுமானதாக இருந்தது.

குழந்தைகளை செல்வந்தர் வீட்டுக் குழந்தைகள் போல நன்றாக வளர்த்தார். சொத்துக்கள் சேர்ப்பதைப் பற்றிக் கவலைகள் இருக்கவில்லை. மது அருந்தும் பழக்கம் மட்டும் அவரை உடும்பாகப் பிடித்துக் கொண்டது.

* * *

'ஏம்மா! அவன்.. எங்கே? முக்கியமான ஒரு வேலை குடுத்திருந்தனே?' என்று தனிகாசலம் கேட்கும் பொழுது அந்தச் சிறிய பங்களாவில் தன்னறையில் மது அருந்திக் கொண்டிருந்தார் தங்கராசு.

'வெளியே போயிருக்காருங்க.. ஐயா.. வந்தவுடன் பேசச் சொல்றேன்..' என்று சமாளித்தாள் நவநீதம்.



போனை வைத்து விட்டு 'என்னங்க! முதலாளி கூப்பிட்டாரு! இப்படிச் செய்யறீங்களே' என்றாள் மனைவி சலிப்புடன்.

'டி.சி. தாண்டி கூப்பிட்டான்.. அவன் சொன்ன வேலையை முடிச்சாச்சுன்னு சொல்லீரு..' என்று குழறிவிட்டுப் படுக்கையில் குப்புறச் சாய்கிற கணவனை அவள் கவலையுடன் பார்த்தாள்.

மேலும் ஏழெட்டு ஆண்டுகள் ஓடின.

தங்கராசு வேலை நேரத்தில் சரியான வேலைகள் செய்தாலும்.. நாமும் ஒரு பங்குதாரர்தானே என்கிற எண்ணத்தில் தனிகாசலத்தைக் கேட்காமல் நன்கொடைகளை வாரிக் கொடுப்பார். அப்படி ஒரு பத்தாயிரத்துக்கு செக் போட்டுக் கொடுத்து விட்டார்.

அன்றைக்கு!

தனிகாசலம் வீட்டில் எரிமலையாக வெடித்து விட்டார்.

'பாரு வடிவு! பத்தாயிரத்துக்கு செக் போட்டுக் குடுத்துட்டான். அப்பன் வீட்டு சொத்து மாதிரி..' என்று பொரிந்தார்.

'போகட்டுங்க.. நல்ல காரியத்துக்குத்தானே.. குடுத்தாரு.. புண்ணியந்தானே!' என்றார் வடிவு.

'இவனுக்கு வேலை குடுத்ததே.. புண்ணியத்துக்காக..! இப்ப இவன் என் காசில புண்ணியம் தேடறானாக்கும்' என்றார் அவர் மீண்டும் கடுப்பாக.

'ஏங்க.. அப்படிச் சொல்றீங்க' தங்கராசு அண்ணனும் ஆரம்ப காலத்துல கடுமையாக கஷ்டப்படப் போயித்தானே கம்பெனி வளர்ந்துது.. அதுல வந்த லாபத்துலதானே.. நீங்களும் மத்தத் தொழிலை ஆரம்பிச்சீங்க..' என்றார் வடிவு.

'ஆமா.. இல்லேங்கலே.. நான்.. நான் கேக்கறேன்.. அவனுக்கும் லாபத்துல பங்கு குடுத்துச்சல்ல.. அதை அவன்

உருப்படி.. செஞ்சானா? இப்பவும்.. வாடகை வீட்ல குடியிருக்கான்.. வாய்ப்பத்தான் குடுக்கலாம்.. அவன்தானே பயன்படுத்திக்கனும்?' என்றார்.

கணவனின் வாதத்தில் இருந்த உண்மை அவரை வாயடைக்கச் செய்தது.

'ஏங்க.. நாமளே.. அவருக்கு ஒரு வீடு வாங்கிக் குடுத்தர்லாமா!' என்றார் வடிவு.

'சும்மாயிரு! வடிவு.. அந்த வீட்டையும் ஒண்ணு அடமானம் வைப்பான்.. இல்லே.. வித்துப் போடுவான்.. நேரம் பாத்து நாமளே ஏதாவது செய்யலாம்' என்றார் தணிகாசலம்.

'அதுவும் சரிதான்..' என்று ஏற்றுக் கொண்டார் வடிவு.

'நேரம் பாத்துச் செய்யலாம்..' என்று சொல்லிக் கொண்டிருக்கிற கணவனிடம் பணம், சேரச் சேர அவரது மனப்பான்மையில் ஏற்படுகிற மாற்றங்களை ஒரு கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்த வடிவு ஒரு காரியம் செய்தார்.

தனக்கு நம்பிக்கையானவரும் குடும்பம் சற்றே பெரிதாக உடைய தனது உறவினரைக் கொண்டு வந்து கணவருக்குப் பி.ஏ..வாக அமர்த்தினார்.

நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிடவில்லை யென்றாலும் என்ன நடக்கிறதென்று அடிக்கடி அவர் காதுக்கு வருகிற மாதிரிப் பார்த்துக் கொண்டார்.

சமீப காலமாக அவர் காதில் விழுந்த விஷயங்கள் அவரைக் கவலைக்குள்ளாக்கியது என்றால் எல்லாவற்றையும் தூக்கி அடிக்கிற மாதிரி ஒரு விஷயம் நடக்கப் போகிறது என்பது அப்போது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.



## 14

'வடிவு! நாம சேலத்துக்கு ஷிப்ட் ஆயிடலாம்னு முடிவு செஞ்சுட்டேன்' என்றார் தணிகாசலம் ஒரு நாள்.

'நீங்க எப்படிச் செஞ்சாலும் சரி..' என்றார் வடிவு.

அப்போது ஜெயப்பிரகாஷ் ஏற்காட்டில் ஒரு கான்வெண்ட்டில் ஹாஸ்டலில் இருந்து பள்ளிப் படிப்பை முடித்திருந்தான். கல்லூரிக்குள் நுழைந்திருந்தான்.

இரண்டு மூன்று ஆண்டுகள் ஓடியது. இந்தக் காலகட்டத்தில் தணிகாசலத்துக்கும், தங்கராசுவுக்கும் உறவு நிலைகளில் மாற்றம் ஏற்பட்டிருந்ததை தங்கராசு மிக மெதுவாகப் புரிந்து கொண்டார். என்றாலும் புரிந்து கொண்டதற்குப் பிறகு ஒதுங்கி விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

தன்னை முன்போல் பார்ட்னர் என்று தணிகாசலம் சொல்லிக் கொள்வதில்லையென்று புரிந்து கொண்டார். ஒரு நாள் தன் மனைவியிடம் சொன்னார்.

'தப்புப் பண்ணிட்டேன்.. நவநீதம்! ஃபிரண்ட் கூட கூட்டுப் போட்டிருக்கக் கூடாது..' என்று.

நவநீதம் எரிகிற நெருப்பில் எண்ணெய் விட்டாற்போல் வேறொன்று சொன்னார்.

'அது மட்டும்.. இல்லீங்க.. இந்தப் பாழாப்போன குடிப் பழக்கம் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய எல்லாத்தையும் கெடுத்துப் போடுச்சு' என்று.

தங்கராசு வருத்தத்துடன் ஒத்துக் கொண்டார்.

'ஆனா.. என்ன செய்ய? இனிமே என்னால மீள முடியும்னு தோணலியே.. இனி நான் போய்ப் புதுசா.. எந்தத் தொழிலைத் தொடங்கி என்ன பண்ணுவேன்?' என்றார் புலம்பலாக.

'எனக்கு நம்பிக்கையிருக்குங்க.. வடிவுக்கா ரொம்ப நல்லவங்க அவங்க.. நம்மளைக் கைவிட மாட்டாங்க' என்றாள்.

'ஆமா!' என்றார் பெருமூச்சுடன். ஆனால், முன்போல் தான் வடிவைப் போய்ப் பார்ப்பதைக் கூட தணிகாசலம் விரும்பவில்லையென்பதை அப்போதைக்குத் தன் மனைவியிடம் கூடச் சொல்லவில்லை.

* * *

வடிவு ராமநாதன் சொன்னது முழுமையும் கேட்டு விட்டு யோசனையில் ஆழ்ந்தார்.

'எப்பலருந்தே இப்படி நடக்குது?' என்றார்.

'ரெண்டு மூணு வருஷமாவே.. நடக்குது' என்றார்.

'நீங்க ஏன்.. என்கிட்டே சொல்லலை?' என்றார்.

'மேடம்!' எல்லாக் கம்பெனிகளிலும்.. டாக்ஸ்லிருந்து தப்பிக்கறதுக்காக செலவுக் கணக்குக் காட்டறது சகஜந்தான். ஆனா.. டி அண்ட் டி டிஸ்டில்லரீஸ்ல மட்டும் இது கொஞ்சம் அதிகமாயிருக்கேன்னு நான் நெனச்சதுண்டு. ஆனா, ரெண்டு நாளைக்கு முன்னாடி ஐயா கெஸ்ட் ஹவுஸ்ல வச்சு.. பூஸ்ல உளறினதுப்புறம்தான் எனக்கு விஷயம் புரிஞ்சுது..' என்றார்.

'என்ன சொன்னாரு!'

'யோவ்.. ராமநாதா! டி அண்ட் டியில மட்டும் எப்பவும் லாபம் கம்மியாத் தெரியற மாதிரியே நீ பாத்துக்கணும். ஏன்.. தெரியுதா? அந்தத் தண்டச் சோத்துத் தடிராமன் டி.ஆர்..



இருக்கானே.. அவனுக்குக் கொட்டியழணும்.. வருஷத்துக்கு ஒரு ரெண்டரை லட்சம்.. சம்பளம் மாதிரிக் குடுக்கறதே. வேஸ்ட்.. இப்பல்லாம்.. பதினைந்தாயிரம் குடுத்தா.. புதுசா.. மேனேஜ்மென்ட் படிச்ச பசங்க அருமையாப் பண்றானுங்க. இவன் எதுக்கு?' என்று சொன்னாருங்க' என்றார்.

டி.ஆர். சம்பந்தமா எந்த விதமான விஷயம் நடந்தாலும் தனக்கு சொல்ல வேண்டுமென்று வடிவு சொல்லி வைத்திருந்தார்.

'சரி.. போங்க! இதே மாதிரி.. எது நடந்தாலும்.. எனக்கு சொல்லுங்க..' என்றார்.

'சரிங்கம்மா! ஆனா.. இன்னொண்ணும் சொல்றேனுங்கம்மா.. தொழில்ல ஐயா எப்படிச் சொல்றாரோ.. அப்படியேதாம்மா நான் செஞ்சாகணும்..' என்றார் வருத்தம் தோய்ந்த குரலில்.

'ஆமா..! நீங்க லாயலாத்தான் இருக்கணும். அதுதான்.. நியாயம்.. ஆனா, எனக்கு ஒரு ஹெல்ப்.. செய்ங்க. நியாயமாக் குடுத்தா.. நாம டி.ஆர். அண்ணாவுக்கு எவ்வளவு ஒவ்வொரு வருஷமும் குடுக்க வேண்டியிருக்கும்னு மட்டும் எனக்கு அப்பப்ப சொல்லிருங்க..' என்றார்.

அடுத்த இரண்டாண்டுகளுக்கு அந்த அளவுக்கு சமமான தொகையை தன்னுடைய சொத்துக்களில் இருந்து வரும் வருவாயில் ஒதுக்கி வைத்த வடிவு நகரின் மையப் பகுதியில் ஒரு இடம் வாங்கிப் போட்டு அதில் நாலைந்து ஒட்டு வீடுகள் வாடகை வருகிற மாதிரிக் கட்டி வைத்தார்.

அதற்குப் பக்கத்திலேயே.. ஒரு சிறிய பங்களாவும் வாங்கிப் போட்டார். ஆனால், இது பற்றி எதுவும் கணவனுக்கு சொல்லவில்லை.

எல்லாவற்றையும் மீறி ஒரு விஷயம் அடுத்த இரண்டாண்டு களுக்குள்ளாக நடந்து முடிந்தது.

* * *

'நவநீதா! டி.சி. முன்ன மாதிரி இல்ல. தெரியுமா?' என்று அடிக்கடி சொல்ல ஆரம்பித்தார் தங்கராசு.

''நவநீதா.. பணக்காரங்கன்னா.. அப்படித்தான் முன்ன பின்ன இருப்பாங்க.. நாமதான் நம்ம இடம் தெரிஞ்சு நடந்துக்கணும்'' என்று சமாதானம் சொல்வார்.

உள்ளூர தங்கராசுவின் மனதில் கவலை மண்டியது. 'எதுவும்' சேர்த்து வைக்கவில்லை. இரண்டு பெண் குழந்தை கள் இருக்கிறார்கள். என்ன செய்யப் போகிறோம்!' என்ற கவலையும் சேர்ந்தது.

உடல் நலம் கெட ஆரம்பித்தது. ஒரு முறை லேசாக அட்டாக் வந்தது. ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

கம்பெனி சார்பாக செலவு செய்ய வேண்டி வந்தது. செலவான தொகை பார்த்து தணிகாசலம் கடுப்பானார்.

'ஏய்யா! இவனுக்கெல்லாம் லட்சக் கணக்கில் செலவு செய்யத்தான் கம்பெனி நடத்தறமா?' என்று கத்தினார்.

'மெடிக்கிளெய்ம்ல திரும்பி வந்துடுங்கய்யா' என்று ஆசுவாசப்படுத்தினார் ராமநாதன்.

இரண்டு மாதத்தில் உடல் நலம் தேறியது. மீண்டும் அலுவலகம் செல்ல ஆரம்பித்தார். ஒரே ஒரு முறை ஆஸ்பத்திரியில் வந்து பார்த்துவிட்டுச் சென்ற தணிகாசலம் 'யோவ்! பி.ஏ. இவனுக்கு உடம்பு சரியில்லைன்னு வடிவு கிட்ட யெல்லாம் சொல்லிகிட்டிருக்காதே! அவ வேற போயி ரொம்பத் தாங்க ஆரம்பிச்சுடுவா..' என்று மிரட்டி வைத்து விட்டார்.



வடிவுக்கு அந்த விஷயம் தெரிவிக்கப் படவேயில்லை.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள்,

அதிசயமாகத் தணிகாசலத்திடம் இருந்து போன் வந்தது.

'டேய்! டி.ஆர்! கார் அனுப்பறேன் உன்னைப் பாக்கணும் போல இருக்கு' என்றார்.

தங்கராசு குளிர்ந்து போனார்.

உடனே மகிழ்ச்சியாக மனைவியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

பழைய நாட்களைப் போல இருவரும் மது அருந்தினார்கள்.

'ரொம்ப வேண்டாம்னு சொல்லியிருக்காங்க..' என்று தங்கராசு தயங்க..

'என்னடா! தைரியமாக.. பழைய மாதிரி டி.சி.ன்னு கூப்பிடு..' என்று சிரித்தார்.

கல்லூரி கலாட்டாக்களையெல்லாம் பேசினார்கள். குழந்தைகளைப் பற்றிய தகவல்களைப் பரிமாறினார்கள்.

தங்கராசு உண்மையாகவே மகிழ்ச்சியின் உச்சத்துக்குப் போனார்.

'டேய்! டி.ஆர். இப்ப உனக்கும் உடம்புக்கு முடியறதில்லே... இனிமே நானே நிர்வாகமும் பாத்துக்கறேன்.. உனக்கும் ஏதாவது வழி செய்வோம்.. நீயும் ரெஸ்ட் எடு' என்றார்.

தங்கராசு மேலும் மகிழ்ந்தார்.

'சரி.. நீ எப்படிச் சொல்றயோ! அப்படி!' என்றார்.

'அதனால.. எல்லா நிர்வாகத்தையும்.. என் பேருக்கு.. மாத்தி பேப்பர்ஸ் பிரிப்பேர் பண்ணியிருக்கேன்.. கையெழுத்துப் போட்டுக் குடு..' என்றார்.

தங்கராசு அப்பாவியாய்ச் சிரித்தார். 'டேய் டி.சி. நீயாத் தான் பார்ட்னர்ஷிப்.. குடுத்தே.. நீயே நிர்வாகம் பாத்துக் கறேன்கறே.. நீ எது சொன்னாலும் எனக்கு நல்லதாத்தான் இருக்கும்.. இதுவரைக்கும் நீ கையெழுத்து போடச் சொன்ன இடத்துல.. போட்டிருக்கேன்.. இப்பவும் போடறேன்..' என்று நீட்டிய பேப்பர்களில் எல்லாம் கையெழுத்துப் போட்டார்.

'பாருய்யா! பி.ஏ.! சுய நினைவோட விருப்பத்தோட தான்.. போடறானான்னு எதுக்கும் கேட்டுக்கோ!' என்றார் தனிகாசலம்.

நடப்பது என்னவென்று தெரிந்தும், ராமநாதனால் எதுவும் செய்ய முடியவில்லை.

அன்றிரவே தங்கராசுவை வீட்டில் கொண்டு போய் விடு மாறு காரில் அனுப்பி வைத்தார். பிறகு ராமநாதனிடம் திரும்பி,

'யோவ்! வடிவுகிட்டே எதாவும் போட்டுக் குடுத்தே! வேலைக்கு வேட்டு வச்சிடுவேன்' என்று மிரட்டவும் ராமநாதன் பயந்து போனார்.

* * *

மறுநாள் காலை!

நன்றாகச் சுயநினைவு வந்தபின்தான் தங்கராசுவுக்கு விஷயமே புரிந்தது! அதுவும் எட்டு மணி வாக்கில் ராமநாதன் போன் செய்து,

'ஐயா! நீங்க இனிமே ஆபீஸ்க்கு வரத் தேவையில்லே! ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு சொல்லச் சொன்னாங்க..' என்று சொன்னபோதுதான் முழுமையாகப் புரிந்தது.

அன்று பிற்பகல் ராமநாதன் வந்து 'ஐயா! இந்த மாசச் சம்பளம், போனஸ் எல்லாமாச் சேந்து.. ஒரு ஐம்பதாயிரம்' என்று ஒரு செக்கைக் கொடுத்து விட்டுப் போனார்.



பிறகுதான் மனைவியிடம் சொன்னார். அப்போது கூடத் தன் நண்பனை விட்டுக் கொடுக்க முடியாமல்

'நவநீதா உன்னால இனிமே அலைய முடியாதுடா! பார்ட்னர்ஷிப்பை மாத்தி விட்டுருன்னான் டி.சி. நான் அவனுக்கே எழுதிக் குடுத்துட்டே வந்துட்டேன்' என்றார்.

'நல்ல காரியம் செஞ்சீங்க.. போங்க அவங்க பாத்து.. நம் மனுக்கு ஏதாவது வழி செய்வாங்க பாருங்க' என்றார் நவநீதம்.

தங்கராசுவுக்கும் ஓரத்தில் அப்படி ஒரு நப்பாசை இருந்தது.

அன்று பிற்பகல் சேலத்துக்கு போன் செய்தார். ராமநாதனிடம்,

'ஏன்.. பி.ஏ. சார்! காம்பன்சேஷன் மாதிரி ஏதாவது குடுப் பானான்னு கேட்டுச் சொல்றீங்களா?' என்று தயங்கியபடி கேட்டார்.

'கேட்டுச் சொல்றேன்.. சார்!' என்றார் ராமநாதன்.

இரண்டு மூன்று நாட்கள் இழுத்தடிப்புக்குப் பிறகு ராமநாதன் சொன்னார்.

'சார்! உங்களுக்கு ஆன ஆஸ்பத்திரி செலவு, நீங்க குடுத்த நன்கொடைகளையெல்லாம் உங்க கணக்கிலே கழிச்சுட்ட துக்கப்புறம் பார்த்தா ஒரு லட்ச ரூபாய்தான் தேறுமாம் சார்! அது வேண்ணாக் குடுப்பாரு போலிருக்கு!'' என்று.

தங்கராசு அதிர்ச்சியடைந்தார்.

அன்றைக்கெல்லாம்.. நடைபிணம் போல் நடமாடிக் கொண்டிருந்தார்.

இரண்டு நாட்கள் கழித்து ஒரு லட்ச ரூபாய்க்கு ஒரு டி.டி.யும், அவர் இனிமேல் தனக்கும், கம்பெனிக்கும் சம்பந்தம் இல்லை என்று எழுதிக் கொடுத்த கடிதத்தின் நகலும் வந்து சேர்ந்தது.

உணவு செல்லவில்லை!

உறக்கம் பிடிக்கவில்லை!

இவ்வளவு நாள் உயிருக்குயிராய் பழகிய நண்பனை மனைவியின் முன் விட்டுக் கொடுக்க முடியவில்லை.

அன்றிரவு!

ஹார்ட் அட்டாக் வந்தது.

மாசில் ஹார்ட் அட்டாக்.

'நவநீதா! எப்படியோ குழந்தைகளைக் காப்பாத்து.. இந்த ஒன்றரை லட்சத்தையும் மூணு பேருக்கும் பிரிச்சு பாங்கில போட்டுடு.. ஆமா பாங்கல போட்டுட்டா சோத்துக்கு என்ன செய்வே! ஆண்டவா! ஒரு வீடு கூட வாங்காம விட்டுட்டேனே' என்று புலம்பியவர் நெஞ்சைப் பிடித்தபடி சாய்ந்தார்.

'அவனே.. குடுத்தான்.. அவனே.. எடுத்துகிட்டான்.. நவநீதா!' என்கின்ற வார்த்தைகள்தான் அவரது கடைசி வார்த்தைகளாக அமைந்தன.

செய்தி கேட்டதும் வடிவு இடிந்து போனார். பதறிக் கொண்டு புறப்பட்டார்.

தணிகாசலத்துக்கும் கொஞ்சம் உறுத்தலாகி விட்டதோ என்னவோ. தன் மனைவியிடம்,

'வடிவு! என்னால ரொம்ப நேரம் அங்க இருக்க முடியாது.. நல்ல விதமாகவே அவனைப் பாத்துப் பழகிட்டேன். இப்ப இப்படிப் பாக்கறது கஷ்டமா இருக்கும்.. நீ இருந்து காரியத்தை நடத்திக் குடு. செலவைப் பத்திக் கவலைப் படாதே..' என்றார்.

வந்து சற்று நேரம் இருந்து விட்டுக் கிளம்பி விட்டார்.

வடிவு முழுமையாக இருந்து காரியம் முழுவதையும் மேற்பார்வை பார்த்தார்.

வரிசையாக இளம் குழந்தைகளை வைத்துக் கொண்டு சொந்த வீடு கூட இல்லாமல் இருக்கிற நிலை இப்போதுதான் அவருக்குப் புரிந்தது.



இடையில் உறவு விட்டுப் போனதற்குப் பிறகு அவர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டது எவ்வளவு மடத்தனம் என்று வருந்தினார்.

உறவுக்காரர்கள் போனதற்குப் பிறகு 'ஐயோ! வடிவு அண்ணி! எப்பவும் பணத்தைப் பெருசா நினைக்கலையே! தத்துவம் தானே பேசுவாரு யாரு வந்து எதைக் கேட்டாலும் கையிலிருக்கிறதை அள்ளிக் குடுத்துடுவாரே.. சாகறப்பக் கூட.. 'நவநீதா அவனே குடுத்தான்.. அவனே எடுத்துகிட்டான்னு' தத்துவம் இல்லே பேசறாரு' என்று வடிவைக் கட்டிக் கொண்டு அழுதார்.

வடிவும் சேர்ந்து கண்ணீர் விட்டார்.

'நவநீதா! நீங்க இப்படியே அழுதீங்கன்னா உடம்புக் காகாது.. கொஞ்சமாவது ரெஸ்ட்.. எடுங்க!' என்று ஆறுதல் சொல்லிவிட்டுத் தங்கள் கெஸ்ட் ஹவுஸில் இரவு தங்கினார்.

மனதுக்குள் ஏதோ நெருடிக் கொண்டே இருந்தது.

'அவனே குடுத்தான்.. அவனே எடுத்துகிட்டான்..' என்ற சொற்களின் பொருள் சட்டென்று தனக்குப் புரிந்து விட்டாற் போல் பொறி தட்டியது.

கவலையில் ஆழ்ந்து விட்டார்.

## 15

'அம்மா! மூணு பொண்ணுங்க எனக்கு அடுத்தடுத்து வரிசையாகக் கல்யாணத்துக்கு நிக்குதுங்க.. இந்த ஐம்பத் தஞ்சு வயசுக்கு மேலே நான் புதுசா எங்கே போய் வேலை

தேடுவேன்.. இந்த நிலைமையிலே நடக்கற அநியாயத்தை நான் எப்படித் தடுக்க முடியும்?' என்றார் ராமநாதன் தழுதழுத்த குரலில்.

வெகு கோபமாக இருந்த வடிவு சற்றே தணிந்தார்.

'இருந்தாலும்.. இப்படி ஒன்னு நடந்தவுடனே.. எனக்குத் தெரிவிச்சிருந்தா.. அண்ணன் சாகாமயாவது தடுத்திருக்கலாமே!' என்றார்.

'அம்மா! நீங்களே அன்றைக்குச் சொன்னீங்க.. நீங்க முதலாளிக்கு லாயலா நடந்துக்கனும்னு.. அதைத்தான் செஞ்சேன்.. அது மட்டுமல்ல.. அடுத்த ரெண்டு நாளும் எங்கே நான் ஏதாவது உங்ககிட்டே வந்து சொல்லிடுவேனோன்னு ஐயா கண்காணிச்சுகிட்டே இருந்தாரு.. மிரட்டியும் போட்டாரு! இப்படி ஆளுக்கே மோசம் வரும்னு நான் நெனக்கலீங்களே' என்றார்.

வடிவு நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

'இனி.. என்ன பேசி என்ன ஆகுது..! போன உயிர் வரவா போகுது?' என்றார் வருத்தத்துடன்.

'சரி.. நவநீதாகிட்டே என்ன பணம் இருக்குன்னு தெரிஞ்சு ஏதாவது வழி செய்யப் பாக்கறேன்.. நீங்க போங்க..' என்று அனுப்பி வைத்தார்.

யோசனையில் ஆழ்ந்தார்.

* * *

பதினாறு நாட்கள் முடிகிற வரை அவ்வப்போது போய் வந்தார்.

பிறந்த வீட்டு மனிதர்களை வைத்துக் கொண்டு கணவருக்குத் தெரியாமல் சில ஏற்பாடுகளைச் செய்தார்.



இந்த மாதிரி நேரம் என்பதால் தணிகாசலமும் அவர் போய் வருவதை பெரிதாகத் தடுக்கவில்லை.

பதினாறுநாள் முடிந்த பின் ஒரு நாள் போய் நவநீதத்தைப் பார்த்துத் தான் வாங்கியிருந்த அந்த வீட்டுக்கு அழைத்துப் போனார். நவநீதத்தின் பெயருக்கு மாற்றி எழுதிய பத்திரத்தைக் கையில் கொடுத்தார்.

'நவநீதா.. நல்ல.. ஏரியாவிலே இருக்கற வீடு.. அஞ்சு போர்ஷன் இருக்கு.. ஒன்னுல நீ குடியிருந்துக்கோ.. நாலு போர்ஷனை வாடகைக்கு விடு. பழைய காலத்து மாதிரி ஒரு ரூம் மட்டும் மாடி மாதிரியிருக்கு.. வர்ற வாடகையை வச்சு வாழ்க்கை நடத்து..' என்றார்.

'அக்கா! கடைசியா ஒரு ஒன்றரை லட்சம் மிஞ்சியிருக்கு..' என்றார் நவநீதா.

'மூணு குழந்தைங்க பேர்லயும் போடு' என்றார்.

'சரிங்கக்கா.. நான் இவர்கிட்டே சொல்லிகிட்டேயிருந்தேன். வடிவுக்கா.. நம்மளயும் கைவிட மாட்டாங்கன்னு..' என்றார் நன்றியுடன்.

'அதெல்லாம்.. சரிதான். ஆனா, ஒரு விஷயம் நீ எனக்கு சத்தியம் செய்து குடுக்கனும்..' என்றார்.

'சொல்லுங்கக்கா..' என்றார் நவநீதம். 'நான்தான்.. வீடு வாங்கிக் குடுத்துருக்கேன்னு எங்க வீட்டுக்காரருக்குத் தெரியக் கூடாது..' என்றார் வடிவு.

நவநீதத்துக்குப் புரியவில்லை. 'அதுவும் சரிதாங்க்கா.. ஆபீஸ்ல வேலை செய்யற எல்லாரும்.. வாங்கிக் குடுக்கன்னு ஆரம்பிச்சா.. முதலாளி எங்கே.. போவாரு!' என்று சமாதானம் சொல்லிக் கொள்கிற அந்த அப்பாவியை வடிவு பரிதாபமாகப் பார்த்தார்.

அன்றிரவு!

தன் கணவனிடம்.

'நிஜ வாழ்க்கையில கதையில வர்றதை விட நல்லவர் களும் இருக்காங்க.. வில்லத்தனமானவர்களும் இருக் காங்க.. இல்லே!' என்றார் வடிவு.

'ஏன்.. அப்படிச் சொல்றே!' என்றார்.

'இல்லே! டி.ஆர். அண்ணன் ரொம்ப நல்லவங்க.. இல்லே!' என்றார்.

'நல்லவனா.. இருந்தா மட்டும் போதுமா? ஏமாளியா இருக்கக் கூடாதில்லே' என்றார் தணிகாசலம்.

'ஏமாளியாக் கூட இருக்கலாங்க.. துரோகியாத்தான் இருக்கக் கூடாதுங்க' என்றார் வடிவு. ஒரு மாதிரிக் குரலில்.

தணிகாசலம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.

'என்ன.. திடீர்னு இப்படிப் பேசறே! செத்துப் போனவனைப் பத்திப் பேசி என்னத்துக்கு ஆகுது?' என்றார்.

'ஆமா.. இனிமே.. அவரைப் பத்திப் பேசி என்ன ஆகப் போகுது' என்றார் வடிவு கசப்பான புன்னகையுடன். அவர் உள்ளத்தின் ஓரத்தில கணவர் இனிமேலாவது அந்தக் குடும்பத்துக்கு ஏதாவது செய்யக் கூடுமென்னும் நப்பாசை இருந்தது.

தன் கணவர் அதற்கு முயற்சிக்கவே இல்லை என்பது அவருக்குள் ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியது.

அவர் குடும்பத்துக்கு தன் கணவன் செய்த துரோகம் தன் குடும்பத்தை பாதிக்காமல் இருக்க வேண்டுமே என்று வேண்டாத தெய்வங்களையெல்லாம்.. வேண்டினார். ஆனால் தெய்வ சக்தி நின்று நிதானமாகத்தான் தண் டனையைத் தரும் என்பதைப் புரிந்து கொண்டார்.

* * *



ஒரு வருடம் கூட முடியவில்லை.

எங்கேயோ காரில் போய் விட்டு வருகையில் இளநீர் குடிப்பதற்காக இறங்கி நின்று கொண்டிருந்தார் தணிகாசலம்.

அதே நேரம்,

பைக்கில் வந்த ஒருவன் பைக்கை நிறுத்த லேசாக அவர் முதுகில் இடித்தாற்போல் இருந்தது.

அவனும் 'சாரி' சொன்னான்.

அவரும் சரியென்று நகர்ந்தார். இரண்டு மணி நேரத் துக்குள்ளாக முதுகுத் தண்டில் வலி அதிகமாகியது.

சேலத்தின் பெரிய ஆஸ்பத்திரியில் அட்மிட் செய் தார்கள். முதுகுத் தண்டில் அடி என்றார்கள்.

ஆறு மாதங்கள் படுக்கையில் இருக்க நேர்ந்தது.

அதுவரையில் இருந்த மனோதைரியம் குலைந்து போனது.

ஆறு மாதம் கழித்து அலுவலகம் வர ஆரம்பித்தார். ஆனால் பழைய மாதிரி அலட்டிக் கொள்ளாமல் ஆளுமை யோடு விஷயங்களைக் கையாள்கிற திறமை குறைந்து போனது.

உள்ளுக்குள் ஏதோ உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது. டென்ஷன் ஏறியது. செக் அப்புக்குப் போனார்.

சுகர் என்றார்கள், பி.பி. என்றார்கள்.

வடிவும் அவரது உடல் நலனைப் பாதுகாக்க வேண்டிப் பார்த்துப் பார்த்து எல்லாம் செய்தார். என்றாலும் உடல்நிலை பாதிக்கப்பட்டது.

* * *

'டேய்! பாத்து.. பாத்துடா.. பாத்து இறங்கு..' என்று குரல் கொடுத்தான் தங்கராசு.

'இர்றா.. ராசு.. சத்தம் போடாதே!' என்று பக்கத்துக் காம்பவுண்டில் பொத்தென்று குதித்தான் தனிகாசலம்..

தொப்பென்று நிஜமாகவே கட்டிலில் இருந்து விழுந்த தனிகாசலம் திடுக்கிட்டு விழித்தார்.

கனவு..! எப்போதோ.. அவர்கள் கல்லூரி நாட்களில் அவர்கள் கல்லூரிக்கு அருகில் மதில் சுவரில் ஏறிக் குதித்து மாங்காய் பறித்த அனுபவம் இப்படிப் படம் போல் மனதில் விரிகிறதே.

உள்ளே தங்கராசுவின் நினைவு ஊன்றியிருக்கிறதோ? மனம் பலகீனமடைந்திருந்த அந்த இரவில் தங்கராசுவின் சாவு அவரைத் தாக்கியது.

எழுந்து படுக்கையில் படுத்தார். முகமெல்லாம் வேர்த்துப் போனது.

'வடிவு!' என்று அழைக்க முயற்சித்தார். குரலே எழ வில்லை. எழுந்திருக்க முயற்சித்தும் முடியவில்லை.

இரவெல்லாம் அவதிப்பட்டவர் அதிகாலை நேரம் மயங்கி விட்டார்.

அவரது கைபட்டு ஏதோ விழுந்த சத்தம் கேட்டு வடிவு அதிர்ந்து போய் எழுந்து பார்க்கையில் அவரது மயக்கம் பார்த்தார். உடனடியாக மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றார்கள்.

'ஸ்ட்ரோக்' என்றார்கள்.

''ஸ்ட்ரோக்' ஏற்பட்டு உடனடியாகக் கொண்டு வந்திருந் தால் சரி செய்திருக்கலாம். இப்போது மெதுவாகத்தான் குணமாகும்' என்றார்கள்.



வடிவு ஜெயப்பிரகாஷைத் துணைக்கு வைத்துக் கொண்டு அலுவலகத்தை கவனித்துக் கொண்டார்.

ராமநாதனை அழைத்து 'பாத்தீங்களா' 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே விளையும்ன்னு பெரியவங்க சொன்னது இப்பப் புரிஞ்சுதா?' அதனால துரோகத்துக்கு இடம் குடுக்காம, தம்பிக்குத் தொழில் பழக்கி விடுங்க..' என்றார்.

என்ன அக்கறையாகக் கவனித்த போதும் அடுத்த ஆறு மாதங்களில் தனிகாசலத்துக்கு உடல் நலிந்தே போனது.

முடிவும் தவிர்க்க முடியாததாக ஆகிப் போனது.

அம்மாவின் விசுவரூபத்தை அப்போதுதான் பார்த்தான் ஜெயப்பிரகாஷ்.

'அம்மா! நான் படிப்பை நிறுத்திர்றேன்' என்றான்.

'வேண்டாம்.. இன்னும் ஒரே வருஷம் போஸ்ட் கிராஜு வேஷன் முடிஞ்சுடும்.. அப்புறம் நீ வா.. அது வரைக்கும் நா.. தாக்குப் பிடிக்கறேன்..' என்றார்.

குடும்ப வக்கீலின் ஆலோசனையுடன் மானேஜரின் உதவியுடன் ஓரளவு திறமையாகவே நிர்வாகம் செய்தார். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் பிடிவாதமாக நின்றார்.

'கோயமுத்தூர் கம்பெனியை மூடிரலாம்' என்றார்.

ஜெயப்பிரகாஷுக்கும் அது சரியென்றே பட்டது. விற் றார்கள். வந்த தொகையில் முப்பது சதவீதத்தை டி.ஆர். குடும்பத்துக்கு ஒதுக்க வேண்டும் என்றார்.

ஜெயப்பிரகாஷ் விளக்கம் கேட்டபோதுதான் எல்லா வற்றையும் சொன்னார்.

ஜெயப்பிரகாஷ் அதிர்ந்து போனான்.

'சரிங்கம்மா! முழுத் தொகையும் வேண்ணாலும் குடுத் தர்லாம்..' என்றான்.

'அப்படியெல்லாம்.. வேண்டாம்.. அவர்களுக்குச் சேர வேண்டியதை மட்டும் குடுத்துரு..' என்றார்.

பிறகும் சற்று யோசித்தார்.

'வேண்டாம்.. இப்பக் குடுத்தா அப்பாவைக் காட்டிக் குடுத்த மாதிரி ஆயிடும்.. அவசியப் படும்போது குடுத்தர் லாம்..' என்றார்.

அதிலிருந்து கிடைத்த பணத்தை வைத்து ஜெயப்பிரகாஷ் ஒரு ஏஜென்சி ஆரம்பித்தான். பள்ளிகளுக்கும், கல்லூரி களுக்கும் லாபரட்டரிகளுக்குத் தேவையான ஆசிட், மற்றும் இரசாயனப் பவுடர்களின் விநியோகம் செய்வது என்பது தான் பிறகு மெதுவாக மற்ற இயந்திரங்களின் ஏஜென்சிக்குத் தாவினான்.

நான்கு லட்சம் ஐந்து லட்சம் என்று விற்கக் கூடிய இயந்திரங்கள், ஸ்பெக்ட்ரோ மீட்டர்கள் விநியோகம் போன்ற பெரிய லெவலுக்கு வந்து நின்றான்.

அம்மா மகிழ்ச்சியடைந்தார்.

* * *

ஒரு நாள்!

தம்பி தங்கைகளுக்கு இணையாக விளையாடிக் கொண் டிருந்தான்.

அப்போது அம்மா அழைத்தார்.

'தம்பி.. இப்ப நான் சொல்றதை மனசுல வச்சுக்க.. நீதான் குடும்பத் தலைவன்.. நீயே அப்பாவா இருந்தா என்ன உரிமை வேண்ணா எடுத்துக்கலாம்.. ஆனா, விளையாடற



அளவுக்கு இறங்கினா பயம் போயிடும் கொஞ்சம் ஸ்ட்ரிக்டா இரு..' என்றார்.

அன்றைக்கு முகமூடியை மாட்டியவன்தான், இன்னொரு முறை அம்மா சொன்னார். 'தம்பி! உன் பேர்ல.. மட்டுமில்ல.. உன் வாழ்க்கையிலயும் ஜெயம் இருக்கணும். நாணயமா இருக்கணும். ஜெயப்பிரகாஷ் சொன்னா.. சொன்ன வார்த்தையைக் காப்பாத்துவான்னு இருக்கணும். அது மட்டுமில்ல டி.ஆர். அண்ணன் மாதிரி ஏமாந்துரவும் கூடாது. உனக்கு வர வேண்டிய காசில கரெக்டா இரு.. அதே சமயம்.. நீ குடுக்க வேண்டியதையும் கரெக்டாக் குடு' என்றார்.

அவன் அம்மா சொன்னதையெல்லாம் புரிந்து கொண்டான்.

வேலையாட்களிடம், தொழிலில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று எளிதில் கற்றுக் கொண்டான்.

அவர்களது எக்ஸ்போர்ட் யூனிட்டும் வளர்ந்தது. ஜெயப் பிரகாஷின் யூனிட்டுகளில் பொருள் வாங்கினால் தரமாக இருக்கும் என்ற நம்பிக்கை சேலத்தில் உறுதியாக ஏற்பட்டது.

இருபத்தைந்து வயதிலேயே சேலத்தின் முக்கியப் பிரமுகராக மாறினான்.

கோவையில் அவனது நண்பன் மகேஷும் நன்கு வளர்ச்சியடைந்தான். அவனிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான். 'தங்கைக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டுத்தான் கல்யாணம். இருபத்தொன்பது வயசில் செய்து கொள்ளலாம்னு இருக்கேன்' என்பான்.

அப்போதுதான்..!

அந்தக் கல்யாணத்தில் சுபாஷிணியைப் பார்த்தான்.

எப்போதும் பெண்களைத் திரும்பிப் பாராத அவன் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து விட்டாள்.

தங்கராக அண்ணனின் மகள் என்று அம்மா அறிமுகப் படுத்தினதும் அதிர்ச்சி ஒரு பக்கம்.. மகிழ்ச்சி ஒரு பக்கம்.. யோசனையில் ஆழ்ந்தான்.

## 16

கோவையில் வசித்தபோது அம்மாவுக்கு மிகவும் பழக்கமானவர்களாம். அம்மா வருந்தி வருந்தி அழைத்த தனால் முதல் நாள் இரவே அந்தத் திருமணத்துக்கு அவன் போயிருந்தான்.

நிறைய வேலைகளை விட்டு விட்டு அவன் வந்திருந்த தால் ஒருவித எரிச்சலில் இருந்தான். ஆனால், மகேஷ் வரவும் எரிச்சல் எல்லாம் மாறிப் போனது.

'என்னடா.. கல்யாணம் ஆனவுடனே எங்களையெல்லாம் மறந்தாச்சா?' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'இல்லடா.. உனக்குத்தான் தெரியுமே! குண்டு வெடிப் புக்கு அப்புறம் முடங்கிக் கிடந்த ரியல் எஸ்டேட் எல்லாம் இப்பத்தான் சூடு பிடிச்சிருக்கு. மறுபடியும் அபார்ட் மென்ட்ஸ் எல்லாம் போக ஆரம்பிச்சாச்சுடா.. வேலை நிறைய..' என்றான்.

'குட்.. குட்!' எப்படியோ நல்லா இருந்தாச் சரிடா!' என்றான்.

'பாத்தே.. ஐஞ்சாறு மாசமாச்சேடா!' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'ஆமடா.. இப்பக் கூட நான் இந்தக் கல்யாணத்துக்கு வர்றதாயில்லை. அம்மாதான் போன் பண்ணிச் சொன் னாங்க.. நீ வந்திருக்கேன்னு.. அதான் வந்தேன்..' என்றான்.



இரண்டு பேரும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உறவினர்களின் உபசரிப்புக்களில் இருந்து தப்பித்துக் கொண்டு ஒருபுறமாகச் சேர்களில் அமர்ந்தபடி ஓய்வாக உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போதுதான் பெண்கள் குழு ஒன்று கடந்து போனது.

'ம்.. பட்டாம் பூச்சிகளையெல்லாம் ஜாலியாக ரசிச்ச காலமெல்லாம் போச்சு..' என்று மகேஷ் போலியாகப் பெருமூச்சு விடவும் ஜெயப்பிரகாஷ் சிரித்தான்.

'மேடம் கிட்டே.. சொல்லிடவா?' என்றான்.

'மேடம்தான் அம்மா வீட்டுக்குப் போயாச்சுடா.. ஃபாமிலி வேலை இருக்காங்க..' என்றான் மகேஷ் லேசாகச் சிவந்த முகத்துடன்.

'அட்றா.. சக்கை!' என்று சிரித்தான் ஜெயப்பிரகாஷ்.

'நீயெப்ப.. சிக்கிக்கப் போறதா உத்தேசம்?' என்றான் மகேஷ்.

'இப்போதைக்கு இல்லைடா!' என்றான் அவன்.

பேசிக் கொண்டே கண்களைச் சுழல விட்ட போதுதான் அவன் பார்வை சுபாஷிணியின் மேல் படிந்தது.

ஆடம்பரமில்லாத அலங்காரம். ஆனால் முகத்திலே ஒரு அறிவுக்களை, சிரிப்பில் ஒரு வசீகரம். நிற்கிற விதத்தில் ஒரு கம்பீரம். அவன் மனம் அவள் தோற்றத்தில் லயித்தது.

பார்வை அவளை விட்டு நகர மறுத்தது.

மகேஷ் கண்டு கொண்டான். அதைக் கண்ட ஜெயப்பிர காஷ் லேசாக முகம் சிவக்க,

'அது யார்.. அந்தப் பொண்ணு?' ரொம்ப ஸ்மார் இல்லே!' என்றான்.

'அடடே! அது சுபா.. இல்லே.. சுபாவும் ரம்யாவும் நம் வைஃப்புக்கு ஜூனியர்ஸ்ப்பா..' பயங்கர மூளைப்ப

அந்தப் பொண்ணு ரொம்ப பிரில்லியண்ட்ன்னு நம்ம சுலோசனா சொல்வாப்லே!' என்றான்.

'ஓ..!' என்றான் ஜெயப்பிரகாஷ்.

மகேஷ் குறும்பாகச் சிரித்தபடி 'என்னடா.. பாத்தர்லாமா?' என்றான்.

'அடப்போடா.. சும்மா ஒரு பொண்ணு நல்லாருக்குன்னு சொன்னா.. உடனே கல்யாணம் பேசிர்றதா?' என்றான்.

அப்போதைக்கு அவனும் கூட அப்படித்தான் நினைத்தான்.

ஆனால்.. இரவில்!

முதன் முதலாகத் தானும் ஒரு இளைஞன் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியபோது சற்றே திகைத்துப் போனான்.

இதுவரையிலும் அப்பாவுக்கு உடல் நலம் இல்லாமற் போன நிலையில் தொழிலில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சியைச் சரிக்கட்டுவதே அவனுக்குச் சரியாக இருந்தது.

அன்றைக்கு மகேஷிடம் கூட சொன்னான் பெரிய மல்டி நேஷனல் கம்பெனிகளோடு தொடர்பு வைத்துக் கொள்கிற அளவுக்கு முன்னேற வேண்டும் என்று.

'டேய்.. இப்ப.. எதிலெதில டீலிங் செய்யறே?' என்றான் மகேஷ்.

'டேய்.. நான் ஆரம்பிக்கும்போது பொட்டென்ஷியோ மீட்டர், டிஜிட்டல் பொட்டென்ஷியோ.. மீட்டர்.. கண்டக்டிவிடி மீட்டர் இப்படி டிஸ்ட்ரிப்யூஷன்தான் ஆரம்பிச்சேன். ஆனா.. இப்ப.. ஸ்டெக்ட்ரோ மீட்டர், அதிலயும் ஐ.ஆர். யு.வின்னு போயாச்சு. லட்சத்திலிருந்து கோடிக்குப் போயாச்சுடா இன்வெஸ்ட்மெண்ட்ஸ்' என்றான்.

'குட்... குட்.. வெரிகுட்' என்றான் மகேஷ்.



'என்னத்தைடா.. வெரிகுட் போடறே. ஹலெட் பக்கார்ட்ன்னு ஒரு யு.எஸ். பேஸ்ட் கம்பெனி இருக்கு தெரியுமா? ஷிமாட்சுன்னு ஜப்பான் கம்பெனி அந்த லெவலுக்குப் போகணும்டா..' என்றான்.

'அதெல்லாம்.. போலாம்.. போலாம்.. அதுக்கு முதல்ல.. ஒரு பொண்ணைப் பார்த்து.. ஏன் இந்தப் பொண்ணையே வேணும்னாலும் சொல்லு. பண்ணிகிட்டு முதல்ல ஹனிமூனுக்குப் போய்ட்டு வா..' என்றான் மகேஷ்.

'அட.. எம்ப்பா.. நீ.. வேற?' என்றான் எரிச்சலுற்றவன் போல.

'இல்லடா.. நான்.. சொல்றதைக் கேளு.. இதுதான் ரைட் டைம்.. உனக்குக் கல்யாணமாகி உன் வேலையை முடிச்சேன்னா.. அப்புறம் சிஸ்டர். மேரேஜ் பாக்கலாமில்லே..' என்றான்.

ஜெயப்பிரகாஷ் லாவகமாக வேறு பேச்சுக்குத் தாவினான்.

அதை இப்போது நினைத்துக் கொண்டான். இந்தப் பெண் தன்னைத் தொல்லை செய்கிறாள் என்பது புரிந்தது.

இன்றைக்கு மாலை அவளைப் பார்த்ததிலிருந்து தொழில் பற்றிய சிந்தனையோ, வேறு எந்த நினைவோ வரவில்லை. மாறாக அந்தப் பெண்ணின் முகமே மனத்துக்குள் வந்து போய்க் கொண்டிருக்கிறதே.. ஏன்? என்று எண்ணிக் கொண்டான்.

உறங்குவதற்கு வெகு நேரமாயிற்று..

* * *

மறுநாள் காலை!

விசிலடித்தபடி புறப்பட்டுக் கொண்டிருக்கிற மகனை வடிவு கூட ஆச்சரியமாகப் பார்த்தார்.

லேசான புன்னகை. முகத்திலே ஒரு மலர்ச்சி. 'வரமாட்டேன்' என்று மறுத்த கல்யாணத்திற்குக் காலையில் வருகிறேன் என்றபோதே அம்மாவுக்கு மகிழ்ச்சி.

இப்போது மகனுக்குள் ஏற்படுகிற மாற்றங்களை அந்தத் தாயால் சட்டென்று அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

எனவே அவரே பேச்சை ஆரம்பித்தார்.

'ஏம்ப்பா.. கோயமுத்தூர்லயே உனக்குப் பொண்ணு பாத்தர்லாமா?' என்றார்.

எப்போதும் கல்யாணப் பேச்செடுத்தால் 'ஆமா.. இப்ப அதுதான் ரொம்ப முக்கியமாக்கும்' என்று எரிச்சலாகிறவன் இன்று அப்படியெல்லாம் எரிச்சல் படாமல் லேசாகப் புன்னகைத்தான்.

'ஏம்மா.. இருபத்தைஞ்சு வயசு ரொம்ப இயர்லியரா தோணலையாம்மா!' என்றான்.

'இல்லப்பா.. நம்ம வீட்டைப் பொறுத்தவரை அதுதான்.. கரெக்டான வயசு.. உன் கல்யாணம் முடிஞ்சு.. நீ செட்டி லானா அப்புறம்.. ரேகாவுக்குப் பாக்கலாமே..?' என்றார்.

அம்மா.. புன்னகைத்தார். மகன் மறுக்கவில்லையென் பதைக் கண்டு கொண்டார்.

கல்யாண வீட்டுக்குப் போனவுடன் ஜெயப்பிரகாஷுக்கு இன்னொரு ஆச்சரியம் காத்திருந்தது.

மகேஷும் வந்திருந்தான்.

'என்னடா.. ஆச்சரியம்.. காலையில வரமாட்டேன்னு சொன்னே?' என்று ஜெயப்பிரகாஷ் சொல்ல.

'அது ஒண்ணுமில்லைடா..! நேத்து ஆரம்பிச்ச நல்ல காரியத்தை இன்னைக்கு முடிச்சர்லாமேன்னுதான்..' என்றான்.

'எது?..' என்று ஜெயப்பிரகாஷ் புரியாமல் பார்க்க..

'அதாண்டா.. மேட்ச் மேக்கிங்..' எனவும் ஜெயப்பிரகாஷ் முகம் சிவந்தது.



'அடப்போடா! நா என்னவோன்னு நினைச்சேன்..!' என்றான்.

சற்று நேரம் உறவினர்களோடு அளவளாவிக் கொண் டிருந்தான். மகேஷ் வேகமாக வந்தான்.

'டேய்.. ஜெய்!' என்றான்.

'என்னடா!' என்றான்.

'வா.. வா.. நான் உனக்கு ஒரு அருமையான இடம் பாத்து வச்சிருக்கேன்' என்று இழுத்துப் போனான்.

இவர்கள் முதல் வரிசைக்குப் போகவும் அங்கிருந்தவர் களே பரபரப்புடன் வரவேற்றார்கள்.

அமர்த்தலாக அமர்ந்தார்கள்.

அப்போதுதான் மகேஷ் கிசுகிசுத்தான்.

'டேய்! கல்யாணப் பொண்ணு கல்பனாவுக்கு இந்தப் பொண்ணு ஒண்ணுவிட்ட சிஸ்டராம். பாரு.. தோழியா நிக்குது..' என்று வெடிச் சிரிப்புச் சிரித்தான்.

ஜெயப்பிரகாஷ் அமர்த்தலாகக் கேட்டுக் கொண்டான்.

'ஐயா.. நேத்து சரியாத் தூங்கலை போலிருக்கு..' என்று கலாட்டா செய்ய ஜெயப்பிரகாஷ் திணறிப் போனான்.

எப்படி இவன் கண்டு பிடித்தான் என்று யோசிக்கையி லேயே அவன்.

'எல்லாம்.. அனுபவம்தான்.. சுலோவைப் பொண்ணு பாத்துட்டு வந்த அன்னைக்கு.. நானும் இதே நிலைமை யிலதான் இருந்தேன்' என்றான்.

அமர்த்தலாக அமர்ந்தபடி முழுமையாக ஆழ்ந்து சுபாஷிணி யின் நடை உடை பாவனைகளையெல்லாம் கவனித்தவனின் மனம் அவனுக்குச் சொன்னது.

'உனக்கென்று வாய்க்கப் போகிறவள் இவள்தான்..' என்று.

உள்ளத்தில் ஒரு பரவசம் ஓடப் பார்த்துக் கொண்டிருந்தான்.

* * *

கார் போய்க் கொண்டிருந்தது.

'ஏம்மா.. அந்தப் பொண்ணு டி.ஆர். சாரோட.. பொண்ணா?' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'ஆமாப்பா..! உனக்குப் பிடிச்சிருந்தா சொல்லு.. நான் போய்ப் பொண்ணு கேட்கறேன்..' என்றார் வடிவு.

அவன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. தெருவைப் பார்த்தபடி மௌனமாகக் காரோட்டினான்.

அம்மா அறிமுகப்படுத்தியதற்குப் பின் இரண்டு விதமான சிந்தனைகளும் தோன்றிக் கொண்டிருந்தன. அதை இப்போது வெளியிட்டான்.

'ஏம்மா.. நம்ம அப்பா செஞ்ச காரியத்துக்கு பொண்ணு குடுப்பாங்களா?' என்றான்.

அம்மா அவனைத் திரும்பிப் பார்த்தார். பிறகு,

'இல்லப்பா.. பிரகாஷ் அவங்களுக்கு விஷயம் தெரியாது.. நானே அதைச் சரி பண்ணிட்டேன்..' என்றார்.

அவன் பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

'அம்மா.. அடிச்ச இடத்துக்கு மருந்து போட்டுட்டேன்னு.. சொல்றீங்க.. ஆனா, அடிச்சப்ப.. வலிச்சிருக்கும்தானே?' என்றான்.

'வலியா? ஒரு உயிரே போயிருச்சப்பா!' என்றார் அம்மா வேதனையான குரலில்.

இருவரும் சற்று நேரம் மௌனமாகவே கழித்தார்கள்.



'ஆனா.. நா இதை எதையுமே அவர்களுக்குக் காட்டிக்கலை. சொல்லவும்.. இல்லை' என்றவர் ஒரு நிமிடம் கழித்து,

'பிரகாஷ்.. இது இப்ப வேற மாதிரி எனக்குத் தோணுது. எத்தனையோ பொண்ணுங்க அந்தக் கல்யாண மண்டபத்துல இருந்தாங்க. இந்தப் பொண்ணைத்தானே உனக்குப் பிடிச்சிருக்கு. கடவுள்.. ஏதோ.. கணக்குப் போடறாருன்னு தோணுதுப்பா.. பொண்ணு கேட்கலாம்..' என்றார்.

அவன் ஆமோதிக்கவில்லை. ஆனால் மறுக்கவும் இல்லை.

அதற்குப் பிறகுதான் அம்மா பெண் கேட்டார். விஷயங்கள் வேகமாக முடிந்தன என்று அவன் மகிழ்கையிலேயே சுபாஷிணி அவனைச் சந்திக்க வேண்டுமென்றாள்.

அவள் மனதில் படிப்பில் மேல் தான் நாட்டம் அதிகம் என்று தெரியவும் 'சரி' இப்ப என்ன? இன்னும் ரெண்டு வருஷம்தானே! காத்திருந்தால் போகிறது' என்று முடிவு கட்டிக் கொண்டான்.

இன்னொரு எண்ணமும் அவன் மனதில் அப்போது தோன்றியிருந்தது. அதை இப்போது சொன்னான். 'முழுசையும்.. உன்கிட்ட சொல்லிடணும்.. சுபா.. அதற்கப்புறம்தான் உன்னைத் தொடறதுங்கற முடிவுதான்.. அது' என்று சொல்லி விட்டு சற்று நேரம் தரையைப் பார்த்துக் கொண்டிருந்த ஜெயப்பிரகாஷ் நிமிர்ந்து அவள் முகம் பார்த்தவன் திகைத்துப் போனான்.

மூக்கு நுனி சிவக்கத் தன் கோபத்தை அடக்கிக் கொள்ள அவள் போராடுவது தெரிந்தது.

வெறித்துப் பார்த்தபடி அமர்ந்து இருந்தாள்.

# 17

சுபாஷிணி சட்டென்று தன் அறைக்குப் போய் விட்டாள்.

ஓரிரு நிமிடங்கள் கழித்து அவனும் தொடர்ந்தான். ஜன்னல் கம்பியைப் பிடித்தபடி அவள் வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

'சுபா!' என்றான்.

குரல் கம்மிப் போயிருந்தது.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

'ஏழைங்கதானே? வசதியில்லாதவங்கதானேன்னு.. மானத்தை விலை பேசிட்டிங்கதானே?' என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

ஒரு நிமிடம் அவன் துடித்துப் போனான்.

'சுபா! ப்ளீஸ்.. அண்டர்ஸ்டான்ட்.. நா உன்னை முதல் முதலாப் பார்த்தப்பயோ, உன்னை லைக் பண்ணினப்பவோ நீ டி.ஆர். அங்கிளோட பொண்ணுன்னு எனக்குத் தெரியாது!' என்றான்.

அவள் எதுவும் பேசாமல் நின்றாள்.

'ஆனா, தெரிஞ்சதுக்கப்புறம்.. அப்பாவோட தப்புக்களைத் திருத்திக்கறதுக்குக் கடவுளா ஒரு வாய்ப்புக் குடுத்திருக்காருன்னு தோணிருச்சு..' என்றான்.

'சுபா! நா உன் மேல வச்ச பிரியம் உண்மையானது. எப்படி நிரூபிக்கணும்னு சொல்லு. மண்டி போட்டு மன்



னிப்பு கேக்கணுமா செய்யறேன்.. எனிதிங் இஸ்.. ஃபேர் இன் லவ் அண்ட் வார்..' என்றான்.

அவள் பார்வை தொடர்ந்தது.

அவள் அருகில் நெருங்கினான்.

'சுபா! கடந்த காலத்துக்கு நீயும் நானும் பொறுப்பில்லே. நிகழ்காலத்தை நாம செதுக்கிக்கலாம். செம்மையாக்கிக்கலாம்..' என்றான்.

அவள் சட்டென்று தன் இரு கைகளாலும் அவனது சட்டைக் காலரின் இரு நுனிகளையும் பிடித்துக் கொண்டு அவன் மார்பிலேயே சாய்ந்து கொண்டு அழுதாள்.

அவன் ஒரு விதக் கையாலாகாத் தனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

'தப்பைத் திருத்தறேன்னு சொன்னீங்களே.. எங்க அப்பா உயிரை மீட்டுத் தாங்க.. இப்ப.. என்னோட எதிர்ல கொண்டு வந்து நிறுத்துங்க..' என்று வெடித்து அழுதாள்.

அவன் அவளை அழ விட்டான். மெதுவாக அவள் தலையைக் கோதி விட்டான்.

'ஒரு.. குடும்பமே.. எத்தனையோ இழந்திருக்கு தெரியுமா!' என்றாள் தேம்பலுடன்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'சுபா.. இழந்தது. உங்க குடும்பம் மட்டும் இல்லே.. எங்க குடும்பமும்தான். செஞ்ச தப்போட உறுத்தல்லதான்.. எங்கப்பாவும் போய்ச் சேர்ந்தாரு.. அந்த இழப்பாலே நானும்தான் எத்தனையோ சுமக்கறேன்' என்றான்.

அவள் தேம்பல் அடங்கும் வரை அமைதியாகவே இருந்தான்.

'ஐயோ.. நம்ம வாழ்க்கை எப்படியெப்படியோ இருக்கப் போகுதுன்னு எத்தனை கற்பனைகளை வச்சிருந்தேன்' என்று மறுபடியும் அழுதாள்.

அவன் மெதுவாக விலகிக் கொண்டான்.

'சுபா.. ஐ ஹேவ் புட் மை கார்ட்ஸ் ஆன் தி டேபிள், தீர்ப்பு உன்னோடது. நீ எதைச் சொல்றியோ அதைச் செய்யறேன்..' என்றான்.

அவள் கோபமானாள். 'இனி என்ன முடிவு எடுக்கிறது? கல்யாணம்ங்கற பேரில கூண்டுல அடைச்சிட்டு.. அப்புறம் முடிவெடு முடிவெடுன்னா என்ன முடிவெடுக்கிறது? யு ஆர் வெரி கன்னிங்.. மிஸ்டர். ஜெயப்பிரகாஷ்' என்றாள்.

'ப்ளீஸ்.. சுபா! வார்த்தைகளை வீசாதே! நீ டைவர்ஸ் கேட்டாலும்.. தரேன்!' என்றான்.

'டைவர்ஸ்..!' அவள் கசப்புடன் சிரித்தாள். அடுத்த நாள் எங்கம்மா தூக்குப் போட்டுக்குவாங்க..' என்றாள்.

அவன் முகத்தில் எல்லையற்ற வேதனை தெரிகிறது. அவளுக்கு முகம் காட்டாமல் திரும்பி நின்று கொண்டான்.

'சுபா! எது வேணும்னு நீ முடிவெடு. அதை இப்பப் போலவே நீ சொன்னயே.. அது போலவே.. கன்னிங்கா.. நடத்திக் குடுக்கறது என் பொறுப்பு. நடந்த விஷயங்களை சொல்லாம உன்னைத் தொடறதுதான் ஏமாத்துன்னு நான் நினைச்சேன்.. சொல்லிட்டேன்.. ஆனா.. நீதான் என் மனசு பூராவும் இருக்கே.. நீ என்னோட வாழ்ந்தாலும் சரி.. விலகினாலும் சரி.. இந்தப் பிறவிக்கு.. உன் ஒருத்திக்கு



மட்டும்தான் என் வாழ்க்கையில இடம். இது சத்தியம்..' என்றான்.

அறையை விட்டுப் போய் விட்டான். தன் அறைக் கதவைச் சாத்திக் கொண்டான்.

அவள் அழுகையுடன் கட்டிலின் மேல் சரிந்தாள்.

* * *

'சுபா!' என்ற அவன் குரல் போனில் ஒலிக்கக் கேட்டு அவள் குரலில் எதையும் காட்டாமல்,

'சொல்லுங்கத்தான்' என்றாள்.

சுற்றிலும் வேலைக்காரர்கள் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

'சுபா! அம்மா அத்தை பசங்க எல்லாரும் நாளைக்குக் காலையிலே வந்தர்றாங்க. டிரெய்ன்ல வர்றாங்க..'

'அதற்காக.. நான் சொன்ன விஷயம் அப்படியேதான்.. இருக்கு.. நீ என்ன முடிவெடுத்தாலும் சரி!' என்றான்.

அவள் சிலந்தி வலைக்குள் சிக்கினாற் போல் உணர்ந்தாள். படிப்புக்கு இடையிலே தங்களுக்குள் பிரிவு நேர்ந்தால் கல்லூரியில் எவ்வளவு கேவலமாகப் போய்விடும் என்ற ஒரு கவலை.

'அவங்கப்பா எப்படி நம்ம அப்பாவை இப்படி ஏமாத்தலாம்' என்ற கோபம் உள்ளுக்குள் கொப்பளித்துக் கொண்டேயிருந்தது. என்ன யோசித்தும் அந்தக் கோபத்தை அவளால் மாற்றிக் கொள்ளவே முடியவில்லை. ஆனால் அதே சமயம் தன் மாமியார் மேல் மதிப்பும் தோன்றியது. தங்கள் பிரிவு அவரை வாட்டியெடுத்து விடும் என தோன்றியது.

வெகுவாக யோசித்தாள்.

இன்னொரு மனது கேட்டது. 'ஜெயப்பிரகாஷ் நினைத் திருந்தால் சொல்லாமலே விட்டிருக்கலாம் தெரியுமா? ஆனால், எல்லா உண்மையையும் உன்னிடம் சொன்னாரே? அந்த நேர்மையை நீ மதிக்க வேண்டாமா?' என்று.

அந்த நேர்மையை மதிக்கலாம். அதற்காக வாழ்க்கையை ஒப்படைத்து விட முடியுமா? என்று அறிவு கேட்டது.

ஆழ்ந்து யோசித்தவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

ப்ராஜக்டை முடிக்க வேண்டியது. அது வரை பொறுத் திருக்க வேண்டியது. பிறகு முடிவெடுத்துக் கொள்ளலாம் என்பதுதான் அந்த முடிவு.

நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

* * *

ரயில்வே ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்தார்கள் சுபாஷிணியும், ஜெயப்பிரகாஷும்.

சற்றுத் தள்ளி அம்மா நின்று கொண்டிருந்தார்.

சென்னையிலிருந்து வந்த அந்த ரயிலிலிருந்து ரேகா இறங்கினாள். அவளது குழுவினர் எல்லாம் ஒருவருக் கொருவர் பிரியா விடை சொல்லி, ஹிப் ஹிப் ஹுர்ரே சொல்லி அதன்பின்தான் நகர்ந்தார்கள்.

உடனே ரேகா ஓடி வந்தாள்.

'அண்ணி!' என்று கட்டிக் கொண்டாள். அந்த நேரம் டிவு ஜெயப்பிரகாஷின் அருகில் வந்து நின்று கொண் பர்,



'பாருப்பா! பெத்தவ நான் இங்கிருக்கிறேன். அவளைப் போய்க் கொஞ்சறதை!' என்றார் முணுமுணுப்பாக.

அவன் திடுக்கிட்டுப் போய் அம்மாவைப் பார்த்தான். ஆனால், அவர் விளையாட்டாகத்தான் சொன்னார் என்பதைப் புரிந்து கொண்டவுடன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். ஆனால் உள்ளே வேதனை பொங்கியது.

மருமகளைப் பற்றி இவ்வளவு பெருமையாகப் பேசுகிற அம்மா தங்களது பிரிவைப் பற்றி அறிய நேர்ந்தால் எவ்வளவு வருத்தப்படுவார் என்று எண்ணிக் கொண்டான்.

வீட்டுக்கு வந்தவுடனே ரேகா தன் வயதுக்குரிய ரசனை யுடன் அவர்களுக்காக வாங்கி வந்திருந்த பொருட்களை யெல்லாம் பகிர்ந்தளித்தாள். எல்லாரும் ஒருவித சிரிப்புடன் வாங்கிக் கொண்டார்கள்.

'ஐயோ! பருப்பு சாம்பார் சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு!' என்று அண்ணியின் சமையலை ஆசையாகச் சாப்பிட்டாள்.

அவர்கள் இருவருக்கும் வாக்குவாதம் முற்றிய அந்த நாளுக்குப் பிறகு அவர்கள் இயல்பாய்ப் பேசிக் கொள்ள வேயில்லை.

அன்றிரவு!

மேலே வந்தவுடன் அதிசயமாய் ஜெயப்பிரகாஷ் அவளிடம்,

'சுபா! ரேக்ஸ் உனக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கா? காட்டு!' என்றான்.

அவள் சிரித்து விட்டாள். விதவிதமான செயற்கை அணிகலன்களைக் காட்டினாள்.

'பாருங்க.. நான் இதெல்லாம் போடவா.. போறேன்?' என்றாள்.

'அவள் ஆசைக்காகவாவது போட்டுக்கோ.. இல்லேன்னா.. அப்செட்டாயிடுவா..' என்றான்.

'சரி.. அப்புறம்.. உங்களுக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கா?' எனவும் அவன் லேசாகச் சிரித்துக் கொண்டு,

'பெர்முடாஸ்!' என்றான்.

'ஐயோ! உங்களுக்குப் போய் பெர்முடாஸா!' என்றாள்.

இருவரும் சிரித்தார்கள். சிரித்து ஓய்ந்த பின் அவன் கேட்டான்.

'சுபா! என்ன முடிவு பண்ணியிருக்கே!' என்று.

அவள் சட்டென்று அமைதியானாள். அவன் பாக்கெட்டை லேசாகத் தட்டிக் கொண்டு பார்த்தபடி நின்றிருந்தான்.

'ஆறு மாசம்.. படிப்பு முடியட்டும்.. ப்ராஜக்ட் முடியட்டும்.. அப்புறம் முடிவு செய்யலாம்னு இருக்கேன்..' என்றாள்.

'தாங்க்ஸ்..!' என்றான்.

'அப்புறம்..!' என்றாள் சுபாஷினியே.

'சொல்லு.. சுபா!' என்றான்.

'ஒரு டிரெய்ன்ல போகும்போது கூட எதிரில இருக்கறவங்களோட ஃபிரண்ட்ஷிப் வச்சுக்கறோம். நாம ஒரே வீட்ல இருக்கப் போறோம். அதனால.. நாம ஃபிரண்ட்லியாவே இருக்கலாம். பிரிஞ்சாக்கூட நண்பர்களாகவே பிரியலாம்' என்றாள் சுபாஷினி.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தும் புன்னகைத்துக் கொண்டார்கள். அதே புன்னகையுடன் அறைக்குப் போக



அவன் திரும்பியபோது அவள் மேலும் ஏதோ பேச விழைகிறாள் என்று தெரிந்து நின்றான்.

'நான் ஒரு மாசம் அம்மா வீட்ல இருந்துட்டு வர்றேன். அப்புறம்.. ப்ராஜக்ட் ஃபுல் ஸ்விங்ல ஆரம்பிச்சர்லாம்' என்றாள்.

அவன் சம்மதம் என்று தலையாட்டினான். என்ன முயன்றும் தன் ஆர்வத்தை அடக்க முடியாமல்,

'ப்ராஜக்ட் என்ன? நம்ம கம்பெனி பேஸ் பண்ணியா.. எடுக்கறே?' என்றான்.

'ம்..!' என்றாள்.

'சரி!' என்று தன்னையும் மீறிய உற்சாகத்தை வெளிப்படுத்துவதை அவள் ஒரு வெறுமையான பார்வையுடன் கவனித்துக் கொண்டாள்.

அதைப் புரிந்து கொண்டவன் போல் வரட்டுமா? என்பது போல் தலையசைத்து விட்டு அவன் அறைக்குப் போய் விட்டான்.

உறங்குவது போல் பாவனையுடன் படுத்துக் கொண்டிருந்தாலும் கடந்து போன விஷயங்களில் தாக்கங்களும், எதிர்காலம் பற்றிய சிந்தனையும் அவர்களை ஆட்டிப் படைத்தன.

* * *

இரண்டு நாட்கள் போயிருக்கும்!

'சுபா!' என்று வந்தான்.

அவள் நின்று அவன் முகம் பார்க்க 'சுபா! நான் டெல்லி போறேன். நம்மளோட புதிய ப்ராஜக்ட் சம்பந்தமா டெல்லி மினிஸ்டர் ஒருத்தரை பார்க்க வேண்டியிருக்கு..' என்றான்.

'என்னைக்கு?' என்றாள்.

'இன்னைக்கு நைட்டே!' என்றான்.

'நான் பாக்கிங்கில் ஹெல்ப் பண்ணட்டுமா?' என்றாள். உதவி செய்தாள்.

தங்களுக்குள் நடந்த உரையாடலுக்குப் பிறகு அவன் காலையில் நேரத்திலேயே புறப்பட்டு விடுவதையும், இரவில் நேரங்கழித்து வருவதையும் வழக்கமாக்கி விட்டான்.

'அம்மா' புது ப்ராஜக்ட் கொஞ்சம் வேலை வாங்குது!' என்று அம்மாவிடம் விளக்கமும் சொல்லிக் கொண்டான்.

சுபாஷிணிக்குப் புரிந்தது!

நன்றாக இருக்க நேர்கிற நேரங்களில் ஒருவருக்கொருவர் இனிமையாகவே பேசினாலும், இனிமேல் வாழ்க்கை பற்றிய முடிவின் சுமை தன் மீதுதான் என்று சுபாவுக்கு நன்றாகவே புரிந்தது.

யாரிடமாவது ஆலோசனை கேட்கலாமா என்றால் யாரிடம் கேட்பது?

அம்மா? அதிர்ந்தே போவாள்.

ரம்யா? ம்ஹூம்.. அவ்வளவு பக்குவம் பத்தாது.

'மகேஷ்!' அவருடைய நண்பர். அவரிடம் எப்படிக் கேட்பது.

'சரி.. ஆனது ஆகட்டும்! கடவுள் ஏதாவது வழி விடாமலா போவார்?' என்று விட்டேற்றியான மனப்பான்மைக்கு வந்து விட்டாள். அந்த நாள் வரையிலும்!



## 18

ஜெயப்பிரகாஷ் டெல்லி போய் நான்கு நாட்கள் ஆகியிருக்கும்.

வீட்டில் இருப்பதே போரடித்தது சுபாஷிணிக்கு. அவனிடம் எப்போதும் அவள் கலகலவென்று பேசிக் கொண்டிருக்கவில்லை என்ற போதும் அவன் இருப்பதே வீடு நிறைந்த மாதிரி ஒரு உணர்வை அவளுக்குக் கொடுத்தது என்று சொல்ல வேண்டும்.

இப்போது எழுந்த பிரச்சினையில் அவளுக்குக் கோபம் இருந்தபோதும் அவன் இல்லாதது அவளுக்குக் கஷ்டமாக இருந்தது.

கீழே போனாள்.

வடிவு அவளைப் பார்த்துப் புன்னகைத்தார். 'என்னம்மா?' என்றார்.

'ரொம்ப போரடிக்குது. அவரில்லாம நல்லாவே இல்லை' என்றாள்.

மேலும் புன்னகைத்தார்.

'சரி.. போரடிக்காம இருக்கற மாதிரி விஷயம் சொல்லட்டா?' என்றார்.

'ம்.. சொல்லுங்க..' என்றாள் சுபாஷிணி.

அவர் உடனே பீரோவைத் திறந்து விதவிதமாக நகை செட்டுகளைக் காட்டினார்.

சுபாஷிணி மிகவும் ரசித்துப் பார்த்தாள்.

'உங்களுதா.. அத்தை!' என்றாள்.

'இல்லம்மா.. எல்லாம் உன்னோடது!' என்றார். அவள் திகைத்தாள்.

'அத்தை.. இதெல்லாம்.. எதுக்கு?' என்றாள்.

'பிரகாஷ் சொன்னது சரியாத்தான் போச்சு.'

'சரி என்ன சொன்னார் அத்த?' என்றாள்.

'அம்மா.. இந்த நகையெல்லாம் காட்டி பயமுறுத்தாதீங்க. அவளுக்கு நகையெல்லாம் அவ்வளவு பிடிக்கறதில்லே! அப்படீன்னான்..!' என்றார்.

'ஓ..!' என்றாள்.

'அப்புறம்.. என்னவோ.. தெரியலை. ரெண்டு மூணு நாளுக்கு முன்னாடி வந்து.. ஏம்மா சப்போஸ் எனக்கும், சுபாஷிணிக்கும் ஒத்து வர்லைன்னு வச்சுக்குங்க.. இந்த நகையெல்லாம் அவளுக்கே குடுத்துருவீங்களான்னு கேட்டான்' என்றார்.

சுபாஷிணி திடுக்கிட்டுப் போனாள்.

'ஐயய்யோ, நீ ஏம்மா கவலையாகறே.. சும்மா.. விளையாட்டுக்குத்தான் சொன்னான்' என்றார்.

அவள் உயிரில்லாமல் புன்னகைத்தாள்.

'நான் சொன்னேன். எப்ப அவளோடதுன்னு என் வாயால சொல்லியாச்சோ.. அப்பவே அவளோடது ஆயாச்சுடா.. அப்படீன்னேன்.. அப்புறம் இன்னொன்னும் சொன்னேன்.. விளையாட்டுப் பேச்சுக்குக் கூட இப்படியெல்லாம்..



பேசாதடா, அதிர்ச்சியிலயே நான் போயிடுவேன்.. ஏதோ.. இப்பத்தான் கொஞ்சம் நிம்மதியாயிருக்கேன்.. அப்படீன்னு.. சரிதானம்மா?' என்றார்.

'வேண்டாங்கத்தை. பேச்சுக்குக் கூட அப்படியெல்லாம்.. சொல்லாதீங்க..' என்றாள் சுபாஷிணி கலவரமாக.

சிந்தனையுடன் மேலே வந்தாள்.

* * *

'**ஹை**யா.. டிரஸ் நல்லாயிருக்கு.. இல்லே?' என்று சந்தோஷமாகக் குதித்தான் ரகுநாதன்.

'ஆமடா.. ரொம்ப நல்லாருக்கு' என்றாள் சுபாஷிணி.

'மாமாவோட செலக்ஷனாச்சே!' என்றான் மறுபடியும்.

'ஆமா.. உங்க மாமாவுக்கு ரொம்ப நல்ல டேஸ்ட்!' என்றாள் சுபாஷிணி.

அன்று ரகுநாதனுக்குப் பிறந்த நாள்.

ஜெயப்பிரகாஷ் டெல்லியிலிருந்து வருவதற்கு முன்பே அவள் அம்மா வீட்டுக்கு வந்து விட்டாள். அவளுக்கிருந்த மனநிலையில் அங்கே தொடர்ந்து இருப்பதும் கடினமாக இருந்தது.

டெல்லியில் இருந்து வந்த பிறகு ஒரு முறை வந்து பார்த்து விட்டுப் போனான். தினம் ஒரு முறையாவ போனில் பேசினான்.

பொதுப்படையான பேச்சு.

அக்கறையான நலம் விசாரிப்புக்கள். அவ்வளவே.

சுபாஷிணியும் அந்த அளவிலேயே நின்றாள். துக்குள் யோசனை மட்டும் ஓடிக் கொண்டேயிருந்தது.

ரகுநாதனின் பிறந்த நாளுக்கு முதல் நாள் சரியாக போனில் அழைத்து அவனிடம் பேசினான்.

'ஜவுளிக் கடைக்காரர்கிட்டே சொல்லியிருக்கேன். போன வாரம் நான் கோயம்புத்தூர் வந்தப்பவே டிரஸ் செலக்ட் பண்ணிட்டேன். உனக்குப் பிடிக்குதா பார்?' என்றான்.

அந்த டிரஸ்ஸை அணிந்து கொண்டுதான் ரகுநாதன் அப்படி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது.

மகேஷும் அவன் மனைவியும் கூட வந்து வாழ்த்தி விட்டுப் போனார்கள். இத்தனைக்கும் அவர்கள் குழந்தையைக் கூட அவள் அடிக்கடி போய்ப் பார்க்கவில்லை. மகேஷ் ரகுநாதனுக்கு ஒரு கைக்கடிகாரம் பரிசாக அளித்து விட்டுப் போனான்.

இத்தனை வருடங்கள் போல் இல்லாமல் கடந்த இரண்டு வருடங்களாகத்தான் ரகுநாதனின், சித்ராவின் பிறந்த நாட்களை சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

மாலை நான்கு மணி வரை ரகுநாதன் 'மாமா.. கண்டிப்பா.. வருவார்.. பாருக்கா.. அப்புறம்தான்.. கேக் வெட்டுவேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

நான்கு மணி வாக்கில்தான் சுபாஷிணிக்கு அவன் வர மாட்டான் என்று தோன்றியது.

'டேய்! அவரை எதிர்பார்க்காதே.. அவர் பிஸியாய் இருப்பாருடா..' என்றாள்.

'அப்படி என்னக்கா.. பிஸி?' என்றான் ரகுநாதன் அழுகையும், தேம்பலுமாய்.

சுபாஷிணி தடுக்கத் தடுக்க அவன் போன் அடித்தான்.



'மாமா! இன்னும் நீங்க புறப்படலையா?' என்றான்.

'எங்கே?' என்றான் அவன் அந்தப்புறம்.

'பாத்தீங்களா.. இதுவே ஹரியோட பிறந்த நாளா இருந்தா இப்படியிருந்திருப்பீங்களா?' என்றான் கோபமாய்.

ஜெயப்பிரகாஷ் இதை எதிர்பார்க்கவில்லை போலும். திகைத்து விட்டான்.

'அப்படியில்லடா.. ரகு.. நான் கொஞ்சம் பிஸி. நான் தான் டிரஸ் எல்லாம் அனுப்பிட்டேனே. போன வருஷம். ஹரியோட பிறந்த நாளுக்குக் கூட நான் வெளியூர்லதா[ன்] இருந்தேன்' என்றான் விளக்கம் போல்.

'மாமா! அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்பக் கா[ர்] எடுத்தாக்கூட எட்டு மணிக்குள்ள வந்தர்லாம். நீங்[க] வந்ததுக்கு அப்புறந்தான்.. நான் கேக் வெட்டுவேன்[..] சாப்பிடுவேன்..' என்றான்.

'ரகு..!' என்று அவன் தயக்கமாய் அழைக்க..

'அதெல்லாம் ஒண்ணும் சொல்ல வேண்டாம்..' என்ற[ான்] வைத்து விட்டான்.

சுபாஷிணியும் அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்[துக்] கொண்டார்கள்.

விழித்தார்கள்.

பதினைந்து நிமிடம் கழித்து சேலத்தில் இருந்து பே[...] பி.ஏ. பேசினார்.

'சின்னம்மா.. சார் புறப்பட்டுட்டாங்க. தகவல் கு[...] சொன்னாங்க.' என்றார்.

ரகுநாதன் உற்சாகமானான்.

ஜெயப்பிரகாஷ் ஏழரை மணிக்கு உள்ளே நுழைந்ததும் ஓடிப்போய்க் கட்டிக் கொண்டான்.

'தாங்க்யூ.. மாமா..' என்று.

பின்னாலேயே ஹரிபிரசாத்.. ரேகா.. வடிவு எல்லாரும் நுழைந்தார்கள்.

கேக் வெட்டி முடித்த பின் பாட்டும் ஆட்டமும் கொண்டாட்டமுமாய் இருந்தது. சுபாஷிணியும் கூட வெகு நாட்களுக்குப் பிறகு அன்றைக்குக் கலகலவென்று சிரித்தாள்.

எல்லாருக்கும் ஓட்டலில் விருந்தளித்தான் ஜெயப்பிரகாஷ். பிறகு வீட்டுக்கு வந்து விச்ராந்தியாய் அமர்ந்திருந்த போது ஜெயப்பிரகாஷ் உருக்கமான குரலில்.

'என்னடா.. ரகு? சட்டுன்னு அப்படிக் கேட்டுட்டே? நீ வேற.. ஹரி வேறன்னு நினைக்கறவனாடா.. நான்?' என்றான்.

யாரும் எதிர்பார்க்காத வகையில் ரகுநாதன் மறுபடியும் சோஃபாவில் அமர்ந்திருந்த மாமாவின் தோளைக் கட்டிக் கொண்டு சொன்னான்.

'மாமா! நீங்க.. வந்ததுக்கப்புறம்தான்.. நானும் சித்ராவும் ரொம்ப சந்தோஷமா இருக்கோம்.. அப்பா இல்லன்னா என்னடா நமக்குத்தான் மாமா இருக்காங்களேன்னு சித்ரா கூட அடிக்கடி சொல்வா..' என்றான்.

எல்லாரும் சற்று நேரம் அமைதியாகி விட்டார்கள்.

நவநீதத்தின் கண்களில் கண்ணீர்த் துளிகள் மின்னியது. சட்டென்று வடிவு சொன்னார்.

'அப்படியே.. நினைச்சுக்கலாம்பா.. நானும் கூட... இப்பல்லாம் எனக்கு ஆறு குழந்தைகள்ன்னு தான் நினைச்சுக்கறேன்' என்றார்.



எல்லார் முகங்களும் நெகிழ்ந்து போயின. ஹரிபிரசாத் தான் இடையில் புகுந்து.

'ஐயய்யோ.. ஓவர் சென்டிமென்ட்டா இருக்கு.. எங்க குடும்பம் ரொம்பப் பெரிசு.. பிள்ளை குட்டிகளோ பத்துத் தினுகன்னு.. பாடலாமான்னு பாக்கறேன்' எனவும் சிரித்தார்கள்.

பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வேறு வேறு அறைகளில் தூங்கப் போனார்கள்.

பெரும்பாலும் பண்டிகை நாட்களில் மட்டும்தான் ஜெயப்பிரகாஷ் அங்கே இரவில் தங்குவான்.

இன்றைக்கும் அது மாதிரித் தங்க வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டான்.

அப்படித் தங்கும்போது அவனுக்குக் கட்டிலைக் கொடுத்து விட்டு சுபாஷிணி சோபாவில் படுத்துக் கொள்வாள்.

அன்றைக்கும் அதே போல்தான் படுத்தார்கள். ஆனால் உறக்கம் வரவில்லை.

'கொஞ்ச நேரம் காற்றாட நடக்கட்டுமா?' என்று சொல்லி விட்டு வெளியே வந்து வீட்டின் முன்னாலே இருந்த போர்டிகோ பகுதிக்குள்ளேயே சற்று நேரம் உலவினான்.

சற்றுக் கழித்து சுபாஷிணியும் எழுந்து வந்தாள்.

'என்ன.. சுபா?' என்றான்.

'தூக்கம்.. வர்லே!' என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

'உட்கார்..!' என்றான். போர்டிகோவில் இரண்டு சேர்களைப் போட்டுக் கொண்டு அமர்ந்தார்கள்.

'எனக்கு ரொம்பக் கவலையாயிருக்கு..' என்றாள் சுபாஷிணி.

'என்ன.. கவலை! என்னடா.. ரகுநாதன், சித்ராவெல்லாம்.. இப்படி எதிர் பார்ப்புக்களோட இருக்கறாங்களே.. எப்படிடா டைவர்ஸ் கேட்கறதுன்னா?' என்றான்.

அவள் மௌனம் சாதித்தாள்.

'கவலைப்படாதே.. சுபாஷிணி.. ஏதாவது வழி செய்ய லாம்.. உன் மனசு நிம்மதியானாப் போதும்..' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'இல்லே..!' என்று இழுத்து நிறுத்தினாள். அந்தக் கணம் அவன் திரும்பிப் பார்த்தான். அவள் முகத்தில் வேறு ஏதோ சொல்ல வேண்டும் என்கிற உணர்ச்சி பாவமும் தோன்று வதை உணர்ந்து கொண்டான்.

'சொல்லு.. சுபா!' என்றான் குழைந்து போன குரலில்.

'இல்லே! டைவர்ஸுக்கப்புறம்.. நீங்களாவது வேற கல்யாணம் செஞ்சுகிட்டா எனக்கு நிம்மதியாயிருக்கும்' என்றாள்.

'நீ செஞ்சுக்கறதா ஐடியா இருக்கா?' என்றான் அழுத்த மான குரலில்.

'இல்லே. நிச்சயமா.. நான் இனிக் கல்யாணம் பத்தி யோசிக்கறதாவே இல்லை!' என்றாள்.

'நானும்.. அது போலத்தான்!' அது மட்டும்.. இல்லே.. நாம ஒண்ணா இருந்தாலும் சரி.. இல்லாட்டாலும் சரி.. உங்களோட ஷேர் உங்களுக்கு வந்துடும்..' என்றான் உறுதி யான குரலில்.



அவள் அமைதியானாள்.

அவன் தொடர்ந்து 'ஆனா, இப்ப இந்தப் பசங்கள்ளாம் ரொம்ப இமோஷனலா.. அட்டாச் ஆயிட்டாங்க.. அம்மா வேற ஷாக் ஆயிடுவாங்க. அதுக்குத்தான் என்ன பண்ற துன்னு தெரியலே!' என்றான்.

'அதான்.. அதான்.. நான் ஒன்னு சொல்லலாம்னு.. நெனச்சேன்!' என்றாள் சுபாஷிணி.

'சொல்லு.. சுபா..!'

'ரெண்டு பேருக்கும் வேற கல்யாணத்துல இன்ட்ரஸ்ட்.. இல்லே.. அட்லீஸ்ட்.. நம்ம ஃபாமிலியோட நிம்மதிக்காக வாவது..' என்று இழுத்து நிறுத்தினாள்.

வாக்கியத்தை அவன் முடிக்கக் கூடுமோ என்று அவன் முகம் பார்த்தாள். ஆனால் அவனோ உறுதியாக நீ தான் முடிக்க வேண்டும் என்பது போல் நின்றான்.

'சேர்ந்தே.. இருக்கலாமா?' என்றாள்.

அவன் பார்வை அவள் மேல் ஆழப் படிந்தது.

'நீ மட்டும் என் பக்கத்தில் இருந்தாப் போதும்.. என் வாழ்க்கை நிறைவாகி விடும்..' என்று என்னென்னவோ சொல்ல வேண்டுமென்று நினைத்தான். ஆனால் சொல்ல வில்லை.

'நீ எப்படிச் சொன்னாலும் சரி' என்றான் வறண்ட குரலில்.

'தாங்க்ஸ்!' என்றாள் சுபாஷிணி.

'ஆனா, வெளியுலகத்தைப் பொறுத்தவரை எல்லா விதத் திலயும்.. நடிக்க வேண்டியிருக்கும்' என்றான்.

'அது பாத்துக்கலாம்..' என்றாள் சுபாஷினி.

சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள். 'சரி.. தூங்கப் போலாமா!' என்று கிளம்பினார்கள்.

அதே நேரம்!

இரவு படுக்கும் முன்பு பங்களாவை ஒரு சுற்று சுற்றிப் பார்க்கிற நவநீதம் அன்றைக்கும் ஒரு ரவுண்டு வந்தவர் மகளும், மருமகனும் அமர்ந்திருப்பதைப் பார்த்து விட்டு இடையிலே எப்படி நுழைவது என்று தயங்கியவர் காதில் அவர்கள் பேசியது, டைவர்ஸ் என்ற வார்த்தையைக் கேட்டுத் தன்னையுமறியாமல் கூர்ந்து கவனித்து அத்தனையும் கேட்டு விட்டார் என்பதையும் அவர்கள் அறியவில்லை.

கணவன் இறந்து இந்தக் குடும்பத்தைத் தாங்க வேண்டியிருந்த அந்தக் கால கட்டத்தில் கூட அத்தனை பாரம் அவர் நெஞ்சில் ஏறிக் கொள்ளவில்லை என்பதையும் உணர்ந்து கல்லாய் சமைந்து நின்றார்.

## 19

'ஏன் சுபா, நீ மகேஷ் வீட்டுக்குப் போறதே இல்லையா?' என்று கேட்டான் ஜெயப்பிரகாஷ்.

அவள் குற்ற உணர்வுடன் அவனைப் பார்த்தாள். 'ஐம் சாரிங்க' அத்தான்! ஆனா, எனக்கு நேரமே கிடைக்கலை' என்றாள்.



'ஓகே.. ஓ.கே.. நான் குத்தம் சொல்லணும்கறதுக்காகக் கேக்கலை. கேஷுவலாத்தான் கேட்டேன். இன்னைக்கு வேணாப் போலாமா?'

'போலாமே!' என்றான்.

அவன் மகேஷுக்குப் போன் செய்தான். 'மகேஷ்! உனக்கு காலங் கார்த்தாலே அதிர்ச்சி வைத்தியம் செய்யறதா முடிவு!' என்றான்.

கலகலவெனச் சிரித்தான்.

பல நாட்களுக்குப் பின்பு தன் கண் முன்பு மனம் விட்டுச் சிரிக்கிற கணவனை அவள் பார்த்தும் பார்க்காதவள் போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பக்கம் மகேஷும் சிரித்தான்.

'அடப்போடா! உன்னோட ஃபிரண்டுன்னு சொன்னாலே நிறைய பேர் ஷாக் ஆயிடறாங்க. அதுக்கு மேலயா நீ அதிர்ச்சி தர முடியும்' என்றான்.

'அப்பறம், ஏண்டா, நாலு நாள் பேசலேன்னாக் கூட பேசலே பேசலேன்னு புலம்பித் தள்றே?'

'ஐயய்யோ! உண்மையெல்லாம் போட்டு உடைக்காதடா.. இப்ப என்ன வேணும் சொல்லு!'

'இல்லே! ஒரு சின்ன சந்தேகம்!'

'என்ன சந்தேகம்?'

'வீட்ல நல்ல சமையல்காரராத்தானே வச்சிருக்கே!'

'ஆமா.. ஏன்?' என்றான் புரியாதவனாக.

'திடீர்ன்னு குடும்பமே வந்து நின்னோம்னு வச்சுக்.. நல்ல சாப்பாடா கிடைக்குமா?'

'அடப்பாவி! எவ்வளவு சந்தோஷமான விஷயம்? அதைப் போய் சொதப்பறே!' என்றான்.

'ஆமடா.. வர்லாம்னு இருக்கோம்!'

'டேய்! யு ஆர் ஆல்வேஸ்.. வெல்கம்..' என்றான் மகிழ்ச்சியுடன்.

* * *

'அந்த ஒன்றரை வயதுக் குழந்தையின் வயிற்றில் மேல் புறத்தில் உதட்டை வைத்துக் காற்றை ஊதிச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான் ஜெயப்பிரகாஷ்.

நீதையாளன் என்று பெயர் வைத்திருந்தார்கள். சதீஷ் என்று அழைத்தார்கள்.

'சத்திக்குட்டி!' என்று அவன் கொஞ்ச சின்னச் சின்ன வார்த்தைகளைக் குழந்தை மழலையில் சொல்லக் கொஞ்சி மகிழ்ந்து கொண்டிருந்தான் ஜெயப்பிரகாஷ்.

அவனது உயரத்துக்கு குழந்தை ஒரு பொம்மையைப் போல் அவன் தோளில் தொற்றிக் கொண்டது. யாரிடமும் வரமாட்டேன் என்று மறுத்தது.

'அண்ணா! முதல் தடவை குழந்தையைப் பார்க்க வந்தப்பவே குழந்தையை நல்லா ஏந்தி வச்சுக்கிட்டார்' என்றாள் சுலோச்சனா.

'ஆமா! குழந்தைங்கன்னா அவனுக்கு ரொம்ப இஷ்டம்!' என்றார் வடிவு.

இந்தப் பேச்சுக்கள் எல்லாம் காதில் விழாத இடத்தில் தள்ளிக் குழந்தையைத் தோளில் ஏந்தியபடி மகேஷிடம் க் கொண்டிருந்தான் ஜெயப்பிரகாஷ்.



அந்தக் காட்சி பார்க்கப் பாந்தமாகவே இருந்தது. சுபாஷிணிக்குக் கூட அதைப் பார்க்கப் பிடித்தது.

எல்லாம் சரியாக இருந்திருந்தால் அநேகமாக அடுத்த ஆண்டில் அவர்களுக்குக் கூட ஒரு குழந்தை பிறந்திருக்கக் கூடும் என்ற எண்ணம் தோன்றியது.

அதே நேரம் அவள் நின்ற திசை நோக்கித் திரும்பிய ஜெயப்பிரகாஷ் அவள் முகபாவம் பார்த்து என்ன புரிந்து கொண்டானோ தெரியவில்லை. இயல்பாகப் புன்னகைத்தான். அருகில் வருமாறு தலையசைத்தான்.

மந்திரத்தில் கட்டுண்டாற் போல் அவளும் போனாள்.

'சுபா.. இந்தப் பயலைப் பார். என்ன சிரிப்பு சிரிக்கிறான்' என்று புன்னகைத்தான்.

அவளிடம் குழந்தை தாவிக் கொள்ள அவள் வாங்கிக் கொண்டாள்.

'குட்! ரொம்ப நல்ல சீன்பா.. இது! அது சரி.. எப்ப இப்படி உங்களுக்குன்னு ஒரு குழந்தை பிறக்கிறது..' என்றான் மகேஷ்.

'சுபா படிப்பை முடிக்கட்டும்டா..' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'ஆமடா! இப்பப் படிப்பும்பே. அப்புறம் கொஞ்ச நாள் வேலைக்குப் போகட்டும்பே.. அப்புறம்..' என்று இழுக்க.

'அப்படிச் சொல்லுங்க.. தம்பி..' என்றார் நவநீதம். பிற தொடர்ந்து 'சாக்கு சொல்றதுன்னு ஆரம்பிச்சா.. அப்படியே காலம் போயிடுமில்ல..' என்றார் இயல்பாகச் சொல்வ போல்.

ஜெயப்பிரகாஷும், சுபாஷிணியும் ஒருவரையொருவர் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்துக் கொண்டார்கள். மேலும், சற்று நேரம் வேடிக்கை போலவே வடிவும், நவநீதமும் குழந்தை பற்றிய தங்கள் ஏக்கத்தை வெளியிட்டார்கள்.

எல்லாரும் உணவுண்ண அமர்ந்தவுடன் மகேஷ் சொன்னான்.

'சுபா! நீங்க ஜெயப்பிரகாஷை சரியாப் புரிஞ்சுக்கணும். சின்ன வயசிலயே தொழில் பாக்க வேண்டியதாப் போச்சு. அப்ப.. மார்க்கெட்டிங், மார்க்கெட்டிங்னு அவன் அலைஞ்ச அலைச்சல் இருக்கே.. சாதாரண விஷயமில்லே.. அது.. சொல்லப் போனா.. நா ரொம்ப அவனை அட்மைர் செய்யறேன்' என்றான்.

வடிவு தொடர்ந்தார்.

'சுபா! அவங்க அப்பா.. இருந்த ஃபீல்ட் வேண்டாம். எக்ஸ்போர்ட் யூனிட் மட்டும் அப்படியே இருக்கட்டும்னு புதுசாத் தொழிலையே மாத்தினான். ஆனா, கரெக்டான ஆட் களைப் பிடிச்சு ஆலோசனை கேட்பான். அவன் யார் கிட் டயும் ஆலோசனை கேக்காம முடிவெடுத்த ஒரே விஷயம்.. உன்னைக் கல்யாணம் பண்றதுங்கறதுதான்..' என்று சிரித்தார்.

அவனும் இயல்பாக அவளைப் பார்த்துச் சிரித்தான்.

'எப்படி இவரால் நடிக்க முடிகிறது!' என்ற கோபம்தான் ந்ததே தவிர அவளால் நடிக்க முடியவில்லை. லேசாகப் ன்னகைத்தாள்.

'அது மட்டுமில்லே! அண்ணா இவர்கிட்ட சொல்வாராம்.. ய்! குறைந்தது ஒரு நாலு குழந்தையாவது வேணும்பார்னு..' று சிரித்தாள் சுலோச்சனா.



அந்த நிமிடம் மட்டும் அவன் அவசரமாகக் குனிந்து சாப்பிடவும் எல்லாரும் சிரித்தார்கள். ஆனால், நவநீதத்தின் கூர்மையான பார்வை எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தது.

மற்றவர்கள் கவனிக்காத வண்ணம் ஒருமுறை ஜெயப் பிரகாஷின் பார்வை சுபாஷிணியின் மேல் படிந்து மீண்டது. அதில் தெரிந்த வேதனை அவளை ஒரு கணம் உலுக்கியது.

'பொய்கள் எத்தனை நாளைக்கு நிலைக்கும்?' என்ற கவலை கூடத் தோன்றியது.

தன்னுடைய கோணத்திலேயே யோசித்த அவளுக்கு எல்லாவற்றுக்கும் இன்னொரு கோணமும் இருக்கக் கூடும் என்ற எண்ணமே எழவில்லை. அதுவும் அவள் எதிர்பாராத நபரிடமிருந்து அந்த விளக்கம் வரும் வரை.

* * *

அன்றிரவு!

'சரிங்கத்தை! நான் இப்பக் கிளம்பறேன். ரெண்டு நாள் வேலை பெண்டிங்காப் போச்சு..' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'அம்மா! நானும் கிளம்பறேன்!' என்றாள் சுபாஷிணி.

'இன்னும் ஒரு ரெண்டு நாள் இருந்துட்டு வரட்டுமே. மாப்பிள்ளே!' என்றார் நவநீதம்.

'ஓ.கே! எனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லை!' என்று தோள்களைக் குலுக்கி விட்டுப் புறப்பட்டான் ஜெயப்பிரகாஷ்.

'உட்கார்றி!' என்றார் அம்மா.

அவளும் அமர்ந்தாள்.

'ஏன்.. சுபா! உனக்கு ப்ராஜக்ட் எப்ப முடியுது?'

'இன்னும் நாலைஞ்சு மாசத்துல.. ஏம்மா!'

'இல்லே! அதுக்கப்புறம் என்ன பிளான்' என்றார்.

'என்ன.. பிளான்னா? புரியலே!' என்றாள் சுபாஷினி.

'இல்லே! மாப்பிள்ளைக்குக் குழந்தைகள்னா ரொம்ப இஷ்டம்னு வடிவுக்கா ரெண்டு மூணு தரம் சொல்லிட்டாங்களே நெஜம்மாவே உனக்குப் புரியலையா?' என்றார்.

'இல்லே! அவருதான்.. இப்ப வேண்டாங்கறார்' என்றாள்.

நவநீதத்துக்கு சலிப்பாகிப் போனது.

'எவ்வளவுதான் இந்தப் பெண் பொய் சொல்கிறாள். பார்க்கலாம்!' என்று எண்ணிக் கொண்டார்.

கூடவே இன்னொரு எண்ணம் தோன்றியது. இரண்டு பேரும் பூடகமாக டைவர்ஸ்.. டைவர்ஸ் என்று பேசுகிறார்களே! என்ன காரணம் என்று அறிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

'ஏண்டி! சுபா! இத்தனை நாள்தான் படிப்பு.. படிப்புன்னு கிட்டு இங்கயே இருந்தே.. இப்ப. வீவுல போனியே.. அங்க அனுபவம் எல்லாம் எப்படி?'

அவள் உச்சுக் கொட்டினாள்.

'என்ன அனுபவம்மா? பணக்கார வீட்ல வசதிகளுக்கா குறைச்சல்?' என்றாள்.

'ஏன்.. உங்க மாமியார் பிரியமா இல்லையா?'

'ஐயோ.. அப்படியெல்லாம் சொல்லவே கூடாது. அவங்க தங்கம்..' என்றாள்.

'அப்புறம்!.. இந்த ஹரியும், ரேகாவும் பிரியமா.. இல்லையா?'

'ஐயோ! அவங்களும் ரொம்பப் பிரியமாத்தான் இருக்காங்க!'



'அப்ப!' என்று கண்களைச் சுருக்கிக் கொண்டு கேட்டார்.

'அப்ப.. மாப்பிள்ளை பிரியமாய் இல்லையா?' அவள் நிலம் பார்த்தாள்.

'ம்.. பிரியமாத்தான் இருக்கார்!' என்றாள்.

'அப்புறம்.. என்ன பிரிவு?' என்று கேட்கலாமா.. என்று நினைத்தார். ஆனால் தானே அதைக் கேட்கக் கூடாது. அவள் வாயிலிருந்தே அந்த வார்த்தைகளை வரவழைக்க வேண்டும் என்று எண்ணியவர் மேலும் சற்று நேரம் பொதுப் படையாகப் பேசினார். பிறகு மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே வந்து.

'இல்லடி.. சுபா.. இப்ப ஒண்ணோ, ரெண்டோ குழந்தைங்களைப் பெத்துகிட்டீங்கன்னா பெரியவங்க இருக்கோம். வளர்த்துக் குடுத்துடுவோம்' என்றார் நவநீதம்.

'இல்லம்மா..!' என்று மறுபடியும் இழுத்தாள் சுபாஷினி.

'என்னடி.. ஏதாவது.. பிரச்சினையா?'

'அம்மா நம்ம அப்பாவும், அவங்க அப்பாவும் ரொம்ப பிரண்ட்ஸாய் இருந்தவங்க.. எப்பப் பிரிஞ்சாங்க?'

அம்மா யோசனையாய்ப் பார்த்தாள்.

'ஏன்.. கேக்கறே?'

சுபாஷினி தயங்கினாள் சொல்லலாமா. வேண்டாமா என்று ஒரு கணம் யோசித்தாள். பிறகு எத்தனை நாளைக்கு இந்த விஷயத்தை மனதில் சுமந்து கொண்டு அலைவது? அதிலும் தன்னைக் காட்டிலும் இந்த விஷயத்தில் தீர்ப்பு சொல்லத் தகுதியானவள் அம்மாதான். ஆலோசனை சொல்ல வேண்டியவளும் அவள்தான் என்று எண்ணினாள்.

மெதுவான குரலில் சொன்னாள்.

'அம்மா.. அவங்க அப்பா நம்ம அப்பாவை ஏமாத் திட்டதா ஒரு பேச்சு இருக்கு..' என்றாள்.

'ஓ!' என்று அம்மா ஒரு நிமிடம் திகைத்து விட்டாள். பிறகு.

'பார்றி.. சுபா.. யாரோ பேசிட்டுப் போறாங்க.. ஒரு குடும்பம் நல்லாப் பொழச்சாலே இங்கே சில பேருக்குப் பொறுக்காது..' என்றார்.

சுபாஷிணி மௌனம் சாதித்தாள்.

'சுபா.. குடும்பம்கறது சாதாரண விஷயமில்லே. பரஸ் பரம் குடும்பத்துக்குள்ளே நம்பிக்கையிருந்தாப் போதும்.. மத்தவங்க பேச்சுக்கெல்லாம் காது குடுக்க வேண்டிய அவசியம் இல்லே!'

'அம்மா! உனக்குப் புரியவில்லையே!' என்பது போல் சுபாஷிணி பார்த்தாள். நவநீதம் மேலும் அறிவுரை சொல்வது போல் தொடர்ந்தாள்.

'குடும்பம்னா கொஞ்சம்.. ஏறத்தாழ இருக்கும். அதை நாம பெருசா எடுத்துக்கக் கூடாது' என்றாள்.

அதற்கு மேலும் பொறுக்க முடியாதவளாய் சுபாஷிணி மேஜை மேல் கவிழ்ந்து அழுதாள்.

அம்மா வெகுவாகத் திகைத்துப் போனார்.

'சுபா.. சுபா.. என்னத்துக்குடி அழுகறே. சொல்லிட்டு அழேண்டி.. ஐயோ எனக்கு அடி வயித்தைப் பிசைகிற மாதிரி இருக்கேடி..' என்று கலக்கத்துடன் கூறினார்.



சுபாஷிணி கேவினாள். 'அதுக்குத்தாம்மா நான் சொல்ல வேண்டாம்னு நெனச்சேன்.. ஆனா இப்ப சொல்ல வக்கிறே!' என்றாள்.

'சொல்லுடி யாரு சொன்னா!' என்றார் அம்மா.

'அம்மா.. வேற யாரோ.. இல்லம்மா உன்னோட மாப் பிள்ளையே சொன்னார். வேற யாரோ சொல்லியிருந்தா.. நான் கேர் பண்ணியே இருக்க மாட்டேன்.. ஆனா.. அவரே.. அவரே தன்னோட வாயால சொன்னார்' என்று மேலும் வெடித்து அழுதாள்.

அம்மா வெகு நேரம் திகைத்து அமர்ந்து விட்டார். பிறகு மெது மெதுவாக அவளிடம் விவரங்கள் வாங்கினார். பிறகு.

'சுபா.. இப்ப எதுவும் பேச வேண்டாம். வா.. சாப்பிடு..' என்று அழைத்துப் போனார்.

சாப்பிட வைத்தார்.

வெகு நேரம் யோசனையிலாழ்ந்தார். பிறகு

'சுபா! நீ போய்த் தூங்கு.. பாரத்தை என் மேல போடு..' என்று அனுப்பி வைத்தார்.

உண்மையாகவே சுபாஷிணி அன்று பாரம் இறங்கினாற் போல் உணர்ந்தாள். அம்மாவிடம் விஷயத்தைப் போட்டாகி விட்டது. அம்மா என்ன சொல்கிறார் பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டாள். ஆனாலும், இன்றைக்கு ஜெயப் பிரகாஷ் குழந்தையைக் கொஞ்சிய விதமும், கலகலச் சிரிப்பும் மனசுக்குள் வந்து போனது.

தன் மேலேயே கோபம் வந்தது.

மெதுவாக எட்டிப் பார்த்தாள்.

அம்மா பூஜையறையில் அமர்ந்திருந்தார். இப்போது சுபாஷினிக்குக் கவலை தோன்றியது. அம்மாவைத் தேவையில்லாமல் கஷ்டப்படுத்துகிறோமோ என்று. ஆனாலும், அம்மாவைத் தொல்லை செய்யாமல் அறைக்குள் மீண்டும் போய்ப் படுத்துக் கொண்டாள்.

மறுநாள் காலை!

நவநீதம் சில விஷயங்களைச் சொன்னார். சில கேள்விகளை வைத்தார்.

சொன்ன விஷயங்களும், கேட்ட கேள்விகளும் அவளைப் புரட்டிப் போட்டன.

இரண்டு நாட்கள் கழித்து ஊருக்குப் போகும் போது அம்மா கேட்ட கேள்விகளுக்கு விடை கண்டு பிடித்த பின்தான் மேற்கொண்டு முடிவெடுக்க முடியும் என்பதை உணர்ந்தாள்.

காலத்தின் கையில் பிரச்சினைகளைப் போட்டு விட்டு விடைகளுக்காகக் காத்திருந்தாள்.

## 20

**'ச**த்திக் குட்டி, தூங்கறதைப் பாரேன்' என்றான் மகேஷ்.

'இத பாருங்க! குழந்தை தூங்கும் போது உத்து உத்துப் பாக்கக் கூடாது. ஏற்கனவே இன்னைக்கு அவனுக்கு திருஷ்டி பட்டிருக்கு' என்று அலட்டிக் கொண்டாள் சுலோச்சனா.



'யாரைச் சொல்றே? ஜெயப்பிரகாஷ் வீட்டையா சொல்றே! அடிப்பாவி, அவர்கள்ளாம்.. நம்ம வெல்விஷர்ஸ்.. தெரியுமா?' என்றான் மகேஷ் சற்றே மனத்தாங்கலுடன்.

'ஐயய்யோ! நா தப்பாச் சொல்லலே. நல்ல விதமானாலும் சரி.. கெட்ட விதமானாலும் சரி.. மனுஷனோட பார்வைக்கு ஒரு சக்தி இருக்குங்கறாங்க..' என்றாள் சுலோச்சனா.

'நல்லா.. ஆச்சு போ!'

'இல்லைங்க.. நிஜமாத்தான்..!' என்றாள் மீண்டும்.

'ஆமாப்பா! உண்மைதான். இப்பவும்.. அம்மிணி அப்படியே ஒரு ஓரக்கண் பார்வையை எடுத்து வீசினிங்கன்னா.. நான் சுருண்டு போயிடறனே!'

'போதும்.. வழிசல்!' என்று சிரித்தாள் சுலோச்சனா.

திடீரென்று மகேஷ் சீரியஸானான்.

'சுலோ! இன்னைக்கு என்னவோ ஜெ.பி. ரொம்ப டல்லடிச்ச மாதிரி இருந்துச்சு.. இல்லே!'

'என்னைக்குக் கலகலன்னு இருந்தார்?' என்றாள் சுலோச்சனா.

'ஆமா! என்னைக்குமே அவன் அழுத்தம்தான் ரொம்ப சிரிக்கறத இல்லயாச்சு!'

மகேஷ் சிந்தனையில் ஆழ்ந்தபடி பேசினான்.

'அப்படியில்லே சுலோ! அவன் ரொம்ப ஜாலியான பேர்வழி. ஆனா, எப்ப இந்த கம்பெனி கிம்பெனின்னு பார்க்க வேண்டியிருந்துச்சோ அப்பவே அவன் சீரியஸ் மாதிரிக் காட்டிக்க வேண்டியதாயிருச்சு. ஆனா, ஃபிரண்ட்ஸ்க் குள்ளேன்னு வரும்போது கண் ஜாடையிலயே எல்லாத்தையும் காட்டிருவான் தெரியுமா?'

அதே நேரம்..

செல்போன் ஒலித்தது.

அந்தப்புறம் ஜெயப்பிரகாஷ்.

'என்னடா! எங்க இருக்கே?' என்றான் மகேஷ்.

'இப்போதைக்கு நட்டாத்தில நிக்கறேன்' என்றது அவன் குரல்.

'என்னடா.. விளையாடறியா?'

'நிஜமாத்தான் நடு ரோட்டில நிக்கறேன்.'

'ஓ! ஏன் ஏதாவது கார் கீர் பிராப்ளமா?'

'அதெல்லாம் ஒன்னுமில்லே' எனக்கு நாந்தான் பிராப்ளம்' மகேஷ் கவலையானான். உடனே புறப்பட்டான்.

* * *

பத்து நிமிடங்களுக்குள்ளாக மூன்றாவது, சிகரெட்டைப் பற்ற வைக்கிற நண்பனைக் கவலையுடன் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான் மகேஷ்.

'என்னடா.. ஆச்சு!'

உச்சுக் கொட்டினான் ஜெயப்பிரகாஷ். பிறகு முழுவது மாக விளக்கம் சொன்னான்.

'மகேஷ்! உனக்குத் தெரியும் எங்கப்பாவும் சுபாவோட அப்பாவும் பார்ட்னர்ஸா இருந்தவங்க. எங்கப்பா அவங்கப்பா வுக்கு ஜஸ்டிஸ் பண்ணலேன்னு எனக்குத் தெரியும் அவகிட்டே சொன்னேன்.'

'ம்..!' என்றான் மகேஷ் கலவரமான குரலில்.

'அதுக்கு.. அப்புறம்.. அவ என்கிட்டே கேட்கறா?'



'என்ன கேட்கறாங்க?'

'டைவர்ஸ்.. டைவர்ஸ் கேக்கறாடா!' என்றான் வறண்ட குரலில்.

மகேஷ் உண்மையாகவே கலங்கிப் போனான். இரண்டு நிமிடம் கனத்த மௌனம் நிலவியது.

'எப்பவோ நடந்து போன கதையை இப்ப எதுக்கு நீ கிளறினே? இப்பப் போய் அதையெல்லாம் சொல்லியிருக்க வேண்டிய அவசியம் இல்லே!' என்றான் மகேஷ் கடுப்பாக.

'உனக்கு விஷயம் புரியலடா!'

'என்னடா விஷயம் புரியலே. உங்கப்பாவுக்கும் அவங் கப்பாவுக்கும் இருந்த பிரச்சினையை இத்தனை நாள் வாழ்க்கைக்கப்புறம் எதுக்குப் பேசணும்?'

'அதான்.. அதான்.. பிரச்சினையே? இத்தனை.. நாள் என்னத்தைடா வாழ்ந்தோம்! இன்னும் ஆரம்பிக்கவே இல்லையே!'

'ஓ!'

'ஆமா.. மகேஷ்.. அவ நாட்டமெல்லாம் படிப்பு மேல் இருந்துச்சு. அதனால நானும் தொல்லை செய்யலே. சமீபமாத்தான்.. கொஞ்சம் டைவர்ஷன் வந்துச்சு.. என் மேலயும் அம்மிணிக்கு இன்ட்ரஸ்ட்.. வந்துச்சு.. ஆனா.. நான்.. நான்!'

'ம்..!'

'எல்லா விவரங்களும் தெரிஞ்சு அதுக்கப்புறம் அவ ஒரு முடிவுக்கு வரணும்னு நெனச்சேன்..' என்றான்.

மகேஷுக்கு அவன் நோக்கம் குறித்துப் பெருமையாகவும் இருந்தது. இப்போது அவன் தவிக்கிற தவிப்பைப் பார்த்துப் பாவமாகவும் இருந்தது.

'டைவர்ஸ்.. பேச்சு எப்ப வந்தது?'

'அது நடந்து ஒரு மாசம் இருக்கும்.'

'அதுக்கப்புறம் மறுபடியும்-அதைப் பத்திப் பேசலையா?'

'இல்லே.. ஆனா.. இப்ப ஊருக்கு வந்தப்புறம்.. ரெண்டு நாளுக்கு முன்னாலே சொல்றா.. டைவர்ஸ் வேண்டாம்.. ஊருக்காக வேண்ணா சேர்ந்திருக்கலாம்ங்கறா..' என்றான், கசப்புடன் சிரித்தான்.

மகேஷ் ஒன்றும் பேசவில்லை. சிந்தனையிலாழ்ந்தான். இந்த அன்புதான் எப்படிப்பட்டவனையும் எப்படி கோழையாக்கி விடுகிறது? மனதுக்குப் பிடித்தவளின் அன்புக்காக ஏங்கி நிற்கிற நண்பன் லேசுப்பட்டவனா என்ன? கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம் வந்தாலும் கூட அலட்டிக் கொள்ளாமல் விஷயங்களைக் கையாள்கிறவன். நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

'டேய், நான் இதெல்லாம்.. கேக்கக் கூடாது. ஆனா.. கேக்க வேண்டியிருக்கு. முதல்ல.. இன்ட்ரஸ்ட் அந்தப் பக்கம் இருந்து வந்ததா.. எப்படி?'

'ஆமடா.. கொஞ்சம்.. நெகிழ்ந்து போன மாதிரித்தான்.. தெரிஞ்சுது.. ஆனா.. நான் இந்த விஷயம்.. கிளியராயிடணும்னு.. நெனச்சேன்..!'

'எதுக்கு.. எதுக்குடா?'

'இல்ல.. மகேஷ், நம்ம ஊர்ப் பொண்ணுங்க.. முழுமையா.. அர்ப்பணிக்கறவங்க.. ஏமாத்த மனசு வர்லடா..!' என்றவன்



தொடர்ந்து 'ஆனா.. அம்மா அப்பவே காம்பன்ஸேட் செஞ்சுட்டாங்க..' என்று அந்த விவரங்களையும் சொன்னான்.

மகேஷ் முகம் மலர்ந்தான்.

'அப்புறம்.. என்னடா? பிரச்சினையே முடிஞ்சுதே!' என்றான்.

'இல்ல மகேஷ்! அதிர்ச்சியிலதான் அவங்கப்பா இறந்தது. என்ன காம்பன்ஸேட் செஞ்சாலும் அவரைத் திரும்பத் தர முடியாதில்லே. ஆனா, எங்கப்பாவும் அந்த வருத்தத்துலதான் போய்ச் சேர்ந்தாரு..'

மகேஷ் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். 'சிக்கல்தான்!' என்றான்.

'மனசு நிறையப் பிரியத்தை வச்சுகிட்டு.. பக்கத்துலயே.. ஆளையும் பாத்துகிட்டு.. எப்படிடா? நானும் மனுஷன் தானே!..' என்று கலங்குகிற நண்பனைத் தேற்றினான்.

'இன்னும் நம்பிக்கையிருக்குடா!'

ஜெயப்பிரகாஷின் முகம் மலர்ந்தது.

'எப்படி?'

'அவங்க.. டைவர்ஸ்.. வேண்டாம்.. கூட இருக்கலாம்ங்கற அளவுக்கு யோசிக்கறாங்க.. இல்லே' அதுவே வெற்றிதான்..' என்றான்.

'அடப்போடா! அது அவங்க குடும்பத்துல எல்லாரும்.. சங்கடப் படுவாங்கறதுக்காக யோசிக்கறா..'

'எப்படியோ! கூட இருக்கலாம்கற அளவுக்கு யோசிக்கறாங்க இல்லே! அதுவே பெரிய விஷயம்தான்!'

ஜெயப்பிரகாஷ் சமாதானம் ஆகவில்லை. எழுந்து ஜன்னலைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். பிறகு திரும்பி,

'ஏண்டா! நீங்கள்ளாம் தண்ணி போடறீங்களே? போட்டாக் கவலை போயிடுமா என்ன?'

மகேஷ் சட்டென்று சிரித்து விட்டான்.

'அப்படின்னா, உலகத்துல எல்லாரும் கவலையே இல்லாதவங்களா ஆயிடுவாங்களே அதெல்லாம் ஒரு வகையான எஸ்கேப்பிஸம்டா.. அந்தச் சனியன் எல்லாம் உனக் கெதுக்கு?' என்றான்.

பிறகு சற்று நேரம் மௌனத்தில் கழிந்தது. 'ஒன்னு வேணா செய்யலாம்.. இன்னைக்கு வேண்ணா ஒரு தூக்க மாத்திரையைப் போட்டுக்க. தூங்கு.. நீ எப்பவும் சொல்லுவியேடா..சமாளிக்கலாம்ன்னுட்டு.. சமாளிக்கலாம். நீ தூங்குடா..' என்றான்.

நண்பனை உறங்க வைத்து விட்டு மனைவிக்கு போன் செய்தான்.

'கலோ! ஜெ.பி. என்னவோ ரொம்ப மூட் அவுட்ல இருக்கான்.. நான் இன்னைக்கு அவன் கூட கெஸ்ட் ஹவுஸில தங்கறேன். டேக் கேர்!' என்று தகவல் தெரிவித்தான்.

யோசித்தான்.. பல்வேறு வழிமுறைகளை யோசித்தான்.

'இந்தக் கழுதை.. போனால் இன்னொன்று.. என்று நினைக்கிறவனில்லை இவன்..! விருப்பப்பட்டு.. இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்தான்.. அப்படியானால், இதுவரை.. எதுவுமே நடக்கலேங்கறானே..' என்றான்.

மறுபடியும் ஒருமுறை உறுதி செய்து கொள்வதற்காகக் காலையிலே கேட்டான்.



'ஏண்டா! நிஜமாவே.. உங்களுக்குள்ளே ஒன்னுமே நடக்கலையா?' என்று.

'ஆமடா! உனக்குத் தெரியுமில்ல.. நம்ம ஊர்ப் பொண்ணுங்க.. கல்யாணத்துக்கப்புறம் அவங்க திறமைகளையெல்லாம் வேஸ்ட் பண்ணிடறாங்களேனு சொல்வேனே? அதனால.. படிப்பு மேல அவ காட்டின இன்ட்ரஸ்ட்.. எனக்கு ரொம்பப் பிடிச்சதுடா..' என்றான்.

நண்பனைப் பற்றி பெருமையாக இருந்தது. மகேஷுக்கு..

அந்த நேரம்.. செல்போன் ஒலித்தது. மகேஷ் எடுத்தான்.

'அண்ணா!' என்று சுபாஷிணியின் குரல் ஒலித்தது.

'சொல்லும்மா..!' என்றான்.

'அண்ணா! அவர் நேத்து நைட் இங்க இருந்து கிளம்பினாரு. காலையில அத்தே இன்னும் ஊர் வந்து சேரலேன்னு போன் செஞ்சாங்க.. கொஞ்சம் மூட் அவுட்ல இருந்தாரு' என்றாள் கவலையாக.

'அம்மா...ஒரு பத்து நிமிஷம் கழிச்சு போன் செய்றியா? நான் விவரம் சொல்றேன்...!' என்றான். ஆஃப் செய்தான். ஜெயப்பிரகாஷிடம் விவரம் சொன்னான்.

'விவரத்தை சொல்லியிருக்கலாமில்லே!' என்றான்.

'வேண்டாம்... பத்து நிமிஷம் கழிச்சு போன் செய்யட்டும் இனிமேக் கொண்டு நான் செய்யச் சொல்லற விஷயங்களை ஏன் எதுக்குன்னு கேட்காம நீ செய்யணும்.. புரியுதா?' என்[று] செல்லமாக மிரட்டினான்.

ஜெயப்பிரகாஷ் புதிராகப் பார்த்தான்.

'ஆமடா! இந்த விஷயங்கள்ல.. பொண்ணுகளோட சைக்கால[ஜி] என்னன்னு எனக்கு தெரியும்... புரியதா?' என்றான் மறுபடி[யு]

'என்னமோ... செய்டா... ஆனா சுபா ரொம்ப ஸென்ஸிடிவ்... கோபக்காரி... ஞாபகம் வச்சுக்க...' என்றான்.

பத்து நிமிடங்கள் கழித்து மறுபடியும் போன் ஒலித்தது. சுபாஷினிதான்.

'என்னம்மா!' என்றான் மகேஷ்...

'அண்ணா! அவரு...!' என்றாள் தயக்கமாக.

'அவன்...இங்கதாம்மா... என்கூட இருக்கான். கெஸ்ட் ஹவுஸ்ல ராத்திரி ரொம்ப நேரம் தூங்கலே... என்னமோ மனசு சங்கடமாம். இப்பத்தான் எழுந்தான்... பத்து மணிக்குள்ள ஆபீஸ் வந்துடுவான். நீ அம்மாகிட்டே... சொல்லிடு...' என்றான்.

'நான்... நான்... அவருகிட்டே... பேச முடியாதா?' என்றாள்.

'சாரிம்மா... நான் மூட் அவுட்லே இருக்கேன் யாருகிட்டயும் பேசலே. அம்மா கூப்பிட்டாலும் சரி... சுபா... கூப்பிட்டாலும்... சரி... நான் இல்லேன்னு சொல்லிடு... அப்படீன்னுட்டான். நான்தான் நீ கவலைப்படுவியேன்னு அவனுக்குத் தெரியாம விஷயத்தைச் சொல்றேன்...' என்றான்.

ஜெயப்பிரகாஷைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான்.

'என்னம்மா! ஏதாவது சண்டையா?' என்றான் குறும்பாகச் சிரித்தபடி.

'ம்... கொஞ்சம்.. மனசு...சங்கடம்!'

'ஏம்மா! நீங்க லேடீஸாச்சே! நாங்க... ஆம்பளைங்க... எங்க அடிச்சா... எப்படி விழுவோம்னு விவரமாத் தெரிஞ்சு வச்சிருப்பீங்களே' என்று சிரித்தான்.



அந்தப் பக்கம் காற்றுப்போன பலூன் போல 'சரிங் கண்ணா! நான் வைக்கிறேன்'.. என்று வைத்தாள் சுபாஷினி.

மகேஷ் வெற்றிச் சிரிப்பு சிரித்தான்.

'டேய்! ஏன்டா... அவளைக் கஷ்டப்படுத்தறே' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'மகனே! உட்காரு... உனக்கு சில பாடமெல்லாம் சொல்லித் தரணும்' என்று அமர வைத்தான்.

நம்பர் ஒன்னு! நம்பர் ரெண்டு என்று அவன் அடுத்தடுத்துச் சொன்ன விஷயங்களைக்கேட்டு ஜெயப்பிரகாஷ் மலைத்துத்தான் போனான்.

'இப்படியெல்லாம்... வேற இருக்கா!' என்றான்.

'ஆமடா! பிஸினஸ்ன்னா... என்னன்னு உனக்கு தெரியும். இந்த விஷயம் தெரியாதில்லே..! என்றான்.

'ரொம்பக் கஷ்டமாயிருக்குமே!' என்றான்.

'கொஞ்சம்... கஷ்டப்படுங்க...இல்லேன்னா வாழ்நாள் முழுக்கக் கஷ்டப்படணும்... தெரியுமா?' என்றான்.

மனசில்லாமல் ஒத்துக் கொண்டான்.

ஜெயப்பிரகாஷை அனுப்பிவிட்டு செல்போனில் ஒரு எண்ணைப் போட்டான்.

அந்தப்புறம் ஒரு பெண்ணின் குரல் ஒலித்தது.

* * *

அன்று பகல் பன்னிரண்டு மணியிருக்கும்.

சேலத்தில் அலுவலகத்தில் இருந்தான். சுபாஷினியிடம் இருந்து போன் வந்தது.

'என்ன... இப்படிப் பண்ணிட்டீங்க!' அம்மா... நான்... அத்தை எல்லாரும் தவிச்சுப் போயிட்டோம்!' என்றாள்.

அவன் இரும்பைப் போன்ற குரலில் 'ஏன்... நான் உசிரோடதானே இருக்கேன்... கவலைப்படாதே! அப்படியெல்லாம் செத்து கித்துப் போயிட மாட்டேன்...அப்படியே போனாலும்... உனக்கு கண்டிப்பா... உனக்குத் தகவல்... சொல்லிட்டுத்தான்...போவேன்'.. என்றான்.

'அத்தான்!' என்றாள் சுபாஷினி திகைத்துப்போய்.

'இதப்பாரு! எனக்கு பெண்டிங் வொர்க்.. ரொம்ப இருக்கு... நீயும் ஏதாவது ப்ராஜக்ட்...வேலை இருந்தா பாரு...வைக்கட்டுமா' என்றான். ஆஃப் செய்தான்.

சுபாஷினிக்கு அழுகை பொங்கி வந்தது.

அழுதாள்.

அம்மாவிடம் சொன்னாள்.

அம்மா அதற்கு மேல் பேசினார். 'ஆமாடி... அந்த மனுஷனா...இருக்கக் கொண்டு பேசறார். நானா இருந்தா... முகத்திலேயே முழிக்க மாட்டேன்' என்றார்.

சுபாஷினி திகைத்துப்போய் அமர்ந்துவிட்டாள்.

## 21

**'சா**ர்.. இந்த ஸ்டேட்மென்ட் கரெக்டா, பாருங்க!' என்று நீட்டிக் கொண்டு நின்றாள் சுபாஷினி.

மேனேஜர் வாங்கிப் பார்த்தார்.



'குட்! கரெக்டாப் பண்ணியிருக்கீங்க... டோட்டல் மட்டும் சரியான்னு இன்னொரு தடவை செக் பண்ணிக்குங்க...' என்றார்.

சுபாஷினி வேலை கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக டெபுடி மேனேஜர் என்று ஒருபோஸ்டிங் கொடுத்து அலுவலகத்தில் வேலை செய்ய வைத்திருந்தான் ஜெயப்பிரகாஷ்.

ஒரு மாதமாகியிருந்தது.

அவளுக்கும், அலுவலகம் பிடித்திருந்தது. சொல்லப் போனால் அலுவலகத்தில்தான் கொஞ்சம் இயல்பாய் இருப்பான். வீட்டிற்குள் வந்தால் மற்றவர்கள் முன்னிலையில் இயல்பாக இருப்பது போல் இருப்பான். தனிமையில் விலகியே நின்றான்.

முகம் கல்லைப் போல் இருக்கும். கண்களில் இருந்து கூட எந்தவிதமான உணர்வு வெளிப்பாடும் இருக்கக் கூடாது என்று எண்ணிக் கொள்வாள். கூடவே எல்லாவற்றுக்கும் தடை விதித்தவளே தான்தானே? எந்த முகத்தோடு போய் நட்பை யாசிக்க முடியும் என்று தோன்றும். பேசுவதற்கே அச்சப்பட்டு ஒதுங்கி விடுவாள்.

நேரம் கழிப்பதற்காக ப்ராஜக்ட் தொடர்பான விஷயங்களில் ஆழ்ந்து விடுவாள்.

அவளது ப்ராஜக்ட் தொடர்பான புத்தகங்கள் வாங்கிக் குவித்ததுமில்லாமல் அலுவலகத்தின் ஒரு பகுதியில் அவளுக்குத் தேவையான உபகரணங்களோடு கூட ஒரு மினி லாப்பே செட் செய்து கொடுத்து விட்டான். அதற்கு ஒதுக்கிய நேரம் போக அலுவலக வேலை செய்தா

போதுமானது என்றும் சொல்லிவிட்டான். ஆனாலும், அவள் தன்னால் இயன்ற மட்டும் அலுவலகப் பணியில் பங்கெடுத்துக் கொண்டாள்.

திடீரென ஜெயப்பிரகாஷிடம் இருந்து அவளுக்கும் மேனேஜருக்கும் அழைப்பு வந்தது.

'போனார்கள் அமரச் சொன்னான்.

'மணியன் சார்! நானும் நீங்களும் அவசரமா டெல்லி போக வேண்டியிருக்கு..' என்றான் மேனேஜரிடம்.

'என்னைக்கு?'

'இன்னைக்கு நைட்டே'

'சரிங்க... சார்!'

அவன் சுபாஷிணியின் பக்கம் திரும்பினான்.

'நாளைக்கு ஃப்ரைடே ஒரு நாள் ஆபீஸை நீதான் பார்த்துக்க வேண்டியிருக்கும்...'

'நானா!' என்று அவள் திகைத்தாள்.

'ஏன்? உன்னால முடியாதா? ஜஸ்ட் ஒரு நாள் எம்.டி. ஊர்ல இல்லை. மன்டே கான்டாக்ட் பண்ணுங்கன்னு பொறுப்பா பதில் சொல்றது ஒரு கஷ்டமா? அது முடியாதா?' அவன் குரல் காட்டமாக ஒலித்தது கேட்டு ஒரு கணம் திகைத்தாள்.

மேனேஜர் கூடத் திகைத்துப்போய்ப்பார்த்தார். சுபாஷிணி உடனே 'சரி... நான் பார்த்துக்கறேன்..!' என்றாள் ரோஷமாக.

'தட்ஸ் குட்...!' என்றான் மேலும் தொடர்ந்தது.

'என் பி.ஏ. இருக்கார் ஹெல்ப் செய்வார்' என்றான்.

அவள் தலையாட்டினாள்.



ஒருநாள் தானே சமாளித்து விடலாம் என்று நினைத்தாள். ஆனால் அது அத்தனை சுலபமாக இருக்கப் போவதில்லை என்று அப்போது அவளுக்குப் புரியவில்லை.

* * *

பத்து மணிக்கு அலுவலகம் போனாள்.

பதினோரு மணி வரை எல்லாம் சரியாகப் போய்க் கொண்டிருந்தது.

பதினோரு மணியளவில் அந்தக் கல்லூரியிலிருந்து போன் வந்தது. சேலத்தில் அந்தக் கல்லூரியில் மேலும் புதிதாக ஒரு பிரிவு தொடங்கியிருந்தார்கள். அந்த அறிவியல் வகுப்புகளுக்காக லேப்பிற்குத் தேவையான உபகரணங்கள் கேட்டிருந்தார்கள். அந்தக் கல்லூரியின் வைஸ் பிரின்சிபல் பேசினார்.

'என்ன... மேடம்! இன்னைக்கு ஐட்டம்ஸ் வந்துடுங்களா?' என்றார்.

'சார்! நான் ஆபீஸ் ஸ்டாஃப்தான் இருக்கேன். எம்.டி. வெளியூர் போயிருக்காரு' என்றாள் காலையிலிருந்து சொன்னது போல்.

'மேடம்.. அது... உங்க பிரச்சினை. உங்க எம்.டி. இருந்தா எங்களுக்கென்ன? இல்லாட்டி எங்களுக்கென்ன! பொருட்கள் எங்களுக்கு வந்து சேர வேண்டிய நாள் இன்னைக்கு. அனுப்பறதுக்கு வழியைப் பாருங்க..' என்றார் வைஸ் பிரின்சிபால்.

அவள் ஒரு நிமிடம் திகைத்துப் போனாள். பிறகு தணிந்த குரலில்.

'இன்னும் பத்து நிமிடத்திலே உங்களைக் கூப்பிடறேன்..' என்றாள்.

'ம்..!' என்று உறுமலாகக் கூறிவிட்டு வைத்தார்.

பி.ஏ.வை அழைத்து விபரம் கேட்டாள்.

'அம்மா! தலை கீழா நின்னாலும் இன்னைக்கு அந்தக் காலேஜுக்கு நாம டெலிவரி கொடுக்க முடியாது. நடுவில ஏதோ பிராப்ளம்னு...ரோடெல்லாம் பிளாக்காயிருச்சு... நாளைக்குத்தான் இட்டம்ஸே வருது...' என்றார்.

'ஓ... வேற வழியே... இல்லையா?' என்றாள் கவலையாக.

'இல்லம்மா..!' என்றார்.

மறுபடியும் அந்த வைஸ் பிரின்சிபலை அழைத்தாள்.

'சார்! ரொம்ப மன்னிக்கனும். திங்கட்கிழமை காலை இட்டம்ஸ்லாம் கண்டிப்பா டெலிவரி செய்யறோம்...' என்றாள்.

அந்தப் பக்கம் அவள் மன்னிப்பில் அந்த வைஸ் பிரின்சிபல் குளிரவில்லை. மாறாக.

'பாருங்கம்மா! உங்களை மன்னிக்கறது என் வேலை யில்லை. ஒரு நல்ல கம்பெனின்னா... ஒரு இன்டக்ரெட்டி வேண்டாமா? சொன்ன வார்த்தையைக் காப்பாத்த வேண் டாமா? இதுக்குத்தான்... நான் எங்க பிரின்சிபல் கிட்டே அந்தக் கம்பெனி வேண்டாம்னு படிச்சுப் படிச்சுச் சொன் னேன். வேற கம்பெனின்னா... நல்ல கமிஷனாவது கிடைச் சிருக்கும்...' என்று பொரிந்தார்.

சுபாஷிணிக்கு ஓரளவு விஷயம் புரிந்தது. அழுத்தமான குரலில் ''நான் மிஸஸ். ஜெயப்பிரகாஷ் கம்பெனி ஓனர். நாங்க கமிஷனுக்காக வியாபாரம் செய்யறவங்க இல்லே.



எங்க ப்ராடக்ட்ஸ் குவாலிட்டியில் ரொம்ப நல்ல ப்ரா டக்ட்ஸ். அது உங்க பிரின்சிபலுக்குத் தெரிஞ்சிருக்கு. உங்களுக்குத் தெரியலே... நான் அவங்ககிட்டே பேசனும்..' என்றாள்.

''அவரும் ஊர்ல இல்லே!' என்றார் அந்த ஆள் சற்றே அடங்கிய குரலில்.

சுபாஷிணி எரிச்சலானாள்... 'ஓ.கே... சார்! நான் இன்னும் ஒன் அவர்லே உங்களுக்குப் பதில் சொல்றேன்...'

'பாஸிடிவ்வா நடத்திக் குடுக்கப் பாருங்க...' என்று சொல்லி விட்டு டொக்கென்று வைத்தார் வைஸ் பிரின்சிபல்.

அவளுக்கு அழுகையே வந்து விடும் போல் இருந்தது. பி.ஏ.வைப் பார்த்தாள்.

'கரெக்டாப் பதில் குடுத்தீங்கம்மா!' என்று அவர் சிரித்தார்.

'சார்! உங்களுக்குப் புரியலே! பதில் குடுக்கறதில்லை பிரச்சினை நாம இன்னைக்கே...அந்தக் காலேஜுக்கு டெலிவரி செஞ்சாகனும்...' என்றாள்.

'அதெப்படிம்மா! டெக்ஸ்டைல் இட்டம்னா கூடவேற ஏதாவது கம்பெனியில இருந்து வாங்கி இட்டு நிரப்பிட லாம்..' என்றார்.

அவள் முகம் பிரகாசமாகியது.

'குட்... தட்ஸ் அன் ஐடியா! இன்னைக்கு வேற ஏதாவது காலேஜுக்கு டெலிவரி உண்டா?' என்றாள்.

'அடடா! இதை முதல்லேயே செஞ்சிருக்கலாம். கோய முத்தூர் காலேஜ் ஒன்னுக்கு கிட்டத்தட்ட இதே இட்டம்ஸ் லாரியில எடுத்துகிட்டுப் போயிட்டிருக்காங்க. கிளம்பி.. ஒன்.. அவர் ஆச்சே...!' என்றார் பி.ஏ.

'டிரைவர்கிட்டே செல்போன் இருக்கில்லே... உடனே திரும்பி வரச் சொல்லுங்க... அந்தக் கோயம்புத்தூர் காலேஜ் நம்பர் குடுங்க... நான் பேசறேன்..' என்றாள்.

'அது சரிம்மா! ஐயா கிட்டே பர்மிஷன் வாங்காம!' என்று இழுத்தார் பி.ஏ.

'நான் பேசறேன்!' என்று தன் செல்போனை எடுத்தாள். ஜெயப்பிரகாஷை அழைத்தாள்.

வைஸ்பிரின்சிபல் பேசியதையும், தான் அவருக்குக் கோபமாகப் பதில் சொன்னதையும் சொன்னாள். அந்தப் புறம் ஒரு நிமிடம் மௌனம் நிலவியது.

'உன்னை யார் கோபமாப் பேசச் சொன்னது?' என்றான்.

'ப்ளீஸ்! அத்தான் புரிஞ்சுக்குங்க...அவரு நம்ம வியாபாரத்தையே குறையாப் பேசறாரு. அப்ப எப்படி சும்மா... இருக்கறது?' என்றாள்.

'அது சரி... இப்பப் பிராப்ளத்தை எப்படி சால்வ் செய்யறது? நீ தானே பிரச்சினையை கிளப்பினே? நீயே சல்யூஷன் சொல்லு!' என்றான்.

அவள் சொன்னாள். தான் எடுத்திருக்கிற முடிவைச் சொன்னாள். மறுபடியும் அந்தப்புறம் மௌனம் நிலவியது.

'நீங்க பர்மிஷன் மட்டும் குடுத்தாப் போதும். நான் அந்தக் காலேஜ் பிரின்சிபல்கிட்டே பேசறேன்' என்றாள்.

'சரி! பேசு!' என்றான். ஆஃப் செய்துவிட்டான்.

பேசினாள்.

'சார்! இன்னைக்கு டெலிவரி செய்ய முடியாத சூழ்நிலையாப் போச்சு. நெக்ஸ்ட் வீக்ல கண்டிப்பா... டெலிவரி செய்யறோம்' என்றாள்.



'அப்படியா? சரி.. சரி!' என்று ஒத்துக் கொண்டார்.

அவர் இவ்வளவு சுலபமாக ஒத்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கவில்லை. மகிழ்ச்சியடைந்தாள்.

மீண்டும் லாரி திரும்ப வந்து அந்தக் குறிப்பிட்ட கல்லூரிக்கு சரக்கு போய்ச் சேரும் வரை கொஞ்சம் படபடப்பாக இருந்தாள்.

பி.ஏ.வை உடன் அனுப்பி டெலிவரி செய்த பிறகு வைஸ் பிரின்சிபலிடம் கையெழுத்து வாங்கி வரச் சொன்னாள். பிறகுதான் கணவனுக்கு போன் செய்தாள்.

கோயமுத்தூர் காலேஜ் பிரின்சிபல்கிட்டே என்ன சொன்னே?' என்று கேட்டான் ஜெயப்பிரகாஷ்.

தான் சொன்னதைச் சொன்னாள்.

'ஏன்? இந்த மாதிரி வேற ஒரு காலேஜுக்குக் கொடுக்க வேண்டியதாப் போச்சுன்னு சொல்லியிருக்கலாமில்லே!' என்றான்.

'அத்தான்! ரெண்டு காரணத்துக்காக நான் அதைச் சொல்லலே. ஒண்ணு இந்த வைஸ்பிரின்சிபலுக்கும் நமக்கும் ஏற்பட்டது நம்ம பிரச்சினை. அதை எதுக்கு அவர்கிட்டே சொல்லணும்? இன்னொன்று அதைச் சொல்லப்போய் ஏன் அவங்க காலேஜ்தான் முக்கியமா? எங்க காலேஜைக் கண்டா அப்படித் தோணலையான்னு கேட்டா என்ன பதில் சொல்றது? அதான். சொல்லலே...' என்றாள்.

அவள் சற்றும் எதிர்பாராத விதமாக அவன் சிரித்தான்.

'குட்' கரெக்டாத்தான் யோசிச்சிருக்கே..!' என்றான்.

அவள் குளிர்ந்து போனாள். அவன் மேலும் பேசினான்.

'நானும் கோயமுத்தூர் காலேஜ் பிரின்சிபல்கிட்டே பேசினேன்.'

'ஓ... அதான்.. நான் கேட்டவுடனே ஒத்துக்கிட்டாரா.. தாங்க்ஸ் அத்தான்... என்றாள்.

'என்ன செய்யறது? டென்ஷன் எடுத்தது என் வைஃப்பாச்சே! அவங்களுடைய எல்லா டென்ஷனுக்கும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டியது என் கடமையாச்சே! பரவால்லே... தேறிட்டே!' என்றான்.

சிரித்தபடி ஆஃப் செய்தான்.

சுபாஷிணியும் சிரித்தபடி ஆஃப் செய்தாள். இத்தனை நடந்த போதும் வந்த மற்ற போன் கால்களுக்கு சரியாகப் பதில் சொல்லி சமாளித்துக் கொண்டிருந்தாள்.

இப்போது பிரச்சினை முடிந்த பின்தான் டென்ஷன் புரிந்தது.

சாப்பிட அமர்ந்தாள்!

கம்பெனி பியூன் ஓடி வந்து சாப்பிடுவதற்குப் பரிமாறினான்.

சிந்தனையிலாழ்ந்தாள்.

தன் கணவனின் பாராட்டுத் தன்னை இந்த அளவுக்கு மகிழ்விக்கும் என்பதை அவள் இதுவரை உணர்ந்திராத அளவுக்கு இன்றைக்கு மகிழ்ந்தாள்.

அதே சமயம் ஜெயப்பிரகாஷ் தன் மேனேஜரிடம் 'பரவால்லே! சார்! உங்க மேடம் கரெக்டாத்தான்ஹேண்டில் செஞ்சிருக்காங்க...' என்று தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டிருந்ததை அவள் அறியவில்லை.



பாதி உணவுண்டு முடிந்தவுடன் இன்னொரு எண்ணம் தோன்றியது.

'அதென்ன! என் வைஃப் எடுக்கிற எல்லா டென்ஷனுக்கும் ஒத்துழைக்க வேண்டியது என் கடமைங்கறார்.' பொடி வைக்கிறார் என்றும் யோசித்தாள்.

ஒருவேளை... ஒருவேளை...வீட்டில் அதனால்தான் தன்னிடம் விலகியிருக்கிறாரோ! இன்றைக்குக் கேட்ட இன்னொரு கேள்வியும் அவள் நெற்றிப் பொட்டில் அறைந்தது.

'ப்ராப்ளம் கிரியேட் செய்தது நீ! சல்யூஷனும் நீதானே சொல்லணும் என்றாரே. அப்படித்தான்... வாழ்க்கையிலயும்... நான் தான் முடிவெடுக்க வேண்டுமா?'

அன்றைக்கு அம்மா கேட்ட கேள்வியின் ஆழம் புரிந்தது. வீரியம் புரிந்தது.

தன் எதிர்கால வாழ்க்கை பற்றிய சிந்தனைகள் அவளுக்குள் முதல் முதலாக ஓட ஆரம்பித்தது.

இரவு படுக்கையில் படுத்த பின்பு கூட சிந்தனை ஓடிக் கொண்டே தான் இருந்தது.

போன மாதத்தில் அம்மா தன்னிடம் பேசியது அப்படியே மனதுக்குள் படம் போல் விரிந்தது.

## 22

முந்தின நாளிரவு எல்லாவற்றையும் கொட்டி விட்ட நிம்மதியில் அன்றைக்கு நன்றாக உறங்கிவிட்டாள் சுபாஷிணி.

காலையிலும் விழிப்பிற்கு நேரமாகிவிட்டது. எழுந்த போது சித்ராவும், ரகுவும் கல்லூரிக்கும், ஸ்கூலுக்கும் கிளம்பு கிற பரபரப்பில் இருந்தார்கள். அவளும் அம்மாவிற்கு உதவியாக சமையலறைக்குள் நுழைந்தாள்.

பத்து மணிக்கு மேல்தான் நேரம் கிடைத்தது. சாப்பாட்டுக் கடை முடிந்து பாத்திரங்களை ஒழுங்கு படுத்தி விட்டு அம்மா அவளை அழைத்தார்.

'சுபா! உட்காரு!' என்றார்.

டைனிங் ஹாலில் இருந்த டைனிங் டேபிளில் இரு புறமும் அமர்ந்தார்கள்.

'சுபா! நான் ஒரு கேள்வி கேக்கறேன். அதுக்கு பதில் சொல்லு...' என்றார்.

'நடக்கப் பழகற குழந்தைக்கு ஹெல்ப் பண்ணனும். அது நியாயம். ஆனா, நடக்கத் தெரிஞ்சவங்களை யாராவது இடுப்புல தூக்கிட்டு நடப்பாங்களா?'

இல்லையெனத் தலையாட்டினாள் சுபா.

'பாரு... சுபா! எனக்கும் அப்பவெல்லாம் விவரம் தெரி யலே. எப்பக் குடும்பத்தை நிர்வாகம் செய்ய ஆரம்பிச் சேனோ...அப்பத்தான் உலகமே புரிந்தது... தெரியுமா?'

சுபா... மௌனமாக அமர்ந்திருந்தாள்.

'நல்லா... யோசிச்சுப் பாரு! உங்க அப்பாவும், மாம னாரும்... காலேஜ் நாட்களில் ஃபிரண்ட்ஸ். பேச்சு வாக்கில கூட்டுப் போட்டு வியாபாரம் செஞ்சுக்கலாம்னு பேசி னாங்க... சரிதான்... ஆனா... உங்க மாமனார் வசதிக்கு அதை நிறைவேத்தணுன்னு என்ன இருக்கு. ஸ்கூல்ல படிக்கும்போது காலேஜ்ல படிக்கும்போது என்னென்னவோ



திட்டம் போடறதுதான். எல்லாம் நடக்கும்னு... நாம சொல்ல முடியுமா?'

மறுபடியும் மௌனமாகத் தலையாட்டினாள் சுபா.

'ஆனா... உங்க மாமனார் தான் சொன்ன வாக்கைக் காப் பாத்தினாரு...! உங்க அப்பாவை பங்குதாரரா சேத்து கிட்டாரு..' என்றார்.

'ஆமா! முப்பது பைசாக் கூட்டு!' என்றாள் சுபா.

'இத பாரடி சுபா, முப்பது பைசாவோ... ஐம்பது பைசாவோ... இல்லை... பாயிண்ட்... உண்மை.. என்னன்னா... உங்கப்பா பத்துப் பைசாக் கூடப் போடலே... நான் சொல்றது பத்து பர்சன்ட் இல்லே... நிஜம்மாவே... பத்துப் பைசாக் கூடப் போடலே... அது... தெரியுமா?'

சுபாஷிணிக்கு இது செய்தி.இதுவரை அவளுக்கு அது தெரிந்திருக்கவில்லை.

'அப்பாவோட பங்கை உழைப்புக் கூட்டுன்னு வச்சி கிட்டு முப்பது சதவீதம் ஒதுக்கினாங்க... அது தெரியுமா?' என்றார்.

'எனக்கு இதெல்லாம் தெரியாதும்மா!' என்றாள் இறங்கிய குரலில்.

'முழுசாத் தெரிஞ்சுக்காம எதுக்குடி சண்டை போட்டே!' என்றார் நவநீதம் கடுப்பாக.

'எனக்கென்னம்மா தெரியும்? அவருதானே சொன்னாரு!' என்றாள்.

'அதுதாண்டி எனக்கு கவலையா இருக்கு. இப்படி ஒரு பைத்தியக்காரப் பிள்ளை இருக்குமா? தேவையில்லாம பழைய குப்பையைக் கிளறிகிட்டு!' என்று பொருமினார்.

'இல்லம்மா... எல்லாம் எனக்குத் தெரிஞ்சிருக்கணுமாம்.'

'அதுதாண்டி...அந்த நல்ல குணம்தான் எனக்கு ஆச்சரியமாயிருக்கு சரி... விடு... நான் சொன்னா...நம்ப மாட்டே! முழுசையும்... கேளு...' என்றார் தொடர்ந்தார்.

'இவரு அவரை டிசிம்பாரு. மாமா இவரை டிஆர்ம்பாரு. ரொம்ப தோஸ்த்துங்கதான். உங்கப்பா ஆபீஸில நிர்வாகம் செஞ்சாரு. அதுக்குண்டான முப்பது பர்செண்டை அவங்க கரெக்டாத்தான் குடுத்தாங்க... அது அந்தக் காலத்துல பெரிய தொகைதான்... தெரியுமா? ஆனா... உங்கப்பா... அதை அப்படியே செலவு செய்வாரு. முதலீடுங்கற பழக்கமே இல்லை!'

'அப்புறம்'

'அப்புறமென்ன? நான் வந்தேன். ரொம்ப சந்தோஷமா வச்சிருந்தார். எந்தக் குறையும் இல்லே... நீங்கள்ளாம் பொறந்தீங்க... உங்களையும் நல்லாத்தானே வளர்த்தாரு! பாட்டுக் கிளாசென்ன, டான்ஸ் கிளாசென்ன, ஸ்கூலுக்கு ஆட்டோ... என்ன... போக்குவரத்துக்குக் காரு என்னே..! அப்படித்தானே இருந்தோம்!'

'ஆனா... உங்க மாமனார் தன்னோட பங்குக்கு வந்த லாபத்தையெல்லாம் புத்திசாலித்தனமா முதலீடு செஞ்சாரு. வேற...வேற தொழிலுங்களை ஆரம்பிச்சாரு... உங்க அப்பாவை அப்படியெல்லாம் ஆரம்பிக்க வேண்டாம்னு அவங்க சொல்லலையே!' என்றார்.

'இருந்தாலும்.. அப்ப... ஆபீஸ் நிர்வாகம் அப்பா பார்த்தாருதானே...! என்றாள்.

'ஆபீஸ்... நிர்வாகம்!' 'அம்மா சிரித்தாள். 'இவருக்குக் குடுத்ததிலே மூணுல ஒரு பங்கு குடுத்தாலே... ஒரு நல்ல



மேனேஜர் கிடைச்சிருப்பாரு தெரியுமா? அதுமட்டும் இல்லடி... கொஞ்ச காலம் கழிச்சு... ரெண்டு பேரும் தண்ணி போட ஆரம்பிச்சாங்க... என்றார்.

முகத்தில் வருத்தம் மண்டியது. 'ஆரம்பிச்ச தென்னவோ ரெண்டு பேருமேதான். ஆனால்... உங்க மாமனாருக்கு எப்பப்ப எந்த அளவோட நிறுத்திக்கணும்னு தெரிஞ்சிருந்தது. உங்கப்பாவுக்கு அது தெரியலே!' என்றார்.

சுபாஷினி தன்னை மறந்து கவனிக்க ஆரம்பித்தாள்.

'அந்தப் பழக்கம் வந்தவுடனே.. அவருக்குத் தெரிஞ்சும் தெரியாமலும் நான் சேத்து வச்சதெல்லாம் கரைய ஆரம்பிச்சுது!' என்றார்.

அந்த நாட்கள் நினைவு வர வேதனையுடன் சற்று நேரம் அமர்ந்துவிட்டார். மகளிடம் இதையெல்லாம் சொல்ல வேண்டி உள்ளதே என்று நினைத்தார் போலும்.

'உங்கப்பா...ரொம்ப... நல்லவர்டி... ஆனா, உலகம் தெரியாதவரு... ஆபீஸ்ல. எவன் வந்து கேட்டாலும்... நன்கொடையைத் தாராளமா வீசிடுவாரு... அதே சமயத்துல உங்க மாமனாரு அலைஞ்சு அலைஞ்சு மார்க்கெட்டிங் பண்ணுவாரு. அவருக்கு ஆபீஸ்ல இப்படி ஒரு ஆள் உட்கார்ந்துகிட்டு லாபத்தை அள்ளி வீசினா... கோபம் வருமா... வராதா?'

இப்போது சுபாஷிணிக்குப் புரிந்தது. உண்மையில் மார்க்கெட்டிங்... கஷ்டமான விஷயம்தான் என்பது. பேச்செழாமல் அம்மாவைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

'உங்க மாமனாருக்கு கையில் காசு வாங்கிட்டுத்தான் சரக்கு குடுக்கணும்கிற பாலிசி. ஆனா உங்கப்பா கடனுக்குக்

குடுத்துடுவாரு... அதிலயும் பிரச்சினைகள் வர ஆரம்பிச்சிருச்சு... எனக்கு.. இன்னைக்குப் புரிஞ்ச மாதிரி... அன்னைக்குப் புரியலே... தெரிஞ்சிருந்தா... நானே ஆபீஸ் நிர்வாகத்துக்குப் போயிருப்பேன்!

'உங்க மாமனாராவது என்கிட்ட பேசியிருக்கலாம். பேசலே... கோபத்தை வேற விதமாக் காட்டிட்டாரு. இவரால வந்த நஷ்டத்துக்கு ஈடு கட்டறதுக்கு நஷ்டக் கணக்கு காட்டினாரு. முப்பது சதவீதத்தை குறைவாக் காமிச்சிருக்காரு. அப்புறம்.. அப்புறம்..!' என்று நிறுத்தினார்.

சுபாஷிணியின் கண்கள் கலங்கின. அம்மாவின் வேதனை புரிந்தவளாய்ப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

'உங்கப்பாவுக்கு உடம்பு கெட்டுடுச்சு...அந்த நேரத்துல உங்க மாமனார் எழுதி வாங்கிட்டாரு... அப்படி திடீர்னு செஞ்சது வேண்ணா தப்பா இருக்கலாம்.. ஆனா, அவரோட கோணத்துல இருந்து பார்த்தா... உங்கப்பாவை ரொம்ப தூரம்.. அவரு பொறுத்துகிட்டுத்தான் இருந்திருக்காரு..' என்றார்.

சுபாஷிணிக்கு அன்றைக்குப் புரிந்தது. எல்லா விஷயத்துக்கும் இரண்டு கோணங்கள் உண்டு என்பது.

'வேண்டாம்மா...போதும்... போட்டு மனசை வருத்திக்காதே..' என்றாள் கலங்கிய குரலில்.

'இல்ல.. சுபா. பேச்சுன்னு வந்தாச்சு... அதுவும் உன் வாழ்க்கை பாதிக்கப்பட்டு நிக்கும்போது... நான் எப்படி சும்மா இருக்கிறது? ஆனா... உங்க மாமனார் செஞ்சதுக்கு நேர்மாறா... உங்க மாமியார் எல்லாத்தையும் சரி செஞ்சாங்கடி... தெய்வம்படி.. அவங்க... நீ தினம் பூப்போட்டுக்கும்பிடோணும்படி.. அவங்களை...' என்றார்.



'அது உண்மைதாம்மா... ஃபைன் லேடி..' என்றாள் சுபாஷிணி மனதார.

'உங்க மாமனார் நஷ்டக் கணக்கு காட்டாருன்னு தெரிஞ்ச உடனே... பி.ஏ. மூலமா... எவ்வளவு நமக்கு நஷ்டம்னு தெரிஞ்சு. அதைத் தன்னோட சொந்த சொத்து வருமானத்துல இருந்து ஈடு கட்டித்தான். நம்ம வீட்டை வாங்கிக் குடுத்தாங்க...' என்றார்.

'ஓ...!' என்றாள். இதுவும் அவளுக்கு இவ்வளவு விவரமாகத் தெரிந்திருக்கவில்லை. பகலுணவுக்கான சமையல் வேலையை ஆரம்பித்தார்கள் வேலை செய்து கொண்டே பேசினார்கள்.

அம்மா சொன்னாள். 'சுபா... நான் மகாபாரதத்துல படிச்சிருக்கேன் துரோணரும், துருபதனும், குருகுலத்துல ஒண்ணாப் படிச்சாங்களாம். நண்பர்களாம் துருபதன் மகா ராஜாவாம். அவன் அடிக்கடி நான் ராஜாவானதும் உனக்குப் பாதி ராஜ்யத்தையே தருவேன் என்றாராம். ஆனா, பின்னாடி குழந்தைக்குப் பாலூட்டறதுக்கு ஒரு பசுவாவது குடுன்னு துரோணர் போய் நின்னப்ப அவமானப்படுத்திட்டாராம். அந்தக் கோபத்துல பின்னாடி அருச்சுனனை விட்டுத் தேர்க்காலால் கட்டி இழுத்துட்டு வரச் சொன்னாராம். அவமானப்பட்ட துருபதனும் துரோணரைக் கொல்றதுக்கு ஒரு மகனையும், அருச்சுனனைக் கல்யாணம் செய்ய ஒரு மகளையும் யாகம் பண்ணி கிடைக்கப் பண்ணிகிட்டாராம். ஆனா...உங்க மாமனார் சொன்ன வாக்கைக் காப்பாத்தினார்டி. ஆனா உங்கப்பாதான் கிடைச்ச வாய்ப்பைக் காப்பாத்திக்கலை...' என்றார்.

நீண்ட தொரு பெருமூச்சு விட்டார்.

மகள் வாழ்க்கை நிலைக்க வேண்டுமென்பதற்காகத் தன் கணவனின் பலவீனங்களைப் புட்டுப் புட்டு வைக்கிற, மகாபாரதத்தில் இருந்து கதை சொல்கிற தாயை சுபாஷிணி வாஞ்சையாய்ப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'அம்மா... பெரிய தப்புப் பண்றே?' என்றாள்.

'என்ன?'

'உங்க வீட்டுக்காரரை விட்டுக் குடுத்துப் பேசறியே..!' என்றாள்.

நவநீதம் புன்னகைத்தார்.

'ஆமாடி... தப்புத்தான்... தினமும் ஒரு முழம் பூப்போடு வேன்.. அவரு படத்துக்கு.. இன்னைக்கு ரெண்டு முழமாப் போட்டு மன்னிப்பு கேட்டுக்கறேன்...' என்றார்.

சுபாஷிணி சிரித்தாள். 'பயங்கர காக்கா வா இருக்கே?' என்றாள்.

அம்மா அவளை சிந்தனையுடன் பார்த்தார். 'சுபா! அவர் இருந்திருந்தாக் கூட நான் செஞ்சது சரிதான்னு சொல்லு வாரு. அது மட்டுமில்லடி இன்னும் முடியலைடி.... மீதியும் கேளு' என்றார்.

'சரிம்மா... எல்லாத்தையும் சொல்லி முடிச்சுடு.' என்றாள் சுபாஷிணி.

'வெறும் ஏழாயிரம் ரூபா வீட்டு வாடகையை வச்சுக் கிட்டு மட்டுமா... நிம்மதியா இருந்தேன்? வடிவுக்கா உங்க படிப்புக்கு, கல்யாணத்துக்குன்னு ஒரு தொகை ஃபிக்ஸட்ல போட்டு வச்சாங்க... அதுல வர்ற வட்டியை வச்சுத்தான். உங்க படிப்புச் செலவைப் பார்த்தேன்' என்றார்.



'ஒருவேளை... இதெல்லாம் எங்க வீட்டுக்காரருக்குத் தெரியலயோ... என்னமோ' என்றாள் சுபாஷிணி.

'சுபா!' என்றார் அம்மா ஆழ்ந்த கவலையுடன்.

'சொல்லும்மா...!' என்றாள்.

'நீயும்.. மாப்பிள்ளையும் பேசியதெல்லாம்.. நேத்துக் கேட் டேண்டி. என்னமோ டைவர்ஸ்... கிவர்ஸ்ன்னு காதில விழுந்தது. அப்படி மட்டும் ஏதாவது நடந்துச்சு... அப்புறம் என்னை நீ உயிரோடவே பார்க்க முடியாது' என்றார்.

'ஐயோ' அம்மா... என்ன பேச்சுப் பேசறே!' என்றாள் சுபாஷிணி பதறிப் போய்.

'ஆமாடி... நிஜந்தான்..!' என்று அம்மா அழுவதைப் பார்த்து அவளும் அழுதாள். அம்மா மேலும் தொடர்ந்தார்.

'நீதாண்டி என்னென்னமோ புத்தகமெல்லாம் படிச்சுட்டு.. பழசெல்லாம்.. எதுக்கு? நிகழ் காலத்துல இருப்போம்னு சொல்லுவியே...!' என்றார்.

அந்த நீண்ட பேச்சுக்குப் பிறகு அம்மா அதைப் பற்றி மறுபடியும் பேசவில்லை. ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் சொன்னார்.

'சுபா! ஒரு ஆயிரம் ரூபாயை முதலீடா ரெண்டு பே கிட்ட குடுத்தா... ஒருத்தன் ஜெயிக்கறான்.. ஒருத்த தோக்கறான்... நிர்வாகம்ன்னா என்ன விளையாட்டுன் நெனச்சியா? அதுல திறமையுள்ளவன்தான் ஜெயி முடியும்! என்று.'

அன்றிரவே அவள் புறப்பட்டு விட்டாள்.

* * *

பழைய நினைவுகள் அலைமோத புரண்டு படுத்தாள்.

இன்றைய பிரச்சினையின் போது அவளுக்கு புரிந்தது. நிர்வாகம் என்பது எவ்வளவு கடினமான விஷயம் என்று.

ஊரிலிருந்து வந்ததற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் நினைப்பாள். இன்றைக்கு மன்னிப்பு கேட்டு விட வேண்டுமென்று. ஆனால் அவன் இறுகிய முகம் பார்த்து நெருங்கவே அஞ்சினாள்.

ஒரு நாள் அவளே அவனிடம் போய் 'ஆபீசுக்கு வரட்டுமா? வேலை பழகட்டுமா?' என்றாள்.

அவன் லேசாக இடது பக்கம் பாக்கெட்டை தட்டிக் கொண்டு 'வாயேன்!' என்றான். அவ்வளவுதான் பிரதிபலிப்பு.

வழக்கம்போல் பி.கே. என்று திட்டிக் கொண்டாள்.

இந்த முறை வரட்டும்...அச்சம்... மடம்... நாணம் பயிர்ப்பு இதெல்லாம் ஓரங்கட்டி வைத்து விட்டு அவரிடம் மனம் விட்டுப் பேச வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அவசியப் பட்டால்... தானே வலிய... நெருங்க வேண்டும்' என்று எண்ணியவள்

வெட்கத்துடன் புன்னகைத்துக் கொள்டாள்.

அந்த நேரம்!

செல்போன் ஒலித்தது. எடுத்தாள்.

'ஹலோ! ஜெ.பி. இருக்காரா?' என்று குரல்.

பழகிய குரல்போல் ஒலித்தது...

'நீங்க..?!'

'நான் ரம்யா...!



'ஹேய்! ரம்யாவா?... நீ எங்க இருக்கே.'

'ஓ..! சுபாவா.. தப்பா.. உன் நம்பர் அடிச்சுட்டேன்... போலிருக்கு.. ஐ ம்... சாரி!

'இருடி... இப்ப எங்கே இருக்கே?'

'நான் இப்ப சேலத்துலத்தான் இருக்கேன்...'

'அப்படியா? எப்ப வந்தே?' என்றாள் சுபா மகிழ்ச்சியுடன்.

'நான் வந்து பத்து நாளாச்சு... ஜெ.பி. சொல்லலையா? இங்க காலேஜ்ல வேலை வாங்கிக் குடுத்துருக்காரு. நம்பளோட நியூ ஃபேர் லாண்ட்ஸ் பங்களாவிலதான் இருக்கேன்' என்றாள்.

'ஓ!' என்றாள் சுபாஷிணி.

'சரி... நான் வைக்கிறேன். அவர்கிட்டே பேசணும்..' என்றாள் ரம்யா அலட்டலாக.

சுபாஷிணியின் ஆர்வமெல்லாம் வடிந்து போனது. இவள் வந்து பத்து நாளாகிறதாமே! சொல்லவே இல்லையே! பேச்சுக்குப் பேச்சு ஜெ.பி. போடுகிறாள். நம்ப பங்களாவாமே? என்ன நடக்கிறது?'

முதன் முதலாக அவள் மனத்தில் கலக்கம் ஏற்பட்டது. கோபம் கூட வந்தது. உடனே உள் மனது கேட்டது.

'இப்படியெல்லாம் கோபப்பட உனக்கு என்ன உரிமை இருக்கிறது? அல்லது... அவருக்குத்தான் என்ன உரிமை கொடுத்திருந்தாய்?' என்று.

உடனே இன்னொரு மனது சொன்னது.

'தன் தகப்பன் செய்த தப்பையே விவரமாகச் சொன்னவர்... தான் தப்பு செய்ய மாட்டார். அப்படியே

செய்தாலும்... தனக்குத் தெரிவிக்காமல் செய்ய மாட்டார்' என்று.

இரண்டு விதமான மனங்களும் ஒன்றுடன் ஒன்று பட்டி மன்றம் நடத்திக் கொள்ள அவள் உடல் தளர அமர்ந்து விட்டாள்.

## 23

இரண்டு மூன்று நாட்களும் வேலை கடுமையாக இருந்தது.

ஜெயப்பிரகாஷ் எக்ஸ்போர்ட் யூனிட்டைப் பார்க்க வேண்டுமென்று இடையிடையே போய் வந்தான். மேனேஜருக்கும், அவளுக்கும் வேண்டு மட்டும் வேலை இருந்தது.

எப்போதும் உணவுண்ணும்போது மட்டும் இருவரும் ஒன்றாகச் சாப்பிடுவார்கள். கடந்த இரண்டு மூன்று நாட்களாக அதுவும் கூட நடக்கவில்லை.

அவன் நேரம் கிடைத்த போது சாப்பிட்டு விட்டு ஓடினான். அவளும் பரிமாறி விட்டுப் பேசாமல் நிற்பாள். செல் போனில் பேசவே அவனுக்கு நேரம் சரியாக இருக்கும். இத்தனைக்கும் நடுவிலும் ரம்யாவின் மர்மமான வருகை அவள் மனதில் ஊவா முள் போல் உறுத்திக் கொண்டே இருந்தது.

தன்னிடம் மறுபடியும் தொடர்பு கொள்ளவில்லை. நேரடியாக அவரிடமே பேசிக் கொள்வாள் போலும் என்று எண்ணிக் கொண்டாள்.



மூன்றாம் நாள் மாலை!

மேனேஜர் எங்கேயோ போயிருந்தார். எப்போதும் மேனேஜர் போனை எடுத்துத் தேவைப்பட்ட போது மட்டுமே ஜெயப்பிரகாஷிடம் கொடுப்பார்.

அன்றைக்கு போன் ஒலிக்கவும் அவள் எடுக்கிற அதே நேரத்தில் ஜெயப்பிரகாஷும் எடுப்பதை உணர்ந்தாள். வைக்கலாமா என்று யோசிக்கையிலேயே அது ரம்யாவின் குரல் என்று அறியவும் அப்படியே கையில் வைத்துக் கொண்டாள்.

'ஹலோ.. ஜெ.பி... யா?' என்றாள் ரம்யா.

'ம்... ஸ்பீக்கிங்..'

'நான் ரம்யா!'

உடனே அவன் குரலில் உற்சாகம் தோன்றியது.

'ஹல்லோ! எங்கேயிருந்து பேசறே! ஏன் ஆபீஸ் போன்ல கூப்பிடறே... செல்லுக்குக் கூப்பிட வேண்டியதுதானே!'

'அதைத்தான் ஆஃப் பண்ணி வச்சுட்டீங்களே... அதிருக்கட்டும்.. நான் ஒருத்தி இந்த ஊர்லதான் இருக்கேன்னு... ஞாபகம்.. இருக்கா...!'

அவன் சிரித்தான்.

'மறப்பேனா? இந்த ஊருக்கு வரவச்சதே நான்தானே... அது சரி.. விஷயத்தைச் சொல்லு...!'

ரம்யா 'என்ன பிஸினஸ் லைக்கா பேசறீங்க!' என்று சிணுங்கினாள்.

'மேடம்! இது ஆபீஸ் போன்! விஷயத்துக்கு வாங்க!'

'என்ன பெரிய விஷயம்? நான் வேற என்ன கேட்பேன்? இன்னைக்கு இங்க வர்றீங்களா? நம்ப பங்களாவுக்கு! கொஞ்சம் நேரம் இருப்பீங்களாம்?'

'எவ்வளவு நேரம்!'

'ஜஸ்! ஒரு ஒன் அவர்!'

'ஓ.கே. வரேன்..' என்று போனை வைத்தான்.

அவளும் மெதுவாக வைத்தாள்.

தன் தோழி தன் ஊருக்கு வந்திருக்கிறாள். கணவனே வரவழைத்திருக்கிறான். தனக்குத் தெரியாமல் சந்திக்கிறார்கள்.

தன் நிலைமை எவ்வளவு மோசமாகப் போய்விட்டது? இத்தனைக்கும் யார் காரணம் நானேதான்.

'ஜெ.பி.யா... ஜெ.பி. பொண்ணு கேட்டாரா? கண்ணை மூடிகிட்டு சரிங்காம என்னடி யோசிக்கிறீங்கன்னு அன்றைக்கே மலைத்துப் போனவள்தானே! அதுதான்... இன்றைக்கு பயன் படுத்திக் கொள்கிறாள் போலும். ஆனாலும், இன்னொரு மனது ஏற்றுக் கொள்ள மறுத்தது.

தான் அறிந்த தோழி ரம்யா அப்படிப்பட்டவள் அல்லவே! இவள் வேறு ரம்யா பணம், பணம் என்று எப்போதும் அவளுக்கு ஓர்ஆர்வம் உண்டு. தானும் தன் கணவனை சரியாக நடத்தவில்லை. அதற்கெல்லாம் சேர்த்து விதி தன்னைத் தண்டிக்கிறதோ!

முகம் வாடி விட்டாள்.

டைவர்ஸ் என்கிற அளவுக்குப் பேசியாகிவிட்டது. ஊருக்காகச் சேர்ந்திருக்கலாம் என்று பந்தாவாகப் பேசி



விட்டு இன்றைக்கு எந்த முகத்தோடு நியாயம் கேட்பது? அட்லீஸ்ட் ஊரிலிருந்து வந்த உடனேயாவது மனசு விட்டுப் பேசியிருக்க வேண்டும். எல்லாமே கை நழுவி விட்டு விட்டு இப்போது கவலைப்படுகிறோமே? என்று எண்ணிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

'அம்மா... அய்யா... கூப்பிடறாங்க!' என்று பியூன் வந்து அழைத்தான்.

எழுந்து போனாள்.

'சுபா! மேனேஜர் வந்தவுடனே.. இந்த வேலையெல்லாம் முடிச்சிடு... அந்தக் காலேஜுக்கு நாளைக்கு நான் பேசறேன்..' என்று அவன் கொடுத்த இன்ஸ்ட்ரக்ஷன்கள் கேட்டுக் கொண்டாள்.

அவன் ஒரு நிமிடம் அவள் முகத்தைப் பார்த்தவன்.

'என்ன ஒரு மாதிரியா... இருக்கே? உடம்பு சரியில்லையா?' என்றான்.

அவள் குறுக்காகத் தலையாட்டினாள் 'இல்லை ஒண்ணும் இல்லை!'

அதே நேரம் மறுபடியும் போன் ஒலித்தது எடுத்தாள்.

''ஹலோ! நாங்க ஜெயப்பிரகாஷ் சாரைப் பார்க்கணும். இப்ப வர்லாங்களா?' என்றது ஒரு குரல்.

'இல்லைங்களே இப்ப அவர் வெளியே கிளம்பிடுவாரு நாளைக்கு வாங்க...' என்றாள். போனை வைத்தாள்.

அவன் விசித்திரமான பார்வையாக அவளைப் பார்த்தான்.

'நான் எப்ப சொன்னேன்? வெளியே போறேன்னு... சொல்லலியே!' என்றான்.

அவள் பிடிபட்டவளைப் போல் விழித்தாள்.

'இல்லே! இப்ப நீங்க குடுத்த இன்ஸ்ட்ரக்ஷன்களையெல்லாம் கேட்டுட்டு.. நானா நினைச்சுகிட்டேன்' என்று குழறினாள்.

அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்.

'நான் வெளியே கிளம்பறேன்தான் ஆனா... அது உனக்கு எப்படித் தெரிஞ்சதுன்னு பாத்தேன்' என்றான். புறப்பட்டான்.

அவள் தன்னறையில் வந்து சோர்ந்து போய் அமர்ந்தாள்.

* * *

டிரைவர் காரை ஓட்டிக் கொண்டிருந்தார்.

அவன் வழக்கம் போல் செல்போனில் பேச வேண்டிய விஷயங்களைப் பேசி முடித்தான்.

கிடைக்கிற நேரத்தைப் பல விஷயங்களுக்கும் பங்கிட்டுக் கொள்கிற கலை அவனுக்கு இயல்பாகவே இருந்தது.

நியூ ஃபேர் லாண்ட்ஸ் பங்களாவிற்குள் கார் நுழைந்தது.

டிரைவர் கண்ணையன் அவர்களிடம் வெகு நாட்களாக உவைராக இருந்தார். காரை நிறுத்திவிட்டுக் கார்க் கதவைத் திறந்தார்.

பங்களா வாயிலை நோக்கியவர் அதிர்ந்து போனார்.

ஒரு இளம் பெண் வெகு உற்சாகமாக சின்னையாவை நோக்கி வருவதையும், சின்னையாவும் சிரித்துக் கொண்டே அந்தப் பெண்ணுடன் உள்ளே போவதையும் சற்றே வதனையுடன் பார்த்தார்.



ஒரு மணி நேரம் ஹால் சோஃபாவில் அமர்ந்தபடி பேசினார்கள். சிரித்தார்கள். அந்தப் பெண்ணின் பேச்சில் தெரிந்த உரிமையைப் பார்த்து வேலைக்காரப் பெண்மணிகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவர்களையெல்லாம் சற்றுத் தொலைவில் இருக்கச் சொல்லி விட்டு மிகவும் சீரியஸாகவும் எதைப் பற்றியோ பேசினார்கள் வாதம் செய்தார்கள்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அவன் வெளியே வந்தான்.

கார் வரையிலும் வந்தாள் ரம்யா.

'சரி.. முடிவுதானே? மாற்றமில்லையே!' என்றான் ஜெயப்பிரகாஷ் கதவைத் திறந்தபடி.

டிரைவர் மௌனமாக அமர்ந்திருந்தார்.

'நான் நாளைக்குக் காலேஜுக்கு லீவு. ஆபீஸ் வரட்டுமா?' என்றாள் கொஞ்சலாக.

'நீயா! வந்தீன்னா.. வேலை கெட்டுடும்.. சரி.. வா.. ஏன் அதை விட வீட்ல உட்கார்ந்துகிட்டே கனவு காணலாமே!'

'பேசாம.. இருங்க.. ஜெபி!' என்றாள் சிணுங்கலாக.

அவன் சிரித்தான்.

'சரி. வா.. எப்ப வரே! அப்ப நாளைக்கு ஈவ்னிங் ப்ரோகிராம்!'

'அது பாட்டுக்கு.. அது! நான் காலையில வர்றனே!' என்றாள் மறுபடியும் அதே சிணுங்கலுடன்.

'சரி.. வா!' என்றான். 'போலாம்..' என்றான் டிரைவரிடம்.

அவர் வண்டியை எடுத்தார். அவருக்கே மனது சங்கடமாகிப் போனது.

பல சமயங்களில் அந்த கிளப் இந்த கிளப் மீட்டிங், அந்த மீட்டிங்.. இந்த மீட்டிங் என்று போகும்போது வெளியே சிறு சிறு கூட்டமாக டிரைவர்கள் நின்று கொண்டு தங்கள் முதலாளிகளின் அந்தரங்கங்களைப் பேசிச் சிரிக்கும் போதெல்லாம் டிரைவர் தன் முதலாளியைப் பற்றிப் பெருமையாக எண்ணிக் கொள்வார்.

'என்ன இருந்தாலும்.. தம்பி தங்கக் கம்பிதான் என்று முதலாளியம்மாவிடம் பெருமையாகச் சொல்லிக் கொள்வார்.

இன்றைக்கு ஏதோ தடம் மாறுகிறாற் போல தெரிகிறதே. வருத்தத்தில் ஆழ்ந்தார்.

பெரியம்மாவிடம் சொல்லி விடலாமா? என்று கூட யோசித்தார்.

'வேண்டாம். உடனே சொல்ல வேண்டாம். சற்றுப் பொறுமையாக இருப்போம்' என்று முடிவு செய்து கொண்டார்.

கண்ணாடி வழியாகப் பார்த்தார்.

கண்களை மூடி சாய்ந்து அமர்ந்திருந்தான் ஜெயப்பிரகாஷ் அந்தக் கணத்தில் அவன் முகமும் நிச்சலனமாக இருந்தது.

இந்தப் பால் வடியும் முகத்துக்குச் சொந்தக்காரரா ஒரு இளம் பெண்ணைத் தன் பங்களாவில் தங்க வைக்கிறார். கவலையாகிப் போனது.

'சரி.. என்னைக் கொண்டு போய் எக்ஸ்போர்ட் யூனிட்ல விட்டுட்டு.. சின்னம்மாவைக் கொண்டு போய் வீட்ல விட்டுருங்க..' என்றான்.

* * *



தன்னுடைய டேபிளில் ரிவால்விங் சேரில் சாய்ந்து கண் மூடி அமர்ந்திருந்தாள் சுபாஷிணி.

மொத்த ஆபீஸும் காலியாகி இருந்தது. கணவன் எதுவும் சொல்லிவிட்டுப் போகவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் அமர்ந்து இருந்தாள்.

'சின்னம்மா!' என்ற டிரைவரின் குரல் கேட்டுக் கண் விழித்தாள்.

'ம்..!' என்றாள்.

'அம்மா.. உங்களைக் கொண்டு போய் வீட்ல விடச் சொன்னாரு. ஐயா!' என்றார்.

எழுந்தாள். நடந்தாள்.

செகண்ட் அக்ரஹாரத்தில்தான் அவர்களது ஆபீஸ் இருந்தது. வீடு குகைப் பகுதியில் இருந்தது.

காரில் போனால் பத்து நிமிடப் பயணம். ஒரு ஆட்டோ பிடித்துக் கூட அவள் போய்விடலாம். ஆனால் எப்போதும் அவள் போவதும் வருவதும் அவனால்தான் தீர்மானிக்கப் படும். அவளுடைய சௌகரியத்தையும் கேட்டுக் கொள்வான்.

அதிகம் பேசாத போதும் அவளது வசதிகளுக்குக் குறைவில்லாமல் பார்த்துக் கொள்வான். ஆனால், இன்றைக்கு எதுவும் சொல்லாமல் போய் விட்டாரே என்று வருத்தத்தில் ஆழ்ந்திருந்தாள். கார் வந்து விட்டது.

இரண்டு நிமிடம் பயணத்துக்குப் பின்பு அவள் கேட்டாள். எப்படிப்பட்ட பதில் வருமோ என்று பயந்து கொண்டே கேட்டாள்.

'சின்னையா.. எங்கே?' என்று.

'சின்னையா.. எக்ஸ்போர்ட் யூனிட்ல இருக்காரு. அங்க ஏதோ வேலை இருக்காம். வர நேரமாகுமாம்..' என்றார் கண்ணையன்.

வீட்டிற்கு வந்தவுடன் சற்று ஓய்வெடுத்து விட்டுக் கீழே இறங்கி வருவாள். தன் குடும்பத்தாருடன் கலகலப்பாக நேரம் செலவழிப்பாள்.

ரேகாவும், அவளும் சரிக்குச் சரியாகச் சிரித்துக் கொண் டிருப்பார்கள். ஹரிபிரசாத்தின் கிண்டல் வேறு.

வடிவு சில நேரம் கலந்து கொள்வார். சில நேரம் அவர்கள் சிரிப்பதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பார்.

இன்றைக்கும் இறங்கி வந்தாள்.

எட்டு மணி வாக்கில் ஜெயப்பிரகாஷும் கூட சாப்பிட வந்தான்.

அமைதியாகப் பரிமாறினாள்.

'அண்ணி, என்ன ஹரி! ரொம்ப அமைதியா இருக் காங்க!' என்று கிசுகிசுத்தாள் ரேகா.

'நம்ம சர்வாதிகாரி ஏதாவது மிரட்டியிருப்பாரு!' என்று அவன் முணுமுணுத்தான்.

ரேகாதான் அண்ணனிடம் துணிச்சலாகக் கேட்டாள்.

'அண்ணா! அண்ணி ஏன் இப்படி மூட் அவுட்ல இருக் காங்க..' என்றான்.

ஜெயப்பிரகாஷ் யாரும் எதிர்பார்க்காத விதமாக 'ம்.. உங்க அண்ணியை மாத்தி வேற அண்ணியை டியூட்டி போட்டுர்லாமான்னு ஐ.நா. சபையில் ஆலோசனை கேட்டிருக்கேன். அதான் மூட் அவுட்' என்று சிரித்தான்.



எல்லாரும் சிரித்து விட்டார்கள். சுபாஷிணி எதையோ எடுப்பவள் போல் சட்டென்று சமையலறைக்குள் நுழைந்து கொண்டாள்.

'ஐயய்யோ! அதுக்கு நீ ஆலோசனை கேட்க வேண்டிய இடம் வேறயாச்சே!' என்றான் ஹரிபிரசாத்.

'யாரு!' என்றான் ஜெயப்பிரகாஷ் விசித்திரமான புன்னகையுடன்.

'ஆனா.. அவரும்.. இப்ப மாட்டிகிட்டிருக்காரே.. சதாம்.. ஹுசேன்.. அண்ணா' எனவும் மறுபடியும் சிரித்தார்கள். அதற்குள் சுபாஷிணி சமாளித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

ஒரு சப்பாத்தியை எடுத்து ஹரிபிரசாத்தின் தட்டில் வைத்தாள்.

ஹரிபிரசாத் சிரித்து விட்டுச் சொன்னான். 'அண்ணா, ஜோக் ஒண்ணு இருக்கு சொல்லட்டுமா?' என்றான்.

'அண்ணன் எப்படியோ வாயைக் குடுத்து உன்கிட்ட மாட்டிகிட்டாரு.. சொல்லித் தொலை..' என்று சிரித்தாள் ரேகா.

'ஒரு ஆபீஸர் இருந்தாராம். அவரு தன்னோட ஆபீஸ்ல எல்லாமே எழுத்து மூலமாத்தான் இருக்கணும்பாராம். வீட்லயும் கெடுபிடிதானாம். ஒரு நாள் அவரோட வைஃப் அம்மா ஊருக்குப் போறேன்னு கேட்டாங்களாம். லீவு எழுதிக் குடுன்னாராம். அந்தம்மாவும் தலை விதியை நொந்துகிட்டே எழுதிக் குடுத்தாங்களாம். உடனே அவரு மாற்று ஏற்பாடு செய்து விட்டுப் போகவும்ன்னு எழுதி வச்சாராம்' என்றான்.

எல்லாரும் சிரித்தார்கள். சுபாஷிணியின் கண்களில் கண்ணீர் திரண்டது. கையைக் கழுவி விட்டு வந்தவள் அதைத் திகைத்துப் போய்ப் பார்த்த ரேகா ஓடிப் போய் சோஃபாவின் மேலிருந்த குஷனை எடுத்துக் கொண்டு வந்தவள் ஹரிபிரசாத்தின் முதுகில் இரண்டு வைத்தாள்.

'மாத்து ஏற்பாடு! ம்.. மாத்து ஏற்பாடு.. லொள்ளா.. பண்றே! தங்கம் மாதிரி இருக்கற இந்த மாதிரி அண்ணிக்கு மாத்து ஏற்பாடு செஞ்சிடுவியாடா.. நீ' என்றாள் உண்மையான கோபத்துடன்.

சுபாஷிணியின் கண்கள் கலங்கியதைப் பார்த்த மாமியார் திகைத்துப் போய் உட்கார் சுபா!' என்று உட்கார வைத்தார்.

'என்னம்மா! நீ விளையாட்டுப் பையன் அவன் என்னமோ சொன்னா அதைப் போய் சீரியஸாய் எடுத்துகிட்டு..' என்று தேற்றினார்.

ரேகாவும் அண்ணியைக் கட்டிக் கொண்டாள்.

'அண்ணி, கவலையே படாதே! மாத்து ஏற்பாடு கீற்பாடுன்னு அண்ணன் பேசினா.. அண்ணனையே டைவர்ஸ் பண்ணிடுவோம்' என்றாள்.

இத்தனைக்கும் விசித்திரமான ஒரு ஆழப் பார்வையுடன் அவன் பார்த்துக் கொண்டிருந்தானே தவிர வாயைத் திறக்கவில்லை.

ஹரிபிரசாத்கூட திகைத்துப் போனான். 'ஐயோ! அண்ணி, நீங்க என்ன இப்படி ஃபீல் பண்றீங்க..' என்று பதைத்தான்.

'இல்லல்லே!' என்று அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். தயக்கத்துடன் கணவன் முகம் பார்த்தாள்.



அவன் பார்வையில் இருந்த ஏதோ ஒன்று அவளை சில்லிடச் செய்தாற் போல் உணர்ந்தாள். முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'ஏண்டா.. நீ ஏதாவது வாயைத் திறந்து சொல்லேண்டா!' என்றார் வடிவு ஜெயப்பிரகாஷிடம்.

அவன் குறும்பாகச் சிரித்தான்.

'அம்மா.. பிரச்சினையைக் கிளப்பியது இந்த தடிப்பய. இதில் நான் சொல்றதுக்கு என்ன இருக்கு..' என்று எழுந்தான்.

'அப்படியே.. சொன்னாலும்.. இத்தனை பேர் முன்னாடியா சொல்லிகிட்டிருப்பேன்' என்று போய் விட்டான்.

இப்படிப் பதிலை எதிர்பார்க்காத அம்மா, திகைத்துப் போய் பேச்சை மாற்றினார்.

சற்று நேரம் கழித்து மேலே வந்தவள் அவன் அறைப் பக்கமே திரும்பாமல் தன்னறைக்குப் போய் விட்டாள். அவனும் தன் கட்டிலில் கம்ப்யூட்டரைப் பார்த்துக் கொண்டு குப்புறப் படுத்து விட்டான்.

முதல் முறையாக அந்த வீட்டில் தனிமையை உணர்ந்தாள். சத்தமே இல்லாமல் அழுது தீர்த்தாள்.

## 24

பதினோரு மணியிருக்கும்!

எல்லாரும் பிஸியாய் இருந்தார்கள். சுபாஷிணி ஜெயப்பிரகாஷின் மேஜையின் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிற

நேரத்தில் சட்டென்று ரம்யா உரிமையாய் உள்ளே நுழைந்தாள்.

'ஹலோ! உள்ளே வரலாமான்னு கேட்டுட்டு வர வேண்டாமா? உன் ஃபிரெண்ட் கோபிக்கக்கப் போறா..!' என்று புன்னகைத்தான் ஜெயப்பிரகாஷ்.

'ஆமா, நீங்க என்ன டூயட்டா பாடிகிட்டிருக்கீங்க.. நான் டிஸ்டர்ப் செய்யறதுக்கு டிரையான பிஸினஸ் மேட்டர் பேசிட்டிருப்பீங்க!' என்றாள் ரம்யா அலட்டிக் கொள்ளாமல்.

சட்டென்று எதிரில் இருந்த சோஃபாவில் அமர்ந்தாள்.

அந்த நேரம் சுபாஷிணி என்ன நினைத்தாளோ தானும் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு ஜெயப்பிரகாஷின் அருகில் அமர்ந்தாள்.

அவன் முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை.

'அதுசரி! உங்க ஃபிரெண்டு வந்திருக்காப்ல. உங்களுக்குப் பேசறதுக்கு நிறைய விஷயம் இருக்கு. நான் இருக்கலாமா? போகட்டுமா?' என்றாள் கிண்டலாக.

ஜெயப்பிரகாஷ் அலட்டிக் கொள்ளாமல் ரம்யாவைப் பார்த்தான்.

'என்னம்மா.. என் வைஃப் என்னமோ கேக்கறாளே! நீ தான் சொல்லணும்' என்றான்.

'உங்க வைஃப்பா? அவளுக்கு அது வேற ஞாபகம் இருக்கா?' என்றாள் ரம்யா.

சுபாஷிணியின் முகம் கோபத்தில் சிவந்தது.

'நான் ஞாபகம் வச்சிருக்கிறதும் இல்லாததும் அவருக்குத் தெரிஞ்சா போதும். உனக்கு நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லே!' என்றாள்.



ரம்யா கோபப்படவில்லை. மாறாகச் சிரித்தாள்.

'ரொம்ப கரெக்ட்..!' என்றாள். அவளைப் புறந்தள்ளினாற் போல ஒதுக்கி விட்டு அவனிடம் பேச ஆரம்பித்தாள்.

'அப்புறம்.. ஜெ.பி. அந்த ப்ரோகிராம் ஃபைனலைஸ்டா இல்லையா?' என்றாள்.

சுபாஷிணி அவமானமாக உணர்ந்தாள். கோபம் தலைக்கேறியது. ஆனால், ஒன்றும் சொல்லாமல் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என்ன சந்தேகம்? ஃபைனலைஸ்ட்தான்' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'எங்கே?'

'எங்கே! நேஷனல் ஹோட்டல்!'

'டைம்!'

'ஷார்ப் அட் ஃபைவ் ஓ கிளாக்! என்றான். இருவரும் சிரித்தார்கள்.

ரம்யா இயல்பாகத் திரும்பி சுபாஷிணியைப் பார்த்தாள்.

'அப்புறம்.. உன் ப்ராஜக்ட் எப்படிப் போயிட்டிருக்கு.. ஏதாவது ஹெல்ப் வேண்ணாக் கேளு..!' என்றாள்.

'போதும்.. நீ இப்ப செய்யற உதவியே போதும்..!' என்றாள் சுபாஷிணி.

'வாட் டு யூ மீன்?' என்றாள் ரம்யா.

'அதான்.. என் ஹஸ்பென்டுக்கு ஏதோ ப்ராஜக்ட்ல ஹெல்ப் பண்றியே? அதுவே போதும்..' என்றாள்.

'ஐயய்யோ! உனக்கு விஷயம் புரியலே! ஜெ.பி.தான் எனக்கு ஹெல்ப் பண்றாரு. லைஃப்ல செட்டிலாயிரலாம்னு

முடிவு பண்ணிட்டேன். ஹி இஸ் ஹெல்பிங் மீ..!' என்றாள் சற்றும் வெட்கமில்லாமல்.

'வாழ்த்துக்கள்.. நீ ஆசைப்பட்ட வசதிகள் எல்லாம் உனக்கு கிடைக்கப் போகுது' என்றாள் சுபாஷினி.

'பின்னே! கிடைக்கறதை விட்டுடுவேனா! சிக்கலில்லாமல் லைஃப்பை என்ஜாய் பண்றதுக்குத் தெரியணும் இல்லே!' என்றாள் ரம்யாவும் சளைக்காமல்.

'அது கரெக்ட்தான், மானம், ரோஷம், பாலிஸின்னெல்லாம் வச்சுகிட்டாத்தானே சிக்கல்?' என்றாள் சுபாஷினி.

'ஹேய்! என்னடி பேசறே? ஹஸ்பெண்ட் அண்ட் வைஃப்புக்குள்ள மானம், ரோஷம் பாத்தா.. வாழ்க்கை நடக்குமா!' என்று எழுந்து கையாட்டிவிட்டு நகர்ந்தாள் ரம்யா.

தான் சொன்னதைப் புரிந்து கொண்டாளா என்றே தெரியவில்லை சுபாஷிணிக்கு திரும்பினாள்.

விளைவு வேறொரு இடத்திலிருந்து வந்தது.

'சுபா! நீ இப்படியெல்லாம் பேசக்கூடிய ஆளுன்னு நான் நெனக்கவே இல்லை. ரம்யாவுக்கு நீ பேசறது புரியாமப் போயிருக்கலாம். ஆனா, எனக்குப் புரிகிறது. இனிமேல் என்னைத் தேடி வர்ற என் ஃபிரண்ட்ஸை இந்த மாதிரி இன்சல்ட் செய்யறதை விட்ரு.. ஐ டோண்ட் லைக் இட்' என்றான் இரும்புக் குரலில்.

'பாரு சுபா! எது நடந்தாலும் அதுக்குக் காரணம் நீ.. நீதான். உன்கிட்டே கிடைக்காத ஃபிரண்ட்ஷிப் அவகிட்டே எனக்குக் கிடைக்குது. இப்ப நாம வேலையைப் பாக்கலாமா?' என்றான்.



தொண்டைக் குழிக்குள் விக்கினாற் போல் நின்ற அழுகையை அடக்கிக் கொண்டு அவள் நின்றாள்.

செத்துப் போய் விடலாம் போல் கூடத் தோன்றியது.

சட்டென்று முடிவெடுத்தாள்.

'எனக்கு ஹாஃப் எ டே லீவு வேணும். உடம்பு சரியில்லே!' என்றாள்.

அவன் வழக்கம் போல் தோளைக் குலுக்கினான்.

'ஓ.கே! உன்னிஷ்டம்' என்றான்.

'விட்டால் போதும்' என்று விலகி ஓடுகிற மனைவியை ஆழமாகப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

ஒரு நிமிடம் கழித்து செல்போனை ஆன் செய்தான். பேசினான்.

'டே! என்னைச் சுத்திலும் புரிஞ்சுக்கறவங்களே இல்லை!' என்று எரிச்சலாக முணுமுணுத்துக் கொண்டே ஆஃப் செய்கையில் அந்தப்புறம் இருந்து சிரிப்புத்தான் பதிலாக வந்தது.

* * *

கொஞ்ச நேரம் அத்தையுடன் நேரம் செலவழித்தாள்.

'என்னம்மா! உடம்புக்கு சரியில்லையா? போய் ரெஸ்ட் எடு' என்றார்.

மேலே வந்தாள்.

இரண்டு நாட்களாகவே உறக்கம் இல்லாததாலோ என்னவோ சற்று உறங்கி விட்டாள். விழித்துப் பார்க்கும் போது மணி நான்கு. திடீரென்று அவளுக்கு நினைவுக்கு வந்தது. ஐந்து மணிக்கு எங்கேயோ சந்திக்கிறார்களாமே.

'போகலாமா!' என்று யோசித்தாள். 'சே! தன் கணவனைத் தானே போய் வேவு பார்ப்பதா' என்று குழம்பினாள்.

'இல்லை.. எந்த தூரத்திற்குப் போகிறது என்று பார்த்து விடலாமே!' என்று எண்ணியவள் புறப்பட்டாள்.

அத்தையிடம் 'அத்தை, கோட்டை மாரியம்மன் கோவிலுக்குப் போயிட்டு வர்றேன்' என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

'டிரைவர் கண்ணையன் ஓடி வந்து 'காரை எடுக்கட்டுமா?' என்றார்.

கார் காம்பவுண்டை விட்டு வெளியே வந்ததும்.

'நேஷனல் ஹோட்டல் போங்க..!' என்றாள்.

ஹோட்டலை நெருங்கும்போதே கார் நிற்பது தெரிந்தது.

ஒரு விதமான பதட்டத்துடன் உள்ளே நுழைந்து ஓரமாக நின்றாள்.

ஒரு மேஜையில் இரண்டு புறங்களிலும் ஜெயப்பிரகாஷும், ரம்யாவும் அமர்ந்திருந்தார்கள், பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவளும் ஒரு டேபிளில் அமர்ந்தாள். காபி ஆர்டர் செய்தாள்.

மெதுவாக உறிஞ்சிக் கொண்டே அமர்ந்திருந்தாள்.

பத்து நிமிடங்கள் போயிருக்கும். சூப் கப்பைக் கையில் வைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.

இயல்பாகச் சிரித்தார்கள். பிறகு வெளியே கிளம்பினார்கள்.



அவளும் சற்றுத் தொலைவில் தொடர்ந்தாள். ஓட்டலில் முன்புறத்தில் இருவரும் நின்றார்கள். அந்த நேரம் ஜெயப்பிரகாஷைத் தெரிந்த யாரோ ஒருவர் வந்தார்.

ரம்யாவை அறிமுகம் செய்து வைப்பது தெரிந்தது. ரம்யாவும், அவரும் ஒரு நிமிடம் உள்ளே போய் விட்டு வெளியே வருகிற இடைவெளியில் அவன் திரும்பினான்.

அவள் நிற்பதைப் பார்த்தான்.

பார்த்தும் பேசவோ, அருகில் அழைக்கவோ இல்லை. பார்க்காதவன் போல் நின்றான்.

அவள் சட்டென்று காரை நோக்கிப் போனாள்.

'டிரைவர்! காரை எடுங்க!' என்றாள். பாதி தூரம் போயிருப்பார்கள். டிரைவர், 'அம்மா! இந்தப் பொண்ணு யாருங்க! என்றார்.

'ஃபாமிலி ஃப்ரெண்ட்' என்றாள்.

'ஓ..! அம்மா.. என்ன இருந்தாலும் வயசுப் பொண்ணு. ஃபேர்லான்ட்ஸ் பங்களாவில தங்கியிருக்காங்க. ரொம்ப உரிமையா ஐயாகிட்டே பேசறாங்க. நான் ரொம்ப நாளா இந்த வீட்டு உப்பைத் தின்னவங்கற உரிமையில சொல்றேன்.. ஐயாவுக்குன்னு ஒரு நல்ல பேரு இருக்கு..' என்றார்.

'நமக்குத் தெரியற விஷயம் ஐயாவுக்குத் தெரியாதா?' என்று அந்த விஷயத்துக்கு அதோடு முற்றுப் புள்ளி வைத்தாள் சுபாஷிணி.

கண்ணையாவுக்குப் புரிந்தது. 'அங்கேயே நில்' என்று கோடு போட்டு விட்டாள் முதலாளியம்மா. என்று நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டு அமைதியாகி விட்டார்.

❖ ❖ ❖

வெகு நேரம்!

கீழே வேலை செய்து கொண்டிருந்தாள். சமையலறை டப்பாக்கள் முதல் கொண்டு அவள் கிளீன் செய்கிறேன் என்று இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதை வடிவு ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பத்து மணி கூட ஆகிவிட்டது!

'போதும்மா! லீவு நாள்ல பாத்துக்கலாம். போய் ரெஸ்ட் எடும்மா' என்று அதட்டவும்தான் மேலே வந்தாள்.

கணவன் தூங்கியிருக்க வேண்டுமேயென்று வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டு வந்தாள்.

அவன் விழித்துக் கொண்டு அமர்ந்திருந்தான். அவன் வழக்கத்துக்கு மாறாக சோபாவில் வேறு அமர்ந்து இருந்தான்.

'வா.. உட்கார்!' என்றான்.

எதிர் சோஃபாவில் அமர்ந்தாள்.

'என்னை வேவு பார்க்க வெல்லாம் ஆரம்பிச்சுட்டே இல்லே!' என்றான்.

'நான் ஒண்ணும் வேவு பாக்கவர்லே. உங்களுக்கு நேஷனல் ஹோட்டல்ல சூப் குடிக்க, அதுவும் ரம்யாவோட பேசிகிட்டுக் குடிக்கணும்னு தோணின மாதிரி எனக்கும் அதே ஹோட்டல்ல காபி குடிக்கணும்னு இருந்தது வந்தேன்.'

அவன் இப்படி பதிலை எதிர்பார்க்கவில்லை போலும்.. ஒரு நிமிடம் திகைத்தவன் மறு நிமிடம் மெதுவாகச் சிரித்தான்.

தோளைக் குலுக்கி விட்டு எழுந்து போய்விட்டான்.



அவள் தன்னறைக்குள் நுழைந்து கொண்டாள். அன்றைய நாள் முழுதும் அவளுக்குள் ஏற்பட்டிருந்த உணர்ச்சிப் போராட்டங்கள் முற்றிலுமாகத் தாக்க சக்தியிழந்தவள் போல் உணர்ந்தாள்.

வெடித்து அழுதாள். படுக்கையில் படுத்துக் கொண்டு தன் துக்கத்தின் சுமை முழுவதையும் தானே தாங்கிக் கொண்டு அழுதாள்.

தூக்கம் வராது போல் உணர்ந்தாள். மறுபடியும் எழுந்து அறையைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள்.

ஒரு பதினைந்து நிமிடம் போயிருக்கும். அறை வாசலில் நிழலாடத் திரும்பிப் பார்த்தாள்.

'என்ன.. தூங்கலையா? நான் தூங்க வேண்டாமா!' என்றான் ஜெயப்பிரகாஷ் கடுப்புடன்.

அவள் குற்றம் செய்தவளைப் போல் நின்றாள். 'தூக்கம் வர்லே!' என்றாள்.

அவன் தன்னறைக்குப் போய் எதையோ எடுத்து வந்தான்.

'இந்தா.. ரெஸ்டில்.. மாத்திரை.. என்னைக்காவது ஒரு நாள் போட்டாத் தப்பில்லே. தூக்க மாத்திரையே பழக்கமா ஆயிடக் கூடாது..' என்றான்.

வாங்கிக் கொண்டாள்.

அவன் நகராமல் நின்றான்.

மாத்திரையை விழுங்கினால்தான் போவான் என்பது தெரிந்து ஜக்கில் இருந்து தம்ளரில் தண்ணீரை ஊற்றி வாயில் போட்டு விழுங்கினாள்.

'உருட்டாம, படு!' என்று அவனே விளக்கை அணைத்து விட்டுப் போனான்.

அவள் பேசவும் அச்சமுற்றவளாய்ப் படுத்துக் கொண்டாள்.

ஒரு மணி நேரம் போயிருக்கும்!

மெதுவாக எழுந்து வந்து மனைவியின் அறையை எட்டிப் பார்த்தான்.

கன்னங்களில் கண்ணீர் கோடாக ஓடியிருக்க அயர்ந்து உறங்குகிற மனைவியைப் பார்த்தான்.

அவன் முகம் மென்மையாக மாறியது. அதே சமயம் அம்மா கீழே அழைக்கும் குரல் கேட்டது.

மீண்டும் மேலே வந்த போது முகம் மீண்டும் கடுமையாக மாறியிருந்தது.

* * *

சுபாஷிணி மேலே போனதற்குப் பிறகு, எதற்காகவோ வெளியில் வந்த வடிவு கண்ணையா தயங்கியபடி நிற்பதைப் பார்த்தார்.

'என்ன.. கண்ணையா!' என்றார்.

'அம்மா! நான் சொல்றதைக் கேட்டுக் கோபப் படாதீங்கம்மா.. என் மனசுக்குப் பொறுக்க முடியலே!' என்று பீடிகை போட்டார்.

'ம்.. சொல்லு!' என்றார் வடிவு.

'அம்மா.. சின்னையா யாரோ ஒரு பொண்ணைக் கொண்டு வந்து ஃபேர்லான்ட்ஸ் பங்களாவில் தங்க வச்சிருக்காரு. வயசுப் பொண்ணு.. உங்களுக்குத் தெரியுங்களா?" என்றார்.



வடிவு ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தார்.

'ஓ..!' என்றார் அடங்கிப் போன குரலில்.

பிறகு

'எத்தனை நாளா?' என்றார்.

'பத்து நாளாச்சாம்!' என்றார் டிரைவர்.

'பத்து நாளா?' என்று மீண்டும் அதிர்ந்தார்.

'சரி.. நான் பாத்துக்கறேன்.. நீ.. போ..' என்றார்.

கண்ணையா தலையாட்டிக் கொண்டு போய் விட்டார்.

* * *

குழந்தைகள் உறங்கப் போகும் வரை காத்திருந்து விட்டு மகனை அழைத்தார்.

'யாருடா.. அது!' என்றார் கடுமையான குரலில்.

'யாரைக் கேட்கறே?' என்றான் அவன்.

'அதான்.. நியூ ஃபேர்லான்ட்ஸ்ல தங்க வச்சிருக்கியே.. அந்தப் பொண்ணு..' என்றார் கோபத்துடன்.

அதற்குப் பிறகு இருபது நிமிடங்களுக்கு மேல் இருவருக்கும் வாக்குவாதம் நடைபெற்றது.

தன்னுடைய வாழ்நாளில் முதன் முறையாகத் தன்னிடம் வாதம் செய்கிற மகனை அவர் ஜீரணிக்க முடியாதவராய் நிற்கையிலேயே அவன் கதவைத் திறந்து கொண்டு வெளியேற முற்பட்டான்.

'நானும் மனுஷன்தானே? எத்தனை நாளைக்கு பொறுத்துக்கறது?' என்றான்.

'இத பார்! இதெல்லாம் ஒண்ணும் எனக்குப் பிடிக்கலே. சீக்கிரம் இதுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டப் பாரு' என்றாள் வடிவு அதே ஆத்திரத்துடன்.

அவன் வழக்கமான அழுத்தத்துடன் அம்மாவை ஒரு பார்வை பார்த்து விட்டு மாடிக்குப் போனான்.

## 25

**வா**ஷ் பேசினுக்கு முன்னால் நின்று பல் தேய்த்துக் கொண்டிருந்தான் ஜெயப்பிரகாஷ்.

அறைவாசலில் சுபாஷிணி நின்றாள்.

'என்ன?' என்பது போல் பார்த்தான்.

'இல்லே! இன்னைக்கு என்ன ப்ரோகிராம்?' என்றாள்.

'ஆபீஸ் போனாத்தான் தெரியும்!' என்றான்.

'இல்லே! நான் அதைச் சொல்லலே.. நீங்களும், ரம்யாவும்.. எங்கயாவது போறதா ஐடியா இருக்கா!' என்றாள்.

அவன் எரிச்சலாகப் பார்த்தான்.

'காலையிலயே ஆரம்பிச்சுட்டியா?' ராத்திரி அம்மா வேற மண்டகப்படி..' என்றான்.

'ஐயய்யோ.. நான் அத்தைகிட்ட இதைப் பத்தி பேசலை..' என்றாள்.

அவன் மறுபடியும் பல் தேய்ப்பதில் ஆழ்ந்தான். அவள் நின்று கொண்டேயிருந்தாள். அவன் திரும்பிப் பார்த்தான். அவன் வாயைக் கொப்பளித்து விட்டுப் பேசினான்.



'சாயங்காலம்தான் பாக்கணும், ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டியிருக்கு..' என்றான்.

'அப்ப..!' என்று இழுத்து நிறுத்தினாள்.

அவன் நின்று அவள் முகத்தைப் பார்த்தான்.

'அப்ப.. ரம்யாவை இங்கயே வரச் சொல்லுங்க!' என்றாள்.

'ஹேய்.. விளையாடறியா?' என்றான்.

'விளையாடலே.. இந்தக் குடும்பத்துக்குன்னு ஒரு கௌரவம் இருக்கு. டிரைவர்ஸ் எல்லாம் கமெண்ட் அடிக்கறதை நான் லைக் பண்ணலே' என்றாள்.

அவன் கண்கள் மின்னின.

'அம்மா' என்றான்.

'அத்தையை நான் பாத்துக்கறேன்..' என்றாள்.

'என்ன சொல்லுவே!' என்றான்.

'என் ஃபிரண்ட்.. என்னைப் பாக்க வர்றான்னு சொல்றேன்..' என்றாள். நிமிர்ந்து அவனை நேராகப் பார்த்தாள். கீழே இறங்கிப் போய் விட்டான்.

அவன் இனம் காண முடியாத தன் விசித்திரப் பார்வையை வீசிக் கொண்டு நின்றான்.

சுபாஷிணி நேற்றைக்கு இருந்தாற்போல் இன்றைக்கு இருக்கவில்லை.

அழுத்தமாக இருந்தாள்.

இருவரும் புறப்படுகிற நேரம் செல்போனை எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.

'ரம்யாவுக்கு இன்ஃபார்ம் பண்ணிடுங்க..' என்றாள்.

அவன் அவளை ஒரு விதமாகப் பார்த்து விட்டுக் கையில் வாங்கிக் கொண்டான்.

'ஹலோ! ரம்யா!' என்றான்.

அந்தப் புறம் அவள் என்ன கேட்டாளோ தெரியவில்லை.

'இல்லல்லே! இன்னைக்கு ப்ரொகிராம்ல ஒரு சேன்ஜ்' என்றான்.

... ...!

'இல்லே! இங்க நம்ம வீட்லயே வச்சுக்கலாம்கிறா.. சுபா..' என்றான்.

'இல்லல்லே! அதெல்லாம் அவளுக்குத் தெரியாது!'

'என்னது பிரைவஸியா! அதெல்லாம் கிடைக்கும். அதெல்லாம்.. நம்ம வைஃப்போட பொறுப்பு..' என்றான்.

அதில் தொனித்த கிண்டல் அவள் மனதை வாள் கொண்டு அறுக்கிறாற்போல் இருந்தாலும் அயராது பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவன் ஒரு சிரிப்புடன் ஆஃப் செய்தான்.

கீழே காலை டிபன் சாப்பிடும்போது அவள் அத்தையிடம் சொன்னாள்.

'அத்தை! நீங்க யாரோ ஜெகன்னாத மாமா வீட்டுக்குப் போகணும்னு சொல்லிகிட்டிருந்தீங்களே! இன்னைக்கு வேண்ணா போயிட்டு வாங்களேன்.'

அம்மா மகனைப் பார்த்தார். அவன் கண்களில் சம்மதம் தெரியக் கண்டு -

'சரிடா! நான் ரேகாவையும், ஹரியையும் கூட்டிட்டுப் போறேன். நாளைக்கு சாயங்காலமா வர்றேன்..' என்றார்.



காரில் போகும்போது இன்றைக்கு அவனே ஓட்டினான்.

'எத்தனை நாளைக்கு இப்படி டிராமா செய்வே?' என்றான்.

'எத்தனை நாளைக்குத் தேவைப்படுமோ அத்தனை நாளைக்கு..' என்றாள். ஜெயப்பிரகாஷ் சிரித்தான்.

'நாலு மணிக்கெல்லாம் நாம ஆபீஸ்ல இருந்து கிளம்ப வேண்டியிருக்கும்' என்றான்.

அப்போது அவளுக்குப் புரிந்தது.

கணவன் முடிவோடுதான் இருக்கிறான். தான் அவனுக்குக் கொடுத்த தண்டனைக்கு அவன் முழுமையாக பதிலடி தருவான் என்பது.

தயாரானாள்.

முழுமையாகத் தயாரானாள்.

* * *

நான்கு மணிக்கு பங்களாவில் நுழைந்தவுடன் ஜெயப்பிரகாஷ் ஒரு வேலை செய்தான்.

வேலைக்காரர்களுக்கெல்லாம் விடுமுறை அளித்தான்.

அப்போதுதான் அவளுக்கு அது நினைவுக்கு வந்தது. சேலத்தின் புகழ்பெற்ற அந்தக் கல்லூரி முதல்வர் பேசியது.

மறுநாள் காலை தான் வெளிநாடு புறப்படுவதாகவும் அன்றைக்கு எந்த நேரமானாலும் ஜெயப்பிரகாஷைத் தன்னை வந்து பார்க்குமாறும் கூறியது.

அவனிடம் சொன்னாள்.

'முதல்லயே சொல்றதுக்கென்ன?' என்று கடுப்பானான். ஆனால், புறப்பட்டான்.

புறப்பட்டவன் திரும்பி வந்து 'முக்கியமான கெஸ்ட் வர்றப்ப அழுது வடிய வேண்டியதில்லே.. பிரெஷ்ஷா.. இருக்கலாம்' என்றான்.

அவள் மௌனமாகத் தலையாட்டினாள். ஆனாலும் குளித்து நன்றாக உடுத்துக் கொண்டாள்.

இந்தக் கட்டத்தில் போய் தான் தன் கணவனை முழுமையாக நேசிக்கிறோம் என்று சொன்னால் அது எப்படியிருக்கும்? மிகக் கேவலமாக இருக்கும் என்று தோன்றியது.

மனமெல்லாம் பாறாங்கல்லை வைத்தாற் போல் இருந்தாலும் அழகாக அலங்கரித்துக் கொண்டாள்.

ரம்யா ஆறு மணிக்கு வந்து சேர்ந்தாள். அவளும் அழகாக இருந்தாள். வந்தவள் சுபாஷிணியைக் கட்டிக் கொண்டாள்.

'ஐயோ! என்னடி இவ்வளவு அழகா இருக்கறே! ஜெ.பி. எப்படிடி ரெஸிஸ்ட் பண்றாரு!' என்றாள்.

சுபாஷிணி வெறுமையாகப் பார்த்தாள். 'நீயும் அழகாத் தான் இருக்கே!' என்றாள்.

'அப்புறம்.. காபி கிபி எதுவும் கிடையாதா!' என்றாள் ரம்யா உரிமையாக.

சுபாஷிணி இறங்கிப் போனாள். காபி தயாரித்துக் கொண்டு வந்தாள்.

வந்தவள் சற்றுத் திகைத்து நின்றாள். ரம்யா ஜெயப்பிரகாஷின் அறையில் கம்ப்யூட்டரை ஆபரேட் செய்து ஏதோ விஷயம் பிரிண்ட் அவுட் எடுத்துக் காண்டிருந்தாள்.

வாய் கொள்ளாச் சிரிப்புடன் வந்தாள்.



'ஜெ.பி. இந்த மேட்டர் வேணும்பாரு' என்றாள்.

சுபாஷிணி தன் வருத்தத்தை மறைத்த வண்ணம் அமர்ந்தாள்.

அன்றொரு நாள்!

இதே போல் அவசரமாக ஏதோ ஃபிளாப்பி போட்டு பிரிண்ட் அவுட் எடுக்கிறேன் என்று கேட்டபோது,

'வேண்டாம்.. வேண்டாம்! அதுல கான்பிடென்ஷியல் மேட்டர் எல்லாம் இருக்கு' என்று கணவன் நிர்த்தாட்சண்யமாக மறுத்ததை எண்ணிக் கொண்டாள்.

கசப்பானதொரு புன்னகையுடன் அமர்ந்து கொண்டாள்.

ரம்யா வெகு உற்சாகமாக இருந்தாள். சள சளவென்று பேசினாள்.

சுபாஷிணி தேவையான அளவு பதில்களைக் கொடுத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

ஏழு மணி வாக்கில் கணவன் வந்து சேர்ந்தான்.

பொதுப்படையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

என்னவோ தெரியவில்லை. ஜெயப்பிரகாஷின் பார்வை அவள் முகத்தின் மீது படிந்து மீண்டு கொண்டிருந்தது. மேலும் ஒரு அரை மணி நேரம் போனது.

சுபாஷிணிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

'நான் வேண்ணா.. கீழே போய் டிபன் தயார் செய்யட்டுமா?' என்றாள்.

'டிபனுக்கென்னடி அவசரம்? எனக்குப் படபடப்பா இருக்கு. நீ கொஞ்ச நேரம் உட்காருடி..' என்றாள் ரம்யா.

சுபாஷிணி செய்வதறியாது கணவனைப் பார்த்தாள்.

அந்த நேரம்!

கீழே அழைப்பு மணி ஒலித்தது! 'யார்ன்னு பாரு.. சுபா..!' என்றான் ஜெயப்பிரகாஷ்.

அவள் இறங்கிப் போனாள்.

கதவைத் திறந்தாள்.

ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

'நீங்க..?' என்றாள்.

'நான்.. பாஸ்கர்' என்றான்.

'யாரைப் பாக்கணும்?'

'ஜெயப்பிரகாஷ் சார் வரச் சொல்லியிருந்தாரு..' என்றான்.

'இப்பவா? இப்ப.. அவர் யாரையும் பாக்க மாட்டாரே!' என்று அவள் தயங்கையிலேயே.

'இல்ல.. மேடம்.. இந்த டைமுக்குக் கண்டிப்பா.. என்னை வரச் சொல்லி இருக்காரு..' என்று விடுவிடென்று உள்ளே வந்தான்.

அவள் ஹால் கதவைத் தாழிட்டுவிட்டுப் பயத்துடன் பின் தொடர்ந்தாள்.

அவன் மேலே போனவுடன் ஜெயப்பிரகாஷ் முகமெல் லாம் சிரிப்புடன் எழுந்து நின்றான்.

'வாங்க.. பாஸ்கர்' என்று கைகுலுக்கி வரவேற்றான்.

திகைத்து நின்று கொண்டிருந்த சுபாஷிணியை அறிமுகப் படுத்தினான்.

'இவங்க.. என்.. வைஃப்' என்றான்.

'அப்பா! உள்ளேயே விட மாட்டாங்க போலிருந்தது..' என்றான்.

'இல்ல.. அவளுக்கு விஷயம் தெரியாது. நானும் ரம்யாவும் சஸ்பென்ஸா வச்சிருந்தோம்' என்று சிரித்தான். அவளிடம் திரும்பியபடி.



'சுபா. இது மிஸ்டர் பாஸ்கர். உன் ஃபிரண்ட் ரம்யாவுக்கு நானும், மகேஷும் பார்த்திருக்கிற மாப்பிள்ளை' என்றான்.

அவள் திருதிருவென்று விழித்துக் கொண்டு வணக்கம் சொன்னாள்.

அமர்ந்தார்கள்.

சுபாஷிணியின் முகத்தில் இருந்த டென்ஷன் வடிந்து இளகுவதை ஜெயப்பிரகாஷ் ஒருவித சிரிப்புடன் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

'சுபா! ஜெ.பி. தான் மாப்பிள்ளை பாத்தது. எங்க வீட்லயும் எல்லாருக்கும் பிடிச்சது' என்றாள் ரம்யா வெட்கத்துடன்.

சுபாஷிணி கலகலவென்று சிரித்தாள்.

'ஓஹோ! இவர்கிட்டே பேசறதுக்குத்தான் பிரைவஸி வேணும்னியா?' என்றாள்.

ரம்யா முகம் சிவந்தது.

'சே! இப்படிப் போட்டு உடைக்கறியே!' என்றாள்.

சட்டென்று தன் அறைக்குப் போன ஜெயப்பிரகாஷ் அங் கிருந்து அவளைக் கண்காட்டி அழைத்தான்.

'என் பெண்டாட்டி ரொம்ப கெட்டிக்காரி, எப்படியும் பத்துப் பதினைந்து நிமிஷத்துல நல்ல டிபன் ஏற்பாடு செய் துடுவாங்கற தைரியத்துலதானே வேலைக்காரங்களுக்கு லீவு குடுத்தேன்!' என்றான்.

அவள் முகம் மலரச் சிரித்தாள்.

'இதோ.. அஞ்சே நிமிஷத்துல..' என்று இறங்கினாள்.

அவனும் பின் தொடர்ந்தான்.

'பாஸ்கர் சார்! இருபது நிமிஷம் டைம். பேசறதெல்லாம் பேசிக்குங்க..' என்று குரல் கொடுத்தான் ஜெயப்பிரகாஷ்.

சுபாஷிணியும், ஜெயப்பிரகாஷும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள்.

சமையலறையில் நுழைந்தவள் ஒரு நிமிடம் யோசித்தாள்.

'என்ன டிபன் ஈசியா செய்யறது?' என்று முணுமுணுத்தாள்.

'சரி.. பொங்கல் வைக்கிறேன்!' என்று வெண்பொங்கல் வைத்தாள்.

இன்னொரு பக்கம் கேசரி கிண்டினாள்.

'அப்புறம் பஜ்ஜி இல்லையா?' என்றான் கூட மாட உதவி செய்து கொண்டே 'போட்ரலாம்.. வெங்காய பஜ்ஜி..' என்றாள்.

அவன் வெங்காயம் வெட்டிக் கொடுக்க அவள் போட்டு எடுத்தாள்.

கொஞ்சமாக அளவாகத் தயாரித்தார்கள்.

இதற்குள் அரை மணி நேரம் ஓடிவிட்டது.

'ஏங்க! போய் சாப்பிடக் கூப்பிடுங்க..!' என்றாள் சுபாஷிணி.

'ஆமா! எனக்கே பசிக்குது!' என்று நகர்ந்தவனைக் கைபிடித்து அழைத்து நிறுத்தினாள்.

'எதுக்கும் குரல் கொடுத்துட்டுப் போங்க. அவங்க.. எப்படி..! இருப்பாங்களோ' என்று முகம் சிவந்தாள்.

'சரி.. சரி..!' என்று சிரித்தான்.

சுபாஷிணி சொன்னதைப் போலவே நெருக்கமாக ரம்யாவின் அருகில் நின்றபடி ஏதோ சொல்லிக் கொண்டிருந்த பாஸ்கர் விலகிக் கொள்வதையும், ரம்யாவின் முகம் சிவந்து கிடப்பதையும் ரசனையுடன் பார்த்துக் கொண்டான்.

'சாப்பிட வரலாம்!' என்று அழைத்தான்.

சற்று நேரம் பொழுது கலகலப்பாகக் கழிந்தது.



முகம் மலர வாய்விட்டுச் சிரிக்கிற கணவனை ஒரு வித மான கிறக்க மனப்பான்மையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சுபாஷிணி.

'என்ன.. சார்! பேசி முடிச்சுட்டீங்களா' என்று ஜெயப்பிரகாஷ் கிண்டல் செய்ய.

'எங்க.. சார்? பேசவே விட மாட்டேங்கறாங்க' என்று போலியாய் அலுத்துக் கொண்டான் பாஸ்கர்.

ஜெயப்பிரகாஷ் சிரித்தான்.

'நீங்களே.. பேசி முடிச்சாப் போதுமா? பேரண்ட்ஸ் பேச வேண்டாமா!' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'அதெல்லாம் ஒண்ணும் பேசப்படாதுன்னு சொல்லியிருக்கேன். பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு.. ஜெயப்பிரகாஷ் ரெகமன்டேஷன் வேற. அதையும், இதையும் பேசி நாளைக் கடத்தாம சீக்கிரம் வீட்டுக்குக் கொண்டு வர்ற வழியைப் பாருங்கன்னு சொல்லியிருக்கேன்' என்று உல்லாசமாக அவன் சிரிக்க.

'அப்படிப் போடுங்க!' என்று ஜெயப்பிரகாஷ் மனைவியிடம் கண் சிமிட்டிச் சிரித்தான்.

அந்த இடைவெளியில் பாஸ்கர் ரம்யாவின் கன்னத்தில் லேசாக ஒரு தட்டுத் தட்டுவதைக் கவனித்து விட்ட சுபாஷிணி சிரிப்பை அடக்க உள்ளே ஓடிவிட்டாள்.

புறப்பட்டார்கள்!

'சார்.. நான் கார் கொண்டு வர்லே. டாக்ஸியில வந்தேன்.. புறப்படறேன்..' என்றபோது,

'இருங்க.. ரெண்டு பேரையும் டிராப் பண்ணச் சொல்றேன்..!' என்றான் ஜெயப்பிரகாஷ்.

ரம்யா மெதுவாக அடுக்களைக்குள் நுழைந்து 'ஐயோ! சுபா! நான் இவரோட தனியாப் போகலே.. ரொம்ப வம்பு பேசறார்' என்றாள் கலவரமாக.

சுபாஷிணி சிரித்தாள்.

'அதெல்லாம்.. இவரு சொன்னவர்ன்னா டீசண்டாத்தான் இருப்பாரு. எதுக்கும் நான் டிரைவர்கிட்டே விவரம் சொல்லி அனுப்பறேன்' என்றாள்.

அவர்கள் காரில் அமர்ந்ததும் சுபாஷிணி கண்ணையாவை அழைத்தாள்.

'டிரைவர்! இந்தப் பொண்ணைக் கல்யாணம் செய்யப் போற மாப்பிள்ளை இவரு. ரம்யா அவர் கூடப் போக வெட்கப் படறா. முதல்ல அவளை டிராப் பண்ணிட்டு அப்புறம் அவரை டிராப் செய்ங்க..' என்றாள் மெல்லிய குரலில்.

ஜெயப்பிரகாஷ் தலையிட்டு 'வந்ததுக்கப்புறம் காரைக் கராஜிலே நிறுத்திட்டு. சாவியைக் கூர்க்காகிட்டே குடுத்துட்டு நீங்க போலாம். டோன்ட் டிஸ்டர்ப் மீ.' என்றான்.

கார் புறப்படுவதை நின்று பார்த்தார்கள். கையாட்டி விட்டு உள்ளே வந்தார்கள்.

அவள் ஹால் கதவைத் தாழிட்டவள்.

'ஏங்கத்தான்! இந்த ரம்யாவைப் பாருங்களேன், பாஸ்கர் கூடத் தனியாப் போக பயப்படறா!' என்று சிரித்துக் கொண்டே திரும்பினாள்.

கணவனைக் காணவில்லை!

அவன் மாடிப்படிகளில் ஏறிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

சட்டென்று தங்கள் தனிமை புரிய அச்சமும், குழப்பமும் மனதில் ததும்ப மெதுவாக மாடிப்படிகளை நோக்கி நடந்தாள்.



## 26

வீடே அமைதியில் ஆழ்ந்திருந்தது.

மெல்லத் தன் அறைக்குப் போனாள் சுபாஷிணி. அரை மணி நேரம் ஓடியது!

ஒரு மணி நேரம் ஆகியது!

அவளது கால்கள் அறையை விட்டு வெளியே வரத் தயங்கினாற் போல் பின்னிக் கொண்டன.

ஆனால் மனமோ உள்ளே அறையில் அடங்கிக் கிடக்க மறுத்தது.

மேலே வந்த கொஞ்ச நேரம் ஜெயப்பிரகாஷே வரக் கூடும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அவன் வரவில்லை என்றதும் தயக்கம் மேவிட்டது.

அன்றைக்கு ஒரு நாள் அவன் கேட்டது நினைவு வந்தது.

'என்ன செய்யணும் சொல்லு! மண்டி போட்டுக் கெஞ்சணுமா.. செய்யறேன். எனி திங் இஸ் ஃபேர் இன் லவ்.. அண்ட் வார்' என்றாரே. அந்த வாய்ப்பை நாம்தான் இழந்து விட்டோம்.

மனது நிலை கொள்ளாமல் தவிக்கக் கால்களைக் கட்டிக் கொண்டு முகம் புதைத்து அமர்ந்திருந்தாள். வெகு நேரம்.

செல்போன் ஒலித்தது.

எடுத்தாள்.

மகேஷ்!

'என்னம்மா! சமாதானம் ஆயாச்சா.. இல்லையா? பயல் காத்துகிட்டிருக்கான் போல இருக்கு!' என்றான்.

'அண்ணா!' என்றாள் தயக்கமாக.

'சொல்லும்மா..!' என்றான்.

'பயமாயிருக்கு!' என்றாள் சுபாஷினி.

'நல்லா ஆச்சும்மா.. பயப்பட்டா வேலையாகாதும்மா' என்றான்.

'இல்லண்ணா, நான் செஞ்சது பூராவும் தப்புத்தான்..' என்றாள்.

'போம்மா மனசு விட்டுப் பேசும்மா.. எல்லாம் சரியாகும்.' என்றான்.

சற்றே துணிவு வந்தது.

அவனது அறை வாயிலில் போய் நின்றாள்.

ஜன்னல் ஓரமாக நின்றபடி வெளியே பார்த்துக் கொண்டு செல்போனில் பேசிக் கொண்டிருந்தவன் ஆஃப் செய்து விட்டுத் திரும்பியவன் அவள் நிற்பது கண்டு உறைந்து நின்றான்.

அவள் அவன் முகம் பார்த்து நின்றாள்.

காலத்தின் இயக்கம் உறைந்தாற் போல் பார்வையால் கவரப்பட்டு நின்றார்கள்.

அடுத்த கணம் அவள் அவன் அருகில் நெருங்கினாள். அவனது சட்டைக் காலரில் இரு நுனிகளையும் இரு



கைகளாலும் இழுத்துப் பிடித்தபடி அன்றைக்குப் போலவே மார்பில் சாய்ந்து அழுதாள்.

அந்த வேகத்தில் சட்டென்று அவன் படுக்கையில் அமர்ந்து விட்டான். பரிசுகளை அள்ளியிறைத்தாள். அவளை மெது வாக விலக்கியவன் அதே இறுகிய முக பாவத்துடன் நின்றான்.

'சுபா! நல்லா யோசிச்சுக்க..' என்றான். அவள் ஆவேசத் துடன் அவன் முகத்தைத் தன்னிடம் இழுத்தாள்.

'லொள்ளு பண்ணாதீங்க.. ஜெயப்பிரகாஷ்.. ஆளைச் சீண்டி உசுப்பி விடறது. அப்புறம்.. புத்தர் மாதிரி.. நியாயம் பேசறது.. எந்த ஊர் லொள்ளு இது?' என்றாள்.

அவன் பார்வை மாறியது! கிறக்கம் ஏறிய முகத்துடன் சட்டென்று தன்னருகில் இழுத்தான்.

'லொள்ளு யாரு செஞ்சது? நானா.. நீயா?' என்றான்.

பிறகு அவளைப் பேசவிடவில்லை. சிரித்தான். கொஞ்சி னான். பேசினான். அவள் மனமும், முகமும் மலர்ந்து போகும் விதமாக வேறு வேறு உலகங்கள் காட்டினான்.

இதற்கு இடையில்.

செல்போன் ஒலித்தது. மகேஷ். ஜெயப்பிரகாஷ் கடுப் பானான். 'டேய்! நீ வேற! போனை ஆஃப் பண்றா. என்ன நடக்குது என்ன நடக்குதுன்னுகிட்டு எல்லாத்தையும் உன்கிட்ட சொல்ல முடியுமா?' என்றான்.

'ஓஹோ! அப்படியா!' என்று மகேஷ் சிரித்தபடி ஆஃப் செய்வது அவளுக்குக் கேட்டது.

'எதுக்கு அவரைத் திட்டறீங்க? அண்ணாதான் போம்மா.. போய் மனசு விட்டுப் பேசுன்னு.. சொன்னாரு..' என்றாள் ஆதங்கத்துடன்.

'சொன்னான்.. சரி! இடம் பார்த்து விலகிக்கணுமில்லே' என்று சிரித்தான் ஜெயப்பிரகாஷ்.

'சே! வில்லன் மாதிரி சிரிக்கறீங்க..!' என்றாள் சிணுங்கலாக.

அதற்கும் சிரித்தான்.

'பரவால்லே! உங்களுக்கு சிரிக்கக் கூடத் தெரியுது..!' என்றாள்.

'எனக்கு இன்னும் வேற விஷயங்களும் தெரியும்.. அம்மிணி!' என்று மறுபடியும் சிரித்தான்.

அவள் பார்வையைப் பார்த்து, 'ஐயய்யோ! அப்படி சந்தேகமாகப் பாக்காதே! எல்லாம் கேள்வி ஞானம்தான். அப்புறம் இந்த விஷயமெல்லாம்.. சொல்லித் தெரிவதில்லைன்னு வேற சொல்றாங்க..' என்றான்.

அவன் அணைப்பில் பாந்தமாக அடங்கி இருந்தாள்.

'ஆனாலும்.. இப்படி ரம்யாவை வச்சு சீண்டியிருக்க வேண்டாம் தெரியுமா?' என்றாள்.

'இங்க.. பாரு நானும் ரம்யாவும் பேசிகிட்டமே.. ஏதாவது தப்பான வார்த்தை இருந்துச்சா.. நல்லா யோசிச்சுப் பாரு.. எல்லாம் உன் கற்பனைதான்' என்றான்.

யோசித்துப் பார்த்தாள்.

எந்த விதமான விகல்பமும் இல்லாமல் யோசித்தால் எதுவும் தப்பாகத் தெரியவில்லை.



விழித்தாள்.

'மக்கு! யுனிவர்சிட்டி ராங்க் வாங்கியிருக்கா.. இது கூடப் புரியல்லே' என்று மேலும் சிரித்தான்.

அவள் அவன் முகம் பார்க்க முடியாமல் வெட்கிப் போனாள்.

'எல்லாம் மகேஷோட பிளான்!' என்றான். 'அது மட்டுமில்லே! இன்னும் நிறைய விஷயமெல்லாம் சொன்னான்' என்றான்.

'என்ன' என்பது போல் அவள் பார்க்க, 'இத பார்! அதெல்லாம் அப்புறம் பேசலாம்...' திட்டம் போட்டு எல்லாத்தையும் ஏறக்கட்டி அனுப்பியிருக்கேன்.. இன்னும் என்ன கேள்வி பதில் செஷன்?' என்றான்.

நெருக்கமாக இழைகிற கணவனின் குறும்புச் சிரிப்பில் திணறிப் போய் மறுபடியும் 'வில்லன் மாதிரி சிரிக்கறீங்க!' என்றாள்.

'சரி.. ஹீரோ.. ஆகிக் காட்டட்டுமா?' என்று அவன் தன் காரியத்தில் கண்ணாக அவள் பணிந்து கொடுத்தாள்.

* * *

பதினோரு மணியிருக்கும்!

சுபாஷிணி உறங்கிக் கொண்டிருந்தாள் ஜெயப்பிரகாஷின் மார்பில் சாய்ந்த வண்ணமாக.

அவன் முகத்தில் சிரிப்பு உறைய மனைவியைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

திடுக்கிட்டு விழித்தவள்.

'ஏங்க.. தூங்கலையா?' என்று ஒண்டிக் கொண்டாள்.

மென்மையாகப் புன்னகைத்தவன் 'தூக்கம் வர்லே.. பசிக்குது..' என்றான்.

அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

'அடடா! எழுப்பியிருக்கலாமில்லே!' என்றாள் படபடப் பாக இறங்கினாள்.

சமையலறையில் தோசை வார்த்துக் கொண்டிருக்கையில் அவன் கைகள் பின்னாலிருந்து வளைத்தன.

'ஒரு நிமிஷம் கூட விட்டுட்டு இருக்க முடியாது போல இருக்கு' என்றான்.

'ஐயய்யோ! தோசைக் கரண்டி சூடா.. இருக்கு!' என்று அவள் தவிக்க, 'நானும்தான்!' என்று தோளில் முகம் புதைத்துக் கொண்டான்.

சீண்டலுக்கும், குறும்புப் பேச்சுக்கும் இடம் கொடுத்த படியே உணவுண்ணச் செய்தாள்.

'ஹேய்! நீயும் சாப்பிடு!' என்றான்.

'ரம்யா போனதுக்கப்புறம் உன் ரியாக்ஷன் எப்படி யிருக்குமோங்கற டென்ஷன்லயே அப்பவே ஃப்ரீயா சாப்பிட முடியலே!' என்று புன்னகைத்தான்.

'ஆமா! நானும் கூட சரியாச் சாப்பிடலே!' என்றாள் அவளும்.

'அப்புறம்.. ரம்யா போனதுக்கப்புறம், சாப்பாடு பெரிசாத் தோணல்லே! அது ஏன்.. பொண்ணே!' என்று மறுபடியும் நெருங்கிச் சீண்டினான்.

அவள் முறைத்தாள்.

'சரி.. சரி.. முறைக்காதே! நான் வேண்ணா ஹெல்ப் பண்ணட்டுமா!' என்று பாத்திரங்களை ஒழுங்கு படுத்துவதில் உதவி செய்தான்.



'மொத்த வீடும்.. நம்ம டிஸ்போஸல்ல இருக்கு..' என்று மறுபடியும் சிரித்தான்.

'ஏன்! டூயட் பாடப் போறீங்களா?' என்று அவளும் கேலியில் இறங்கினாள்.

'பாடலாம்.. தப்பில்லே!' என்றவன் சீரியஸான முக பாவத் துடன் சோஃபாவில் அமர்ந்து கொண்டான். சுபாஷிணியை யும் அருகில் அமர்த்திக் கொண்டான்.

'சுபா சினிமாவில் நடப்பதைக் காட்டிலும் வாழ்க்கையில் நிறைய நடக்குது தெரியுமா? இன்னொண்ணு சொல்லட்டுமா? காமம் என்பதும் வாழ்க்கையின் ஒரு அம்சம்தான். ஆனா, மனசை அலைபாய விடாமல் ஒரே பெண்ணிடத்திலோ அல்லது ஆணிடத்திலோ மனசைச் செலுத்திட்டா.. அது காதலாகி விடுகிறது. எல்லாத்தையும் வேற அடிப்படையில பாத்தா.. அது வேற மாதிரித்தான் தெரியும்..' என்றான்.

அவள் ஏதோ முணுமுணுத்தாள்.

'என்ன?' என்றான்.

'இல்லே! என்னென்ன ஆசைகள் போங்க.' என்று வெட்கத்துடன் மறுபடியும் முணுமுணுத்தாள்.

'இன்னும்.. நிறைய.. இருக்கு' என்று அவன் விரல் விட்டு எண்ணியபடி, தனது விருப்பங்களைச் சொல்ல,

'சரி.. சரி.. போதும்' என்று தன் கையால் அவன் வாயைப் பொத்தினாள்.

ஜெயப்பிரகாஷைப் பார்த்தும் பாராததுமாகக் கேட்டாள்.

அவன் எழுந்து நின்றான். மனைவியின் தலையைக் கோதி விட்டான்.

'இப்ப.. இந்தக் கேள்வி கேட்டது யார் தெரியுமா? யுனிவர்சிடி ரேங்க் ஹோல்டர். ஆனா, நான் என்னோட ஆசைகளைச் சொன்னது யார்கிட்டே தெரியுமா? என் மனைவி சுபாகிட்டே' என்றான்.

அவள் ஒரு நிமிடம் மௌனம் சாதித்தாள். பிறகு அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

'புரிஞ்சது!' என்றாள்.

'எல்லாத்தையும் முறைப்படுத்திக்கலாம். உனக்கு நான் குழந்தை.. எனக்கு நீ.. இந்த அண்டர்ஸ்டான்டிங் வந்துருச்சுன்னா, அதுவும்.. நம்ம தனிப்பட்ட நேரங்கள்ல உணர்வுகள்தான்.. பேசணும்.. அறிவு இல்லே!' என்றான்.

'ம்..!' என்றாள் சிவந்த முகத்துடன்.

'ஹேய்! ஒழுங்கா சொல்லித் தர்ற பாடமெல்லாம் புரிஞ்சுகிட்டீன்னா.. இங்கயும் ரேங்க் கிடைக்கும்.'

அவள் கேள்விக் குறியாய்ப் பார்த்தாள்.

'அப்பா.. அம்மா.. அப்படீங்கற ரேங்க்தான்.'

'ஐயோ! அறிவுக் களஞ்சியம்!' என்று சிரித்தாள்.

'பாருங்கத்தான்! எனக்கு நிறையக் கேள்விகள் கேட்கணும்' என்றாள்.

'நோ... சான்ஸ்.. அட் ஆல் இன்னைக்கு நாம் பேச வேண்டிய விஷயங்களே வேற.. அதாவது.. இன்னைக்கு நட்பை மட்டும்தான் பேசணும். கடந்து போன விஷயங்கள், எதிர்காலம்.. பத்தி.. கண்டிப்பா இன்னொரு நாளைக்குப் பேசுவோம்..' என்றான்.

அவள் களுக்கென்று சிரித்தாள். 'பயங்கரமான ஆள்.. நீங்க..' என்றாள்.



கொஞ்ச நேரம் கழித்து மாடிப்படிகளில் அமர்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது சுபாஷினி கேட்டாள்.

'என் மனசு தெரிஞ்சும் ரூம்ல போய் அதென்ன மணிக் கணக்கா செல்போன் பேச்சு..' என்றாள்.

இடக்கையால் தன்னருகில் இழுத்தபடி சொன்னான்.

'ஒவ்வொருத்தருக்கா போன் பண்ணி, நாளைக்கு முழுதும் என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்கடான்னு வார்னிங் குடுக்க வேண்டாமா..!' என்றான்.

அவள் சிரித்தாள்.

அவன் முக பாவம் மாறியது சீரியஸானான். 'அது மட்டுமில்லே சுபா! இன்னைக்கு மனசுல எத்தனையோ ஆசையிருந்தும் உன்னை நெருங்க எனக்குத் துணிவு வர்லே அன்னைக்கு நீ கேட்ட கேள்வி. அப்படிக் கேள்வி' என்றான்.

முகம் வாடியது.

அவள் சட்டென்று அவன் மார்பில் சாய்ந்தாள்.

'சரி.. இப்ப சொல்லுங்க.. அந்தக் கசப்பான நினைப்பை மறக்கடிக்க.. நான் இப்ப என்ன செய்யணும்? சொல்லுங்க..' என்றாள்.

அவன் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான். குறும்பாகச் சிரித்தான். அவள் என்ன செய்ய வேண்டுமென்று சொன்னான்.

அவளும் தயங்காமல் பணிந்தாள்.

* * *

மறுநாள் இரவு.

பார்வைப் பரிமாற்றங்கள், குறும்புச் சிரிப்பு இரகசியச் சீண்டல்கள், திடீரென முளைத்திருந்த அன்னியோன்னியம்

இவற்றையெல்லாம் கண்டும் காணாமல் கவனித்துக் கொண்டிருந்த வடிவு புன்னகைத்துக் கொண்டார்.

எல்லாரும் சாப்பிட அமர்ந்திருக்கையில் சட்டெனச் சொன்னார்.

'பிரகாஷ்! ரொம்ப நாளாகக் குறைப்பட்டுக் கிட்டிருந்தியே! அம்மா உனக்கு நிர்வாகம் நல்லா வருது. ஆனா, நீ ஆபீசுக்கு வரமாட்டேன்கறேன்னு இன்னும் ஒரு மாசத்துக்கு நான் நிர்வாகம் செய்யறதுன்னு முடிவு உங்களுக்கு ஒரு ரெஸ்ட் குடுத்தர்லாம்னு இருக்கேன்..' என்றார்.

ஜெயப்பிரகாஷும் சுபாஷிணியும் வெட்கத்துடன் பார்வை பரிமாறிக் கொண்டார்கள்.

'வேண்டாம்மா.. உங்களுக்கு எதுக்கு சிரமம்?' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'சரி.. அட்லீஸ்ட்.. பத்து நாளாவது எங்கயாவது டூர் மாதிரி போயிட்டு வாங்கப்பா!' என்றார்.

ஒத்துக் கொண்டார்கள்.

கேள்விகளோடு போய் விடைகளுக்காகக் காத்திருந்தார்கள்.

## 27

அந்த மலைவாசஸ்தலம்..! பெரிய புகழ் பெற்ற பகுதியுமல்ல எனினும் மலைவாசஸ்தலத்தின் எல்லா அழகுகளும் கொண்ட தனிமையான பகுதி.



ஜெயப்பிரகாஷுக்குத் தெரிந்த ஒரு நிறுவனத்துக்கு சொந்தமான ஒரு கெஸ்ட் ஹவுஸ்.

நான்கைந்து நாட்களையும் மகிழ்வாகக் கழித்து விட்டார்கள்.

உலகம் மறந்திருந்தார்கள். எனினும் அவன் போனிலேயே அலுவலக விஷயங்களையும் கவனித்துக் கொண்டான்.

ஜெயப்பிரகாஷ் மிகக் கவனமாகக் கடந்த காலப் பிரச்சினைகளைப் பேசுவதைத் தவிர்த்து விட்டான்.

அவன் மனம் புரிந்து அவளும் விளையாட்டாகவே வேறு விஷயங்கள் பேசி இடம் கொடுத்தாள்.

இன்றைக்குத்தான் மெது மெதுவாகக் கொஞ்சம் நிலவுலகுக்கு வந்தார்கள்.

மாலையில் சூடாக சுண்டல் கொறித்துக் கொண்டு சற்று தூரம் நடந்தார்கள்.

'ஹேய்! நான் நினைக்கவே இல்லை. மேடம், இவ்வளவு ஒத்துழைப்புக் கொடுப்பீங்கன்னு..' என்றான்.

அவள் வெட்கத்துடன் சிரித்தாள்.

'இங்க உட்காரலாமா?' என்று ஒரு இடத்தில் புல்வெளியில் அமர்ந்தார்கள்.

'ஏன்?' என்றாள் அவளும் கேள்வி போல்.

'யப்பா! அன்னைக்கு நான் எல்லாத்தையும் சொல்லி முடிச்சவுடனே.. ஒரு கோபம் வந்துச்சே.. எப்படி வார்த்தைகளை திராவகம் மாதிரி அள்ளி வீசினே தெரியுமா?' என்றான்.

அவள் கவலையுடன் அவன் முகம் பார்த்தாள். 'இல்லலே' இப்ப ஒன்னும் கோபம் எல்லாம் இல்லே! ஆனா.. அதுக்கப்புறம்.. அந்த வேதனையை முழுங்க முடியாம.. எத்தனையோ நாள் தூக்கம் இல்லாமல் தவிச்சிருக்கேன்..' என்றான் குரலில் வேதனை நிறைந்திருந்தது.

அவளுக்கு நினைவு வந்தது.

'.. ஏழைங்கதானே! வசதியில்லாதவங்க.. தானேன்னு.. மானத்தை விலை பேசிட்டீங்க..' என்று கேட்டாள். கடுமையான வார்த்தைகள்தான்.

சற்று முற்றும் பார்த்து விட்டு அவளே மண்டியிட்டுத் தன்னருகே அவனை இழுத்தாள். சற்று நேரம் தன் பதில்களால் அவனைத் திணறடித்தாள். பிறகு.

'ப்ளீஸ்! ப்ளீஸ்! மறந்துடுங்க..!' என்றாள்.

'இனிமே.. மறந்துடுவேன்.. அதுக்குத்தான் அம்மிணி வேணுங்கற மட்டும் ஈடு கட்டிட்டியே!' என்றான். குறும்பாகவும், கலகலவென்றும் சிரித்தான். ஆனால், முகபாவம் மாறியது சீரியஸானான்.

'சுபா! இப்ப இல்லே.. எப்பவுமே ஒன்னு ஞாபகம் வச்சுக்க.. நான் முதல்ல கல்யாண வீட்ல பார்த்தவுடன்.. உன்னை லைக் பண்ணிட்டேன்.. அப்புறந்தான் நீ டி.ஆர். அங்கிளோட பொண்ணுன்னு தெரிய வந்துச்சு. அதனால்.. உன்மேல எனக்கு ஏற்பட்ட ஈர்ப்பு.. இயற்கையானது..' என்றான்.

அவள் கண்களை அகல விரித்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தாள்.

'ஆனா.. நான்.. இன்னொண்ணும் புரிஞ்சுகிட்டேன். உன்னைப் பொண்ணு பார்க்க வந்தப்ப என் முகத்தைப்



பார்த்து ஏதோ சொன்னியே அப்ப, கொஞ்ச நேரம். இதோ.. இப்ப பாக்கறியே..' என்று அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

அவள் சற்றே கண்களை மூடிக் கொண்டாள். பிறகு சிரித்தபடி நிமிர்ந்தாள். தொடர்ந்தான்.

'இப்பப் பாக்கறியே.. அதே.. மாதிரிப் பாத்துகிட்டிருந்தே. அப்பவே.. உனக்கும் என்னைப் பிடிச்சிருந்ததுன்னு.. எனக்குத் தெரியும்..' என்றான்.

அவள் 'பரவாயில்லை.. கெட்டிக்காரர்தான்.. அப்புறம்.. ஏன்.. படி.. படின்னு படிக்க வச்சீங்க?' என்றாள்.

அவன் சிந்தனையுடன் அவளைப் பார்த்தான்.

'சுபா.. ஒரு காரணம். நான் உன்னைத் தொடறதுக்கு முன்னாடி நீ எல்லா விஷயங்களையும்.. தெரிஞ்சுக்கணும் கறது.. யோசிச்சு முடிவுக்கு வரணுங்கறது.. ஆனா.. நீ அப்படி.. வெடிப்பேங்கறது நான் எதிர்பார்க்காதது..' என்றான்.

அவள் மௌனமாக அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

'உங்கப்பாவுக்கும், எங்கப்பாவுக்கும் ஆன பிரச்சினைக்கு அம்மா வேணுங்கற மட்டும் நியாயம் செஞ்சுட்டாங்க. ஆனா.. நீ என் மனைவின்னு ஆனதுக்கப்புறம்.. உனக்கு எல்லாமே தெரியணும்னு நெனச்சேன்.. அதனாலதான் எல்லாத்தையும் சொன்னேன்' என்றான்.

அவள் இடையிடையே குறுக்கிட விரும்பாமல் கேட்டாள்.

'மகேஷ்தான்.. கரெக்டா சொன்னான். எல்லா விஷயத்துக்கும்.. உடனடியா ஒரு ரியாக்ஷன்.. இருக்கும்.. அது வேகமானதாத்தான் இருக்கும். ஆனா கொஞ்சம் நிதானமா யோசிச்சா.. கோபம் வடிஞ்ச பிறகு யோசிச்சா.. விஷயங்கள் புரியும்.. விவேகமாகக் கூட ஆயிடுவோம்..' என்றான்.

'ஆமாங்க.. அம்மா வீட்டுக்குப் போனதுக்கப்புறம் அம்மாகிட்டே சொன்னேன். அப்பதான் அம்மா ஒரு கேள்வி கேட்டாங்க.. 'ஏன்.. சுபா! நடக்கத் தெரியாம தடுமாறு குழந்தையைத் தூக்கலாம்.. நடக்கத் தெரிஞ்ச பெரியவங்களை யாராவது.. தூக்கிட்டு நடப்பாங்களா?'ன்னாங்க.'

அவன் சிரித்தான்.

'அத்தையா? எதுக்காக.. அப்படி சொன்னாங்க' என்றான்.

'அதாங்க.. எங்கப்பாவுக்கு.. உங்கப்பா... வேணுங்கற வாய்ப்புக் கொடுத்தாராம்.. பத்துப் பைசாக் கூட எங்கப்பா பணம்னு போடலியாம்' என்று தன் தாயார் சொன்னதையெல்லாம் விளக்கினாள்.

'பரவாயில்லை.. அத்தை உன்னை மாதிரி இல்லை' என்றான் குறும்பாக.

'அப்படின்னா?' என்றாள் பொய்க் கோபத்துடன்.

'அப்படின்னா! எப்படியாவது உன்கிட்டே என்னை சிக்க வச்சு.. வேற மாதிரி தண்டனை குடுக்கறதுன்னு முடிவு பண்ணிட்டாங்க!' என்றான்.

'தண்டனையா! இதெல்லாம் தண்டனையா?' என்று விலகினாள்.

'ஹேய்! தப்பு.. நான் சொன்னது தப்பு.. இதெல்லாம் எனக்குப் பிடிச்சமான தண்டனை போதுமா' என்று அவன் கெஞ்ச சற்று நேரம் ஒரு அர்த்தமற்ற நாடகம் நடந்து முடிந்தது. பிறகு இருவரும் சிரித்துக் கொண்டார்கள். இன்னும் நெருக்கமாக அமர்ந்து கொண்டார்கள்.

'அப்பவே.. அம்மா வீட்லருந்து வர்றப்பவே நான் ஓரளவு மனசு தெளிஞ்சுதான் வந்தேன். ஆனா.. நானா..



எப்படி வெளிப்படுத்தறதுன்னுதான்.. தெரியலே.. தயங்கிட்டேயிருந்தேன்.. அதுக்குள்ள.. அதுக்குள்ள..' என்று தயங்கினாள்.

'ரம்யா..! அந்த மேட்டர்தானே?' என்று சிரித்தான். ஆக்சுவலா.. இந்த ரம்யாவும் நானும் ஆக்ட் பண்ணினதுல என்னோட பார்ட் எதுவும்.. இல்லே.. மகேஷும், ரம்யாவும் சேர்ந்து பிளான் செஞ்சாங்க..' என்றான்.

ஜெயப்பிரகாஷுக்கு அன்றைக்கு மகேஷுக்கும் தனக்கும் நடந்த உரையாடல் நினைவு வந்தது.

* * *

'டேய்.. ஜெய்.. பெண்களைப் பொறுத்த வரைக்கும் ரெண்டு மூணு விஷயம் நீ நல்லாப் புரிஞ்சுக்கணும். முதலாவது பெண்கள்ன்னா அவங்க மனசில இருக்கறதை வெளிய சொல்ல மாட்டாங்க. தானாவும் நேரடியா அணுக மாட்டாங்க. நாமதான் புரிஞ்சுக்கணும்.'

'விஷயம் அதில்லைடா.. மகேஷ்.. அவளுக்கு என்னைப் பிடிச்சுத்தான் இருக்கு.. ஆனா, இந்த விஷயம் தெரிஞ்சவுடனே அவ வெடிச்ச வெடிப்புப் பத்தி உனக்குத் தெரியாது..' என்றான்.

'டேய்.. முதலாவது இதை நீ சொல்லியே இருக்க வேண்டாம்டா..' என்றான் மகேஷ் கடுப்புடன்.

'இல்ல.. மகேஷ்.. மனைவின்னா.. லைஃப் பார்ட்னர்... அவளுக்கு எல்லா விஷயமும் தெரிஞ்சு இருக்கணும்டா.'

'ஐயோ! நீ ரொம்ப ஐடியல்டா.. சரி.. சொன்னவன் அட்வீஸ்ட்... உங்க அம்மா காம்பன்ஸேட் பண்ணினதையும் சொல்லி இருக்கணுமில்லே!'

'சொன்னேன்டா..' என்றான்.

'சரி.. விடு..' என்று சிந்தனையிலாழ்ந்தான். பிறகு சொன்னான்.

'சரிடா.. எப்படியிருந்தாலும் இனிஷியல் கோபம் வடிஞ்சு துன்னா.. யோசிப்பாங்கடா.. அப்ப.. உன்கிட்டே.. இருக்கற நியாயம்.. புரியும்.. அறிவாளியான பொண்ணுதான்டா!' என்று ஆறுதல் படுத்தினான்.

சற்று நேரம் மௌனத்தில் கழிந்தது. பிறகு மகேஷ் சொன்னான்.

'ஆனா, அவங்க அப்படி மனசு தெளியறாங்கன்னு தெரிஞ்சப்புறம்.. நீ நான் சொல்ற மாதிரி நடந்துக்கணும் ஜெய்' என்றான்.

'எப்படி?' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'எப்படின்னா.. ரொம்ப ஸ்டிஃப்பா.. கொஞ்சம் விலகினாப் போல் நடந்துக்கணும்..' என்றான்.

'ஐயோ! அது கஷ்டமாச்சேடா..' என்றான் ஜெயப்பிரகாஷ் கவலையாக.

'அதெல்லாம்.. சொன்னா வேலையாகாதுடா.. மகனே.. அவங்க நெருங்கி வரும்போது நீ கொஞ்சம் பாறாங்கல்லு மாதிரி நடந்துகிட்டாத்தான் நீ பட்ட கஷ்டம் என்னன்னு அவர்களுக்குப் புரியும்..' என்றான்.

ஜெயப்பிரகாஷ் அரை மனதாக ஒத்துக் கொண்டான்.

'அப்புறம்.. இன்னொண்ணும் செய்யணும்.. அவங்க.. பொறாமைப் படறவங்களா? அந்த டைப்பா?' என்றான்.

'அதென்னமோ... தெரியலே.. ஆனா.. மஞ்சுளா ஒரு தடவை டீஸ்.. பண்ணினப்போ.. மட்டும் ரொம்ப தவிச்சுப் போயிட்டா' என்றான்.



'ஓஹ்ஹோ! அப்ப அந்தப் பக்கம் பிரியம் இருக்குது..' என்று உறுதி செய்து கொண்டான்.

'அப்ப.. சரி! நானும் ரம்யாவும்.. சேர்ந்து ஏதோ.. திட்டம் போடறோம்.. ரம்யாவுக்குக் கூட நான் சேலத்துப் பக்கம் மாப்பிள்ளை பாத்துருக்கேன்' என்றான் மகேஷ்.

'அப்படியா, நல்ல விஷயமாச்சே?' என்று மகிழ்ந்தான். ஆனால் மீண்டும் ஜெயப்பிரகாஷ்.. கவலையானான்.

'வேண்டாம்பா. மகேஷ்.. இந்த நாடகமெல்லாம் சரிப் படாது. அன்புங்கறது இயற்கையா வரணும்ப்பா.. இப்படி டிராமா பண்ணி நிலைக்க வக்கிறதெல்லாம் எத்தனை நாளைக்கு நடக்கும்? அவ ரொம்ப ஸென்சிடிவ்டா..' என்றான்.

'அடடா! அக்கறை பார்றாப்பா.. உங்க அம்மணியை ஒண்ணும் செஞ்சிரமாட்டோம்.. ஆனா, இப்படி அன்பை வச்சுகிட்டு அவஸ்தைப் படறதுன்னா.. என்னன்னு புரிஞ் சுக்க வேண்டாமா' என்றான்.

ஜெயப்பிரகாஷ் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'ரம்யாதானேடா கொஞ்சம்.. சுபாகிட்டே பழகறதுல ஒரு ரிசர்வேஷன் வச்சுக்கோ.. கோபமாக் கூட இருக்கலாம்.. ரம்யா கிட்டே கலகலன்னு பேசு.. அது.. போதும்!' என்றான்.

'என்னவோ.. இது ஒண்ணும் எனக்குப் பிடிக்கலைடா..' என்றான்.

'டேய்.. நீ சொன்னயே அன்பு இயற்கையா வரணும்னு. உங்க ரெண்டு பேருக்கும் அன்பு இயற்கையாய் வந்துருச்சு.. அதை வெளிப்படுத்திக்கறதுலதான் பிரச்சினை..' என்றான்.

ஜெயப்பிரகாஷ் தயக்கத்துடன் ஒத்துக் கொண்டான்.

முழுவதையும் கேட்டு முடித்த சுபாஷிணி புன்னைகைத்துக் கொண்டாள்.

'மகேஷ் அண்ணா, இந்த வேலையெல்லாம் வேற.. செய்யறாரா?' என்றாள்.

'ஆனா.. ஒரு விஷயம் என்னையே ரொம்ப மலைக்க வச்சுருச்சு தெரியுமா? உங்களுக்கென்ன.. ரம்யாகிட்டே பேசணும்னு பழகணும் அவ்வளவுதானே இங்கயே வரச் சொல்லுங்கன்னயே.. அதுதான்' என்றான்.

சுபாஷிணி சிரித்தாள்.

'ரெண்டு கோணத்துல யோசிச்சேன். உங்க மனசுப்படி யாவது ஆசைப்பட்டது கிடைக்கட்டுங்கறது ஒன்னு. இன்னொன்னு.. நீங்க சேலத்துல ஒரு முக்கியமான ஆள். நீங்க போய்.. ஒரு பொண்ணு கூட அங்கயும், இங்கயும் சுத்திகிட்டு இருந்தீங்கன்னா குடும்பப் பேரு என்னாகிறது? அதான்.. நான்..' என்றாள்.

'ஹேய்!' என்று மீண்டும் அருகில் இழுத்துக் கொண்டான் தொடர்ந்து சொன்னான்.

'ஆனா.. அன்னைக்கு நைட் அழுதுட்டு படுத்திருந்தியே.. அன்னைக்கு என் மனசே நொறுங்கிப் போச்சு. உடனே.. மகேஷுக்கு போன் போட்டு 'பாவம்டா அவளை வறுக் காதீங்கன்னு கெஞ்சினேன். அவன் சிரிச்சான். கொஞ்சம் பொறுத்துக்கடான்னுட்டு வச்சுட்டான்' என்றான்.

'ஓ!..' என்றாள் சுபாஷிணி. 'டிரைவர் கூட சந்தேகப்பட் டாரு. ரம்யா கூட ஒரு மணி நேரம் பேசிட்டிருந்தீங்களாம்' என்றாள்.



'ரம்யாகிட்டே! உன்னைப் பத்தித்தான் பேசிச் சிரிச்சகிட் டிருந்தோம்.. நீ காலேஜ்ல செஞ்ச குறும்புகளையெல்லாம்.. ரம்யா ரொம்ப சுவாரசியமாய் சொல்லிகிட்டிருந்தாப்ல..' என்றான் சிரித்தான்.

அவள் முகம் சிவந்தது.

'ஓ!' என்றாள் மறுபடியும்.

'என்ன ஓ!' என்று மறுபடியும் சற்று சீண்டி விளையாடி னான். பிறகு 'டிரைவர்' நான் குடுக்கற சம்பளத்தை வாங்கிட்டு எங்கம்மா கிட்டே என்னைப் பத்தியே போட்டுக் குடுக்கறாரு.. அம்மா.. வேற லெஃப்ட் அண்ட் ரைட்.. வாங்கறாங்க..' என்றான் புகார் போல.

'வேணும்.. நல்லா.. வேணும்' என்று சிரித்தாள் சுபாஷிணி.

'அம்மா.. கிட்டே.. எல்லா விஷயத்தையும் சொல்லிப் புரிய வக்க வேண்டியதாய் போச்சு.. உன்னை யார்றா உங்கப்பா.. விவகாரத்தையெல்லாம் அவகிட்டே சொல்லச் சொன்னாங்கன்னு கோபம் வேற.. கடைசியா இத பார் அவளை வறுத்தெடுக்கிற வேலையெல்லாம் வேண்டாம். மேட்டரை ரெண்டு நாளைக்குள்ளே முடின்னு கெடு வச்சுட் டாங்க.. அப்புறம்தான் நான் பாஸ்கரை வரச் சொன்னேன்..' என்றான்.

'ஓ! உங்கம்மா மட்டுமில்லே. எங்கம்மாவும்தான்.. என்ன மருமகன் இப்படிப் பண்ணியிருக்காரு.. இப்படியொரு பைத்தியக்காரப் புள்ளை எங்காவது இருக்குமான்னு ஒரே ஆச்சரியம் வருத்தம்..' என்றாள் ஆழ்ந்த குரலில்.

'ஆமா.. பைத்தியக்காரப் புள்ளைதான்.. அவங்க மக மேல.. பைத்தியமா இருக்கற புள்ளை' என்று சற்று நேரம் தன் 'பைத்தியத்தை' வெளிப்படுத்தினான். பிறகு சொன்னான்.

'பாரு.. சுபா..' இப்ப விஷயம் உனக்குத் தெரிஞ்சதுல உனக்கு முதல்ல கொஞ்சம் வருத்தம் ஆனா, அப்புறம்.. எல்லாம் தெளிவாயிடுச்சில்ல.. இனிச் சந்தேகங்களுக்கு இடமில்லை.. நிம்மதியா.. இருக்கலாம்.. ஒரு வேளை.. உனக்கு இதை ஏத்துக்கற மாதிரி மனநிலை இல்லைன்னு வச்சுக்க.. அட்லீஸ்ட்.. எதுவும் நடக்கிறதுக்குள்ள விலகியிருக்கலாம்.

'ஐயோ! சொல்லாதீங்க..!' என்று வாயைப் பொத்தினாள். வெகு நெருக்கமாக அமர்ந்து இழைந்தாள்.

'ஒரு பேச்சுக்குச் சொன்னேன்!' என்று சமாதானப் படுத்தினான் ஜெயப்பிரகாஷ் மறுபடியும்.

'ஹேய்! போதும்.. இன்னைக்கு இவ்வளவு போதும். அப்புறம்.. பேசலாமே? நல்லதா. ஒரு சினிமாவுக்குப் போகலாம்னு நெனச்சேன்.'

அவள் அதைக் கவனிக்காதவளாய் யோசனையிலேயே இருந்தாள்.

'இல்லே! அம்மா.. ஒரு கேள்வி கேட்டாங்க? அதை நினைச்சுகிட்டேன். ஒரு ஆயிரம் ரூபா முதலீடாப் போட்டா.. ஒருத்தன் ஜெயிக்கறான்.. ஒருத்தன் தோக்கறான்.. அது எப்படின்னு கேட்டாங்க?'

..........!

'இல்லே! ஒரே ஒரு நாள் நீங்க இல்லாதப்ப ஆபீஸை சமாளிக்கறதே பெரிய கஷ்டமா.. இருந்துச்சே.. அப்ப.. மாமா.. எப்படி.. எல்லாத்தையும் நிர்வாகம் செஞ்சு வளர்த்தியிருப்பாரு? நீங்க.. எப்படி உழைச்சு எல்லாத்தையும் காப்பாத்தியிருப்பீங்கன்னு அப்பப் புரிஞ்சுது..' என்றாள்.



'ஆமா.. சுபா.. முதலீடுன்னு யாரு வேண்ணாக் குடுக்கலாம்.. ஆனா, திறமையுள்ளவங்களாலதான் அதைப் பெருக்க முடியும். ஆனா, உங்கப்பா.. மனசால நல்லவர்தான்.. சில பலவீனங்கள் அவரை விழ வச்சுருச்சு..' என்றான்.

'நீங்க மட்டும்.. இந்த வயசுலயே எப்படி எந்த பலவீனமும் இல்லாம இருக்க முடிஞ்சது..?' என்றாள்.

'ஒரே ஒரு விஷயத்துனாலதான். பலவீனங்கள் அப்பப்ப சந்தோஷத்தைத் தரும்.. ஆனா சாதனைகள் நீண்ட காலத்துக்கு சந்தோஷம் தருங்கறதைப் புரிஞ்சுகிட்டதுதான். அது மட்டுமல்ல பலவீனங்களும் குறுக்கு வழிகளும் மனசு நிம்மதியைக் கெடுத்துடும். அழிச்சே போடும்னு எங்கப்பா, மாமனார் ரெண்டு பேரோட வாழ்க்கையில இருந்தும் தெரிஞ்சுகிட்டனே.. அதனால பலவீனங்களுக்கு இடம் குடுக்கற மனசே வர்லை..' என்றான்.

'ஒண்ணு செய்வமா? சினிமாவுக்குப் போறதுன்னா டவுனுக்குப் போய் பாக்கணுமாமே! ஆனா.. இந்தக் கிராமத்துல அழகான அம்மன் கோயில் இருக்காம்.. போலாமா?' என்றாள் சுபாஷிணி.

'போலாமே?' என்றான். ஜெயப்பிரகாஷ் புறப்பட்டார்கள்.

## 28

அம்மன் அழகாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தாள் சின்னக் கோயில். சுற்றிலும் பூஞ்செடிகள் நிறைந் அழகாக இருந்தது.

மாலை நேரம் வேறு! அந்த உறைக்கும் குளிரில் சுற்றி வந்தார்கள்.

பக்கத்திலிருந்த சின்ன கிராமத்தில்.. அன்றைக்கு சந்தை என்றார்கள். சந்தைக்குப் போய் சற்று நேரம் சுற்றினார்கள்.

வளையல், பொட்டு என்று வாங்கிக் கொண்டாள் சுபாஷிணி.

ஊருக்குள் இருந்த சிறிய மெஸ் ஒன்றில் உணவருந்தி னார்கள். சுத்தமான தயாரிப்பு முறையைப் பார்த்த பின்பே ஜெயப்பிரகாஷ் சாப்பிட ஒத்துக் கொண்டான்.

'இதுவும்.. நல்லாத்தான்.. இருக்கு.. கொஞ்சம்.. கொஞ்சம்.. வித்தியாசமான அனுபவங்களையும் வாழ்க்கையில அனு பவிக்கணும்.. அப்பத்தான் வாழ்க்கை சுவாரசியமாய் இருக்கும்.. இல்ல சுபா' என்றான் ஜெயப்பிரகாஷ்.

தங்கள் கெஸ்ட் ஹவுஸ்.. வந்து சேர்ந்த பின் குளிருக்கு ஏற்ற வகையில் அறைக்குள் அடைந்தார்கள்.

வேலையாட்கள் வந்து 'ஃபைர் பிளேஸ்' எனப்படும் இடத்தில் நெருப்புக் கணப்பு இருக்கிற மாதிரி ஏற்பாடு செய்து விட்டுப் போனார்கள்.

'ஜெய்.. நான் கேட்ட கேள்விக்கு நீங்க பதிலே சொல்லலை?' என்றாள் சுபா..

'என்ன.. கேள்வி?'

'இல்லே.. இவ்வளவு ஆசையை மனசுல வச்சுகிட்டுப் படிக்க வச்சீங்களே? அது எதுக்குன்னு கேட்டேனே?'

'சுபா.. நான் உன்னைப் படிக்க வைக்கணும்னு நினைச்ச திற்குக் காரணம் உனக்குப் படிப்பு மேலே ஆசை இருந்தது



தான்.. உங்க காலேஜ் ஃபங்ஷன்ல நான் பேசினதெல்லாம்.. வெறும் மேடைப் பேச்சு.. இல்லே.. உண்மைதான்.. இங்க எத்தனையோ திறமையான பெண்கள் கல்யாணத்துக்கு அப்புறம் முடங்கிப் போயிடறாங்க. தெரியுமா? பெண்களோட வாழ்க்கையைத் தீர்மானிக்கிற விஷயங்கள்ல கல்யாணம் தான் முக்கியமா இருக்கு. அதுக்கப்புறம் அவங்க திறமைகள் பயன்படுத்தப் படறதே இல்லை தெரியுமா? இது பெரிய நேஷனல் வேஸ்ட் இல்லையா?' என்றான்.

அவள் பெருமிதத்துடன் கணவனைப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

'நீ படிக்கறேன்னு பிடிவாதமா நின்னது எனக்கு ரொம்பப் பிடிச்சுது. இப்பப் பாரு.. நம்ம வீட்ல அம்மாவையே எடுத் துக்கயேன். அட்மினிஸ்ட்ரேஷன்ல ரொம்ப கெட்டிக்காரங்க.. ஆனா.. இன்ட்ரஸ்ட் காட்ட மாட்டேங்கறாங்க. ஆனா படிப்புல ஆர்வமா நீ இருக்கியே. ஐ லைக்ட். 'இட் வெரி மச்' என்றான்.

'தேங்க்ஸ்.. அத்தான்' என்றாள்.

'அது மட்டுமில்லே.. அன்னைக்கு.. ஸ்டேஜ்.. பர்ஃபாமென்ஸ் பார்த்து ரொம்பவே... ரொம்பவே மயங்கிப் போயிட்டேன். வீட்ல என்னோட சிஸ்டத்துல.. ஸ்கிரீன்.. சேவர்ல நிறைய உன்னோட அந்த டான்ஸ் போஸ்கள்தான் போட்டு வச் சிருக்கேன்.. எத்தனையோ நாட்கள் உன் நினைப்பா இருக் கும்போது.. அதைத்தான் போட்டுப் பாத்துக்கிட்டு இருப் பேன்..' என்றான்.

சுபாஷிணியின் முகம் மலர்ந்தது. 'ஓ! அதுதான்.. என்னை உங்க சிஸ்டத்தை யூஸ் பண்றதுக்கு அனுமதிக்கவே இல்லையா? ஆனா, அன்னைக்கு ரம்யா.. மட்டும் உங்க சிஸ்

டத்தை யூஸ் பண்ண அலவ் செஞ்சீங்களேன்னு எவ்வளவு அப்செட்டானேன் தெரியுமா?'

'ஐயோ! அதையேன் கேட்கறே.. உன்னோட படங் களையெல்லாம் பாத்துட்டு.. இன்னை வரைக்கும் ரம்யா பண்ற கலாட்டா தாங்கலை.. தெரியுமா?' என்று சிரித்தான்.

'சரியான.. ஸ்கீமர்ஸ்.. நீங்க ரெண்டு பேரும்' என்று சற்று நேரம் சண்டை பிடித்தாள். அதற்குள் அவன் திடீரென்று நினைவு வந்தவன் போல் கேட்டான்.

'ஹேய்! என்னமோ.. அடிக்கடி என்னை பி.கே.. பி.கேன்னு திட்டுவியாமே? ரம்யா சொன்னாப்ல. அப்படின்னா என் னன்னு ரம்யாகிட்ட கேட்டேன்.. அதெல்லாம் நீங்க சுபா கிட்டயே கேட்டுக்குங்கண்ணா. இதை நான் சொல்லிட் டேன்னு தெரிஞ்சாலே ரொம்பக் கோபமாயிடுவான்னுட்டா' என்றான்.

சுபாஷிணி கலவரமானாள்.

'ஐயய்யோ.. சொல்லிட்டாளா?' என்றாள் அழுது விடுபவள் போல்.

அதைப் பார்த்து அவன் முகம் மென்மையானது.

'ஹேய்! பயப்படாதே! நீ என்னைத் திட்டலாம். கண்டிக் கலாம்.. டீஸ் செய்யலாம்.. ஆனா.. அத்தனைக்கும் ஈடு கட்டற மாதிரி அப்பப்ப கவனிச்சுரணும். என்ன?' என்றான்.

அவள் தலையாட்டினாள்.

'அது சரி.. பி.கேன்னா.. என்னன்னு சொல்லு.. எனக்குத் தெரியணும்!' என்றான் தன் கையணைப்பில் மனைவியை அடக்கியபடி.



வெகுவான தயக்கத்துக்குப் பின் 'பி.கே.ன்னா.. பி.கே.ன்னா.. பாறாங்கல்லு..' என்றாள் குரலே எழும்பாத குரலில்.

அவன் கோபப்படுவான் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் ரசித்துச் சிரித்தான். அவள் செல்லமாகச் சிணுங் கியபடி தொடர்ந்தாள்.

'ஆமா.. பின்னே! அளவாப் பேசறது.. நெருங்கவே முடியாத அளவுக்கு ஒரு இறுக்கமா இருக்கிறது.. முகத் திலே உணர்ச்சியே இல்லாம நடமாடறது.. அப்பா முதல்ல எல்லாம் பயமாத்தான் இருந்ததுங்க.. அப்புறம்.. ரேகா டெல்லி போறேன்னு சொன்னப்பா கொஞ்சம் மனசு திறந்து பேசினீங்களே அப்பத்தான் பரவால்லைப்பா.. மனசுன்னு ஒண்ணு இருக்குன்னு புரிஞ்சுது..' என்றாள்.

அவன் மீண்டும் புன்னகைத்தான்.

'ஹேய்! வாலு.. மனசுன்னு ஒண்ணு இருக்கறது மட்டு மில்லே.. அதுல.. பூராவும் நீதான் இருக்கே. தெரியுமா! பாறாங்கல்லுன்னு கூப்பிட்டாலும் சரிதான்.. வெண் ணெய்ன்னு கூப்பிட்டாலும் சந்தோஷம்தான்..' என்றான்.

சுபாஷிணியின் முகத்தில் சற்றே அசடு வழிந்தது.

அதைப் பார்த்துச் சிரித்து விட்டு மேலும் சொன்னா 'கவலைப்படாதீங்க மேடம்.. எல்லாம் கணவன், மனைவி குள்ளே இயற்கையான விஷயம்தான்.. இன்னொ விஷயம் சொல்லட்டுமா..? நான் சமீபமா கவி ஓவியன் ஒருத்தர் எழுதின கவிதை படிச்சேன்.. சொல்லட்டும கேக்கறியா?' என்றான்.

'ம்..!'

'என்னைப் பற்றிய
நினைவுகள் எல்லாம்..
காற்றில் வரைந்த ஓவியமாய்..!
உன்னைப் பற்றிய
நினைவுகள் மட்டும்
கல்லில் வடித்த கவிதையாய்..!

உணர்ச்சி நிறைந்த குரலில் அவன் சொன்ன விதம் கேட்டு நெகிழ்ந்தாள்.

'ஐயோ! ரொம்ப நல்லாயிருக்குத்தான்' என்று மகிழ்ந்தாள்.

'ஹலோ! நல்லாயிருக்குன்னு நீ சொல்லணுங்கறதுக்காக நான் இதைச் சொல்லலை. காகிதத்துல எழுதற எழுத்தைக் காட்டிலும் பாறையில் வடிக்கிற எழுத்துக்கள் மறையாது.. யு அன்டர்ஸ்டான்ட்.. நான் பி.கே.ன்னா.. இந்தப் பி.கேக்குள்ள எழுதப்பட்ட கவிதை பெண்ணே! நீ!' என்று சற்று நேரம் கொஞ்சி மகிழ்ந்தான்.

சுபாஷிணி பேச்செழாதவளாய் மலைத்துப் போய் அவன் கையில் அடைக்கலமானாள்.

* * *

மேடை மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழா.

ஜெயப்பிரகாஷ் முன் வரிசையில் அமர்ந்திருந்தான். அவன் குடும்பத்தினர் இரண்டு மூன்று வரிசைகள் தள்ளி அமர்ந்திருந்தார்கள்.

கோவையின் முக்கியப் பிரமுகர் ஒருவரை உரையாற்ற அழைத்திருந்தார்கள்.



தங்க மெடல் வாங்கியவர்களின் வரிசையில் முதலாவதாக சுபாஷிணியின் பெயரை அறிவித்தார்கள். அவள் பணிவாக வந்து தன் திறமைக்குக் கிடைத்த அந்தப் பரிசை வாங்கிக் கொண்டு வணங்கி நிமிர்ந்தாள்.

அந்தக் கணத்தில் ஜெயப்பிரகாஷ் பெருமையாக உணர்ந்தான்.

விழுங்கும் கண்களால் மனைவியை ஆழப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

* * *

அன்று வீடே கலகலப்பாக இருந்தது!

நெருங்கிய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மனைவியின் வெற்றி குறித்து மகிழ்ச்சியைக் கொண்டாட ஒரு பெரிய விருந்தளித்தான் ஜெயப்பிரகாஷ்.

'பரவாயில்ல.. தம்பி! உங்க கோயமுத்தூர்ப் பொண்ணு' என்று எல்லாரும் பாராட்டி விட்டுப் போனார்கள்.

'பரவாயில்லைப்பா.. நீ கிரேட் தான்.. வைஃப்புக்குக் கிடைச்ச வெற்றியை இவ்வளவு தூரம் கொண்டாடறியே!' என்று மகேஷ் கூடப் பாராட்டினான்.

'சந்தோஷத்துக்கான சிம்பிள் ஃபார்முலா என்ன தெரியுமா? வெற்றிகள் அவர்களுக்குச் சொந்தம் அவர்களே நமக்கு சொந்தம். ஆமாடா... அவங்க வெற்றியையும்.. நம்ம வெற்றின்னு நினைக்க ஆரம்பிச்சுட்டம்னாலே.. அது ஒரு சந்தோஷம்தான்' என்றான் ஜெயப்பிரகாஷ்.

'யப்பா! அசத்தறடா! பயங்கரமான முதலாளிடா' என்றான் மகேஷ். எல்லாரையும் வழியனுப்பிவிட்டுக் குடும்பத்தாரோடு சற்று நேரம் அளவளாவினார்கள்.

பாஸ்கரும், ரம்யாவும் தம்பதிகளாய் வந்திருந்தார்கள்.

'மகேஷ்.. அண்ணா! வைஃப் மேலே.. பிரியத்தை எப்படி எப்படியோ காட்டறவங்களைப் பாத்திருக்கேன்.. ஆனா.. கம்ப்யூட்டர்ல ஸ்கிரீன் சேவர்ல போட்டவங்க பாத்திருக் கீங்களா?' என்று ரம்யா செய்த கேலிக்கு ஜெயப்பிரகாஷ் சற்றும் அலட்டிக் கொள்ளாமல் சிரித்தான்.

'ஆமா.. இதிலென்ன.. இருக்கு.. நீங்க பாஸ்கர் படத்தைப் பர்ஸில் வச்சக்கறீங்க.. வீட்ல போட்டாவா லாமினேட் பண்ணிக்கறீங்க.. நான் கம்ப்யூட்டர் ஸ்கிரீன்ல போட்டு வச்சகிட்டேன்..' என்று மனைவியின் தோளில் கை போட்டுக் கொண்டான். அருகில் இழுத்துக் கொண்டான்.

நண்பர்கள் சிரித்தார்கள்.

'விடுங்க.. ஜெய்' என்று அவள் கை விலக்க அவன் கை அழுத்தமாகவே இருந்தது.

மறுபடியும் சிரித்தார்கள். அவள் ஏதோ அவசர வேலை யிருப்பவள் போல் ஓடினாள்.

* * *

தங்களுக்கேயான தனிமையின் பொது 'ஜெயப்பிரகாஷ்' மனைவியின் முகத்தை உற்று நோக்கினான்.

ஏனோ சில நாட்களாகக் கூடுதலாக ஒரு அழகு தெரிந்தது. இன்றைக்குக் கொஞ்சம் களைப்பு இருந்த போதும் அதைக் காட்டிலும் ஒரு மெருகு தெரிந்தது.

'ஹேய்..! சுபா.. என்ன விஷயம்.. ஏதோ சேன்ஜ் தெரியுது!' என்றான்.

அவள் இரகசியச் செய்தி ஒன்றைப் பரிமாறிக் கொள்கிற முக பாவத்துடன் அவன் தோளில் முகம் பதித்துக் கொண்டாள்.



'காலேஜ்ல படிச்சதுல மெரிட்டோரியஸா பாஸ் பண் ணின மாதிரி.. நீங்க சொல்லிக் குடுக்கற பாடத்திலயும்.. பாஸ் மார்க் வாங்கணும் இல்லே!'

அவனுக்கு மெல்லப் புரிந்தது. முகம் மலர்ந்தது.

'ஹேய்! நிஜமாவா!' என்று அவள் புறம் திரும்பி சுபாஷிணியின் முகம் நிமிர்த்திப் பார்த்தான். கண்களா லேயே கேள்வி கேட்டான்.

'ம்..!' என்று தலையாட்டினாள்.

'வெரிகுட்.. வெரிகுட்' என்று எழுந்தான். கீழே போய் அம்மாவிடம் பகிர்ந்து கொண்டான்.

'அம்மா.. உன் மருமக.. என்னமோ குட் நியூஸ்.. வச் சிருக்கா.. கேளு..!' என்றான்.

சுபாஷிணி தயக்கத்துடன் மாடியிலிருந்து இறங்கி வருவதைப் பார்த்த வடிவு அவள் அருகில் வரும் வரை புன்னகைத்தபடி நின்றார்.

மருமகளின் முகத்தில் தெரிந்த மினு மினுப்பை அவர் இப்போதுதான் புரிந்து கொண்டார்.

'வா!' என்று கை நீட்டினார் வாஞ்சையுடன், அவர் அருகில் போய் அவளும் குழந்தையைப் போல் நின்றாள்.

நவநீதத்திடம் விவரம் சொன்னார். எல்லார் முகங்களும் மகிழ்ச்சியில் மலர மீண்டும் அங்கே கொண்டாட்டமான சூழ்நிலை நிலவியது.

மீண்டும் தனிமை கிடைத்ததும் அவள் செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

'உங்களை யாரு.. அதுக்குள்ளே போட்டு உடைக்கச் சொன்னாங்க..' என்றாள்.

'ஹேய்! உன்னோட வெற்றிக்குப் பரிசு கிடைச்ச மாதிரி.. என்னோட வெற்றிக்கும் பரிசு கிடைச்சிருக்கில்ல.. நான் கொண்டாட வேண்டாமா?' என்று மகிழ்வைக் கொட்டித் தீர்த்தான். பிறகு மெல்ல விடுவித்தான்.

'ஹேய்! சுபா.. இனிமே.. உடம்பை நல்லாப் பாத்துக் கணும். ரொம்ப அலையக் கூடாது. நல்ல புத்தகங்களைப் படிக்கணும். நல்ல விஷயங்களாக கேட்கணும்..' என்று அவன் சரமாரியாகப் பேச..

'சரிங்க.. தாத்தா!' என்றாள் குறும்பாக.

'தாத்தா.. இல்லைங்க.. மேடம்.. அப்பா.. என் குழந்தைக்கு.. அப்பா..!' என்று அவன் பெருமையுடன் சிரித்த ஒலி அவள் காதுகளில் தேனாகப் பாய்ந்தது.

முதல் முறையாகப் பார்த்த போது தன்னை மறந்து பார்த்துக் கொண்டு இருந்தார்களே.. அதே போல் இன்றைக்கும் ஒரு வரையொருவர் பார்த்துக் கொண்டு மகிழ்ச்சி பொங்க நின்றார்கள்.

பார்வையில் அங்கே பரிவும், அன்பும், காதலும், பெருமையும் பரிமாற்றமாகிக் கொண்டிருந்தது!

ஆம். கல்லில் வடித்த கவிதையாய் அன்பு அங்கே நிலை கொண்டிருந்தது.